4174

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அழகியநம்பி தாசர் அருளிய

# குருபரம்பரை

பதிப்பாளர் : திரு. K. பாலசுந்தர நாயகர் M.A.,

TNSDA

04174

திருமலை - திருப்பதி

தேவஸ்தான வெளியீடு.

1963

Price Rs. 3.50 nP.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அழகியநம்பி தாசர் அருளிய

# குருபரம்பரை

பதிப்பாளர்: திரு. K. பாலசுந்தர நாயகர் M.A.,

T. T. D. INFORMATION CENTRE
Date ..........................
MADURAI

திருமலை - திருப்பதி

தேவஸ்தான வெளியீடு.

1963

4174
19 FEB 1975

திருமலை - திருப்பதி தேவஸ்தான அச்சகம்,
திருப்பதி.
பிரதிகள் 275—31-8-1963.

294·5512

19 FEB 1975
Govt. Or. MSS. Library, Madras

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்

அழகியநம்பி தாசர் அருளிய

# குருபரம்பரை

பதிப்பாளர் : திரு. K. பாலசுந்தர நாயகர் M.A.,

சிறப்புப்பாயிரம்

**அறுசீர் ஆசிரிய விருத்தம்**

அஞ்சு பொருளு மளித்தென்னை ஆண்டா
 ளாத்தா னழகப்பன்
நெஞ்சி லிருக்க மற்றொன்றை நினைத
 லுறுமோ நீணிலத்தில்
துஞ்ச லின்றி யாரியரைத் துதித்துப்
 போது போக்கதுவே
தஞ்ச முத்திக் கென்றுரைத்தான் அதனு
 லிதனைக் சாற்றுதுமே. (1)

---

* 16 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலே குருபரம்பரை என்னும் தலைப்பில் அரிய தமிழ்ப்பாக்களில் ஆகிய ஒரு நன்னூலை நம்பிதாசர் என்னும் பக்தர் பெருமானுர் எழுதிப் போந்தனர். இந்த நம்பிதாசர் பின்பழகிய பெருமாள்ஜீயர், அருளிய 1500 சுலோகங்களைக் கொண்ட வடமொழிநூலைப் பின்பற்றி 2965 செய்யுளில் எழுதிப் போந்தார் என்பர். ஆனுல் இதன் முன்னூல் கிடைக்கவில்லை:

இந்தக் குரும்பரம்பரையில் ஆழ்வார்களின் வரலாறும் நாதமுனிகள்முதல் எம்பெருமானுர்வரை ஆசாரியர்கள் வரலாறும் கூறப்பட்டுள்ளன. ஆழ்வார்களின் காலநிலைகள் முன்னோர் எழுதி வைத்துள்ள முறையில் இல்லாமலும் கதைப் போக்கில் மாறுபட்டும் இருக்கின்றன. ஆயினும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்கள் செந்தமிழில் இரண்டாம் பகுதியை வெளியிட்டுள்ளனர். ஆகவே முதற்பகுதி காலமாகிய வெள்ளத்தில் அழிந்து போகாமல் இருக்குமாறும் தமிழ் அன்பர்களுக்குப் பயன்பட வேண்டுமெனவும் கருதித் திருமலை - திருப்பதி தேவஸ்தானம் மாதப் பத்திரிகையில் இந்நூலை வெளியிட முற்பட்டது.

### வேறு

விழைவொடு விருப்பொன் றில்லா விமலவாழ் வார்க ளிச்சை
தழையுமா சார்ய ரென்னுந் தத்துவத் தலைவர் தஞ்சீர்ப்
பழகியங் கவர்பால் நேயம் பற்றிய பத்தி மிக்க
அழகிய நம்பி தாதர் அடிமல ரகத்தில் வைப்பாம். (2)

பரந்தநூல் பலவுஞ் சொல்லிப் படிமிசைப் பகட்ட லின்றி
நிரந்தரம் திருமால் நேயம் நெஞ்சுளே நிகழும் வண்ணம்
கரந்தசீர்ப் பொருளை யெல்லாம் கண்டறிந் துய்ம்மின் என்னும்
தரந்தரும் அழக நம்பி தாள்களே சரண மாமே. (3)

### வேறு

அழகப்ப னடியிணையில் அடைந்தவழ கியநம்பி
கழறுற்றிவ் வுலகுய்யக் காட்டுவான் வடகலையில்
பழகிப்பின் னருள்செய்குரு பரம்பரையிற் படிபவரே
விழைவுற்ற பேரின்ப மெய்வீட்டை வெளிகண்டார். (4)

முக்குணமாய் முதல்வனுமாய் மூவுலகு மீடேறப்
பற்குணற்குக் கீதையருள் பண்டிதனுய்ப் பாரறிய
நற்குனநம் மாழ்வாராய் நாதமுனி முதலாய
சற்குணரை யறியுமழ கியநம்பி தாள்போற்றி. (5)

### வேறு

முன்பிலும்பின் பழகியவெம் பெருமான் முன்னம்
மொழிந்தகுரு பரம்பரையாம் வடசொல் லான
அன்புமிகு சுலோகமோ ராயி ரத்தைஞ்
ஞாற்றிணையும் அழகப்ப னடியிற் சேர்ந்தே
இன்பமுறு மழகியநம் பிப்பேர் பூண்ட
எழிலுடையான் தமிழதனு லிசைத்த பாடல்
துன்பறவைத் தருளியதீ ராயி ரத்தின்
தொளாயிரமே லறுபத்தைந் தெனச்சொல் வாரே.()

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

# முதற் காண்டம்

## கடவுள் வாழ்த்து

திருமகள் கொழுந ஞதி செண்பக மாறஞகி
அருமறை தமிழாய்ப்பாடு மாரமு தடையா வென்னைக்
கருநெறி புகாதாட் கொண்ட காரணன் வரையி லுள்ள
குருபரம் பரையிற் றேன்றுங் குரவரை வணக்கஞ் செய்வாம்.()

**வேறு**

எப்பொருள்ளு தாஞகி யிருநிலமும் வானகமும்
ஒப்பரிய திருவுதரத் துள்ளொடுக்கி யிவ்வுலகிற்
கப்புடைய மாமாயைக் கருப்புடைத்துக் காத்தளிக்கும்
அப்பொருளைச் சிந்தையிஞ லாதரித்திங் கடிதொழுவாம். (2)

**வேறு**

அருமா மறையின் முடிவுரைக்கு மங்குமிங்குந் தாஞகி
ஒருமா நொடியும் பிரியாதே ஊழி முதல்வன் தன்னுடஞய்
இருமா மாயப் பிறப்பொழிய எதற்கு மவனை யிரக்குவிக்கும்
திருமா மகடன் சேவடிகள் சேம மென்னச் சிந்திப்பாம். (3)

வானைப் புரக்கு முதியவஞய் வாசக்
கமல மலர்ப்பிறந்த
தேனை யடிசேர்ந் தருள்பெற்றுச் செகங்க
ளனைத்து முண்டாக்கிக்
கோனைப் பொருவக் காத்தளித்துக் கோதின்
முத்தி யவைநல்கும்
சேனை முதல்வன் செழுங்கமலத் திருத்தாள்
சென்னி தனில்வைப்பாம். (4)

விண்ணூர் சோதி மயமாய மெய்யிற்
பிரிந்தோர் மெய்யெடுத்துக்
கண்ணு ருலகிற் றண்பொருனை கரையிற்
குருகூர் நகர்த்தோன்றி
உண்ணு துறங்கா துண்டுறங்கும் உயிர்கட்
கிரங்கி யொருநான்காம்
பண்ணூர் மறையைத் தமிழ்செய்த பரம
ஞானி தனைப்பணிவாம். (5)

மய்யை மருவுந் தடங்கண்ணுள் மன்னுங்
கோதை யருள்வாழி
பொய்கை பூதன் பேயாழ்வார் வாழி
புதுவை நகர்மறையோன்

அய்யன் கலிய னருள்வாழி ஆசில்
மழிசை யாழ்வார்தம்
துய்ய கமலப் பதம்வாழி வாழி
தொண்ட ரடிப்பொடிதாள். (6)

சீரார் வஞ்சிச் சேரலர்கோன் வாழி
திருப்பா ணாழ்வார்தம்
ஏரார் கமலத் திருவடிகள் வாழி
யிமையோர் தொழுதேத்தும்
காரார் பொழில்சூழ் குருகைக்கோன் கழறுந்
தமிழ்நான் மறையனைத்தும்
சேரா வெழுது மதுரகவி திருத்தா
டன்னைச் சிந்திப்பாம். (7)

காரார் பொழில்சூழ் குருகைக்கோன் கழறுந்
தமிழ்கள் கலியிருளாற்
பாரோ ரறியாப் படிமறையப் படியி
லந்தப் பனுவல்களை
ஏரார் மாற னாற்பின்னும் இசைப்பித்
துயிர்கட் கீந்தருளும்
சீரார் நாத முனிதன்னைச் சிரத்தால்
வணங்கிச் சிந்திப்பாம். (8)

வேறு

மற்றவன் சரணந் தாழ்ந்து மாறனி லவன்முன் அன்பாற்
பெற்றவை யனைத்தும் பெற்றுப் பின்புள வுயிர்கட் கெல்லாம்
உற்றவ னாகி மண்ணி லுற்றசீ ருய்யக் கொண்டார்
நற்றவ முடைய பொற்றாள் நாயினேன் மனத்துள் வைப்பேன்()

ஆசியா ஆள வந்தார்க் கங்கறு திங்கள் பச்சை
நேசமோ டளித்தென் பாலே நின்மல நின்னின் முன்னோர் [டும்
பேசருந் தனங்கள் வைத்தார் பெறுதியென் றிறையைக் காட்
மாசிலா மணக்கால் நம்பி மலரடி சென்னி வைப்பாம். (10)

வேறு

நாதமுனி மகன்மகனாய் நானிலத்து வந்துதித்து
வேதமுதற் பலகலையு மதிகரித்து விரிஞ்சனரன்
மாதவர்கள் தொழுந்திருமால் தெரிசனத்தை வளர்த்தருள்சேர்
போதமிகு மாளவந்தார் பொற்பமர்பூங் கழல்போற்றி. (11)

ஆசிலாப் பெரியநம்பி அலர்கமலப் பதம்போற்றி
தேசுற்றார் திருக்கோட்டி நம்பிசெம்பொற் பதம்போற்றி
நேசத்தார் திருமாலை யாண்டான்சீர் நிலைபோற்றி
வாசப்பூம் பொழிலரங்கத் தரையர்மல ரடிபோற்றி. (12)

பெரியதிரு மலைநம்பி பிரசமல ரடிபோற்றி
விரிபொழில்சூழ் பூதூரில் வந்துதித்து விளம்புமிந்தத்
தெரிசனத்தை வளர்த்தருளும் திகழ்புகழ்சே ரெதிராசன்
அரியமறைத் தெளிவையுறு மலர்கமலப் பதம்போற்றி. (13)

வேறு

சீரொத் திலங்கு கந்தாடை முதலி யாண்டான் திறம்போற்றி
கூரத் தாழ்வான் குணம்போற்றிகோதில் இராமா நுசன்வகுத்த
ஏரொத் திலங்கு குரவர்களாம் ஏழு பத்து நால்வர்களின்
பாரிற் பொலியு மருள்போற்றி கச்சி நம்பி பதம்போற்றி. (14)

வேறு

எண்ணருஞ்சீ ரருளாளர் எம்பார்தம் பதம்போற்றி
விண்ணவர்கள் தொழுதேத்தும் பட்டர்விரைத் தாள்போற்றி
நண்ணரிய வேதாந்தி நஞ்சீயர் கழல்போற்றி
திண்ணமென துயிர்காத்த நம்பிளைசே வடிபோற்றி. (15)

வேறு

ஆசு கடிந்த மெய்ஞ்ஞானி ஆச்சாம் பிள்ளை கழல்போற்றி
மாசில் வடக்குத் திருவீதிப் பிள்ளை மலர்த்தா ளிணைபோற்றி
தேசு மிக்க வவர்பிள்ளை யுலகா சிரியர் திறம்போற்றி
வாசக் கருணை யவன்பின்னு நயினுர் மலர்த்தா ளிணைபோற்றி(16)

வேறு

கூரகுலோத் தமதாசர் கோதறு....
சீரமரும் பதம்போற்றி சேர்திருவாய் மொழிப்பிள்ளை
ஆரவரு மருள்போற்றி யாங்கவன்பூங் கழலிரண்டும்
தார்மருவு நெடுமுடிமேற் றரித்துயிர்கட் கினிதிரங்கும். (17)

ஆனசீர் மணவாள முனிவனம்பொற் சரண்போற்றி
வானமா மலைச்சீயர் மறுவறுசீர்ப் பதம்போற்றி
ஈனமா னிடர்க்கிரங்கும் இராமாநு சன்பிள்ளை
தேனமர்பூங் கழல்போற்றி தென்முடும்பை நகர்போற்றி. (18)

வேறு

முன்னை வினையாற் றீதுற்று முடியு முயிர்க டிறநோக்கி
அன்னை யினுமிக் கிரங்கியருள் ஆத்தா னம்பொற் பதம்போற்றி
என்னையாண்ட அழகப்பன் இணைத்தாள் போற்றி எவ்வுயிரும்
தன்னை யொப்ப நோக்குமருட்டலைமை போற்றி தமர்போற்றி()

கடவுள் வாழ்த்து முற்றும்.

## அவையடக்கம்

எழுத்தறியேன் சொல்லறியேன் பொருளறியேனிலக்கணச்சொல்
பழுத்தவர்பின் சென்றவர்கள் பணியறியேன் மணிவணனை
வழுத்தறியேன் பாகவதர் மலரடியும் வணங்கறியேன்
முழுத்தகவிப்புலவர்கள்போல்மொழிவதற்கேயொருப்பட்டேன்

வேறு

சிற்றெறும்பிலொன் றேழ்கடல் செழும்பெரும் புனலை
உற்ற ருந்துவன் யானென வுரைப்பது போல
. . . . . . . . . . . . . . . . . . . . . . .குரவர்பே ரருளைக்
குற்றத் தாலுயர் நாயினே னவரையோ குறிக்கேன். (2)

வேறு

ஆசறக் கற்று மெய்ம்மை யாரண முடிவில் வைகும்
ஈசனை யடைந்து வாழும் எம்பெரு மாக்க ளின்று
நீசனேன் புன்சொ லாலே நேமியைத் தொடக்கி னேனம்
மாசறு ஞான நீரால் மஞ்சனம் செய்ய வேண்டும். (3)

வேறு

ஈசனருட் டிருமகள்கோன் முதலாக வெனையாண்ட
வாசமலர்ப் பொழில்பூதூர் எதிராசன் வரையாய
தேசியர்கள் வரலாறுஞ் செய்திறமும் செப்புதலால்
ஆசில்குரு பரம்பரையென் றிந்நூற்பே ரழைத்தனனல் (4)

வேறு

அன்புமிகு மழகப்பன் தொண்டர் தொண்டர்
அடியடைந்த வழகியசீர் நம்பி தாசன்
முன்புகுரு பரம்பரையைப் பகர்ந்த மேலோர்
முளரிமல ரடியிறைஞ்சித் தமிழாற் செய்தான்
என்பரடி யேன்றனக்கு முரித்தன் றேனும்
எதிராசன் அடிமுடிமே லிருக்க மேலோர்
பொன்பொதிந்த சிலையோடும் பொன்னென் பார்போற்
புகழ்பொதிந்த புன்சொலுக்கும் பொலிவுண்-
[டாமால் (5)

வேறு

பின்பதழ கியபெருமான் நாயனெனும் பெருந்தவத்தோன்
முன்புரைத்த வடமொழியோ ராயிரத்தைஞ் ஞூறுமுணர்ந்
தென்பரம தேசியர்கள் எனதறிவி னளவிசைத்தார்
அன்பியற்றத் தமிழுரையா லடியேனு மறைகின்றேன். (6)

ஆகவிருத்தம். 25

## பாயிரம்

அந்தாம மென்னு முத்தி யப்பிரா கிருதந் தன்னில்
நந்தாத பேரானந்த நலத்தியல் பிருந்த வாறும்
முந்தாதி யந்தந் தோன்ரு முழுமுதற் றிருமா லாய
எந்தாதை சொரூப ரூப மின்னரு ளிருந்த வாறும். (1)

### வேறு

ஆங்கவனுக் கிருவ கையாம் விபூதிக ளாய வாறும்
ஓங்கியதி லொருவ கையுற் றுடனுறைந் தமரு மாறும்
பாங்கின்றி மற்றை யொன்று பழுதிலே கழியு மாறும்
ஏங்குமற் றதற்காய்த் தான்வந் திருநிலத் தெய்து மாறும். (2)

மண்மிசை யரங்க மாதி வளர்திருப் பதிக டம்மிற்
கண்வளர்ந் திருந்து நின்று கரசரண் கரண மாதி
நண்ணிய வுயிர்க டன்னை வணங்கிட நல்குமாறும்
எண்ணரு முயிர்க ளத்தால் இருந்துயர் விளைக்கு மாறும். (3)

அத்திறங் கண்டெம் மண்ணல் அச்சுதன் வேத மாதி
மெய்த்திற முடைய தான சாத்திரம் விதித்த வாறும்
பொய்த்திற மென்றந் நூலைப் புவியுளோ ரிகழப் பின்னும்
எத்திறத் தாலுங் காப்ப னெனப்பிறந் திட்ட வாறும். (4)

### வேறு

பிறந்து வருந்தி யிடருற்றுப் பிடிப டாத வான்மாக்கள்
திறங்க டம்மைத் தானுன்னிச் சீரார் நித்தர் முத்தரையும்
அறங்கொள் பூமி நங்கையையும் அல்ல லுலகில் ஆழ்வார்கள்
சிறந்த கோதை யெனவிளம்பும் வண்ணம் செனனம் செய்வித்தே

செப்பும் வேதங் களைவிளம்பும்
திருவாய் மொழியாய்த் திருமொழியாய்
ஒப்பி லாத இயலிசையோ
டுலக முய்ய வோதுவித்திங்
கெப்பா லவர்க ளாயிடினும்
இசைத்த தமிழை யிசையோடும்
தப்பா தோதில் வீட்டின்ப
மெய்தும் வண்ணம் தாபித்தே. (6)

எண்ணில் பற்ப லுயிர்களையும் நாளு நாளு மெடுத்தெடுத்து
விண்ணி லழியா வானந்த வீட்டி லமைத்தாங் கவ்வண்ணம்
நண்ணுங் காலம் பலசெல்லும் நாளிற் கலியால் நான்மறையை
மண்ணில் முன்னம் வகுத்ததமிழ் மறையைப் பின்னும்-
[மாநிலத்தில். (7)

ஆசா ரியர்க ளெனச்சிலரை அங்கு நின்று மமைத்தருளி
மாசார் கலியால் முன்மறைந்து மாற்ற மிலாத மறைத்தமிழைத்
தேசார் மாறன் திருவாக்கால் பின்னும் செனனம் செய்வித்துப்
பேசா நின்ற குரவர்களாற் பேதை யுலகிற் பிறவிகெட. (8)

செப்புந் தமிழை யியலிசையிற் சேர்த்தெவ்வுலகும் செலப்பண்.
தப்பில் வியாக்கியைத்தமிழில் இருந்தபடியே சாற்றுவித்து]ணித்
வெப்ப மிக்க கலிச்செடியை வேரோ டறுத்துப் பொடியாக்கி
ஒப்பில் ஞான மனைத்துயிர்க்கும் அளித்த வாறும் உரைக்கின்-
[றேன். (9)

ஆகவிருத்தம் 34.

பாயிரம் முற்றிற்று.

## திருநாட்டுச் சிறப்பு

### அறுசீர் விருத்தம்

கூறும் பொருளின் தொகைக்கெல்லாம் குறியாய் நின்ற தந்தா
ஈறி லின்ப மாதலினல் அதனை முன்னே இசைப்பதற்கு [மத்(து)
மாறும் சமயக் கலைக்கடலை வறளத் தாக்கித் திசையனைத்தும்
ஏறுங் குணனை யெதிராச முனியை இதயத் திருத்தினேன். (1)

வேறு

முத்தியை யடைதற் காறு தருமமே மொழித லானும்
சித்திரத் தரும வேத சிரத்தினிற் செறிவ தானும்
மெய்த்தவப் பொருளைக்கூற வேதியர் வேண்ட லானும்
அத்திற மெதிரா சன்வந் தறைதலில் அவனே தெய்வம். (2)

வேறு

வேத நீதியும் செந்தமிழ் நீதியும் விளங்க
ஓதி மெய்ம்மைகண் டொடுங்கிய நிலையரென் னுடைச்சொல்
ஏதங் காண்கிலர் இலக்குவ முனியதி லிருப்பப்
பேதை மானுடம் பாடுவோர் என்சொலப் பெறுவார். (3)

### வேறு

ஆர ணங்களால் அயனர னமரரென்
றறைந்திடு மவர்தம்மால்
நார ணன்திரு மேலைவீ டுண்டென
நவின்றதை ஞானத்தால்
கார ணங்களா லறிந்திட லன்றியார்
கண்களாற் காண்கின்றார்
பூர ணப்பரஞ் சுடரொளி மயமதாம்
பொருவருந் திருநாட்டை. (4)

### வேறு

ஆவி யேயரு ளாரமு தேயென தமலா
மாவி காரமுற் றளவரும் யோனியின் மறுகும்
பாவி யேனுநின் முத்தியி னின்னருட் பரப்பை
நாவி னாலெடுத் தேதறிந் தியம்புகேன் நம்பி. (5)

நீல மாமுகில் வண்ணனே நின்றிரு நகரின்
கோல மீதெனப் பிரமனுங் கூசிடும் பேயர்
போல நாயினேன் புகலுமிப் பிழைமையைப் பொறுப்பாய்
பாலர் புன்சொலு மின்சொலாய்த் தந்தைபாற் பதியும். (6)

### வேறு

அறைதருமேழ் கடல்மணலிற் பலபலவா மருக்கர்கதிர்க்
குறைவிலொளி தெளிவிசும்பின் கோதறுபே ரொளிதனக்கு
முறையுணர்ந்த வெதிராசன் பகல்விளக்கா மெனமொழிந்தால்
இறைவளரு மந்தாம விளக்கமெவ்வா றெடுத்திசைப்பார். (7)

திருமங்கை நீளைநெறி சீர்கொண்ட பூமியென
வருமங்கை தனிநாதன் வளருமருள் திகழ்பதியைத்
தருமங்கை நகர்க்குரவன் தாளிணையே சார்வாயக்
கருமங்கொண் டடியேனு லறிந்தபடி கட்டுரைப்பேன். (8)

### வேறு

ஆதியஞ் சோதி நாத னச்சுத னருளிற் றேன்றித்
தீதினுன் முகனை யீன்று சிவன்முதற் றேவர் பூதம்
ஓதுபல் லண்ட கோடி யாரண முதிப்பித் தாசில்
நீதிகா ரணமாய் நின்ற நிமலமாய்ப் பெரும்பாழாகும். (9)

மேலதா யடைந்தோர் தம்மை விண்டுவின் வடிவ தாக்கிச்
சாலநீண் டகன்ற தெய்வத் தடம்புனல் விரசை யென்னும்
பால்நிற நதிக்கப் பாலாம் பரமாகா சத்தி லாங்கே
கோலமார் பரலோகத்திற் கோதில்வை குண்ட மென்றும். (10)

அந்தாம மென்று முத்தி யாமென்றும் வீடதென்றும்
நந்தாத வொளிய தென்றும் நற்பதம் பரமே யென்றும்
சிந்தாத மோக்க மென்றும் சீர்ப்பல தெய்வ நாமம்
தந்தார்க ளின்றித் தானே பெற்றதாய்த் தனிநா டாகி. (11)

வேறு

சீரியதாய்ச் சின்மயமாய்த் திகழொளியாய்த் தேவர்கட்கும்
காரணகா ரியங்களுக்கும் காணபரிதாய்க் கணிப்பிறந்த
பேரியல்பா யயனரற்கும் பேசரிதா யெப்பொழுதும்
ஓரியல்பாய் வளமிருந்த உத்தமத்தி லுத்தமமாய். (12)

பண்ணுநெறி யருதெழுந்த பரம்புருட நகர்க்கணியாய்க்
கண்ணரிய திருமதில்நூ றுயிரமாய் நவில்கோடி
எண்ணரிய கோபுரங்கள் எழில்திகழ இனிதெனையாள்
கண்ணனகர்ப் பொதிந்திலங்கும் கற்பகக்கா வனந்தமுமாய்(13)

சங்கரனுன் முகனுநனி சாற்றிடவொண் ணுததுவாய்
அங்கைநெல்லிக் கனியென்ன அடியவர்சென் றடைகதியாய்ப்
பங்கமில்தன் னுடைச்சோதி படிந்தநித்தர் முத்தருக்கும்
அங்கடங்கா விசித்திரங்கள் இவ்வளவென் றளப்பரிதாய். (14)

வேறு

இருவகை விபூதி யாகி யிசைதலாற் பத்தியெல்லாம்
திருமகள் கொழுநன் சேம உடைமையாய்ச் செறிதலாலப்
பொருவருந் திருநாட் டுள்ள பொருள்பிற ருலகிலில்லை
ஒருவரு மதனை யுள்ள படியுணர்ந் துரைக்க மாட்டார். (15)

திருநகர் மருங்கி லெங்கும் சீர்கொள்பல் வளத்தினேங்கும்
பொருவரும் பொழில்கள்நூறு யிரமெனப் புகலுங்கோடி
தருமல ரவிழ்த்த செந்தேன் சுடரொளி விசும்பிற்றுழ்ந்து
வருமருள் மதுவா மாறு விரசைமா நதியின்மண்ட. (16)

வேறு

தூயநெறி யந்தாமத் துள்ளாயோர் துகளின்றி
ஏயவரால் அளப்பரிய எழில்வாவி சதகோடி
ஆயவதிற் குவிந்தலரா அருட்கமலங் கழுநீர்கள்
மாயாத பரயோக மயமான மடவன்னம். (17)

மாசிலாச் செழுஞ்சோதி மயமான நவமணிகள்
பாசடையா வருட்பொய்கைப் படியாகிச் சோபானம்
தேசுபொலிந் திலங்கியவத் திரள்மணியார் மண்டபங்கள்
ஆசுகுன்று வெழிற்பொய்கை புடை நெருங்கி யழகெறிப்ப.(18)

அற்புதமாய்ப் பலவிதமாய் அணிபொய்கை புடைசூழக்
கற்பகமென் றெளிகொண்ட சோதியெனுங் கானத்தில்

சிற்குணமா மலரவிழ்ந்து தேனொழுகத் திருமகளோ (டு)
எற்பரமா முகநோக்கும் சிறுதென்ற லெழுந்திலங்க. (19)

உலகமுண்ட பெருவாய வேங்கியசீ ரந்தாமத்
தலரிலொளி மயமாகி யருள் பொழியுந் திருவீதி
பலபலவா யிரகோடி பசுஞ்சோதி மரகதத்தால்
நிலவியவத் தலமெங்கும் அதன்விசைநீ டொளிவிளங்க. (20)

நீரேறு சடையானும் நினைப்பரிதாந் திருநகரின்
சீரேறு திருவீதி யிருமருங்குஞ் செழுஞ்சோதித்
தாரேறு தோரணமத் தனிமுதற்கு மளப்பரிதாய்
ஏரேறு நவமணியால் இலங்கியசீர் மணிமாடம். (21)

ஆதியருள் திகழ்ஞான மயத்தினு லவயவங்கொண்(டு)
ஓதிமுதற் பாதம்வரை யொப்பிலுருப் படைத்திலங்கு
நீதிவளர் மகளிர்குழாம் நிரைத்தெழுபூ ரணகும்ப
வீதிதொறு மானந்த விழாவொலியான் மிகமுழங்க. (22)

ஓங்கார மயமாகி யொளிவளருந் தடந்தோள்கள்
பாங்காய வீதிதொறும் பலகோடி கடிகமழத்
தாங்காநின் றகைமணிநாத் துயமருளா வயலிருந்த
பூங்காவி லருட்கிளிகள் பூவையுடன் பொருள் விரிப்ப. (23)

தேசுபொலி மணிமாடத் திருவீதிச் சந்துதொறும்
ஆசிலருள் பெற்றொளிரு மானந்த வடியருக்கும்
ஈசனுக்குங் களியுறுத்து மெழிலாரு மண்டபங்கள்
நாசமில்லே ரொளிவயத்தான் நலந்திகழா யிரகோடி. (24)

வேறு

மூட வேரை யூட றுத்து மோக தாக மின்றியே
வீடி யைந்து வீட தாய மெய்ம்மை யாய சோதியாம்
வாடை தென்ற லூடு லாவ மன்னு சிற்சொ ரூபமாம்
மேடை கோடி யாயி ரங்கள் வீதி வீதி யெங்கணும். (25)

போச னந்த மக்கி லார்கள் புக்க வர்க்கென் னீவர்நம்
ஈச னின்ப வீடெய் தாத தேவ னின்னு யிர்க்கெலாம்
சீசி வீட ளிப்ப தென்கொ லென்று செப்ப லொப்பதாம்
ஊச லாடு ஞான மாதர் நூபு ரத்தி னேசையே. (26)

முந்த டுத்த தீமை யாள ரெனினு முந்து தங்களை
வந்த டித்த லம்ப ணிந்த போதி லொன்று மைந்தர்மேல்
நொந்த டித்த சத்தி யத்தை யொக்க நொய்தின் மேடையிற்
பந்த டித்த ஞான மாதர் பங்க யத்த செங்கைகள். (27)

விட்டி லங்கு சோதி யால்வி ரிந்த காவில் விண்டதேன்
நெட்ட விழ்ந்த போது தேனை நீங்கி டாது சென்றவா

எட்டெ ழுத்தி ஞாத னன்றி ராமனுக வெய்த மால்
இட்ட காத லோடு பின்செ லிளவல் செய்கை மானுமே. (28)

அண்ட முண்டு மிழ்ந்த சோதி யாதி நாத னன்றியும்
உண்டு தெய்வ மென்ன மண்ணி லோயு மாய வஞ்சரைக்
கண்டு சென்று வீடு கண்ட கருணை யாளர் கண்கணீர்
மண்டி மார்பி லாற தாக மற்ற வர்க்கி ரங்குமால். (29)

திரைசெய் கோலக் கரைசெய் யென்று சிற்பி கையில் வானரம்
தரைசெய் வெற்பெ டுத்த ளித்து மீள வேகுந் தன்மைபோல்
உரைசெய் தோர்க ளன்ப ரற்ற முற்றெ டுத்து கந்துபோய்
விரைசெய் வாய மாய வன்க ரத்தளித்து மீளுமே. (30)

தேடு வார்க ளெய்த நின்ற சிற்சொ ரூப மாயினூர்
ஆடு வார்கள் வீதி தோறு மன்பர் சென்ற டைந்தநாள்
கூடு ஞான வாரி யோகி கூட நின்றோர் கோவையாய்ப்
பாடு வார்கள் சாம வேத கீத மாய பண்ணையே. (31)

தரையி லாசை யற்ற பத்தர் சங்க ரற்கு மெய்தரும்
விரைசை மூழ்கி வம்மின் வீடி தென்ற ழைக்கு மெய்ம்மைபோல்
உரைசெய் ஞான கோபு ரத்தி னும்ப ராகி யெங்கணும்
நிரைசெய் கின்ற பார சோதி நிலவி யாடு துவசமே. (32)

வேறு

இப்படி யிருப்ப தென்ன வாக்கினல் யாவரா லும்
செப்பிட வரிதா யோங்குஞ் சிறப்பினிற் சிறப்பு மிக்க
ஒப்பிலாத் தெருள தாகி யுயர்வற வுயர்ந்த வீடாம்
அப்பெரு நகரத் தோங்கு நடுவணுய் அநந்த கோடி. (33)

மருவரும் பிரம சோதி மயத்தெழுங் கிரீடக் குன்றில்
திருவிளை யாடற் கேற்ற சின்மயத் துருவங் கொண்ட
பொருவரு மஞ்ஞை கிள்ளை பூவைகள் புதிதாய் நாளும்
குருமணி யொளியா லோங்குங் கோதில்ஏ காந்த கூடம். (34)

பற்பல கோடி தோறும் பங்கயக் கண்ண ஞதி
எற்பர னடியை வைகு மிலங்குபூ வணைகள் சோதிக்
கற்பக நறும்பூஞ் சோலைக் காவினுற் பொலிந்த காட்சி
அற்புத வெழிலா யோங்கு மணிநகர் வீதி யெங்கும். (35)

மெய்வரி யளிகள் சோதி விரைமலர் மதுவைத் தேக்கித்
தெய்வகாந் தருவ மென்னும் சீரிரா கத்தைப் பாட
அய்வகைப் பொருளு நீதி யறிந்தசீ ரணங்கொண் டாட
நய்யுமன் புருகிக் கேட்டு ஞானமாக் குயில்கள் சோரும். (36)

ஆகவிருத்தம் 70.

திருநாட்டுச் சிறப்பு முற்றிற்று.

# திருவருள் வாலாற்றுச் சிறப்பு

### எண்சீர் விருத்தம்

நாரா யணனு கணையான் மலரான்
நரநா ரணனுன் மறையின் முதல்வன்
கூரா ழியினு னுலகே ழுடையான்
குறளா யொருகோ மகனுய் வளர்வான்
வாரார் முலைமா மலரா ளுடனே
மன்னுந் திருமா நகரின் நடுவண்
சீரா ரொளியாய் வளர்சின் மயமாந்
திருமா மணிமண் டபமொன் றுளதாம். (1)

ஆருர் சடைமுக் கணனு ரயனுர்
அறிவா லுமளந் தறியா நிலையாய்
நூரு யிரகோ டியெனு வடைவே
நுவல்பே ரொளியாய் அவிரத் தினமாய்
வேருய் நிமிர்தூ ணழகாய்ப் பலவாய்
மிளிர்சோ திவிதத் தின்விசித் திரமாய்த்
தேரு நிலையா ரைவெறுத் திடமத்
திருமா மணிமண் டபமொன் றிசையும். (2)

### வேறு

ஆங்கதற்கு நடுவணுய் ஆநந்த மயத்தாலே
ஓங்குசீ ரலங்கார மண்டபமொன் றுண்டதனுள்
தாங்கு மருளாண்மை அலர்தலருச் சத்தியத்தில்
பூங்கமல மாயிரத்தெட் டிதழோடும் பொலிந்திலங்கும். (3)

மன்னியதி லெண்டிசையில் வளர்பவர்கள் மாசறுசீர்
மின்னிடைச்செங் கனிவாயார் ; திருவெண்சா மரைவீசும்
கன்னியர்க ளோரெண்மர் கருணையினு லவயவங்கள்
அன்னியர்மற் றலர்கமலத் துதித்தவளை யனையார்கள். (4)

ஏரியலம் மலர்மீதில் இலக்குவமா முனிவனெனப்
பாரில்வரு மனந்தாழ்வான் பணங்கமலா யிரந்திகழும்
கூரியசீர்ச் செழுஞ்சோதிக் கானந்தக் கோப்புடைய
சீரியசிங் காதனத்தில் செங்கமலை நீளைபுவி. (5)

வலவருகு மிடவருகு மன்னவதின் மலருறைவாள்
அலகிலரு ளிருவகையென் றறைதருஞ்சீர் விபூதிதொறும்
நிலவியவை யிதமெய்த நிமலவருட் கருணைசெய்தும்
உலகமுண்ட பெருவாயன் திருமார்பி லுடனுறைந்தும். (6)

படுக்கையணை நடுப்படுத்துப் பாலனுய்வெண் ணெய்கபடக்
குடக்கூத்தன் தனக்குநந்த கோபருக்குங் கொங்கையொன்றின்
மடக்கொடியா ளசோதையிரு வகைப்பாலும் வகுத்ததெனை
எடுத்தசடத் துயிர்களுக்கும் ஈசனுக்கு மிவளிலக்காய். (7)

தேனெடுபால் கலந்ததெனத் திருமார்பிற் சேர்த்திசெய்து
வானிரவி யொளி யென்ன மலரில்வரு வாசமென
ஈனமிலா நவமணியு மிலங்கொளியு மெனவீசன்
ஆனந்த வுருவையிறை யகலாத வனுபவமாய். (8)

இருப்பவளாய் அனந்தனெழிற் கருடனியற் சுதரிசனன்
திருப்பாதச் சுவடகலாச் சேனைமுதல் நாதன்முதல்
ஒருப்பாடுற் றனுபவத்தில் ஒருங்குநித்தர் முத்தருக்கும்
விருப்பான கயிங்கரிய விருத்திபல விதிப்பவளாய். !9)

உத்தமமாம் சீலத்தால் உயர்குணத்தால் உருவத்தால்
ஒத்தவர்மிக் கவரில்லா விலாசத்தா ளோமயத்தாள்
நித்தர்முத்தர் முதலாக நீணிலம்வா னுண்டுமிழ்ந்த
அத்தனையும் தொண்டரையும் அகலாத ஆரருளாள். (10)

மற்றுநங் காமங்கள் மாற்றேலென் றருளியவச்
சொற்பொலிந்த வாசகத்தின் தொகையாலே கயிங்கரியத்(து/
உற்றிறையை யனுபவிப்பா னேருருவ மமையாதே
சிற்றிடையார் பலராகித் திருமகளாட் செயவிருப்பான். (11)

உளக்கமலந் தனையலர்த்தி யதிலான்மா வொளிரவிட்டிவ்
விளக்கத்தா லுருத்திரனும் விரிஞ்சனுந்தா முள்ளளவும்
அளப்பரிய கலியாண குணங்களுக்கு மதிபதியாய்த்
துளக்கமிலா வானந்தச் சுயம்பிரகா சச்சுடராய். (12)

வீற்றிருப்பான் திருநகரை விரித்துரைக்க மூவர்களும்
ஏற்றமுடை யாரணமும் அறியாதென் றிந்நூலில்
தேற்றரவில் எதிராசன் சொல்லமிர்தாந் தொகைவரலா
ருற்றுடைய திருமால்சீ ரழகையெவர் ஆயவல்லார். !13)

ஆகாத நாவுடையே னாழ்வார்கள் ஆசிரியர்
வாசாம கோசரத்தால் வாழ்த்தியசீ ரருள்வடிவைக்
கூசாதே நீசனே னெவணமெனக் குறித்துரைக்கேன்
ஈசாவென் செயலெனநீ யெண்ணியதி லிசைவித்தாய். (14)

காக்கைவாய்க் கட்டுரையுங் காசினியோர் கொள்வதனல்
வாக்குடையோர் சொன்மாலை வகுத்துனக்கே யெவ்வண்ணம்
ஆக்கிடினும் பெரியாழ்வார் ஏற்குமென வறைதலினல்
போக்கனே னவைபுனையாய்ச் சிலபுகல்வன் போரேறே. (15)

பெருந்திருவின் பெருவாழ்வே பேயனேன் புதற்றுபின் சொல்
தரும்பரமன் நீயதற்குச் சார்வாய தலைவனுநீ
அருந்தவஞ்சேர் பாகவத ரவையறிந்தப் பிழைபொறுப்பர்
திருந்துநெறி யவர்களுக்காய்ப் பொறுக்கசிசு பாலனேன். (16)

நித்தியமா யழகொளிகோ மளமிருது நீடிளமை
இத்திறமிவ் வண்ணமென வியம்பரிதா யெவணமெனில்
அத்திறமவ் வண்ணமென அறைவற்கே இசைந்தமைந்த
மெய்த்திறத்தில் விளங்கியசீர் விண்டுவிரு புண்டரிகம். (17)

என்றுரைக்குந் திருத்தாளி னெழிலையென்ன லெடுத்துரைக்க
ஒன்றுமதற் கிணைகாணேன் உகாரத்தாள் இருதிக்கும்
மன்றல்கமழ் கரமலரால் வருடமிகச் சிவப்பெய்திக்
கன்றுமென்று லதுக்கதுவே நிகராகக் கண்டனமால். (18)

அறைதருஞ்சீ ரிணைத்தாளின் அங்குலியிற் றங்குநகம்
பிறைநிகர்த்த தென்றறையிற் பிழையாமப் பிறையின்மறு
உறையுமத னுலவையற் றொளிர்வதென்றே யுரைத்திடினும்
பறையறையப் பட்டபொருள் படாப்பொருட்டு மாணுதால். ()

சீராருந் திருப்புறந்தான் மீதிலுறை திருச்சிலம்புக்(கு)
ஆராயி லுவமையதற் காமைமுது கதனினிலா
ஏராரு மண்டலமிட் டிருப்பதென்று லிணையாமோ?
பாரோரா லிவணமெனப் பட்டபொருள் படாப்பொருட்டு(20)

இருக்காற்றின் திறத்தாலே யிலைமலரிட் டரவுபிறை
எருக்காற்றின் நங்கைசெறி யிருஞ்சடையா னேத்தவஞ்சத்
திருக்காற்றியெனையாண்டான் திருக்கணைக்கால்திருக்குறங்காம்
பெருக்காற்றி னெதிரேறும் கெண்டையென்றும் பேசுவரால்.()

ஆனந்தச் செழுஞ்சோதி யச்சுதன்சீ ரருள்முழந்தாள்
கோனந்தன் இளவேற்றின் திமிலென்றுங் கூறுவரால்
தேனுந்துந் துழாயினன் திருக்குறங்கு சீபூமிக்
கேநந்தா லீலைக்காந் திருவணையோ ரிரண்டென்றும். (22)

இந்திரன்வா ரணத்துதிக்கை யிரண்டொன்றி யிருப்பதென்றும
மந்திரமன் மதரொப்பில் வாழையின்தண் டிரண்டென்றும்
தந்திரத்தார் பாகவதர் சாற்றினர்க ளவையன்றிச்
சிந்துரத்தின் கொம்பொசித்தான் திருவரைப்பீ தாம்பரத்தில்.

தருந்தவரை நூன்மாலை சாத்தியதின் மேல்வலமாய்த்
திருத்தவலஞ் சுழியுந்தித் திருமடுவும் நான்முகனை
விரித்தமலர்த் தாமரையும் வீச்சு(ரு)மு ண்டவைகாத்தற்
குரித்தாய திருவுதர பந்தனமு மொளிவிளங்க. (24)

சீரியனே ரியவிடையின் செங்கமல மங்கைதங்கும்
ஏரியல்பாய் விசாலமுமாய் இலங்குதிரு மறுமார்பும்
கூரியசெஞ் சுடராழி சங்கேந்துங் கொழுஞ்சோதித்
தாரியலுந் தோணுன்கும் தரணிமுதற் பலவண்டம். (25)

உண்டுமிழ்ந்த திருமிடறும் ஒளிதிகழும் திருக்குழையிற்
குண்டலங்க ளோரிரண்டுங் கோகனகச் செல்வியஞ்சக்
கொண்டதிருக் கன்னவெழிற் கோடிரண்டு மப்போதாம்
புண்டரிக மலர்ந்ததெனப் பொலிந்திலங்கு மிருவிழியும். (26)

சீராருந் திருமுகமும் செங்கனிவாய்ப் புன்சிரிப்பும்
ஏராருந் திருப்புருவம் நெறிப்பினு லெலேயிறந்த
பேராநந் தக்கருணே பிறப்பித்தாங் கிறப்பற்ருர்
ஆராத வானந்த மொண்டுண்ண அருள்பொழியும். [27)

ஆனந்தா மிர்தமுடைய பொய்கையென்று மளவிறந்த
தேனந்த வருள்பொங்கு செங்கமல மலரென்றும்
பூனந்த வானுருப் பூரணமாப் பதியென்றும்
கானுந்து துழாயினுன் கருணேபொலி திருமுகமும். (28)

தெருளொழுகுந் திருநுதலிற் சிறுவேர்வுங் கத்தூரிப்
பொருளெழுத வாராத பொற்புடைநற் றிலதமுங்கார்
இருளொழுகிச் சுருண்டுபுரிந் தெழுந்திலங்கு திருக்குழலும்
அருளொழுகு மணிமுடியு மழகுபொலி முகிலுருவும். (29)

உள்ளாளெனப் பொருளுமா யோங்கியத னகம்புறத்தும்
விள்ளாத ஞானத்தால் விளங்கியசீர் மாமாயன்
மள்ளார்பூந் துழாயினுன் கரநான்கிற் சங்காழி
கொள்ளாநின் றவையன்றிக் குறித்துரைக்கு மிருகரத்தில்.(30)

சீராரும் வலக்கரந்தான் திருமகளார் செவித்தார்மற்(று)
ஏராரும் ஆபரணம் எழிற்குழலென் றிவையமுந்த
நேராகி மாருத நிமலவருட் டழும்பிலங்க
ஆராத பெருங்காதல் அனந்தாழ்வான் மிசையூன்ற. (31)

வேதாந்தம் சித்தாந்தம் விளங்குகலாந் தம்விரிந்த
போதாந்த நாதாந்தம் பொற்புடையோ காந்தமென
வேதாந்த மாறுக்கு முளனுனன் வாமசெங்கை
ஈதாந்த நிலேயென்ன இடமுழுந்தா டனிற்சிறப்ப. (32)

மேற்போட்டு வீற்றிருந்து விண்முதலா முலகினேச்செங்
கோற்போட்டு நடத்தொன்றிற் குறைத்தாங் கல்லலேத்தன்
பாற்போட்ட அன்பருடன் பரிந்தேக போகமதாய்
நூற்போட்ட பரயோக நேரிலாதாங் கனுபவிப்ப. (33)

சங்காழி நாந்தகம்வில் தண்டாய வைம்படையும்
மங்காத செழுஞ்சோதி மயத்தினுல் அவயவங்கொண்(டு)
அங்காத லுடனுகந்த கயிங்கரியத் தனுபவத்திற்
கொங்கார்பூந் துழாயினுன் குணத்திலசைந் தடிவணங்க. (34)

ஆனைமுகத் தோன்சண்டன் பிரசண்ட னருட்குமுதன்
ஏனையரே யாதியர்கள் எழில்வாசல் நிரைகாப்ப
வானையே முதலாக வகுத்தமைத்த பூதத்திற்
சேனைமுதற் றனிநாதன் சிருட்டிமுதல் முத்தொழிலும் (35)

இறையருளின் விதியாலே இயற்றியதிற் ருன்ருேயா(து)
அறைதருஞ்சீர் நித்தர்முத்த ராயினுர்க் கதிபதியாய்
மறைமுதல்வ னருடிருமா மகளருளென் றிவையிரண்டால்
உறையுமவ யவம்பெற்ருங் குலகேழு மொருதனிக்கோல். (36)

செல்லவீற் றிருப்பார்க்கும் சிறந்தநித்தர் முத்தர்கட்கும்
எல்லையிலா வானந்தப் பெருவளத்தை யீந்தவரைப்
புல்லியனு பவித்துமடை மாருத போகமுடை
அல்லிமல ரயனத்தார் எனமுன்ன மாய்ந்துரைத்த. (37)

ஒண்டொடியாள் திருமகளு நீயுமே நிலாநிற்பக்
கண்டசதிர் கண்டொழிந்தேன் என்றதுபோற் கண்டொழிந்த
அண்டாண்ட மதின்புறமும் ஒருகுடைக்கீழ்ச் செலவாழும்
புண்டரிகை தனிநாதன் திருவடியே புகலிடமாய். (38)

வேறு

திருமகள் நாத ஞர்க்குச் சிறந்தநான் மறையி னந்தம்
இருவகை விபூதிக் குட்பட் டிசைந்தன வுயிர்க ளெல்லாம்
மருவுசீ ரடிமை யென்றே வகுத்தன வதனி லாங்கே
ஒருவகை நித்த ராகி யுடனுறைந் தந்தா மத்தில். (39)

இருந்திறை பணித்த வண்ணம் எழுந்தசைந் தருளின் வைகிப்
பொருந்துதன் வசமொன் றின்றிப் புனிதனுக் குவந்த செய்து
வருந்தொழி லுணவ தாக வாழ்வன வாழ்வ தாகத்
திருந்தின தொன்று மற்றை யொன்றருச் சிணுக்கிற் பட்டு(40)

இறைசெயல் மறந்து லீலா விபூதியென் றிசைக்கப் பட்டிங்(கு)
அறைதரு நித்த ரைப்போல் அச்சுதன் வசமா காதே
துறைதொறுந் தம்மை நாட்டித் தோன்றிய வாறே செய்து
குறைவரும் பிரம நானென் றறைந்துமுன் கூறு நித்தர். (41)

வேறு

கணக்கறு நலத்தினன் கருணை யுட்புகும்
வணக்குடைத் தவநெறி வழியும் தம்முடை
உணெக்குரு காவிறு மாப்பு மொப்பெனப்
பிணக்குடை யுலகம தடையப் பேய்களாய். (42)

### வேறு

ஊனே யுயிரே யுணர்வேயென் றுரைக்கப் பட்ட பலபொருளும்
தானே யாகி யல்லாத தலைவன் செயலைக் காணுதே
யானே யென்ன தெனதேயென் றிருமாப் பெய்தி யிலக்குமிகள்
கோனே யென்னத் தொழுதமரு நித்தர்க் கெதிராய்க் குவலயத்
[தில் (43)

முற்றப் புவன முண்ட பிரான் முளரி யுந்தி யயன் விதியில்
உற்ற மற்றைத் தெய்வங்கள் பாடி யாடி யுவப்பி னுெடும்
செற்ற மனத்தாற் பிறந்திறப்பார் சீரார் குருகைச் சடகோபன்
சொற்ற சுருதித் திராவிடத்தில் துகளில் திருமால் திருத்
தொண்டால். (44)

மிக்கார் வேத விமலரென்ன விளம்பி யவரெம் பெருமாக்கள்
எக்கா லத்து மெனப்போற்றி இருந்து நித்த ரிருப்பரைத்தான்
தக்கா ரவரைப் போலவிவர் தலையாய்ப் பெரியோ ராகாதே
பொக்கா ருடலுற் றறக்கடையாய்ச் சிறியா ராகிப் போய்
முன்னம். (45)

ஆரம் பொழிற்றென் குருகைக் கோன்
அயர்வறு மமரர்க ளதிபதியென்(று)
ஓரப் பட்ட முதற்பத்தின்
முதற்பாட் டின்சொற் குரியர்களாய்ச்
சீரொத் திலங்கு மெய்ஞ்ஞான
ஒளியாய்த் திகழந்த திருவுருவாய்
நேரொத் தருளிற் பேரறிவே
யுடைய ராகும் நித்தரைப்போல். (46)

ஆசற் றிராதே யஞ்ஞான
அறிவா யழுக்குச் சடமெடுத்துப்
பாசத் தாலே யிறுக்குண்டு
பரனை மறந்து பய்யலுறும்
நீசர்க் குறவாய்த் திரிந்தவமே
நினைப்பு மறப்பு நியத்தாய்ப்
பேசப் பட்ட பிராகிருதர்
எனவே வினையாற் பிணிப்புண்டு. (47)

### வேறு

அண்டர்க ளன்பிற் பணிந்துநின் றெழுந்தும்
அச்சுதன் றனக்கிணை யாகக்
கண்டவா வுலகிற் றெண்டரைப் பாடி
வீணிலே காலத்தைக் கழித்தும்

தொண்டுபூண் டமுத முண்பதற் கிணையாய்த்
தோகையர் வாயிலூ றமுதம்
உண்டுநா முனக்கே யாட்செய்வோ மெனுஞ்சொற்
கிணையதா யவர்பணி யுவப்பார். (48)

வேறு

ஒன்றே யுயிரும் பாழுமென
இசைக்குந் திறங்க ளவிக்கி யத்தால்
அன்றே இறைபார் வையாகில்
அறிவு முதன்மை பெறுவான்பே(று)
என்றே யிசைக்கும் பொருளுமிறும்
அதனு லிரண்டென் றிசைத்தருளிற்
சென்றே சேறு நிலக்கெதிராய்ச்
சிறுகே டிழைத்துத் திரிந்திழிவார். (49)

வேறு

எக்கரு மங்கள் பண்ணி யாவராய்ச் சென்மித் தாலும்
அக்கரு மத்தில் நின்றங் கச்சுதன் அடிமை யாகிச்
சக்கரஞ் சங்க மேந்தி யவருடன் சாரார் நேராய்ப்
பொர்க்குடை யாக்கை தாங்கி யுண்டிமை துனத்தைப் பூண்டு. ()

வேறு

சாற்ற முடியாத் தீவினையே செய்து மொருகால் சரணமெனப்
போற்றி யிறைஞ்சுங் காகத்துக் கிரங்கும் புனிதற் கவர்மயக்கில்
தோற்றும் தெய்வ மிலையென்றே தொழுவார் நழுவும் பதந்
துய்ப்பர்
கூற்றின் செங்கோல் வழிநின்றே முனைவா ருலைவார் மெழு
கொப்பார். (51)

வேறு

வாடினேன் வாடியெனக் கலிகன்றி மடவாரால் வருந்தி நாளும்
ஓடினே னென்றதுபோல் ஓடியுளம் மீளாதே யோடி மாய்ந்து
கூடியவர் வசத்தினராய்க் கொடும்பாசத் திளைத்தாட்டு
மாயைக் கட்டில்
ஆடியுமா லவம்புரிந்தே நெடுந்தடக்கைக் கெட்டாதே யகன்று
நாணுள். (52)

திரிகின்ற நெஞ்சினராய்த் தீவினைநல் வினைவிலங்கிற் சேர்ந்து
நாளும்
எரிகின்ற காமமயக் கெனுந்தண்ட லாளர்களால் ஈடு பட்டு
விரிகின்ற வெகுளியெனும் வேந்தனு லலமந்து விரிந்து தன்னை
அரிகின்ற சஞ்சிதமா வினைதுணையாய்ப் பிறந்தாப சாரந்
துய்ப்பார். (53)

**வேறு**

அப்படியே திரிந்துழல்வார் அதுகண்ட அச்சுதனுர்
ஒப்பரிய நித்தர்முத்தர் உடன்கூடி யவரெவர்க்கும்
செப்பரிய நான்மறைக்குந் தெரிவரிய வெனைத்தெரிந்தே
எப்பொழுது மெம்முடனே யினிதமர்ந்தெம் மெழில் வீட்டில்.()

அந்தமில்பே ரின்பவள மனுபவிக்க வேண்டுமெனச்
சிந்தைவஞ்ச நினைவின்றித் திருவருளின் நினைவாலே
எந்தைநினைந் திடர்க்கடல்விட் டேறும்வண்ணம் இன்னுயிரின்
பந்தமறக் கரசரணை கரணுதி புலன்படைத்தே. (55)

தனைவணங்கும் படிசெய்து தான்புவியி லரங்கமுதல்
நினைவரிய பதிதோறும் உறையவதின் நினைவின்றி
வினைமிகுதி யாற்சமிதை வெட்டவிட்ட வரிவாளால்
கனையானை வாற்றரித்தா னெனவவற்ருற் கடுநரகம். (56)

ஆக்கியதி லழிவதுகண் டிறையிரங்கி யந்நினைவைப்
போக்கியுயிர் தனையறியும் பொருட்டினு லிருடிகடம்
வாக்கினுற் றன்மநெறி வழுவாதே சாத்திரங்கள்
நோக்கிவரு வித்துலகில் பரப்பினுன் நோய்தீர. (57)

அந்நூலை யிருடிகள்புக் கறையவதிற் படாதோடி
இன்னலுறப் பொருதிறைவன் இரும்புனல்கொள் கிணற்றன்னை
பின்னேகும் புதல்வன்விழப் பிடிப்பேனென் றிழிந்ததுபோல்
தன்னையொன்றும் பாராதே புவிமீதிற் ருனமரும். (58)

ஆகவிருத்தம் 128:

திருவருள் வரலாற்றுச் சிறப்பு முற்றும்.

# முதலாழ்வார்கள் பிரபாவம்

**கொச்சகக் கலிப்பா**

பிறவிபல பிறந்திடவும், பிணங்கியவ னேடுயிர்கள்
உறவின்றிப் பகையாகி யரக்கர்களா யுயிர்மாய
அறமெலிந்து சோதிசில ரகப்பட்டார் தம்மொடும்போய்த்
துறவுசெறி யந்தாமம் புகுந்திருந்தோர் சூழ்ச்சியினல். (1)

மான்காட்டி மான்பிடிக்கு மதியினர்போல் வரியளிசேர்
தேன்காட்டுந் துழாயினன்சீர் வைகுந்த முத்தர்களுக்(கு)
ஊன்காட்டா தூன்காட்டி யுலகமுய்யும் பொருட்டாக
வான்காட்டும் மயர்வில் லாமதிநலமு மகிழ்ந்தருளி. (2)

வாழ்விப்பான் யோனியவாய் முதலாழ்வார் களைமண்ணில்
தாழ்வில்லா அற்பசியோ ணமவிட்டம் சதயத்தில்
சூழ்புரிசைக் கச்சிமல்லை மயிலையென்னுந் தொன்னகருள்
ஊழில்பொய்கை பூதம்பே யெனுநாமத் துதிப்பித்தார். (3)

வேறு

ஏமவுல கிடர்நீங்க எவ்வுயிர்க்கும் இயல்பாய
காமக் குரோதாதி கால்குலையச் செந்திருவின்
நாமம் விளங்க நறையார் பசுந்துளவத்
தாம முடியான் தமராய மூவர்களும். (4)

வேறு

ஒருவரை யொருவர் காணு துரைத்தவப் பதிக டோறும்
திருவளர் மார்ப னன்றிச் செகத்திலோர் துணைகாணுதே
வருபகல் பலவும் வைகி வளருநா ளொருநாள் மாயக்
கருநெறி கடக்கின் ருரைக் காசினி யெங்கு நாடி. (5)

திரிந்துநான் காண்டல் வேண்டு மெனத்திரு வுளத்தில் எண்
பரிந்தெழு சிந்தைப் பொய்கை பழனஞ்சூழ் கச்சி நீங்கி [ணிப்
விரிந்தெழு கருணை பொங்க விடைகொள்வார் கோவ லூரில்
புரிந்தவன் புடைய மாயன் அருளினு லதனுட் புக்கார். (6)

புக்கவர் கமலக் கண்ணன் பூங்கழல் தொழுது வாழ்த்தி
அக்கர மெட்டு முள்ள படியினு லமைய வோதி
முக்கணுன் சாபந் தீர்த்த முதல்வனென் றன்பு செய்து
தக்கவப் பதியி லன்று தங்குவான் சமைந்த போதில். (7)

பூதரு மல்லை யென்னும் பொன்னகர் தன்னுள் நின்று
வேதநா யகற்கா ளாய மெய்யரை யெங்கு நாடிப்
பாததா மரைக ளேத்திப் பரவுவான் புரிந்த வன்பாற்
போதுவார் கோவ லூரிற் பூவைப்பூ வண்ண ராய. (8)

அருமறை முதல்வன் கூட்டு மருளினு லதனுட் சென்று
கருமுகில் வண்ணன் செம்பொற் கழல்நினைந் தன்றவ் வூரில்
மருவிட வந்த நாளில் பேயரு மயிலை நீங்கித்
திருவருட் செயலால் வந்து திருக்கோவ லூரைச் சேர்ந்தார்(9)

பொருந்திய மூவர் தாமும் புனிதனை நினைந்து வெவ்வே(று)
இருந்தன ரிரவி பட்டான் இராப்பொழு தடங்கி வைகத்
திருந்திய பொய்கை சென்ருேர் வேதியன் மனையிற் சேர்ந்து
நெருங்கிடை கழியில் மன்னித் துயில்கொள்வான் நினைந்து-
[சார்ந்தார். (10)

வேறு

பொருளறியும் பூதத்தார் புகுந்திதனுள் உறைபவரார்?
தருமினிராத் தங்குமிட மெனப்பொய்கை தான்விழித்திங்
கொருவருக்கே கண்டுயில வுள்ளதிடம் நீரணைந்தால்
இருவருக்கு மிருந்திடலா மெனத்திறந்தார் திருக்கதவை. (11)

முன்சென்ருர் பின்சென்ருர் முகங்காணு ரிருளின்கண்
பொன்சென்ற விடைகழியில் இருவர்களும் புகுந்திருப்ப
மின்சென்ற சுடராழி விண்டுவருள் கொண்டுவரப்
பின்சென்று பேயருமம் மனைவாயிற் புறமாக, (12)

சென்ருரிவ் விடைகழியிற் செறிபவரார்? இடமுளதோ?
குன்ருத அன்புடையீர் கூறியிடு மெனவிசைப்ப
நன்ருய்முன் ஒருவர்படுத் தோமிருவர் நன்கிருந்தோம்
நன்ருய்நீர் வந்தணைந்தால் நின்றிடலாம் மூவர்களும். (13)

எனவுரைப்பத் திறவுமென்ருர் இருந்தவர்தாள் திறந்துநின்ருர்
மனமகிழ்ந்து சென்றவரும் மற்றவர்க ளுடனின்ருர்
அனவயல்சூழ் கோவலூர் ஆயனும் மாயவனும்
புனைமலர்ச்செந் திருவோடும் புகுந்தருளி னுங்கவரை. (14)

நெருக்கினர் நெருக்குண்டு நின்ருழ்வார் மூவர்களும்
உருக்காட்டா திவணெருக்கி யுறைபவரைக் காண்டுமெனும்
கருத்தினுற் சுடர்ஞானக் கனல்விளக்கை யேற்றினர்
திருக்கண்டேம் பொன்மேனி கண்டேமென் றுடன்தெளிந்தே()

ஆடினர் குணலையக்கூத் தங்கைகொட்டி நான்மறையைப்
பாடினர் பாரோடும் பணிந்தெழுந்து பதுமத்தாள்
சூடினர் சுகவடிவைப் பிரிந்ததுன்ப மவைதீரக்
கூடினு ரானந்தக் கொழுஞ்சோதிக் கடல்குளித்தார். (16)

அத்திக்கா யுட்கீடம் அத்திநடு வாதியந்தம்
எத்திக்கா னும்மறியா வகைபோல்நின் னிடையிலண்டம்
தொத்திப்பா யுறவதனுட் பிரமனர னெனத்தோன்றி
வத்தித்தா ருனைப்பறியா ரென்ருலிம் மண்ணுலகில். (17)

பேராநந் தச்சோதிப் பிரளயமா நினையடைய
ஆராத காதலராய் அகப்படுவார் தமைக்காணேம்
நாராய ணுசெய்யுந் திறமறியேம் அருள்கவெனக்
கூராழி சங்கேந்தும் கொண்டலுடன் குறித்துரைத்தார். (18)

மூவர்களு மவைகூற மூவுலகு முண்டுமிழ்ந்த
தேவர்கடே வன்னகைத்துச் செப்புவார் நீர்வேட்டார்
ஏவர்கடா மடைத்துடைந்தால் ஊடுவா ரிரும்புனலோ
டாவமன்னு மடைப்பதல்லால் அறிகவென வாழ்வார்கள். (19)

செங்கமலை தனிவாழ்வின் சேவடியி லுறப்பணிய
அங்கமுற மூவரையும் அணைத்தெடுத்தீ தருள்புரியும்
உங்கள்பொருட் டாலுலகந் திருந்துமெனக் கொள்வதியான்
பங்கமிலா நெறியுடையீர் பார்முழுதுந் திருத்துமென. (20)

எம்பெருமான் நின்றனனுங் கிணையில்பெருங் கருணைமிகும்
அன்பர்களா மூவர்களும் அச்சுதன்சீ ரருள்நோக்கி
இன்பமய மேயென்றென் றிரங்கிக் கரைந்தழுதும்
உம்பர்முதல் மாநிலத்தோர் உய்யும்வண்ண மின்னிசையால். ()

வையந் தகளியென்றும் வார்கடலே நெய்யென்றும்
வெய்ய கதிரோன் விளக்கேற்றி னேனென்றும்
கையம் புயத்தார்பொற் கழற்கேறு மந்தாதி
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு கட்டுரைத்தார். (22)

அன்பே தகளியென்றும் ஆர்வமே நெய்யென்றும்
இன்புருகு சிந்தை யிடுதிரியா மென்றுரைத்தும்
மின்பொருவு மாழி விமலன் கறங்குலகில்
புன்பிறவி நீங்கவிளக் கேற்றினர் பூதத்தார். (23)

திருக்கண்டே னென்றுபெயர் செப்பியசீர்ச் சொற்றொகையால்
இருக்கின்முடி வானை ஏத்தியசீர்ச் சொன்மாலை
பெருக்குநெறி மூவருஞ் செய்பொருள்மூ வந்தாதி
கருக்கடலை யுயிர்கடக்கும் கப்பலெனும் படிகழறி. (24)

வாழ்வித்தா ருலகனைத்தும் மாமாயப் பெரும்பிணியை
ஆழ்வித்தார் முதல்மூவர் எனத்தோன்று மாழ்வார்கள்
வீழ்வித்தார் திங்கடொறுங் மும்மாரி மெய்ஞ்ஞானம்
சூழ்வித்தா ரனைவரையும் அரிநாமஞ் சொலவைத்தார். (25)

இவ்வண்ண முலகனைத்துந் திருத்தி யிவரருளும்
மெய்வண்ணப் பாமாலை வீடடைவார்க் கேணியாய்
மய்வண்ணப் பரஞ்சோதி வைகுந்த மேற்றுவித்துஅப்
பொய்வண்ண மில்லாதார் பல்காலம் போக்கினர். (26)

அப்படியே பலகால மற்றதற்பின் மூவர்களும்
மெய்ப்படிந்த பரஞ்சோதி வெள்ளத்தான் வீடடைந்தார்
பொய்ப்படிந்த அறுசமயப் புரையிருளுக் கருக்கர்களாய்
இப்படியை விளக்கினர் இறைபிரிவுக் காற்றாமல். (27)

ஆக விருத்தம். 155

முதலாழ்வார்கள் பிரபாவம் முற்றிற்று.

## பெரியாழ்வார் பிரபாவம்

பொய்கைபூதம் பேயென்னப் புகலவரிய முதலாழ்வார்
செய்யகமலத் திருவடிகள் திருந்தவிறைஞ்சித் திருவருளான்
மெய்கொள்புதுவை நகர்வந்த விண்டுசித்தன் கதைவிரிவை
அய்யைம்புலனு லலைப்புண்ணு மடியேன் அறிந்த படியறைவேன்

**கொச்சகக் கலிப்பா**

விண்ணாட்டுள் அந்தாம வியன்புரிசை வேந்தனுக்கு
மண்ணாட்டு ளான்மாவாந் தவசமருள் வழிநடத்தி
எண்ணாட்டு மூவர்களு மேகியபின் இருநிலத்தின்
கண்ணாட்டி நீங்காத கனப்புலனாய்க் குறும்புசெயும். (2)

வேடர்களோர் ஐவர்களும் மேதினியில் மிக்கவிருட்
காடுமலை யன்றிவெளி யேயிடமாய்க் கலித்திலங்கு
நாடுமதின் கீழாய நற்பதியுஞ் சிறப்பித்து
மூடவிலங் கவைசார்த்தி முடித்தனர்கள் புவிமுழுதும். (3)

அத்திறத்தாற் புவிமுழுதும் அல்லலுறும் படிகண்டு
மெய்த்திறத்தால் மெய்வீட்டில் வீற்றிருந்தே முலகாள்வான்
பொய்த்திறத்தார் புலைச்சர்ப்பம் பொடியாகக் கருடனைத்தான்
சித்திரத்தார்ப் பெரியாழ்வா ராயுலகில் திருத்தென்றூர். (4)

என்றிறைவன் அருள்புரிய இறையருளுந் திருவருளும்
ஒன்றியசீ ரன்பினு லுடன்கொண்டு புவியிலிறை
சென்றுதுயில் கொண்டவருள் சிறந்தவில்லி புத்தூரில்
நன்றிதரும் வேதியரில் சோழியரென் றேநவிலும். (5)

குலத்தினெறி யுடைமுகுந்தர் தந்தையாய்க் கோதிலவர்
நலத்தினூர் தேவியார் பொற்புடைநற் றூயாராய்
நிலத்தினிருள் கெடத்தோன்றும் அருக்கனெனை நிலவுமுயிர்
புலக்கூடந் நிசியொழிக்கும் போதமாக் கதிரவனாய். (6)

ஆனியெனுந் திங்களினில் வளர்பிறையி லிருஞ்சோதி
மேனியனூர் சோதியினில் விண்ணவர்பூ மழைசொரிய
வானில்வரு முகிலொலியும் மறையொலியு மாறுசெயப்
பானிலா முகத்தியர்கள் பல்லாண்டி னிசைபாட. (7)

அறந்தழைப்ப மெய்ஞ்ஞானம் யாவர்களு மறிந்துய்ய
மறந்தீய வேரோடு மடியவஞ்சம் பாழாகத்
திறந்திறம்பா துயர்ந்தோங்கத் தீவினைகால் குலைந்தோட
உறங்குநெறி யானுளும் வீணாதே யுயிர்நோக்க. (8)

திருவவதா ரஞ்செய்தார் செகமுழுது மீடேற
மருவளரும் பொழிற்புதுவை வடபெருங்கோ யிலரன்று

தருகுழவி தனைநோக்கிச் சதஞ்சீவ வெனவாழ்த்தப்
பொருவவருக் கவரேயாய்ப் புவிமீதில் வளர்ந்திடுநாள். (9)

பூதமுதல் நாயகன்சீர்ப் பூங்கழற்கீழ்ப் பசுந்துளவால்
ஏதமிலாப் பூமாலை பாமாலை யெனுமிரண்டும்
ஆதரவி னூற்கட்டி யருளவல்ல ஆழ்வார்க்கு
வேதநெறி விண்டுசித்த னெனுநாமம் வியந்துரைத்தார். (10)

தருக்காக்கு மிந்திரனுஞ் சதுமுகனுஞ் சராசரமும்
எருக்காக்கும் சடையானும் இறைஞ்சவெய்தா திடர்க்கருவின்
உருக்காக்கும் பெம்மானை யுவந்துபல்லாண் டெனவோதித்
திருக்காப்பன் றிடுவார்க்குத் திருக்காப்புஞ் செய்தனரால். (11)

வேறு

பூதத் தனிநா யகனே யலையார்
புனலுட் டுயிலும் புயன்மே னியனே
வேதத் தனிநா யகனே யெனவான்
விடையா ரயனூர் விண்ணோர் கோமான்
ஓதிக் கரைவா ரறியா நெறியான்
உலகிற் றமர்கட் குதவுந் திருமால்
பாதக் கமலங் காணீ ரென்றூர்
பாதக் கமலங் கண்டார் பலரும். (12)

வேறு

ஒத்தவரு மிக்கவரு மின்றியொளி ரும்பன்
ஓதமவை யேழுலக மேழுமலை யேழும்
இத்திறமி லாதுபிறி தில்லையென வொல்லை
இன்பமுறு மீரடியி னூலுறவ ளந்தான்
முத்துநிரை யன்னநகப் பத்திகள்வி ளங்கும்
மொய்ம்மலரி னும்மிருது வாமுளரி யந்தாட்
பத்துவிர லுங்காண்மி னென்றவர் பதத்தில்
பத்துவிர லுந்தொழுது பத்தர்கள்ப ரிந்தார். ()

வேறு

* விணைக்கால் தீயோடு மிக்கவி ரண்டை
வேதனை யால மிடற்றர னூரைப்
பணைக்கா னூன்மறை யைப்பக லோரைப்
பலரைக் கனிவா யுறவுண் டுறவோர்
துணைக்கா லாகக் கொண்டிலை மீதிற்
றுயிலும் பெருமான் திருமா லழகார்
கணைக்கால் காண்மி னெனக்கசி வோர்தம்
கணைக்கால் கண்டுக ளித்தன ரன்பர் (14)

---

* விண்ணை என்பது தொகுத்தல் விகாரமாய் விணையென நின்றது. ஆகாயத்தை என்பது பொருள்.

### வேறு

பாராளு நூற்றுவரைப் பாழாக்கிப் பாண்டவருக்
காராத வின்ப மருளப்பி றந்தபிரான்
சீரார் கருணைத் திருமுழந்தாள் காண்மினென்ருன்
ஏரார் முழந்தாள் யாவருங்கண் டின்புற்ருர். (15)

வங்கக் கடற்றுயின்ற மாமாலை மதுசூதன்
வெங்கட் களிறடர்த்தாண் டைவர்களை (வாழ்வித்த)
செங்கமலக் கண்ணன் திருக்குறங்கு காண்மினென்ருன்
அங்கக் குறங்கை யனைவருங்கண் டாதரித்தார். (16)

### வேறு

புன்புலத்தார் பாரம் புவிமடந்தை யாற்றரிதென்(று)
அன்புறநின் றேத்த அவனியின்கண் போந்தபிரான்
மின்பொறுத்த சோதி விளங்குமுத்தம் காண்மினென்ருன்
இன்பமுறு முத்தம் யாவருங்கண் டின்புற்ருர். (17)

வையமுழு தும்வயிற் றுள்வைத்துத் தேவகியார்
உய்ய வழகா ருதரத்து தித்தபிரான்
மய்யனைய சோதி மணிமருங்குல் காண்மினென்ற
ஐயன் மருங்கை யனைவருங்கண் டாதரித்தார். (18)

சத்தம் பரிச முருவம் ரசகந்தம்
ஒத்த குரம்பைதொறு மூட்டியெனை யாட்டுவிக்கும்
அத்தன் திருவுருவை யாயிழையீர் காண்மினென்ற
நித்தனெழி லுந்திகண்டு நீணிலத்தோர் வாழ்த்தினர். (19)

கொல்லு மதயானைக் கோடுங் கொடியவிறல்
மல்லுந் தொலைப்ப வடமதுரை வந்துதித்த
செல்லுருவ மன்னன் திருவுதரங் காண்மினென்று
சொல்லும் பிரானுதரம் போற்றினர் தூயோரே. (20)

சங்கக் குழையானைச் சாபம் தவிர்த்திரைக்கும்
பொங்கு கடலேழும் பொடிசெய்து வந்தபிரான்
செங்கமலை தங்கு திருமார்பு காண்மினென்ருன்
பங்கமிலா மார்பழ்கு கண்டார் பரிவோடே. (21)

பெருத்தோங்கு நூற்றுவர் மாளப் பிறந்த
குருத்தோங்கு நான்மறைக் கோவலர் குட்டன்
திருத்தோ ளிருந்தவா காணென்ருன் தோள்கள்
கருத்தோங்கு மன்பர்கள் கண்டார் களித்தே. (22)

சூழ விசும்பொடு தொல்லுல குண்டவன்
ஆழியுஞ் சங்கு மழுங்கு கரங்களை
ஏழையர் காண்மின்க ளென்றவன் கைத்தலம்
பாழிய மண்ணவர் கண்டுப ணிந்தார். (23)

பெருக்கண்ட முட்டிப் பிறங்கிய பொன்னன்
உருக்கண்டங் கண்டே மூலகமு முண்டான்
திருக்கண்டங் காணென்ற சேய்களங் கண்டு
கருக்கண்டங் கண்டனர் கற்றறிந் தோரே. (24)

முன்ருெண்டை தண்டாமல் மூவுலகு முண்டவன்
செந்தொண்டை வாய்காண்மி னென்றுபின் செப்பத்
தன்தொண்டு தானே சகியாய்ப் பிறந்தவன்
இன்ருெண்டை வாய்கண் டியாவர்களு மின்புற்ருர். (25)

பூக்குந் திருவுந்திப் பூவை நிறத்தமலன்
வாக்கு நயனமும் வாயும் முறுவலுஞ்சீர்
மூக்கு மிருந்தவா காணீரென் ருன்முகத்தில்
ஆக்கு மதுவதுகண் டந்தணர்கள் வாழ்த்திஞர். (26)

திங்கள் வதனத் திருவனைய தேவகிபால்
தங்கிப் பிறந்தாயர் தம்பால் வளர்ந்த பிரான்
செங்கமலக் கண்காண்மின் சேயிழையீ ரென்றவர்தம்
அங்கமலக் கண்கண் டனைவர்களும் வாழ்த்திஞர், (27)

நெருப்புருவத் தன்சாப நீக்கி வருநீலப்
பொருப்புருவங் கொண்டவிறை பூமகடன் கேள்வன்
திருப்புருவங் காண்மினென்ற செல்வன் உருவத்
திருப்புருவங் கண்டாண் டிமையவரும் வாழ்த்திஞர். (28)

அகரத் தனிச்சோதி ஆயர்கள் கோமான்
உகரத்தி ஞனை யுரத்திற் றரித்தான்
மகரக் குழையிரண்டுங் காண்மினென்ற வள்ளல்
பகர வரியகுழை பார்த்தமரர் வாழ்த்திஞர். (29)

உற்றபு வனமனைத்து முதிப்பித் தவனுண்
சிற்றிடைத் தேவகியார் சீரார் வயிற்றுதித்தான்
நெற்றி யிருந்தவா நேரிழையீர் காண்மினென்ருன்
ஒற்றைப் பிறைநுதல்கண் டுத்தமர்கள் வாழ்த்திஞர். (30)

ஆராயும் வேத மயர்வெய்த அண்டர்கையில்
ஏரார் தனைக்கயிற்ருற் கட்டுண்ட வெம்பெருமான்
சீரார் குழல்காண்மி னென்ருன் திருக்குழல்கண் (டு)
ஊராரும் (மாந்தர்கள்த) முளமகிழ வோடிஞர். (31)

வேறு

இவ்வண்ணம் பாத மாதியாய்க் கேசம்
அந்தமா யிலகுமெய்ஞ் ஞான
மெய்வண்ணக் குழவி யவயவச் சிறப்பை
மேதினி யுள்ளவர் தமக்கு

மைவண்ணத் திறைசேர் புதுவைமா நகரில்
மறையவர் மகிழ்வொடு முரைப்பப்
பொய்வண்ணத் துயிரைக் கடிபவர் பலரும்
புகுந்தனர் முகுந்தன தகத்தில். (32)

ஆணவந் திரண்டூ னுருவெடுத் துலாவும்
ஐம்புல வேடர்க ளணியாம்
பூவணம் பூண்டு பொய்ப்பரி மீதாய்ப்
பூமியைப் பொடிசெய்வார் செயலைக்
காணவந் தவரைக் காணவந் தவர்கள்
உடம்பெலாங் கண்ணிலா மையினால்
ஊணவ முறக்க மவம்பிறப் பவமென்
றுளங்கசிந் துருகிநைந் தொசிந்தார். (33)

எண்ணிநின் றிறைஞ்சிப் பாலனை நோக்கி
யிரங்கினர் வாக்கினா லிசைப்பார்
புண்ணியக் கொழுந்தோ நான்மறைக் கொழுந்தோ
போதத்தின் பொலிசுடர்க் கொழுந்தோ
எண்ணிய சாந்தி தருமெழிற் கொழுந்தோ
இசைப்பதோர் கமையருட் கொழுந்தோ
விண்ணிய லமுதின் சுவைதிர ண்டதுவோ
வேதியர் தவந்திர ண் டதுவோ. (34)

தந்தைதாய் செய்த தவப்பயன் றானோ
தத்துவத் துற்றமெய்ப் பொருளோ
இந்தமா நிலத்தோர் செய்தவப் பயனோ
இலங்குவா னவர்செய்த தவமோ
கந்தநா ண் மலரோன் வாசவ னக்கன்
கா ண்பரும் பரஞ்சுட ரொளியைத்
தந்துநா முய்ய வந்ததோ ருருவோ
என்றென்று சாற்றிவாழ்த் தினரால். (35)

இப்படிப் படியில் பாலனைக் கண்டார்
யாவரு மிரங்கிநின் றேத்த
மைப்படி கண்ணார் மாதர்கள் பலரும்
மகப்பெறு மறிவுடைத் திருவும்
மெய்ப்படிந் திலங்கு குழவியோ டளாவி
மிகுமநு பவவிளை யாட்டின்
கைப்படிந் திலங்கும் பருவமோர் பத்தும்
கருமுகிற் குரைத்தவர்க் குரைத்தார். (36)

சீருடைக் குழிவி யிணையடி யாதி
திருமுடிவ ரையினி லணியாம்

ஏருடைச் சதங்கை சுட்டிமற் றிதனுக்
கிதனிடை பூண்பன கமலத்
தாருட னணிந்து வளருநா ளொருநாள்
தையலார் தற்பரா வமுதைக்
கூரிய தவத்தோர் செவிப்புல னிறைப்பீர்
கொள்ளுமின் அமுதெனக் கொடுத்தார். (37)

இன்னமு தருந்திச் சவளநான் மறைகள்
இசைத்தவா செய்துமுப் புரிநூல்
தன்னையு மந்நூ லறைந்தவப் படியே
தரித்துமா னுரிமுஞ்சி தரித்து
மன்னிய பிரம சாரியாய்ப் புவியில்
வாழுநாள் முழுவதும் வாழ்வார்
அன்னம தூர்தி தாதையா ரடிமை
ஆகுநா மென்பதை யறிந்தார். (38)

அத்திற மறிந்து வடபெருங் கோயி
லுடையவர் அடியிணை வணங்கி
எத்திறஞ் செய்தா லிவருள மகிழும்
எனவிறை திருவவ தார
மெய்த்திறத் தாறின் மூன்றினிற் கஞ்சன்
விறல்கெடப் பிறந்தவர் தமக்குச்
சித்திர மாலா காரர்தம் பூவில்
திருவுள மகிழ்தல்சிந் தித்தார். (39)

அதுவலா லடிமைத் திறத்தினுக் குரிமை
யிலதென வகத்தினுட் டெளிந்து
மருமலர் துளசி மல்லிகை யலரி
சண்பகம் வளர்மதுப் பிச்சி
புதுமதுப் பொங்கி வளர்கழு நீர்கள்
செவ்வந்தி புகரறு கமலம்
இதுவது வென்னு திறைவனுர் சாத்தற்
கிசைவன நறுமலர் யாவும். (40)

ஆக்கிடு நந்த வனங்கள்பற் பலவும்
அளிதிகழ் பொய்கைகள் பலவும்
ஆக்கிமற் றதனுள் இலைமலர் போக்கி
அரும்புவிட் டப்பொழு தலரும்
பூக்களைத் தெரிந்து புழுக்கடி போக்கிப்
பொய்யிலா மெய்யினர் புரைதீர்
மூக்கிலம் மணஞ்சென் றணைந்திடா வண்ணம்
மூடிவாய் புதைத்துமுக் குணத்தில். (41)

துன்பநல் கிரண்டுந் துடைத்துமெய்ஞ் ஞானச்
சுடர்தரு சாத்திகத் துணிவால்
அன்பனுர் திருப்பக் கூடையின் முன்னம்
அறைந்தசீர் நறுமல ரமைத்து
முன்பினுர் கூடை யிரண்டொரு கோலின்
முறையினுற் கோத்தவை காவி
என்பெலா முருக ஆனந்த வாரி
இருகணு லிடையரு தொழுக. (42)

பங்கய வடிபேர்த் திடுந்தோறும் அதனுட்
பட்டபுற் பசுமைகொண் டோங்கப்
பொங்கிய சரமு மசரமு முருகப்
பூமகள் மனமொடு வாக்கும்
அங்கமுங் குழைய நடந்தவா கிடந்த
அச்சுதன் வடபெருங் கோயில்
தங்கிய திருமால் திருவுள முவப்பத்
தடமலர்த் தார்பல சமைத்தே. (43)

பகலொரு சாமங் கதித்தபின் ஞெளிகொள்
பரஞ்சுடர் வடபெருங் கோயில்
புகலருங் கருணை யிறைவனை வணங்கிப்
பூமலர்க் காவினிற் புகுந்தே
அகலம துடைத்தாய் நொய்யதாய்க் கைசேர்ந்
தழகுறு மொட்டவ ணெடுத்துச்
சகலரு மிரங்க விருநிலங் குடைந்து
தட்டுற நிரவியத் தலத்தில். (44)

வேறு

மருவேறு மல்லிகையுஞ் சண்பகமும் வளர்துளவும்
இருவேலி தருதளிரும் இலாமிச்சின் எழில்மூடுங்
கருவேரை யறுத்தபிரான் கயிங்கரிய முதிர்ச்சிதருந்
திருவேறி லிலாநந்தக் கண்ணீரிற் சேறு செய்தே. (45)

வைத்துநன்னீ ருறப்பாய்ச்சி மாயனிடை மடைமாருப்
பத்தியினுர் மடைமாற்றிப் பகற்பொழுதைக் கழித்ததற்பின்
நெய்த்தநறு மலரந்தித் திருமாலை நேயத்தாற்
பைத்தபாம் பணைக்கிடந்த பரமனுக்குச் சமைத்தளித்தே. (46)

மங்குல்தோய் மணிமாட வடபெருங்கோ யிலர்தமக்குப்
பொங்குமது பொழிகாவிற் புகுந்துபணி செய்வதற்குக்
கங்குலெனத் தடைசெய்த கயிங்கரிய விரோதியைநொந்
தங்கமிடிந் திருந்தாழ்வார் அருணவுத யத்தெழுந்தே. (47)

நீராடித் தற்பணையா னியமத்தின் சூறைமுடித்துக்
கூராழி சங்கங்கைக் கொண்டபிரான் தனைவணங்கிப்
பாரோரும் விண்ணோரும் பணிந்தேத்து பசுந்துளவத்
தாரேறு மெழிற்கூடை தாங்கிநந்த வனஞ்சார்ந்தும். (48)

வேறு

சிலபகல் கடத்தி னரச் செயல்கண்டு புதுவை மன்னும்
புலவர்க ளிவரை வாழ்த்திப் பூங்கழ லிறைஞ்ச வன்னர்
மலமறுத் திறைக்காட் செய்யு மதியளித் தவர்பால் மாறு
நலமரு ளாழி சங்க நற்பொறி நல்கி யாண்டார். (49)

ஏருடைத் தொண்ட ரோடு மிலங்கைசெற் றவற்கு நற்பூத்
தாருடன் சமைத்து மாயன் தாளிணை வணங்கு நாளிற்
பார்முழு தாளு நீதிப் பாண்டியர் குலத்திற் கொண்டு
சீர்பெற வவனி காக்குஞ் சீவல தேவ னென்றோர். (50)

தென்னவன் மதுரை மன்னிச் சிறந்தர சாளு நாளில்
மன்னுமந் நகரி லுள்ள மாந்தர்கட் கரசா லெய்தும்
இன்னலு மிதமுங் காண வேண்டுமென் றிராக்கா லத்தப்
பொன்னகர் வீதி யெங்கும் ஒருவனாய்ப் போய்மீள்போழ்தில். ()

திருநகர்க் காவலாளர் செழுமணிப் பாரி போட்டு
வருபவ ரெதிரே மன்னர் மன்னவன் மறைந்தோர் நீதி
அருமறை யந்த ணாளன் திண்ணையின் மறைய வாங்கே
ஒருவனோர் மூச்ச னாகி யுறங்குவா னுயிர்ப்பக் கேட்டான். (52)

கேட்டமெய்ந் நீதி மன்னன் கிளரொலிப் பாரி காரர்
கூட்டமவ் வீதி நீங்கக் குவலயந் தாங்குங் கையிற்
பூட்டிய வுடைவா ளோடும் புகுந்ததி லுறங்கு கின்றான்
மாட்டணைந் திருந்தா னார்கொல் இவனென மனத்தி லெண்ணி.

இருந்தமன் கிடந்தான் றன்னை யெழுப்பிநீ யாவ னென்று
திருந்தவின் னுரைசெய் யென்னத் திண்ணையிற் றுயில்கொள் [வோனும்
வருந்துயில் யாவு நீங்கி மறையவனுகு நானென் (று)
அருந்தவன் கூற மன்னன் அவனொடு மறைவ தானான். (54)

வேதியர் குலத்து ளீரேல் வெறுமையுற் றிவணந் துஞ்சு
நீதியே தறைக வென்றான் மன்னவன் நெறிநின் றோங்கும்
ஊதிய மறிந்த பார்ப்பான் இசைப்பன்நான் கங்கை யாடி
ஆதியெம் மிராம சேது வாடுவா னணைந்தே னையா. (55)

என்றவ னுரைப்பக் கேட்டாங் கிருநில முழுது மாளும்
வென்றிவேல் வேந்த னந்த வேதியன் றன்னை நோக்கி [பான்
நன்றிசேர் கதைகள்போ மேல் நவில்கவென்றறையப் பார்ப்
ஒன்றுநா னிறிவே னையா உளதொரு கிரந்த மென்றான். (56)

ஆங்கதை யருளு வீரென் றரசனு முவந்து கூற
ஓங்குசீ ரந்தணா ளன் உரைத்தன னுரைப்ப வையந்
தாங்கிய மன்னர் மன்னன் சாற்றுவீர் பயனை யென்றான்
மூங்கரு மறியும் வண்ணம் மொழிந்தனன் தெளிந்த சொல்லால்.

மாரியின் காலந் துய்ப்பான் மற்றுள காலத் தீட்டும்
சூரிய விருளிற் றுய்ப்பான் கொழுஞ்சுடர்ப் பகலி லீட்டும்
சீரிய விளமை தன்னின் மூப்புக்குஞ் சிறப்பா லீட்டும்
ஏரியல் பதனா லிம்மை தன்னிலே மறுமைக் கீட்டும். (58)

என்பதை யரசன் கேட்டாங் கிரங்கிநைந் துருகியந்த
அன்பனை யுடன்கொண் டேகி யளவரு நிதிய மீந்து
புன்புல னற்றா யேகென் றனுப்பியப் பொழுதே தானும்
தன்பெருங் கோயில் புக்கான் தடமணி வயிரத் தோளான். (59)

வேறு

வந்துமனை புக்குபுவி மன்னவர்கள் மன்னன்
அந்தணனு ரைத்தபொரு ளாய்வுறுமெய்ந் நூலின்
முந்தவரு மொன்றுடனி ரண்டுமுடி வெய்தும்
எந்தவகை யான்மறுமை யெய்துமென வெண்ணி. (60)

இருந்தனனி ருந்துழியி ருட்பொழுது மாய
அருந்துயர மாயவெழி லாதவனெ ழுந்தான்
திருந்துநிய மத்தொழில்கள் செய்துமறை வாழ்வைத்
தருந்தவர்கள் கொள்வபல தானமும ளித்தே. (61)

அண்டமுக டுடுருவி யாசறநி மிர்ந்த
மண்டலமி லங்குமணி வாயிலுற மன்னன்
எண்டருதி சைப்புவியின் மன்னவரி றைஞ்சத்
தண்டரள மார்பினுயர் தானையர் வணங்க. (62)

எய்தியரி யாசனம தெய்தியிட ரற்ற
வைதியர்க ளாசியொடு மன்னவெழில் மன்ன
உய்திறம றிந்திடுமு பாயமவை யெண்ணிச்
செய்திறம றிந்துவளர் தென்னவனி ருந்தான், (63)

வேறு

பூங்கழற்கால் விறற்றென்னன் புக்கிருக்கு மவையின்கண்
ஆங்கவர்க்குப் புரோகிதனாய் அச்சுதன்சீ ரருள்வடிவைத்
தாங்குமெழில் மனத்தினனாய்த் தத்துவனைப் பிரியாதே
ஓங்குமடி யவரருளும் பழவடியே னெனுமுறையில். (64)

கற்றவனாய்த் தென்னவனுக் குயிர்த்துணையா யறமன்றி
மற்றறியா நிலையினனாய் மறைநாலுங் கற்றவனாய்ச்
செற்றமிலா மனத்தினனாய்ச் செல்வநம்பி யெனுநாமம்
பெற்றவனாய் எதுவரினும் பேராத நிலையினனாய். (65)

உளனொருவ னவன்வந்திட் டோங்கியசீர்த் தென்னவைன்முன்
அளவிறந்த மகிழ்ச்சியொடு மணைந்தருகோ ராசனத்தில்
துளவநெடி மணிமுடிமால் தோத்திரம்வாக் கேத்தவஞ்சா
வளவனுக்குஞ் சேரனுக்கும் மன்னவவாழ் கெனவிருந்தான்(66)

பொய்ம்மையற்ற மறையோனைப் பூபால னுறநோக்கி
மய்ம்மையெனும் புலைச்சமய மயக்கிடையிற் படாதடியேன்
இம்மையிலே மறுமைதனக் கியற்றுவதெப் படியென்று
மெய்ம்மையைநா னடையுநெறி செல்வநம்பி விளம்புகென்றான்.

வேறு

முத்திசித் திக்கு மாறு மொழிகென மன்னன் கூறும்
அத்திரு மொழிகேட் டுள்ளத் தந்தண னன்பு கூர்ந்து
தத்துவ மறிய வேண்டு மன்னவர் தலைவ வென்றான்
மெய்த்திற மறிவார் யாரென் றரசன்வே தியனைக் கேட்டான்.()

படிமுழு தாளுஞ் செல்வம் புல்நுனிப் பனியென் றெண்ணி
முடிவிலாப் பேரா நந்த முத்திநீ விரும்ப லாலே
விடிவிலா மாயக் கங்குல் விடியும்வீ டெய்தக் காட்டும்
அடிகள்வே தாந்தம் போனு ரருள்வர் நீயஞ்ச லென்றான்.

வேதிய னஞ்ச லென்ற மெய்ம்மொழி விளக்கங் கேட்டுப்
பூதல முழுது மாளும் புண்ணியன் மகிழ்ச்சி தாங்கி
ஓதுமெய் வேத வாணர் உறைவதெத் தலத்தி லன்னோர்
பாததா மரைகள் நான்போய்ப் பணிவனீ பகர்வா யென்றான்.()

மன்னவர் பெருமான் கூற மாசறு செல்வ நம்பி
என்னுமம் மெய்ம்மை யாளன் இயம்புவா னிலங்கு நீதித்
தென்னவ பூமி யெங்குந் திரிந்துநாங் காண்போமென்றால்
அன்னவர் வெளிவா ராரோர் உபாயமிட் டழைப்போமென்றான்

சென்றுநாம் தேடி யாடுந் தீர்த்தநின் அன்பினாலே
இன்றெனை நாடி யுய்யென் றெனக்குமீண் டெய்துமாகில்
ஒன்றதி னுறுதி யுண்டோ? உரைத்தியவ் வுபாய மென்றான்
நன்றுகே ளென்று செல்வ நம்பியும் நவில லுற்றான். (72)

ஆதியம் பரமன் லீலா விநோதத்தா லநந்த கோடி
நீதிகொள் சமய மாக்கி நின்றன னதிற்று னொன்றாய்
ஓதிய சமயத் துள்ளார் ஒன்றையொன் றெவ்வா தென்பர்
வேதமு மவணஞ் சொல்ல விதித்தவம் மெய்ம்மை யாளன்.(73)

அத்திரு வேத நீதிச் சிரத்தினி லமரும் அந்த
மெய்த்தவன் நிலையைத் தாங்கும் வேதமு மறிய மாட்டா(து)
உத்தம குணத்தி னானே யோங்கிய பரம சோதிச்
சித்திர வருள்பெற் றோரெங்கும் திறத்தினர் தெளியக் காண்பர்.

அதுவலாச் சமயத் தோர்கள் அண்டருட் சமயந்தன்னை
இதுவது வாகு மென்றே யெடுத்தெடுத் தியம்பா நிற்பர்
பொதுவென்பர் சிலர்க ளந்தப் பொய்ம்மையைத் தெரிக்க
மாட்ட (து)
உதுபதர் மணிபோற் றென்றி யுறையுமம் மணியோ டொத்தே.

அன்றது காண வேண்டி லறைதரு வழியை நோக்கி
நன்றுதீ திரண்டுங் காணு நன்மையர் தன்மை போல
இன்றுநாம் பரத்தின் மேன்மை யிதுவென வறிய வேண்டில்
ஒன்றிய மறையோ ராதி யுரைத்தபல் சமயத் தோரும். (76)

வருகவென் றழைத்து நின்பொன் வாயிலிற் கிழியைத்தூக்கி
அருமறை முடிவில் வைகு மாதியம் பரமீ தென்னப்
பொருவரு முறையால் வென்ற புண்ணியர் கொள்க வென்றால்
ஒருவரே யறுப்பர் வேண்டார் எனினுமவ் வுண்மை காட்ட (77)

ஆதலால் நினக்கு நின்சீ ரவனியோர் தமக்கு மன்னு
ஓதுமிப் பரமீ தென்ன உணர்ந்ததை யடைய லாகும்
மாதவத் தோரும் வாழ்வார் என்றனன் மறைவ லாளன்
பூதலத் திறைவ னேலே புறையறு பூமி யெங்கும். (78)

ஒன்றுகற் றோர்க ளாதி யோங்குநான் மறையு மோதிச்
சென்றதின் முடிவு கண்ட சின்மயத் தோர்கள் தத்தம்
ஒன்றலின் முகத்தி னீதி புகலவல் லவர்க ளெல்லாம்
நன்றிசேர் மதுரை நண்ணி நவிலுநுங் கடவுள் மேன்மை. (79)

இதுவெனக் கூறி னென்னை யிலங்குநுங் கடவு ளார்தம்
மதுமலர்க் கமல பாதம் மன்னவைத் தென்றுற் கட்டும்
பொதுவரு கிழியுங் கொண்டு புகழ்கொண்டு போவா னின்றே
கதுமெனப் புகுவீ ரென்னும் வாசகங் கழறி விட்டான், (80)

தூதுவர் கையில் நீதி தொடர்ந்தவா சகங்கொ ளோலை
மாதிர மெட்டு மெட்ட மன்னவன் விடுத்த பின்னை
பூதல முழுதுங் காணும் பொற்கிழி பொருந்தச் சேர்த்துக்
கோதறு நெறியான் பன்னுங் கோமுனை வாயி றன்னில். (81)

கட்டினன் தூத ரோலை காசினி யுள்ளோர்க் கெல்லாம்
இட்டனர் தவத்து ளோரும் யாவரு மறிந்தா ரன்றே
வட்டமா மேரு வொத்த மணிமதில் மதுரை தன்னில்
உட்டெளி வுடையா ரெல்லாம் தூதுவ ருடனே சென்றார்.(82)

வேறு

சித்தர்பு குந்தார் தேவர்ம கிழ்ந்தார்
அத்திரம் வாழ்வெனு மந்தணர் வந்தார்
புத்தர டைந்தார் சைவர்பு குந்தார்
மத்த முறுமீ மாமிசர் வந்தார். (83)

மாயா வாதியர் வந்துபு குந்தார்
ஓயா தேமது வுண்டுத மைத்தாம்
ஆயா வாமிக ளக்கணம் வந்தார்
தேயா வஞ்சவை சேடியர் சென்றுர். (84)

ஆசறு சாங்கிய யோகர ணைந்தார்
பாசுப தத்தவ ரும்பதி யுற்றுர்
மாசில ராமெனு மாவிர தத்தர்
தேசுபெ றும்படி கூடல்செ றிந்தார். (85)

வேறு

ஆருயிர் கொல்லோ மென்னு மருகரும் மதுரை சார்ந்தார்
தேருமெய் யன்பிற் காளா முகவருஞ் சென்று சேர்ந்தார்
பாருறு மின்ப மெல்லாம் பரமெனல் பழுதா மென்றே
ஓருல காயு தித்தோ ரெனுமவ ருடனே சென்றுர், (86)

நல்லியல் கூடல் தன்னி லிவரிவர் நண்ணு நாளில்
வில்லிபுத் தூரின் மாயன் விட்டுணு சித்த னென்பான்
எல்லியம் பொழுதிற் றுஞ்சும் இடத்தினி லொருதா னெய்தி
அல்லியங் கண்ணல் நோக்கி னருளளித் தன்பன் மாட்டில். (87)

இருந்தவர் திருப்பேர் சொல்லி யெழுப்பினுர் எழுப்புங் காலை
அருந்தவ முடையார் திண்ணென் றெழுந்திருந் தருகில் நோக்கக்
கருந்தட முகில்போல் மேனிக் கருணையங் கடலைக் கண்டார்
குருந்துதைத் தவனே போற்றி யெனக்குழைந் தடியில்வீழ்தந்ார்

வேறு

வையமுழு துண்டவர்ப தங்களில்வ ணங்கி
நையுறும னத்தினரெ ழுந்துநவை யில்லாக்
கையிணைகு வித்தெழில்கொள் கண்கள்புனல் சிந்தச்
செய்திறம றிந்துருகு சிந்தையரு நின்றுர். (89)

நின்றநெறி யன்பினிலை கண்டுநிக ரில்லாய்
ஒன்றுளது கேளென உகந்திறை யுரைப்ப
மன்றல்கம ழுந்துளப மாலைபுனை மார்பா
இன்றறியும் வண்ணம தியம்பிடுக வென்றுன். (90)

வேறு

நன்னெறி மதுரை தன்னில் நாற்பெருந் திசையுங் காணத்
தென்னவன் வியாசத் தாலே திரண்டபொற் கிழியொன் றுக்கி
மின்னவிர் முடியான் றன்சீர் விளங்கிய வாசல் தன்னில்
முன்னுறத் தூக்கி வைத்தான் முகுந்தனுர் மதலாய் நீபோய்.()

அறுத்திவண் கொணர்வா யென்ன அச்சுத னருளிச் செய்ய
வெறுப்புடன் விருப்பொன் றில்லா விட்டுணு சித்தன் கூறும்
கறுத்தமா முகிலே வாதில் வென்றவர் கைக்கொள் கென்றே
நிறுத்தினுன் மன்னன் வாய்மை நீணில மதனிற் றெண்டன்(92)

ஏதுரைத் தறுப்பே னெந்தாய் இருகையா லெடுத்து வெட்டு
நீதிமண் வெட்டி கொண்ட நிறைபெருந் தழும்பைக் காட்டி
வேதநிச் சயங்காட் டாதே விமலனே யறுக்க லாமோ?
பூதல மாளு மன்னன் பொறுப்பனே புகல்வா யென்றான். (93)

அன்பரிவ் வாறு கூற அச்சுதன் அவரை நோக்கித
துன்பிலா மன்னன் கேட்ட சுருதியின் முடிவைக் காட்டல்
என்பரம் வாயி றன்னில் இலங்குபொற் கிழியைக் கொள்ளல்
உன்பர மேகா யென்றுங் குரைத்திட வுரைப்பார் தொண்டர்(94

பூதல முழுதி லுள்ள புலவர்கள் சபையி னுள்ளே
மாதிரம் பொருந்து திண்டோள் மன்னவர் மன்னன் முன்னே
போதுமோ ரெழுத்தும் போகா ஊத்தையே னுடலந் தாங்கி
நாதனே வெட்க மின்றி நண்ணுதல் நலனே வென்றார். (95)

என்றிவ ரறையக் கேட்டங் கிறைபெரு முறுவல் செய்து
நன்றிகொள் வேத நான்கும் நவிலுசாத் திரமோர் நாலும்
இன்றுன துடைமை யாகும் என்னைநீ யுடையை யானுல்
ஒன்றுனக் கரிய துண்டோ உத்தம குணத்தி னனே. (96)

என்னமின் னவிரு நேமி எம்பிரா னருளிச் செய்யப்
பொன்னடித் தலத்தில் வீழ்ந்து புண்ணியக் கொழுந்தே யன்னார்
தென்னவர் மதுரை தன்னிற் றிருமகள் நாத வின்றே
மன்னுவான் விடைகொள் கின்றேன் வாழியென் றெழுந்து
வாழ்த்தி, (97)

நின்றவர் தம்மை யேகு நீயென வனுப்பித் தாமும்
சென்றுதம் கோயில் சேர்ந்தார் திருமரு மறர்ப ரன்று
நன்றிகொள் பெரியாழ் வாரும் நற்றவத் தோர்கள் தாங்கும்
பொன்றிகழ் சிவிகை யேறிப் பூபதி கூடல் நோக்கி. (98)

ஏகினு ரன்பர் சூழ இமையவர் வணங்கி வாழ்த்த
மாகமீ திலங்குஞ் சோதி மதிக்குடை நிழற்றச் சீர்கொள்
பூகமா மருத வேலிப் புதுவைமா நகர நீங்கி
மேகமே காவா யென்ன விழிவழி யருவி சோர. (99)

**வேறு**

கற்குழைய மரங்குழைக் கானில் வளர் விலங்கினத்தின்
விற்குழையப் பறவைகளின் மெய் குழைய மேதினியின்
புற்குழைய வேதாந்தப் பொருள்குழைய மெய்ஞ்ஞானச்
சொற்குழைய வேகுமவர் துலங்குவனம் பலகடந்தே. (100)

### வேறு

சென்றவர் மதுரை நோக்கித் தென்றிசை வாயில் சேர்ந்தங்(கு)
அன்றதில் உறையுங் கூடல் அழகிய பெருமான் றன்னை
ஒன்றிய மனத்த ராகி வணங்கினு ரோவா தன்பர்
நின்றிருந் தவரை நோக்கி நிலவுசித் திரம தானுர். (101)

இமைத்திலர் விழிகள் வாயால் இசைத்திலர் துதிகள் நின்ற
தமைச்சில கடிகைப் போதும் உணர்ந்திலர் தரணி தாங்கும்
கமைபெறு முகில்மேற் சென்ற கருத்தினைத் திரித்து வாக்கால்
எமைத்தொடர்ந் தெடுத்தாட் கொள்வீர் என்செய்கேன்
கைம்மா றென்றுர். (102)

அவணநின் ருழ்வார் கூற அண்டமுண் டண்டத் துள்ளே
உவணம தேறி வீதி யுலாவுவா ரிசைப்பா ரந்தோ
இவணமோ ரன்பால் நோக்கின் இகபரத் திலதென் றெண்ண
எவணமற் றவரே சென்றவ் வாதினை வெல்வீ ரென்றுர். (103)

என்றிறை யருளிச் செய்ய இருகணீ ரருவி சோர
நின்றவ ரிருந்தார் தம்மை நீணிலத் திறைஞ்சி வாழ்த்திச்
சென்றனர் வீதி யூடே தென்னவன் செயலே தென்னிற்
குன்றென வுயர்ந்த நீதிக் கோமுனை வாயி லெய்தி. (104)

வாசம லர்த்திரு மங்கையும் வாணியும் வீரம டந்தையும்
நேசமு டன்புவி மங்கையும் நேர்பெற நேமித ரித்தவன்
தேசுடை வானவர் கோனெனச் செல்வமி குந்துசி றந்தசிங்
காசன மீதிலி ருந்தனன் அண்டரும் விண்ணினெ ருங்கினுர். ()

நன்றித ருஞ்செல்வ நம்பியும் நான்மறை யாளரு மன்பரும்
சென்றுயர் தென்னனி ருந்ததோர் சீரிய வாசன மாடுற
அன்றரு ளெய்தவி ருந்தனர் அரசரு மன்னர மைச்சரும்
நின்றனர் முத்திவி ரும்பினோர் நேர்பெற வந்துநி றைந்தனர்.

பொக்கமி குத்துயர் புத்தரும் போதம கன்றவை சேடரும்
நக்கனை நம்பிய சைவரும் நன்றிகொள் சாங்கிய யோகரும்
தொக்குல காயுத வீணரும் துன்புறு மாவிர தத்தரும்
எக்கரு மத்தினு மையுற வேயுறு மார்க்கரு மெய்தினுர். (107)

மாயைத ரும்பெரு வாதரும் வஞ்சம்வி டாவரு கோர்களும்
ஆய்வுறு வாமியர் கூட்டமும் ஆதிய வாதியர் எய்தினுர்
ஏயுறு மவ்வவை யின்கணே ஏழுல குண்டவர் தொண்டராய்த்
தூயது யத்தைவி ளக்கியே சுந்தர வந்தணர் தோன்றினுர்(108)

தோன்றிய வன்பரை நோக்கினன் தோமறு வார்செல்வ நம்பியும்
மூன்றுல குண்டவர் தொண்டனுர் எய்தின ரென்றுமொ ழிந்திட

ஊன்றுமெய்யன்பில்மன் நோக்கினன் உத்தமனுரவண்மாயனுய்த்
தோன்றினர் தென்னவன் கண்கள்நேர் துண்ணென வோடியெ
ழுந்தனன். (109)

எழுந்திருந்த விறற்றென்னன் செல்வநம்பி யுடனேகிச்
செழுந்தவனே யடிவணங்கச் சீரியநான் மறைக்குமொரு
கொழுந்தென்னத் திருவுருவங் கொண்டபெரி யாழ்வாரும்
விழுந்திறைஞ்சு மன்பர்களே யுவந்தெடுத்தா சிருவதிப்ப (110)

கொடியகொடு விஃனக்கீடாய்க் கூடிவன்கைப் பட்டுழலும்
அடியனேர்க் கருள்நல்கி யாளவந்த திருவுருவோ
படிமீதில் மாமாயை பாற்றவந்த பரஞ்சோதி [போய். (111)
வடிவிதுவோ வெனமன்னன் மகிழ்ந்துரைத்தாங் குடன்கொடு

சீரியசிங் காதனத்திற் றேவவினி திருத்தியென்ருன்
நேரியநான் மறைவல்லார் எழிலரியா சனத்திருந்தார்
கூரியமெய் யறிவில்லா வாதியர்கள் குழாத்திடையில்
நேரிலுறு மிரவியெனச் சென்றவர்த்தே வர்கள்கண்டார்.(112)

வாசவனு மதுகண்டு மற்றிவனுற் றென்னவன்நம்
ஈசனடி யறிந்தடைவன் இவையுலேக்க வேண்டுமெனத்
தேசுபொலி சுரர்குருவைச் சென்றுசிங்கா தனத்திருந்த
மாசிலான் றனேவெல்க மானுடனுய் எனவிட்டான். (113)

இந்திரன்சொற் பணியாலே இருநிலத்தில் வியாழகுரு
வந்துமா னுடவடிவாய் மன்னவன்முன் தோன்றினுன்
எந்தநா டெவ்வூர்நீர் யாவரதை யியம்புமெனச்
சந்திரன்சீர்க் குலத்துதித்த தார்வேந்தன் மகிழ்ந்துரைப்ப(114)

பொன்னுலகாள் பவன்சூதாற் போந்தவர்சென் ருங்கிருந்து
மன்னவநீ கிழிகட்டி வாதிடைவென் றவர்கொண்மின்
என்னவுரைத் தனேபார்ப்பான் எதுசெயித்தா னவன்ருளில்
தென்னவிழுந் தனேயிதனேச் செப்புதிகாண் எனச்செப்ப. (115)

என்றுரைத்த அவ்வேலே யிருந்தசம யத்தவர்கள்
ஒன்றுபட வியாழகுரு வுடன்கூடி முடிவேந்தன்
இன்றெமது முன்னுக இருநிலத்தி லிறைஞ்சுவித்த
நன்றிதரும் வேதியரே கிழியறுக்க நாட்டுமென. (116)

[1]சன்னேசொல்லி யவன்பதத்திற் ருழ்ந்தமன்னே மிகவிகழத்
தென்னவனு மருகிருந்த செல்வநம்பி முகநோக்கி
என்னவினிச் செய்வதென யியம்பியிடு மளவையினில்
மன்னவமற் றிவர்விரைவில் வெல்வர்வருந் தேலென்ருன்.(117)

1. குறி.

எனவியந்து செல்வநம்பி யுரைப்பவிறல் இயல்வேந்தன்
மனமகிழ்ந்தாங் கினிதிருந்தான் வானவர்கோன் விடுத்தவரும்
அனவயல்சூழ் புதுவைநகர் அச்சுதனூர் விடுத்தவரும்
வினவரிய பரசமயத் தர்க்கத்தின் மிகமூண்டார். (118)

பரத்துவமே தறைந்துகிழி பற்றுமென்றான் வியாழமுனி
விரத்திநெறி நின்றவரும் விண்டுவென்றார் அண்டர்குரு
வரத்துமல ரயனென்றார் ஓதவண்ணர் தொண்டரவர்
சிரத்தையரன் கைக்கொடுத்த திறமறந்தா யோவென்றார்(119)

நன்றவ்வா றானாலும் நாரணனன் றேபரமன்
கொன்றைமுடி வைத்தகுண வெற்பரென்றே கூறுதுநாம்
என்றனன்வா னவர்குரவன் ஏழுலகு முண்டவரை
ஒன்றியசீர் மனத்துள்வைத்த உத்தமனார் நகைத்துரைப்பார். ()

அறிவிலா முன்புகன்ற அயன்சிரத்தை யறுத்துரைத்த
மறியமருங் கரத்தரனார் மற்றவினை போக்கிவிடு
நெறியாலாம் பலியிரந்து நெடுங்காலம் துயரமுற [தான்.(121)
வெறியார்பூந் துழாய்முடியெம் விண்டுவன்றோ அதுதவிர்த்

இவ்வண்ண மிவர்கூற இமையவர்தங் குருவுரைக்கும்
மெய்வண்ண முடைக்காலக் கற்பிதத்தில் விட்டதெனப்
பொய்வண்ணக் காலத்தைப் பரமென்றான் போக்கற்றான்
மைவண்ணப் பரஞ்சோதி தொண்டரிவை மறுத்துரைப்பார். ()

காலமொரு மூன்றுமுடைக் கடவுளரார் கருத்தினிடை
மூலமுடி வறியாதாய் மொழிகவென அவன்மொழிவான்
ஞாலமிசை யிருணீக்கி நற்பொருளை விளக்குவிக்கும்
கோலவெழிற் கதிரொளியே யவன்பரமா மெனக்கொண்டே. ()

உரைத்தனனவ் வுரைகேட்ட வுத்தமனார் முறுவல்செய்து
வரைத்தடந்தோள் விறல்மன்னன் மாமுகத்தை நோக்கியிவண்
திரைக்கடலுட் டினம்பிறந்தும் செத்துமுழல் கின்றவனை
இரைக்குமறை காணாத பரமென்றாற் சேர்ந்திடுமோ. (124)

சொல்லாயென் றனராழ்வார் தொல்லுலகங் காத்தளிக்கும்
மல்லார்திண் புயத்தென்னன் மதிகெட்டா ரெனவுரைத்தான்
கல்லாத சுரர்குருவுங் கட்டுரையற் றங்கிருப்ப
எல்லாருந் தங்கடங்க டெய்வமெழிற் பரமென்றார். (125)

அதுகேட்ட செல்வநம்பி யாழ்வார்தம் முகநோக்கி
அதுவென்இப் புல்லருடன் எம்பெருமான் விளையாடல்
முதுவேத முதற்பொருளை மொழிந்துவெளி யிடுகவென
அதுவேநங் கருமமென ஆழ்வாரங் கெதிர்ந்தவரில். (126)

சைவர்களாங் கரித்திரட்கோர் சாற்றுசிங்க வேறனார்
பொய்யுடைய வாமிகளாம் புலியிருட்கா தவனானார்

ஐயமுறு புத்தர்களாம் ஆட்டினத்துப் புலியானுர்
மையலரு கப்பஞ்சின் மாகனலா னுர்பிறராம். (127)

சற்பங்க டமைமாய்க்கும் கருடனெனத் தாம்சமைந்தார்
நிற்பனசெல் வனவிரங்க நேமியான் திருத்தொண்டர்
அற்புதமென் றமரர்குழாம் இறைஞ்சவா ரணத்தந்தச்
சிற்பரத்தை 'யுலகுய்யத் தென்னவன்முன் கட்டுரைத்தார்(128)

கட்டுரையைக் கேட்டுமண்ணேர் கனல்மெழுகாய்க் கரைந்திட
தொட்டுயர்ந்த மண்டபத்திற் றூக்கியசீர்க் கிழிதாழ [விண்
எட்டெழுத்துக் குறைவிடமாம் ஆழ்வார்தம் இருதாளில்
பட்டகிழி தனையறுத்துப் பாண்டியன்முன் பரிந்திட்டார். (126)

தென்னவனச் செயல்கண்டு திருவடியி லுறவீழ்ந்தான்
முன்னவனை யிகழ்ந்துரைத்த முழுமூடச் சமயத்தார்
மன்னவனு முறுவல்செய வந்தாழ்வார் பதத்திறைஞ்சப்
பொன்னகரத் திறைபணியாற் போந்தவரும் போயினரால்(130)

கொடிநகர் முரச மார்ப்ப இமையவர் குழாங்க ளார்ப்பப்
படிமுழு தடைய வாளும் பாண்டியன் பரிவி னேடும்
அடியனே னல்லல் நீக்கி யாளவந் தவரே யின்றிக்
கடிநகர் வலமா'! நண்ணிக் காட்சிதந் தருள்வீ ரென்றுன் (131)

என்றசொற் கேட்ட போதில் ஈசனை நினைந்தாழ் வாரும்
ஒன்றதற் காமா காதென் றுரைத்திலர் ஒடுங்கி நின்றுர்
சென்றெடுத் தவரை நீதித் தென்னவன் நீலக் கைக்குன் (று)
ஒன்றென உயர்ந்த யானை எருத்தமீ துவப்போ டேற்ற. (132)

பூதமோ ரைந்து மேத்தப் புரையறு மறங்க ளேத்த
வேதமோர் நான்கு மேத்த விண்ணவர் குழாங்க ளேத்த
ஓதுமூ வுலகு மேத்த வோங்கிரு சுடரு மேத்த
மூதறி வுடைய மன்னன் சேனைகள் முழுது மேத்த (133)

அந்தணர் குழாங்க ளேத்த அருமுனிக் கணங்க ளேத்தப்
பந்தணை விரல்சேர் செங்கைப் பாவையர் வீதி தோறும்
சந்தனக் குழம்பு சுண்ணம் தாதவிழ் மலர்கள் சிந்தி
இந்திர விழாவ தென்ன இறைத்தனர் மணியும் பொன்னும். ()

மதிக்குடை நிழற்றத் தெய்வ மங்கையர் கவரி வீசக்
கதிக்குநின் றிரங்கு வோருங் காசினி யோருங் கண்டு
துதித்தெழ வேகுங் காலைச் சுடரொளிப் பரலோ கத்தில்
பதித்தசிற் பொருளோ டோங்கும் பரவசா நந்த நாதன். (135)

அந்தமில் பேரின் பத்தா ரடியரோ டமைந்த சோதிச்
செந்திரு மார்வ ராழ்வார் சிறந்தசீர்ப் பவனி காண

வந்தனர் கருடன் மீதில் மான்மறிக் கரனும் வையந்
தந்தநான் முகனும் போற்றத் தாமரைச் செல்வி யோடும் (136)

மண்ணெலாம் மனிதர் [1]செற்ற மறையவர் மறைகள் பாட
விண்ணெலா மிமையோர் செற்ற விரிஞ்சனு மரனும் போற்றும்
அண்ணலார் நித்தர் முத்தர் அணியணி நிறைப்ப வாங்கே
கண்ணெலாங் களிப்ப வான வேந்தனுங் கசிந்து போற்ற. (137)

கண்டுயர் பெரியாழ் வாருங் கருத்தினி லிறுமாப் [2]பற்றம்
கொண்டிலர் கொண்டல் வண்ணன் குளிர்மதி வதனங் கண்டார்
புண்டரீ கத்துள் வைகும் பூவையை மார்பிற் கண்டார்
தொண்டர்கள் குழாத்தைக் கண்டார் துணைவிழி யருவிசோர்
வார். (138)

கருதுவார் கருத வாருங் கருணையங் கடலார் மேனி
மிருதுவை யிளமை தன்னை மெய்யுறு குழுவை மார்பில்
வருதிரு மருவக் கண்டு மண்ணவர் கண்ணேற் றூலே
பொருவரு முருவில் மாசு புகுமெனத் துணுக்கென் றஞ்சி. (139)

தன்னிரு விழிகள் சென்று சாரினும் பிழைக்கு மென்ன
முன்னுறப் பல்லாண் டென்று மொழிந்துகாப் பிட்டக் கோலம்
பின்னுறக் காண்போ மென்று பிரிந்தொரு திசையை நோக்கி
என்னையாண் டருள்வார் பல்லாண் டெனுந்திருப் பதிகந் தன்னை.

ஆனைமே லிலங்கப் போட்ட அணிமணி தாள மாகத்
தேனையுந் தலங்க லான்றன் சேவடி செவ்வி மார்பிற்
கானையுந் தளக வல்லி கதிரொளித் திகிரி சங்கம்
எனைய பிறவுங் காப்பென் றிசைத்தன ரிசைத்த பின்னர். (141)

நோக்கினர் திருக்கோ லத்தை நோலா நோன் புடைய வன்பர்
வாக்கொடு மனமுங் கண்ணும் வள்ளல்தன் உருவிற் பாயக்
கோக்கிளர் மதுரை யுள்ளோர் மன்னவன் கோதி லாத
பாக்கியச் செல்வ நம்பி யெனுமவர் பலருங் காண. (142)

**வேறு**

உளங்கருணைச் சடகோபர் உரைத்ததிரு வாய்மொழியில்
விளங்கியசீர் நெறிப்படியே விமலனருட் கருடன்மிசைக்
கிளர்ந்துபிர மன்சிவனென் றிவர்வணங்கக் கிளரொளியாய்
அளந்தெவரு மறிவரிய அச்சுதனார் வீற்றிருந்தார். (143)

அவ்வண்ணம் வீற்றிருந்த அருளுருவை யாழ்வார்கண்
டெவ்வண்ணத் தவஞ்செய்தேன் யானந்தோ எனவழுது
மைவண்ண மிலாதவரு மலர்க்கரங்கள் சிரங்குவித்து
வவ்வண்ணப் பரனேகைம் மாறில்லே னெனவாழ்த்தி. (144)

---

1. செருக்க 2. அற்றம்—சிறிதும்.

காராருந் திருவுருவின் கருணையினு லுளமகிழ்ந்திட்(டு)
ஆராத காதலினர் அனுபவமுள் ளடங்காதே
கூராழி சங்கேந்துங் கொண்டலுக்குப் பாமாலை
சீராருஞ் சொற்றமிழாற் பாடவென்று சிந்தைசெய்தே. (145)

மச்சமுதற் கற்கிவரை மண்ணிடையில் வந்துதித்த
அச்சுதனர் திருவுருவில் ஆயர்மனை வளர்ந்தவர்தம்
மெச்சுதிருக் கலியாண குணங்களுமெய் விளங்கியசீர்ப்
பச்சைமுகில் பாலகனும் பருவத்தின் பலசெயலும் (146)

பாடுவான் சிந்தித்துப் பரிவோடு மிறைதிருத்தாள்
சூடுவா னினைந்தனரத் தோமிலார் தம்சிரத்தில்
தேடுவார் தேடநின்ற திருமால்சீர் வடிவைத்தான்
நாடினர் வானவர்கள் மண்ணவர்கள் அதிசயித்தார். (147)

சைவர்முதற் சமயத்தார் தத்தமக்காங் கடவுளரைக்
கைவிட்டா ரிங்கில்லா ரங்கில்லை யெனுங்கருத்தான்
மெய்வைத்தார் திருமால்சீர் அடியார்தம் விரைமலர்த்தாள்
நைவுற்றுன் பாண்டியனும் நாரணன்சீர் நலந்தெரிந்தே. (148)

நின்றனனக் காலத்து நெடுமாலுஞ் சமயிகளை
வென்றவரே யின்றுமுதல் வேதக்கோன் பட்டர் பிரான்
என்றிசைக்கு மெழில்நாமம் இயம்பினே மெனவியம்பிச்
சென்றனர்வான் தேவருடன் தெளிவிசும்பிற் சேர்ந்தனரால். ()

பட்டர்பிரா னுழ்வாரும் பரஞ்சோதித் தடங்கடலாம்
எட்டெழுத்தின் தனிநாத னேகியபின் மாகரியை
விட்டிறங்கித் தோற்றவரை வியன்மதுரை மன்னவனை
மட்டவிழ்பூந் துழாய்முடியான் அடியவராய் மன்னவைத்தே. ()

மனக்கருத்து முற்றுவிப்பான் வடமதுரைப் பிறந்தவர்வாழ்
புனத்துளப வனஞ்சூழ்ந்த புதுவைநகர் தனிற்போந்து
தினத்தினமு மருள் விளங்குந் திருப்பல்லாண் டாதியாய்க்
கனத்தவருட் சென்னியோங் கந்தமாய்க் கலைதெரிந்த. (151)

நன்னெறிச்சீர்த் திருமொழியோர் நானூற்று நாற்பதையும்
இன்னிசையா லெடுத்தோதி ஏழுலகு முய்வித்தாங்
கன்னவயற் பூதூரில் அளவிறந்த பலகாலம்
மின்னுமணி முடிமாயன் திருவடிக்கீழ் வீற்றிருந்தார். (152)

பெரியாழ்வார் பிரபாவம் முற்றும்.

# திருமங்கை யாழ்வார் பிரபாவம்

### கொச்சகக் கலிப்பா

இந்தவகை பெரியாழ்வார் இலங்குமருள் புவிமீதும்
அந்தரத்தும் திசையெட்டுந் தழைத்தோங்கு மந்நாளில்
எந்தைதிருக் கலிகன்றி எழிற்குறையற் றிருநகரில்
வந்தபடி யருள்வழியால் வாழ்ந்தபடி வகுத்துரைப்பாம். (1)

மாயவனை வாள்வலியால் மந்திரங்கொண் டவர்திறத்தை
ஆயவெனை விதித்ததெய்வந் தானேமற் றடியேனே
பேயரென வறியகிலேன் பேதையேன் இயற்றுவதத்
தூயவனார் பெரும்புகழ்க்கோர் துகள்வகுக்கத் துணிதலினால்.(2)

அருந்தமிழு நான்மறையும் அந்தணரும் அவிர்போதத்
திருந்துநெறித் தொண்டரணி தேசமெங்குஞ் சிறந்தோங்க
விருந்தருந்தி விதுரனுடை வில்முறிப்பித் தவரருளால்
ஒருங்குறைய லூர்நகரின் மண்முழுது மீடேற. (3)

ஆத்திபிறை யரவணிவார் அகம்படிமைக் குடியினிடைக்
கார்த்திகைகார்த் திகைதன்னில் கருணையிளங் கொழுந்தென்னப்
பூத்தவுந்தி யெழில்மாயன் பொன்னடியை யெவ்வுலகும்
ஏத்தவைத்த பரகாலன் இருநிலத்திற் றோன்றினான். (4)

நறுந்துளப முடிமாயன் விதித்தவுல கிடைநண்ணி
உறும்பொருள்மற் றவனென்னு முணர்வறியாப் பரசமயக்
குறும்பருர மவைமாய்க்கும் கோளரியின் குருளையெனப்
பெறுந்தருமக் கொழுந்தென்னப் பிள்ளைவளர்ந் திடுநாளில். (5)

### வேறு

காம மாதிகள் கைவல மென்னும்பொய்
வர்ம மாதிகள் மாயவு மன்னிய
தூம னுதற்குச் சொற்றெரி நீலனும்
நாம மிட்டனர் நான்மறை யாளரே. (6)

### வேறு

அருமறையின் முதற்பொருளி லாய்ந்தெடுத்த பராவமிர்தாம்
திருமொழிசெய் தடியவர்கள் செவிப்புலனை நிறைப்பவர்க்குக்
கரியவிழிச் செய்யவாய்க் காரிகையார் களிப்பினொடும்
உரியவமிர் தவையூட்ட உலகமுண்டார் தொண்டருண்டார்.(7)

ஒத்தார்மிக் கவரில்லா உத்தமனார் தொண்டரந்நாள்
வத்தாவி (னுலுகந்த) மயிர்வினையின் குறைமுடித்துச்
சத்தாகி யுரங்கெடுத்துச் சதுமறையை யுணர்வாக்கும்
முத்தாரைச் சொற்றமிழும் வடமொழியு முழுதுணர்ந்தார். (8)

ஆயகலை யறுபத்து நாலுமடை வாலுணர்ந்து
தூயபரம் வெளியிடவித் தொல்லுலகிற் பிறந்தவரை
வேயமர்தோட் பின்னைக்கோன் விளையாட்டுக் கொளவேண்டி
மாயையைவிட் டவர்தம்மை யறியாத வகைமறைத்தான். (9)

உரமொத்த திருநாத னருளால்வந் துதித்தவரும்
சிரமத்தின் றெழில்பயின்றூர் செகத்திலிவ ருடனெதிர்ந்தார்
விரமித்தா ராயுதத்தால் மிகுதிறலுங் கைக்கொண்டார்
பரமத்தா சர்களெனப் பாதுகைக்கீழ் விழவளர்ந்தார். (10)

மாமாயை வருத்துயிரை வருத்தியுடல் வாடல்கண்டு
தாமாவி சோர்ந்தவையைத் தவிர்க்கவெண்ணத் தவிராதே
ஏமாறி யழிந்திருக்கும் எம்பெருமா னேவலிலத்
தேமாலை மார்பினரைச் செறிந்ததுதன் சிக்கனவால். (11)

கற்றின்ப வீடுகண்டு கலைதெரிந்த திருமடலாஞ்
சொற்றமிழால் பாமாலை துணையாகத் துணிபவர்தாம்
உற்றபெரு மாமாயை யுடையவனே யூட்டுதலால்
சிற்றின்பப் பெருங்கடலில் செறிந்தாழம் சோதித்தார். (12)

வேறு

திருவய தொருபத் தாறிற் செங்கணு யகனுர் தொண்டர்
அரிவையர் தங்கட் கின்ப மருளுமன் மதனுமாகி
ஒருபொழு தகலாநீதி யுடையமா மாதரோடு
வருபகல் பலவு மன்னி வளருநா ளொருநாள் மாயன். (13)

இனிதமர்ந் துறையு நீதி யெழிற்றிரு வாலிப் பாங்கர்ப்
புனிதநீர்ப் பொய்கை சூழ்ந்த பூம்பொழிற் புளினக் குன்றில்
நனிமறை யந்தணுள ஞெருவ ஞடோறும் வைகித்
தனியிருந் தகத்தி னுள்ளே தரணியுண் டுமிழ்ந்தார்க் கன்பால்.

பூசனை யியற்றி யன்பிற் போதுவா னந்நா ளந்த
மாசறு பொய்கை தன்னில் வானமா மங்கை மார்கள்
ஆசறு விமானத் தேறி அகன்புன லாடிப் பூக்கொய்
தீசன தாலி நோக்கி யீட்டுட னெய்து வார்கள் (15)

அப்படிப் பலநா ளெய்து மரிவையர் தம்மை யோர்நாள்
செப்பமார் மறைவல் லாளன் திருக்கணைத் திறந்து கண்டான்
ஒப்பிலா மங்கை மார்கள் யாவரு முயர்தே ரேறி
இப்படி விட்டு வான்சென் றெய்தினு ரிமையா முன்னம். (16)

ஆங்கதி லொருத்தி பூவுக் ககன்றவ ளவரைக் காணுள்
ஏங்கினுள் பதைத்தாள் தேடி யெங்கணும் திரிந்து வாடித்
தாங்கிய தவத்தோ டோங்குஞ் சதுமறை யவனைக் கேட்பப்
பூங்குழ லார்கள் போனுர் பூவைநீ யஞ்ச லென்றுன். (17)

போயினு ரவர்க ளென்ற பொழுதினம் மறையோன் றன்னை
ஆயிழை வணங்கி நானுன் புதல்வியா மையா வென்னைத்
தூயநின் மனையிற் கொண்டு போகுதி தொடர்வே னென்ருள்
வேயமர் தோளி தன்னை வேதிய னுடன்கொண் டேகி. (18)

தன்னகம் புகுந்தான் வஞ்சத் தரணியோர் தங்கட் கஞ்சிப்
பன்னகப் பாயல் மேவும் பரஞ்சுட ராலி நாதன்
பொன்னகம் படிய ராகிப் புனிதன்முன் நிருத்தஞ் செய்து
முன்னகம் விளக்கி வாழும் முதற்குடி யாரிலோர் பெண். (19)

பொருளினு லுயர்ந்தாள் கண்ணோர் புத்திரி யின்மை யாலே
அருளுடை யவர்க்குத் தான்செய் ஆடல்பா டல்க ளின்றி
இருளுறு மனத்த ளாகி யிராப்பகல் இரங்கு வாள்பால்
தெருளுறு மறையோ னம்மா மயிலொடுஞ் சென்று புக்கான்.()

தெய்வவான் விளக்கி னேடச் சேயிழை தன்பா லன்பால்
அய்வகைப் புலன்கள் வென்ற அந்தண னணையக் கண்டு
மய்யமர் கண்ணு ளந்த மறையவன் கழலில் வீழ்ந்து
நய்யுமன் புடைய ளாகி நங்கையு மெழுந்து நின்ருள். (21)

நின்றவத் தைய லாளை நிகரிலா மறையோ னேக்கி
இன்றுனக் கிவளை யீந்தேன் இரங்கலை புதல்வி யாக
நன்றிசேர் தவத்திற் பெற்றேன் நானிவள் தாதை யாகும்
என்றுரைத் தவளுந் தன்பால் எய்திய வாறு கூறி. (22)

வேதியன் போனுன் தெய்வ விளக்கினை யுகந்து நாளும்
நீதிகொள் மடவா ளாவி யாமென நிறைவாற் பேணி
ஊதிய மிவளா லெய்தும் உலகுக்கு மெமக்கு மென்றப்
போதினு ளனையா டன்னைப் போற்றியே வளர்க்கு நாளில். (23)

மண்ணிடை மங்கை மார்க்கும் வளரொளி யிளமை மாரு
விண்ணியல் மங்கை மார்க்கும் வெயில்மணி நாக லோகத்
தெண்ணரு மங்கை மார்க்கும் நாயக மிவளென் றெண்ணும்
பெண்ணினைக் குமுத வல்லி யென்பதோர் பெயரு மிட்டார்(24)

ஆடகச் செம்பொ னுலே யமரர்நாட் டணங்க னுளைப்
பாடகஞ் சிலம்ப தாதி யணிவகை பலவும் பூட்டி
ஏடவிழ் துளபத் தாரா னிணையடி தொழுவித் தாங்கே
நாடகம் பயிலும் வண்ணம் நாடகச் சாலை சேர்த்தார். (25)

தேமல ரிருந்த வேதன் சிந்தையாய்ப் படைத்த தெய்வத்
தாமநீள் குழலாள் மஞ்ஞை யுருவுறு சாயல் கண்டாங்(கு)
ஓமெனு மெழுத்தை யுன்னி யொடுங்கிய முனிவோர் தாமும்
காமனும் பணிசெய் தேத்தக் காரிகை வளரு நாளில். (26)

வையக முழுது மாளும் மன்னவர் பலருங் கேட்டத்
தெய்வமா மடந்தை தன்னைத் திருக்கலி யாணஞ் செய்ய
எய்துமோ ? நமக்கென் றெண்ணி யாவரு மிரங்கு நாளில்
பொய்யறு குறைய லூர்வாழ் புண்ணிய ரதனைக் கேட்டார்(27)

கேட்டவப் பொழுதே தாமும் கிளர்ந்தெழு தோழன் மார்தம்
கூட்டமோ டெழுந்து மேன்மை குலவுபொற் சிவிகையேறி
ஓட்டலிற் கடிதி னெய்தி யுத்தம ராலி நண்ணி
ஈட்டுபல் தவத்தி னாளைக் காண்பதெவ் விடத்தென் றெண்ணி(28

ஓரிடத் திருந்து தாந்தம் ஒற்றரை யழைத்து நீர்போய்
ஆரிடத் திருந்தா ளந்த வணங்கனுள் தன்னை நோக்கி
ஏருடை யெழிலை நோக்கி யெனக்கிவ ணுரைப்பீ ரென்னச்
சீர்பெற வனுப்பி விட்டார் சென்றவர் பதியைச் சேர்ந்தார்(29)

அன்றவர் மனையிற் காணு தகன்றுநா டகசா லைக்கே
சென்றனர் கண்டி லார்கள் திகைத்தனர் பள்ளிக் கூடத்
தென்றதை நாடிச் சென்றோர் எழில்மணி மாடத் தும்பர்
மன்றல்சேர் குழலி னர்கள் குழாத்திடை மயிலைக் கண்டார் (30)

மாந்தளிர் மேனி வாய்ந்த வடுவகிர் விழிச்செவ் வாயாள்
ஏந்திள முலையாள் கீத வின்னிசை மொழியாள் சீருப்
பாந்தளி னல்கு லாள்செம் பஞ்சணை பதத்தாள் கான்சேர்
காந்தளங் கரங்க ளேந்தும் வீணையே ழிசையுங்காட்ட. (31)

இருந்தவள் செயலைச் சென்ற தூதுவர் இசையக் கண்டெம்
அருந்தவப் பரகா லர்க்கே ஆகுமின் னமிர்த மாமிவ்
விருந்துண வந்தார் தம்மை விரைவினிற் கொணர்வோ மென்று
பொருந்திய காத லார்பாற் போயிவை புகல லுற்றார். (32)

எந்தையா மவரைத் தேடி இருக்குமவ் விடத்திற் சென்றே
இந்தமா நிலத்தின் மாத ரேத்தநான் முகன்கோ ளாகச்
சிந்தையில் விதித்த தெய்வத் தெள்ளமு திருந்தாள் கண்டோம்
வந்துநின் னுவி யாய மடந்தையைக் காண்பா யென்றார். (33)

தூதுவ ருரைத்த காமச் சொல்வழி மனத்தைப் போக்கி
மாதினைக் காண்போ மென்ன மன்னிய துணைவ ரோடு
பூதநா யகர்க்காட் செய்யும் புண்ணியர் பொருந்து மேவல்
கோதறு குணத்தாள் நம்மைக் கொள்ளுமோ எனவுட்கொண்டு.

பொருக்கென வெழுந்து சென்ற புண்ணியர் எய்து முன்னே
அருக்கன்மேற் கடலி லாழ்ந்தான் ஆயிழை யாலி மேவும்
திருப்பொலி மார்பர் நீதித் திருமுனி லாடப் போனாள்
குருக்களை யிகழ்வார் சிந்தை போன்றது குலவு மண்டம். (35)

தூதுவ ரோடு சென்றத் துகளறு தலத்தி லின்ப
மாதினைக் காணு துள்ளம் மயங்கிமா துயர முற்றி
ஏதினிச் செய்வ தென்ன விருந்தனர் ஒற்றர் தேடி
ஆதியம் பரமன் கோயில் எய்தினு ளாடற் கென்றூர். (36)

வேறு

அத்த லத்தி லெய்த வெண்ணி யன்ப ரோடு மேகினுர்
கொத்த லர்ந்த தண்டுழாய் முடித்த கொண்டல் கோயிலில்
எத்த லத்து ளோரும் வந்தி றைஞ்சு முற்ற மெய்தியச்
சித்தி ரத்தி லாவி பெற்ற தெய்வ மங்கை யாடினுள். (37)

கண்டு ளம்ம கிழ்ந்தி ருந்த காமு கர்க்கு முன்னுறக்
கொண்டு கொண்டல் வண்ணன் மாம ருங்கி ருந்து கோதிலா
வண்டு கிண்டு தண்டு ழாய்ம லர்ப்ப தம்வ ணங்கினுர்
பண்டு கண்டி லோமி தார்கொ லென்று பாவை நாடினுள். (38)

நாடி யாடு பாவை தன்னை நாடி நண்ணி ஞருயிர்
வாடி யென்செய் கின்ற தென்ன மன்னி ஞரவ் வேலையில்
பாடி யாடு சிந்தி லங்கொர் பாவை யோடம் மாதினுள்
சேடி மற்றி தார்கொ லென்று செப்பி ஞள்வி ருப்பினுள். (39)

அன்பி ணைந்து பாடி யாடு மன்ன மோடம் மின்னனுள்
முன்பு நான றிந்தி லேனிம் முறுவல் வாண்மு கத்தரைப்
பின்ப றிந்து கொள்ள லாகும் என்று தோழி பேசலும்
என்ப றைந்துநுகரு மெங்கள் ஈசர் தொண்ட ரல்லரேல். (40)

என்று சிந்தை நோதல் மாறி யீச ஞர்முன் நாடினுள்
அன்று கண்டு கந்தி ருந்த ஆலி நாட ரர்ச்சகர்
நன்று பூவை யென்று ரைத்து நற்க லன்கள் நல்கினுர்
முன்றில் நின்ற கன்று தெய்வ முளரி மாமு கத்தினுள். (41)

வேறு

தோழியர்கள் பலர்சூழத் தும்புருநா ரதரென்ன
ஏழிசையின் திறம்பயில்வோர் எழில்வீணை யாழ்முழவம்
சூழநிரைத் திரைத்துவரத் துகளறுசீர்க் கவிவாணர்
வாழியெனு முரைமுழங்க வானவர்நா டுடைமங்கை. (42)

சீறடிநூ புரத்தரிகள் சிற்றிடையிற் றிடுமந்தோ
மாறியடி யிடுந்தோறும் வளர்தவத்தாள் மலர்க்குழலில்
ஏறுமறு பதத்திரளா லெனப்பாங்கில் வருபவர்க்குக்
கூறுவதும் போன்ருெலிப்பக் கோலமயில் பதிநோக்கி. (43)

வேறு

அன்னம் வெள்கந டந்து சென்றவள் ஆவி யன்ன மினுரொடும்
பொன்னி லங்கிய மாட மாளிகை மேவி யங்கொரு பூவையின்

நன்ன லந்தெரி வாச கங்கொள நங்கை நண்ணின ளிங்கிருந்
தென்னையாள்கலி கன்றிசெய்தது மென்னதாமெனில்மின்னனுள்

போய பின்புபு ழுங்கு நெஞ்சர் புலம்பு நாவர் புலம்பிமா
மாய னுரைவ ணங்கி னூர்பி னணங்கின் மேல்மனம் வைத்தனர்
துய மால்திரு வாயி லெய்திய தோழன் மாரொடு துன்னினூர்
ஆய காலைய னங்க னூர்கணை நாலு மாக மழுத்தினூர். (45)

அனங்கனூர்கணை பாய்வ தன்றியும் அன்றி லுஞ்சிறு தென்றலும்
கனஞ்செய் தாவிகொள் கங்கு லும்பொரு காமநோயிலமுந்தினூர்
மனங்க ரைந்தொரு மண்ட பத்தினில் மன்னி யன்னம னுளெனப்
பினங்க மாதி புணர்ந்து ரைப்பவர் விம்மி யிம்மொழி பேசுவார்

### வேறு

விண்ணோ ரமுதை வடித்ததனுல் மேனிசெய்திம்
மண்ணோ ருயிர்கவர வந்த மணிவிளக்கோ
பண்ணோவென் னுருயிரைப் பேதித்தாள் மொழிபோர்செய்
கண்ணோ திருப்பாற் கடலோ கருதேமால். (47)

காரோ வறலோ விருளோ கனங்குழைதன்
சீரோதி நெற்றியினந் திங்களோ விண்ணவர்தம்
ஊரோ விரிஞ்ச னுலகோ வுறையுமிடம்
ஆரோ விணையிவளுக் கந்தோ அறியேமால். (48)

பூவாளி மன்மதனூர் பொற்சிலையோ நற்புருவம்
ஆவா திலமோ குமிழோ அணிமூக்குத்
தேவாதி தேவர் திருவாலி நாரணர்முன்
ஓவா துயிரொளித்துப் போனுருக் கோரேமால். (49)

வள்ளையோ காது வடித்த மதுரவுரை
கிள்ளையோ செவ்வாய் கிளர்கவிரோ தீவினையேன்
உள்ளையோ நைய உருக்குநகை நித்திலமோ
கொள்ளையோ நண்பா வெனதாவிக் கொம்பினுக்கே. (50)

வட்ட மதியுள்ளாய் வளராதே தேயாதே
ஒட்டி யொளிரொற்றைக் கலைப்பிறைபோல் உள்வளைந்து
கெட்டேன் திருமுகத்திற் கேசவனே யென்றுரைத்தாங்
கிட்டதிரு மண்காப்பின் என்னுவி காவாதோ. (51)

சீரொத்த பூகக் கழுத்திற் சிறந்திலங்கிப்
பேரொத் தொளிவீ சழகார் களந்தானே
ஏரொத்த வேயா ரிணைத்தோளோ என்னுயிரை
வாரொத்த கொங்கைளோ மாய்த்ததறி யேனம்மா. (52)

மின்னுநே ரிடையேயோ சூழ்ந்தமணி மேகலையோ
பொன்னுருவோ ரோமக் கொழுந்தோ புறவடியோ

19FEB1975

அன்ன நடைதானே அணிமயில் சாயலோ
என்னுவி கொண்டகன்ற தேதோ வெனவிரங்கி. (53)

வேறு

அங்க நொந்துகலி கன்றி சோர்வதொ
ரணங்கு காரணம தாலெனக்
கங்கு னங்கையிவை கண்டு நிற்றலரி
தென்று கால்விசையி னேகினள்
பொங்கு தண்பரவை வேந்த னைந்து
புலம்ப லொத்தலைய வெம்பிடத்
திங்க ளுங்குறைய லூர ருக்குவினை
செய்ய வந்துதய மெய்தினன். (54)

அமுத வெண்கதிர் பரப்பி யார்கலியி
னின்றெழுந் தலைத லைப்படும்
துமித மீதுற வணைந்து மீமிசை
துலங்க நானில வணங்கனள்
விமுத னத்திணைக ளொத்த தாமரைக
ளன்றி மென்பவள வாயெனும்
குமுதம் வேல்விழிக ளன்ன காவிகள்
குளங்க ளூடுற மலர்ந்தவால். (55)

எண்டி சைக்கணும் விளங்க விண்டலமி
லங்க வந்துநிமிர் இந்துவைக்
கண்டு கொண்டனிற வண்ண ருக்கினிய
தொண்டர் கஞ்சமுக மங்கைபால்
உண்டு கொல்லுறவு தண்ம திக்கென
ஒடுங்கி னுருயிர் நடுங்கினர்
அண்ட முண்டவர்கை யாழி யென்னவொளி
வீசி யாதவனு மெய்தினன். (56)

வெய்யவன் உதித்த போதில் வெண்மதித் தழலில் வெந்து
தெய்வவான் மடந்தை யென்றே சிந்தைநொந் திரங்குமன்பர்
பொய்யறு நண்ப ரோடப் பூவையைப் பொருந்தி நானின்(று)
உய்வதோ ருபாய முண்டேல் உரைமினீ ருரைமி னென்றூர்.(57)

ஆசறு பண்ப ரிவ்வா றறைதலு மருகி லன்பர்
ஈசன தருளிற் போந்த இமையவர் வல்லி தன்னைப்
பேசிய முறையிற் பேசிப் பெருந்தனம் பெறுவார்க் கீந்து
மாசறு கற்பி னுளை மணவினை புரிவோ மென்றூர். (58)

நன்றென அவரைப் புல்லி நம்பிமீர் செல்மின் என்னு
நின்றவர் தம்மி னுல்வர் ஆங்கதற் கிசைந்தன் போடு
சென்றனர் தெய்வ மங்கை சேடியர் மனையைச் சேர்ந்து
மன்றல்சேர் குழலி னர்க்கு வகுத்துரைத் தவரோ டேகி. (59)

கற்பக வல்லி மன்னுங் காசறு மாட மெய்திப்
பற்பல வுரையுங் கூறிப் பரிவினி னிருந்த வேலை
அற்புத வணங்கைப் போற்றும் அன்னையும் பிதாவும் மந்த
மற்புரை திரள்தோ ளாரை வந்தமை விளம்பு கென்றூர். (60)

ஓதுமின் வந்த வாறென் றுரைத்தலும் புவன மீன்ற
வேதியன் தாதை தொண்டர் அன்பர்கள் விளம்பும் தொல்லை
ஏதமில் குறைய லூரில் எம்பிரான் பரகா லற்கிம்
மாதினை யுவந்து சார்வால் மகட்பேச வந்தோ மென்றூர். (61)

படிமுழு திறைஞ்சுந் தெய்வப் பாவையார்ப் புரந்த வன்பர்
குடிகுல முரைமி னென்றூர் கோதில ருரைத்தா ரந்த
வடிவருக் கியாங்க ளிந்த மயிலினைத் தருவோ மென்றூர்
துடியிடை யதனைக் கேட்டுத் தோழியர்க் குரைப்ப தானூர் (62)

சீரிய தேவர் நாட்டில் செனித்தவென் நலத்தை மண்ணில்
கார்முகில் வண்ணர்க் காளாய்க் கசிபவர் கைக்கொள்ளாதே
யாரெனைக் கொள்வார் சைவற் கன்னையு மிணங்கி னூளேல்
வாருறு கொங்கை நல்லீர் மாய்ப்பனென் னுயிரை என்றூர். (63)

கேசவ னடியார்க் கல்லால் கிளிமொழி யிணங்கே னென்று
பேசிய வுரையைக் கேட்டுப் பிறங்கவாண் டிருந்தோர் சொல்வார்
மாசறு மயிலே யெங்கள் வள்ளலு மகிழ்வா லுங்கள்
ஈசனூர்க் கடிமை யாவர் எனவிசைத் திணக்கி மீண்டார். (64)

மீண்டவர் குறைய லூரின் மீளிபா லணைந்து கூறும்
நீண்டமா லடியா ரல்லார் நீணிலத் தெவரு நீசர்
திண்டுமே நீசர் தம்மைத் தெய்வநன் மங்கை யென்றூள்
வேண்டுமேற் றிருமா லன்ப ராயிடும் விரைவிலென்றூர். (65)

குணத்தினி லுயர்ந்த தெய்வக் கொம்பனை விரும்பி யென்பால்
மணத்தவி சேறு வாளேல் மற்றவை யரிதோ வென்றக்
கணத்தினி லெழுந்து சென்று காம்பறத் தலைசி ரைத்துப்
பணத்தணைக் கிடந்தா ராழி சங்கமும் படப்பொற் றூேளில். (66)

பொறித்தபின் கேசவாதி நாமங்கள் பொருந்தச் சாத்திக்
குறித்தெழு சுண்ணஞ் சாத்திக் கோகன கத்தின் முத்தும்
வெறித்துழாய் மணியும் வெவ்வே ருகிமெய் விளங்கக் கோத்தங்
கெறித்தசீர்ச் சோதி மார்பில் யாவரு மிறைஞ்சச் சாத்தி. (67)

சென்றுமெய்க் கோலத் தோடுந் திருமணம் புணர்ந்தாரன்பர்
அன்றிவ ருருவங் கண்ட வாயிழை யாலி நாதர்க்
கின்றிவர் தொண்ட ரானூர் இதயத்தி லவரைக் காணேன்
என்றுணர்ந் தமளி நீங்கி யிருந்தன ளிருந்தா டன்னை. (68)

என்னினைந் தகன்றி ரென்றூர் எழிலுடைக் குறைய லூரார்
மின்னெனு மிடையாள் கூறும் விண்ணவர் நாட்டின் மங்கை
இந்நிலத் தரிக்கா ளானூர் பாரியா யிசைந்தாள் கூடி
நன்னலம் பொருந்து நாளும் வேறுள நவிலக் கேளிர். (69)

மண்ணவர் யாக்கை மற்றோர் ஓசனைப் பரம்பின் வட்டம்
விண்ணவர் தமக்கு நாறும் விண்டுவுக் கடிமை யாகி
நண்ணிய காயத் துய்த்த செடியினைக் கெடுப்பார் நல்லோர்
புண்ணிய வாளர் நீரே யுத்தரம் புகலக் கேளிர். (70)

வேறு

எட்டெழுத்தே தாயாய் எழிற்குருவே தந்தையாய்
மட்டார் துழாயான் மலரடியை யோர்போதும்
விட்டகலா வன்பர் பிராதாவாய் வீறுடைய
சிட்டர்களோர் நூற்றெட்டுப் பேரைத் தினந்தினமும். (71)

நன்னெறியாற் பூசித்து நாரணனில் எண்மடங்காய்
உன்னுங்கா லேற்ற முடையா ரெனவுகந்தே
அன்னவர்கள் சேட மருட்பாத நற்றீர்த்தம்
என்னுமவை தாமருந்தி யெய்துநாள் இன்புறுநாள். (72)

ஆதலால் நீரு மவைசெய்து வந்தணைந்தால்
போதலாம் என்பாற் பொருந்துநலங் கைக்கொள்ள
ஈதெலாம் வாரா தெனிலன்பால் நீர்வைத்த
காதலா லென்னபயன் என்றாளக் காரிகையும். (73)

வேறு

அவ்வுரை கேட்ட போதே யகன்றருட் குறைய லூரில்
செவ்விய ஆலி நாதர் தொண்டருட் சிறப்போ டோங்கி
நவ்விபோல் விழியாள் முன்னம் நவிலுநூற் றெட்டு மூட்டி
வவ்விய வினைகள் விட்டார் மாமயில் மனையிற் சேர்ந்தார். (74)

சென்றவர் தம்மைக் கண்ட சேயிழை யெதிர்கொண் டேகி
ஒன்றிய காத லோடும் பூவணை யுடனே வைகி
அன்றிலும் பெடையு மென்ன அனுபவக் கடலி லாழ்ந்தார்
என்றுமப் படியே பாக வதர்க்குமின் னமுத மூட்டி. (75)

மருவுறு மயிலின் சாயல் வல்லிதன் சொல்லைப் பேணிப்
பொழிலுறு குறைய லூர்வாழ் புண்ணியக் கொழுந்தை யுன்னூர்
அருமறை முதல்வர் தொண்டர்க் கறுசுவை யடிசில் பேணித்
திருவுள மகிழ வூட்டிச் சிலபகல் செல்லு நாளில். (76)

விருந்தினர் அருந்தும் வன்னம் வேண்டிய தளிக்கின் றூர்தம்
பெருந்தனஞ் சுருங்க வாடார் பிறருடன் கடன்கொண் டீந்தார்
பொருந்திய கடனும் பின்னைப் பூதலத் தீவா ரற்றூர்
வருந்திருத் தொண்ட ருண்டி முடக்கிமான் மனையிற் சேந்தார்.

அண்டமுண் டுமிழ்ந்தார் தொண்டர் அருந்துதல்முடக்கிச்சென்ற
தொண்டரைக் கண்ட போதத் தோமறு சிந்தை யன்னம்
தெண்டிரைப் பள்ளி கொண்ட தேவரை யும்மோ டீங்கே
கண்டில மென்ன வோடிக் கதவடைத் திருந்து சொல்வாள். (78)

பழியிலா நிலையீ ருற்ற வாற்றினைப் பகர்வீ ரென்றாள்
கிழிப்படு தனமொன் றின்றிக் கேசவன் தமர்கட் கூட்டல்
ஒழித்தது வினையே என்றார் ஓவிய மதனைக் கேட்டு
வழிபறித் தமுத மூட்டி வருவதே கரும மென்றாள். (79)

செழுந்தவ முடைய மங்கை திருடியு மிடுவீ ரென்ன
எழுந்தனர் குறைய லூர ரிமைப்பினிற் பதியை யெய்தி
உழுந்துருள் பொழுதிற் சார்வோ ருற்றவர் சம்பந் தத்தார்
அழுந்துற வாலி யூரின் றனைவரும் வருக வென்றார். (80)

என்றவ ரருளிச் செய்ய இன்னுயிர் போன்றா ரெல்லாம்
சென்றனர் சென்றார் தம்மிற் றிருடவல் லாரை யெல்லாம்
மன்றுறக் கூட்டிப் போகா தவர்களை யனுப்பி விட்டு
வென்றிவே லீட்டி வில்வாள் அத்திரம் விளங்கு சொட்டை. (81

**வேறு**

நேரார் தடிவளை வடிகவ ணுடனே நிமிர்கைக்கோல்
பாரா வளையஞ் சமுதா டுடனே பத்திரமும்
கூரா வருங்கைக் கத்தியி னோடங் குசங்குந்தம்
சீரா ரங்கை கொண்டார் சென்றார் திசைதோறும். (82)

மேருகி ரிக்குந் தென்கட லுக்கும் வெயிலோன்வந்
தூருகி ரிக்கு மத்தம னத்தில் ஒளிமிக்கோன்
தேருமி திக்கும் நாகம தற்குந் திகழுள்ளாற்
பாரின்மி திக்கும் பதிவழி யெங்கும் படர்வுற்றார். (83)

வஞ்சிந கர்க்கும் மாமது ரைக்கும் வளர்சோழன்
எஞ்சற விர்க்கும் நன்னக ருக்கு மிடைபோவார்
நெஞ்சுப தைக்கும் வண்ணமி லங்கு நெறியெல்லாம்
கஞ்சமுகப்பெண் மேல்மனம் வைத்தாட் களைவைத்தார். (84)

**வேறு**

நெறிதோறு மாளிருத்தித் தாம்போயோர் நிழலிடையில்
அறியார்போ லிருந்துபெண்ணோ டாண்வழியி லகப்பட்டால்
பறிபோகி வந்தவர்கள் பழஞ்சீரை கோவணங்கள்
செறியாமுன் னெதிர்கொடுத்துச் சிந்தையிடர் கெடவுரைத்து:

**வேறு**

ஈட்டிய த[illegible] ததி னோடு மெய்திமால் தொண்டர் தம்மைக்
கூட்டிநால் விதத்தி லுண்டி கொழுங்கனி செழுந்தே னோடும்

ஊட்டியச் சேடந் தாமும் உவந்துபின் னருந்தித் தம்மைப்
பூட்டிய காத லாள்பாற் போயனு பவித்து வாழ்ந்தும். (86)

ஆண்டுபற் பலவுஞ் செல்லு நாளினி லொருநா ளன்பர்
பாண்டவர் தூத னுய பரஞ்சுடர் தொண்டர் துய்ப்பான்
வேண்டுவ வளித்த லாலே விமலனுர் விநோதந் தன்னுற்
பூண்டமா மாய வல்லி பூங்கழல் தொழுது போனுள். (87)

மாயவன் விடுத்த மாயை மற்றவன் வாங்கு முன்னே
போயதே மூலக முண்ட புண்ணிய ரடிய ரான
தூயவர் தளிகை சேடம் துயத்ததன் பொருட்டா லென்ருல்
ஆய்பவ ரெவரோ கண்ண னடியவர் திறத்தை யம்மா. (88)

## வேறு

அந்நாளிற் றிருமங்கை யாழ்வாரு மடியவரும்
பொன்னுழி சங்கேந்தும் பூவைவண்ணர் தம்மருளால்
மன்னுளும் வழிபறிக்கும் பலநெறியாற் பயில்வாரும்
தென்னுவென் றளிமுரலும் திருமணக்கோ லக்காட்டில். (89)

சென்றுபெரு வழிக்கரையில் சேர்ந்தெவர்க்குந் தெரியாமல்
அன்றுநெறி யிருமருங்கும் பதிகிடையி லாங்கமர்த்தி
ஒன்றிய சீர்த்திருவரசிற் ருனேறி யொற்றிருந்தான்
வென்றிவேற் பரகாலன் வழிப்பறிமேல் விருப்பத்தால். (90)

அந்நெறியிற் றிருமங்கை யாழ்வாரு மமர்ந்திருப்ப
நன்னெறிசேர் வைகுந்த நாதனுமத் திறமுணர்ந்து
மின்னெறியுஞ் சுடராழி விளங்குநித்த முத்தருடன்
தன்னெறியாங் கமலையொடுந் தரணிசெறிந் தாழ்வார்க்கு. (91)

## வேறு

மயர்வற மதிநல மருளிநாம் வருவது நலமென வெண்ணிய
உயர்வற வுயர்நல முடையவன் உமையொரு கூறன தாதியாய்
அயர்வறு மமரர்க ளடிதொழும் அனவய லாலிநன் னுடனும்
துயரறு சுடரடி தொழுதெழுந் தொல்லுலகதனிடை நண்ணினுர்

பழிப்பறு பேரருள் வாரியாம் பங்கய வாணய னன்தனை
வழிப்பறி நல்கிய பின்னையாம் மந்திர நல்குதல் வண்மைசீர்[யின்
மொழிப்படு மின்னிசை பாடுவார்க் கென்றுமு ரண்டரு மாயை
சுழிப்படு மானிடர் தம்மிலோர் சுந்தர வேதிய ராயினுர். (93)

செங்கம லத்துறை செல்வியும் சீரிய வேதியர் மங்கையாய்
அங்கவர் தம்மொட மர்ந்தனள் அண்டரு மண்டர்க ளாயினுர்
சங்கர னும்முமை மாதொடுஞ் சங்கம ரூபம தாயினன்
அங்கம லத்தய னுருடன் வாசவ னும்மனு வாயினன். (94)

நித்தரு மந்தண ராயினர் நேமிய ரும்பவ மெய்திய
முத்தரு மவ்வண மாயினர் மூவுல குண்டவர் தாடொழுஞ்
சித்தரு மாமுனி வோர்களும் சீர்வணி கத்திர ளாயினர்
அத்தனு மங்கவர் தம்மொடும் ஆசறு மோர்வண மெய்தினன்.

எய்திய வீசனு மன்பரொ டின்புற வோருரை கூறுவான்
வய்திக மாமண வாளனுய் மாதொடு பின்வரு கின்றனன்
செய்திற முன்னிய வானுளீர் சீரிய தோர்நெறி யின்கணே [ன்.
மய்திகழ் கண்ணியர் தம்மொடும் மங்கையர் கோன்முன மேகுமி

வேறு

என்றுரைத்தா னருள்நாதன் இமயவல்லி தன்னொடரன்
சென்றனன்முன் சங்கமரில் திலதமென மாதினொடும்
அன்றுதிரு வரசின்மே லிருந்தருளு மாழ்வாரும்
இன்றிவர்கள் தனங்கொளலா மெனவிறங்கி னரறிய. (97)

திருமங்கை யாழ்வாருந் திருவரசை விட்டிறங்கி
இருமருங்கும் பதிகிடந்த சேவகரு மெழுந்திருந்து
பொருகங்கைச் சடையரனைப் போகலைநீ யெனமறித்தார்
வருமங்கை யதில்வெருவி மறைந்தனளாங் கரனிடத்தில். (98)

அப்போதவ் வுருத்திரனும் ஏகவுரு வாயமைய
இப்போதுன் னுடன்வந்த ஏந்திழையெங் கேயதனைச்
செப்பாயென் றவர்மறுக்கத் திங்களொருக் கரவணிந்தாற்
கெப்போது நடம்புரிவான் யாங்காணே னெனநின்றான். (99)

வேறு

ஆய காலையில் நான்முக னுங்கமர்
தூய வாணிதன் னேடவண் துன்னினன்
ஏய பல்கலன் கண்டதி லேகினர்
பேயொ டாடி பெயர்ந்தன னக்கணம். (100)

சென்று மங்கையர் கோனருட் சேவகர்
அன்று நான்முகன் றன்னைய டர்த்தடா
இன்றுன் பல்கலன் இட்டுடுத் திட்டதில்
ஒன்றும் வைக்கலை போடென் றுறுக்கினர். (101)

அன்னை வாணியு மஞ்சியெ னையன்மீர்
என்னை நீர்வருத் தேன்மினென் மேனியிற்
பொன்னை யாடையைப் போடவிப் போதிலென்
மன்னை யும்விடு வீரென வாழ்த்தினள். (102)

ஆன வாசக மன்னமி யம்பவும்
நான்மு கற்கொரு கோவண நல்கியும்

மான மாரருள் வாணிக்கு மாக்கலைத்
தான நல்கித் தனங்களை வவ்வினுர். (103)

முண்ட கத்தயன் போயபின் முத்தரும்
அண்ட ரும்புகுந் தாரருள் வாருதி
தொண்டர் மற்றவர் தொல்பொருள் மற்றவும்
கொண்டு சேவகர் கையிற்கொ டுத்துநீர். (104)

ஏகு மின்பதிக் கென்னவ னுப்பினுர்
பாக சாதன ஞதிய பத்தர்கள்
மாக மீதில் மனறந்தன ரக்கணே
தோகை பாகரும் வணிகருந் துன்னினுர். (105)

வேறு

அன்னவர் தம்மையு மன்பர்ப றித்துத்
தன்வயி னின்றவர் தம்மில ளித்தே
நன்னக ரின்க ணடப்பவ னுப்பி
இன்னமு மிந்நெறி யேகுந ருண்டேல். (106)

கண்டுப றித்தவர் கைப்பொருள் நாமே
கொண்டகல் வோமென அன்பர்கு றித்துப்
பண்டுறை கின்ற வகன்பணை நண்ணப்
புண்டரி கத்திரு வோடரி புக்கான். (107)

வேறு

திருத்திகழ் மார்ப னன்று திருமக ளோடு மெய்த
ஒருத்தரா யரசின் மேலே யுறைபவ ரதனைக் கண்டு
கருத்தினில் வியந்து தாமும் கதுமென விறங்கி வேதக்
குருத்தினை மறித்துக் கொண்டு கொக்கரித் தாட லுற்ருர்(108)

ஆடினு ராலி நாடர் அங்கையும் கொட்டிக் கொட்டி
ஓடினுர் வட்ட மிட்டார் உகந்ததை நோக்கி நின்ருர்
தேடிநான் மறையுங் காணுத் தேவனுந் தேவி தானும்
வாடினுர் போல நின்று மற்றவர்க் குரைப்ப தானுர். (109)

வேட்டகந் தன்னி னின்று வேதியர் விரும்பு மாலி
நாட்டக நண்ண வென்றே நண்ணினே மெம்மை நீயிக்
காட்டகத் தொருவ ரில்லாக் காலத்தின் மறித்துக் கொண்டிங்
கூட்டகம் புகுந்த வன்போற் றுள்ளலென் உரைப்பாய் என்ருர்.

எமைமறித் தாட லென்னீ யியம்புதி யென்னக் கேட்க
அமையுளத் தாலி நாடர் அருள்வரந் தணரே கேளும்
உமையிவ ளோடுங் கண்ட போதிலெம் முள்ளந் துள்ளி
நமையுநா மறந்தோம் அந்த முறைமையை நவிலக் கேளீர்(111)

வேறு

என்னுவி யெனத்தோன்றுங் குமுதவல்லி யென்மனைவி
உன்னுவி யென்னுமிவள் தானுமவ ளுருவொவ்வாள்
பன்னும் நூற்றெட்டுப் பாவதர்க் கூட்டியல்லால்
தன்னுக மெனைத்தீண்ட வொட்டாளத் தார்குழலாள். (112)

பொன்னுளதும் பணமுளதும் பூவுடனெப் பொருளுமென்னில்
முன்னுளதும் தொலைந்ததற்பின் வழிப்பறியின் மிகமூண்டேன்
மன்னுலகில் யானடித்துப் பறியாத வழியுமிலை
இந்நெறியில் நீரணிந்து புகுந்தவிருந் தனங்கண்டால். (113)

வேறு

ஆடேனோநான் இவைவிடு வேனோ வையையா
பாடேனோநா னுமைவிடு வேனோ பலவட்டத்
தோடேனோநா னென்றுரை செய்தான் மறையோனும்
மாடே நின்ற மங்கையை நோக்கி மயிலன்னாய். (114)

வேறு

பெண்டாசை தவிராமற் பெருவழியிற் போயிருந்து
கண்டாரை வழிபறிக்குங் கள்வனோ வத்தனங்கொண்(டு)
உண்டாறி யுள்ளான் உரையாயென் றிவையுரைப்ப
வண்டார்பூங் குழலினாள் மணவாள னோடுரைப்பாள். (115)

ஏதாயெ னன்னை எனக்கிட்ட தத்தனையும்
போதாவென் றெந்தை பூட்டியபொற் கலன்முழுதும்
மூதாதை யிட்டபணி முற்றுமிவர் கொள்வரென்றே
நாதாவென் மனமறுகும் நானறியே னோர்மாற்றம். (116)

வேறு

என்ற காலையி லீசனை யோங்கினான்
வென்றி வேற்பர காலனோர் வேலினால்
இன்று கொன்றதில் என்பய னென்றனை
நன்று நல்குவ னானென வோதினான். (117)

வேலை வைத்தென்ன மண்மிசை வேதமும்
ஓல மிட்டறி யாவொரு மூர்த்தியைக்
கோல மிட்டடிப் போமெனக் கூட்டினான்
நால முண்டவ ராடையை நல்கினார். (118)

வேறு

அந்தண ராடை போட்ட வளவினில் அருகுநின்ற
பந்தணி விரலி யாடை பறிக்கிலேம் பார்ப்பாய் நீயே
தந்தனை யமையும் விட்டோந் தையலுக் காடை மற்ற
இந்தவா ணுதலி யிட்ட தனங்கழித் தீயா வென்றார். (119)

நல்லதென் றிறைவன் சென்று நான்மறைக் கொழுந் தேயன்ன
மெல்லிய லணிந்து நின்ற மிகுந்தபொற் கலன்கள் முற்றும்
எல்லேயிற் கழற்றக் கண்ட மங்கையர் கோனு மோங்கும்
மல்லியற் றேளாய் வாங்கேல் மாங்கலி யத்தை யென்றான்(120)

பூமகள் மேனி தன்னிற் பூட்டிய தனங்கள் முற்றும்
தேமலர்க் கையால் வாங்கிச் சீரையிற் றேவன் நல்கத்
தாமரைக் கண்ண நீயும் சாத்திய கலன்கள் முற்றும்
நாமுனைத் தீண்ட வேண்டா நல்குதி விரைவி னென்றான். (121)

அப்படிச் செய்வே னென்ன அங்கையா ராழி யன்றித்
தப்பறக் கழித்தன் றீந்தான் கோவணந் தரித்து நின்றான்
எப்படிக் கழிப்பே னிந்த யங்குலி யிறுகிற் றென்றான்
இப்படிக் கழிப்பே னென்ன எட்டியங் கையைப் பற்றி. (122)

ஆழி பூண் டிலங்கு நீதி யங்குலி தன்னை நீக்கி
ஏழிசை பாடும் வாயால் எடுத்துர மெடுத்துப் பல்லாற்
பாழியந் தோளால் வாங்கப் பரமனங் கலிய னேவென்(று)
ஊழிவா னவரும் போற்ற ஒருகையைத் தலைமேல் வைத்தான்.

திருக்கரம் வைத்த போதும் தேவரென் றறியார் தொண்டர்
பொருக்கென நெறியை விட்டுப் போவதே கரும மென்ன
இருக்கர னயனுங்காணு இறைவனார் துகிலிற் கூட்டிப்
பெருக்குபல் கலனுங் கட்டி எடுத்தனர் பெலத்தி னேடும்.(124)

சுந்தரத் தோளினரத் துகிலிடைத் தனத்தை யேந்த
அந்தரத் தெழுந்தி டாமை கண்டரு ளாலி நாடர்
மந்திர வாதம் பண்ணி வைத்தனை கொல்லோ என்றார்
இந்திரன் பகையை மாய்த்தான் யானது செய்தே னென்றான்.

நன்றதை யெனக்கு மிப்போ நல்குதி நல்கா யாகில்
வென்றிசேர் வாளா லுன்னை வெட்டுவ னென்று நீங்கி
ஒன்றிய தடக்கை வாளை யுருவின னேங்கக் கண்டு
மன்றல்சேர் துளவத் தாரான் வாளைவை யுரைப்பேனென்றான்.

உரையென வாளை முன்போல் உறையிடைப் பொருந்தப்பூட்டித்
தரைமிசை வைத்துச் சென்றான் தாமரைக் கையா லீசன்
நிரைகொள்வா னவருங் காண நின்றவன் செவியைப் பற்றிப்
புரையற வெழுத்தோ ரெட்டும் உரைத்தனன் பூத நாதன்(127)

வேறு

அன்று தானர னரண னுகிமெய்
குன்றி டாதவன் கூறியி ருந்ததோர்
ஒன்றும் வேதனை தீரவு ரைத்தனன்
வென்றி வேற்பர காலற்கு விண்டுவே. (128)

வேறு

பின்ன மற்றமுப் பதமதாய்ப் பிரமஞ லரனல்
உன்னு நற்பொரு ளனைத்துமாய் யுயர்பர மருள்வாய்
மன்னுமெட் டக்கர மாந்திரு மந்திரம் வாக்கால்
அன்ன மூர்தியார் தாதையார் தொண்டருக் களித்தார். (129)

மின்னை யொத்தபொய் வாழ்வினை விரும்பிநின் றுலகில்
அன்னை யத்தனென் றலமரு மல்லலை யறுக்கும்
முன்னை நான்மறை முடிவினி லுறைமுதற் பொருளாம்
தன்னை யுள்ளவா சாற்றினன் தரணியுண் டுமிழ்ந்தான். (130)

வேறு

இந்திரன் போற்ற இமையவர் போற்ற
இலங்குசீர் நான்முகன் போற்றச்
சந்திரன் போற்ற ஆதவன் போற்றச்
சங்கரன் மாதொடும் போற்ற
அந்தரத் தொளிரு நித்தரும் இறைவன்
அருள்பெறு முத்தரும் போற்ற
மந்திர மாழ்வார் திருச்செவி யுறலும்
வையகத் தியற்கையை மறந்தார். (131)

வானிடைக் கருடன் தோள்மிசைத் தோன்றி
வளரொளி யாழி சங்கேந்தி
மோனரு முத்தர் நித்தரும் வணங்க
முளரியு ளயனரன் வணங்கத்
தேனமர் துளவத் தாரின னின்ற
சீர்பெறப் படிமிசைப் பணிந்தார்
தானெழுந் தவரை நோக்கினர் விசும்பி
னிடைத்தமர் தொழுதிடக் கண்டார். (132)

வேறு

கண்டனர் விழிக ளாரக் கனகமா மேரு மீதிற் [தோள்மேல்
கொண்டல்வீற் றிருந்தா லென்னக் கொழுஞ்சுடர்க் கருடன்-
அண்டமுண் டுமிழ்ந்த சோதி யழகினைத் திருவி னேடுந்
தண்டுழாய் மாலை யானே சரணெனப் பின்னும் வீழ்ந்தார் (133)

மண்ணுறப் பணிவர் வாயால் வாழ்த்துவர் அழுவர் சோர்வர்
விண்ணுறப் பார்ப்பர் நீதி மெய்யருட் கடலைத் தாம்தம்
கண்ணுற முகப்ப ராடிக் களிப்பர்கைக் கொட்டி யார்ப்பர்
எண்ணுவர் செய்த தன்மை யிருப்பர்பின் எழுவர் சொல்வார்.

நாயினேற் காக மண்ணில் நளினமார் மங்கை யோடுந்
தூயநின் பத்த ரோடும் தொன்னெறி யடைந்து நின்ற

மாயனே நினையெண் ணுதே வழிபறி பரித்தேன் அந்தோ
வேயமர் தோளி யிட்ட கலனையும் வேண்டி னேனே. (135)

முடித்திரள் வானோர் போற்றும் முளரியங் கண்ணு வுன்னை
அடிப்பதற் கொருப்பட் டேனே அடியனே னந்தோ வென்னும்
துடிக்கெதி ரிடையா ளஞ்சத் துகளறு மாழி தன்னைக்
கடித்துற வூத்தை வாயால் வாங்கினேன் கண்ணு வென்னும்(136

மட்டுவார் துழாயி னுனே மதியிலே னுனையும் வாளால்
வெட்டுவா னெருப்பட் டேனே வினையுறு புலைய னேனும்
தொட்டுவான் தடக்கை பற்றித் துலங்குசீ ராழிகொ ண்டேன்
முட்டுவன் சிரத்தைக் கல்லின் முடிப்பனென் னுயிரை யென்னும்

என்றுபற் பலவுஞ் சொல்லி யிரங்கிநின் றழுது வாடும்
வென்றிவேற் பரகா லற்கு விமலனு ருரைப்பா ராழ்வீர்
ஒன்றுநீ ரிரங்கல் வேண்டா முமைவிளை யாட்டுக் கொண்டீங்
கின்றுநான் பெற்ற வின்பம் யாவரே பெறுவார் மண்ணில்(138)

சீருறு புதல்வ ரற்றூர் செய்தவஞ் செய்து பெற்றூல்
ஓர்பெரு மதலை சொல்லும் இன்சொலுக் கின்பு றூதே
யாரதை யிகழ்வா ராழ்வீர் அத்திற மன்றே வின்று
நீரெதிர் செய்த தெல்லாம் என்றுபின் நிமலன் கூறும். (139)

பூமாது காண வாழி பூட்டுமென் விரலை நீரும்
ஆமாறு வாயி லிட்டாங் கதுக்கினீ ரதனை மோந்தேம்
பாமாலை மணத்த தின்று பாருமெம் புகழைப் பாடித்
தேமாலை மார்ப ரேநந் திருவரங் கத்தை மன்னி. (140)

எனையுமக் குறவாய்க் கூட்டு மேந்திழை குமுத வல்லி
தனையுமெப் போதும் போலத் தாரமா யுவந்து கொண்டு
கனைகடல் சூழ்ந்த மண்ணில் கண்டவர் தனங்கள் வவ்வி
நினைவிலென் பணிகள் செய்து நிமலவீ டடைவீ ரென்றூர்.(141)

இன்றுமை யுடனே கொண்டெ னின்பவீ டடைவே னும்மால்
பொன்திகழ் புவியோ ருய்யும் பொருட்டினுற் புவியிற் போந்தீர்
நன்றிசேர் பாட்டி னுலிந் நானில முய்யும் ஆழ்வீர்
ஒன்றுநீர் சலிக்க வேண்டா மேகுமென் றுரைத்துப் போனூர்.

வேறு

உருத்திரனு நான்முகனும் உம்பர்களும் அடிவருட
அருத்திசெய்து திருவருளுந் தனதருளும் ஆழ்வார்சீர்க்
கருத்தினுறப் பதிவித்துக் கருடன்மிசை நித்தர்தொழத்
திருத்திகழ்பூந் திருமார்பன் சீவைகுண் டஞ்சென்றூன். (143)

### வேறு

விண்ணில் தோன்றி யருள்செய்து விமல னேக அவருருவை
நண்ணி யெங்கே காண்பேனென் றிருந்து வருந்தியெழுந்தவணம்
மண்ணில் நூற்ரூெட்டென்றே வகுத்த பதிகள் வளமோங்க
நண்ணி யுறையுந் திருக்கோலங் கண்டு தீர்வே ஞனென்ன(144)

### வேறு

மன்றல்கமழ் பசுந்துளப மாமாலைப் பதிகடொறும்
சென்றிறைஞ்சிப் பரகாலர் திருவருள்பெற் றநுபவத்தில்
ஒன்றியசீ ரானந்தச் சுகோததியுள் ளடங்காமல்
குன்ருநற் பாமாலை கூறுதற்கே யொருப் பட்டார். (145)

### வேறு

சீரார்பெரிய திருமொழியும்
திருத்தாண் டகங்க ளோரிரண்டும்
ஏரார் எழுகூற் றிருக்கைதிரு
மடலோ ரிரண்டு மின்னிசையால்
பாரோ ரேத்து மாறங்கம்
பாடிப் பாடிப் பரகாலர்
நாரா யணன்மெய்ப் புகழ்விளக்கி
ஞால முழுதும் வாழ்வித்தார். (146)

### வேறு

பேசரிய பிரபந்த மிருமூன்றும் பிறப்பித்து
மாசில்லாக் குமுதவல்லி தன்னுடன்மா மாயன்வளர்
தேசுபொலி திருவரங்கம் சென்றடைந்தார் அதிலிருந்தாங்
கீசனுக்குக் கயிங்கரியம் இயற்றுதற்கே யொருப்பட்டு. (147)

சீராருந் திருவரங்க நகருறையுந் திருத்தொண்டர்
ஏராருந் திருமங்கை யாழ்வாரை யெதிர்கொண்டு
பாராரப் பணிந்தனரப் பாகவதர் பதங்களினும்
ஆராத காதலொடு மாழ்வாரு முறப்பணிந்தார்: (148)

படியுற்ற வைகுந்த மெனமறைகள் பகர்பதியின்
முடிவற்ற சுகோததியின் முழுகியெழு மன்பரொடுங்
கொடிபெற்ற மணிமாடக் கோபுரத்தைக் கண்ணுற்றும்
அடியற்ற மரம்போல விழுந்திறைஞ்சி யகங்குழைந்தார்: (149)

மாகனகச் செழுஞ்சோதி மணிமாடந் தனில்விசும்பின்
மேகநக மெனச்செறியும் வீதிபல கடந்தசுரன்
ஆகநகத் தாலிடந்த வம்மானை அரவணைமேற்
கோகனகச் செழுந்திருவோ டுறக்கண்டார் கும்பிட்டார். (150)

( இடையிலுள்ள பாட்டுக்கள் கிடைக்கவில்லை )

பணியணைமேல் வீற்றிருந்து பட்டர்பிரான் தமிழ்க்குருகும்
மணிவண்ணர் கழல்வணங்கி மன்னவனும் பின்தொடரக்
கணிகண்ணன் பின்போனுன் கண்டுயிலும் புத்தூரை
நனியிறைஞ்சி வலஞ்செய்து நான்மறைக்கு மொருவித்தாம்162

திருமாலை யுறவணங்கிப் பெரியாழ்வார் திருவடியை
அருகாத பேரன்பா லகங்குழைந்து பணிந்தேத்தி
மருவார்பூம் பொழிற்பொருனை வடகரைத்தண் வைகுந்தப்
பெருமானெம் மிடர்கடியும் பிரானுரைத் தொழுதேத்தி (163)

கலைபயிலுங் கலிகன்றி காசினிவேந் தைத்தொழுது
தொலைவிலிமங் கலந்தொழுது சொற்குளந்தை நகர்தொழுது
சிலையெடுத்த பிரானிருந்த திருப்பேரை நகர்தொழுது
புலையனேன் உயிர்காத்தான் திருக்கோளூர் புக்கிறைஞ்சி (164)

வேறு

குன்றம் போலும் மணிமாடம் நீடு குருகூர்க் கொம்புக்கு
நின்ற வாதிப் பிரான்றன்னை நெஞ்சால் வாக்கால் காயத்தால்
அன்று நினைத்துத் துதித்திறைஞ்சி அன்பால் வான மாமலையை
இன்று வணங்க வேண்டுமென எழுந்து சென்றூர் கலிகன்றி(165

வேறு

ஊனமாம் பிறவி யுததியிற் கிடந்திங்
குலைந்தல மந்தற மெலிந்தேன்
வானமா மலைகண் டேறினேன் வீடு
மற்றெமக் கணித்தெனப் பழுதே
போனகா லங்கட் கிரங்கியே கலியன்
ஆங்கவர் பூங்கழ லிறைஞ்சித்
தேனவாம் பொழில்சூழ் திருக்குறுங் குடிமேற்
சிந்தையை விழியொடு செலுத்தி. (166)

ஏறிய சிவிகை விட்டிழிந் தருளி
இருபதம் வருந்திட விரைவாம்
ஆறுசெல் பொழுதில் அழகிய நம்பி
ஆங்குறை பவர்க்கதை யறைய
மாறிலா வனைத்துக் கொத்தும் வந்தெதிர்கொண்
டேத்திட மற்றவ ருடனே

சேறுசெய் குளனூர் கழனிகள் புடைசூழ்
திருக்குறுங் குடியினுட் செறிந்தார். (167)

திருக்குறுங் குடியிற் செறிந்தமெய்ஞ் ஞானச்
செழுந்தவ ரெழுந்தடி வணங்க
இருக்கொலி முழங்க நகர்வலஞ் செய்தாங்
கிமையவர் முறைமுறை யிறைஞ்ச
விருப்புடன் திருப்பாற் கடற்புனற் படிந்து
மெய்யுறும் பன்னிரு நாமம்
கருத்துற வணிந்து திருமணி மஞ்சட்
காப்புடன் கொப்புற வணிந்தே. (168)

எண்ணருந் துயத்தை வாக்கினிற் றரித்தாங்
கிதயதா மரைமலர் மிசையில்
கண்ணனைத் திருமா மகளொடு மிருத்திக்
கருணையா நந்தநீர் சொரிய
மண்ணவ ரிறைஞ்ச நடந்தவா தொடர்ந்து
வானவ ருலகினு முயரும்
விண்ணள வோங்கி விளங்குகோ புரத்தைக்
குறுகினர் விரிஞ்சனுந் துதிப்ப. (169)

திரண்டவா னவரும் முனிவருந் துதிப்பத்
திகழொளிக் கோபுரங் கடந்திங்
கிரண்டுதோ ளகற்றி நான்குதோ ளிளிக்கும்
இறைதிருக் கோயிலின் வடபால்
கரண்டமா டியசீர்ப் பொய்கையின் புடைசூழ்
கரும்பனைப் பெரும்பழ முலைந்து
புரண்டுவீழ் வதுவும் வாளைபாய் வதுவும்
நோக்கினர் புராணர்கள் பெருமான். (170)

அத்திறங் கண்டு திருவுள முவந்த
ஆலிநா டுடையவா ரமுதம்
இத்திருப் பதிநேர் திருப்பதி யுண்டோ
இருநிலத் தென் றுநின் றியம்பிப்
பத்தருந் துதிப்ப வலஞ்செய்தாங் கிருந்து
பக்கநின் றவர்திறம் நோக்கிச்
சித்தர்மா முனிவர் இறைஞ்சிடக் கிடந்த
செங்கணு யகர்முனம் செறிந்தார். (171)

சென்றவர் கிடந்த நம்பியை வணங்கித்
திருமகள் பூமியோ டிலங்கும்
குன்றென விருந்த நம்பியைப் பணிந்து
கோதிலா வேதங்கள் புகழ
நின்றநம் பியையுஞ் சென்றபடி பணிந்தார்
நிலவுசித் திரமென நின்ருங்
கின்றெனக் குரைத்த இன்பவீ டருள்வாய்
எந்தையென் றிணையடி பிடித்தார். (172)

ஆங்கவர் தம்மை யன்பொடு நோக்கி
அழகிய நம்பியன் றருளும்
ஓங்குநம் மேலை வீடுனக் களித்தோம்
ஏகுதி யென்றுவந் தருளிப்
பாங்குடன் சிரத்திற் றிருவடி யிரண்டும்
பதித்தனன் பத்தரப் பொழுதே
தேங்குநீர் விரசைத் திருநதிப் புனலில்
செறிந்துற வாடியக் கரைமேல். (173)

துய்யமாப் பளிங்கு நிறத்தமா னவனுர்
சுடர்விடு சோதியீ ரிரண்டாங்
கைகளாற் றீண்டிப் பரிசனஞ் செய்யக்
கடுப்பினி லொளிகொண்ட சோதி
மெய்யெடுத் தேகி முத்தியை யடைந்து
விளங்குசீ ராலிநா டுடையான்
செய்யவள் கொழுநன் அடியரோ டிருந்த
மாமணி மண்டபஞ் செறிந்தான். (174)

**திருமங்கை யாழ்வார் பிரபாவம் முற்றும்.**

# திருமழிசையாழ்வார் பிரபாவம்

**கொச்சகக் கலிப்பா**

குறையலூர்ப் பரகாலர் கோதில்பெரும் புகழ்விரிவை
இறைவெளியிட் டடியேன்பால் இருந்தறைந்த படியியம்பி
மறையாய்ந்த திருமழிசைப் பிரானுர்மாப் புகழுமந்த
முறையாலே புகல்வனல்லோர் முனியாதே கொளல்வேண்டும்.()

அப்படியே சிலநாட்கள் அற்றதற்பின் ஆங்கொருநாள்
செப்பரிய பார்க்கவனே முதலாகு வினைமுனிவர்
இப்படியிற் றிருமகள்கோன் இன்பமுறக் கமலையொடும்
எப்பொழுதும் பிரியாமல் இனிதமரும் இடம்பலவும். (2)

உண்டெனினு மோரிடத்தில் உற்றிருப்பன் அத்தலத்தைக்
கண்டறிவோ மெனினமக்குக் காண்பரிதா மதுகாட்டும்
புண்டரிகத் தயன்; சென்றப் புனிதனைநாம் புகழ்ந்திறைஞ்சித்
தொண்டுசெய்து கேட்பதுவே கருமமெனத் துணிவினெடும்.(3)

சென்ருர்கள் அயனருகில் செறிந்தார்கள் விழுந்திறைஞ்சி
நின்ருர்கள் நான்முகனும் நீணிலத்தி லெப்பொழுதும்
குன்ருத ஞானத்தின் கொழுந்தாய செழுந்தவரே
என்ருசி பலகூறி யிருமினென விருந்ததற்பின். (4)

**வேறு**

பற்பல வுரையுங் கூறிப் பங்கயப் போதி னுனும்
அற்புத முனிவோர் தாமும் அன்புசெய் திருந்த வேலை
முற்பக லுலக மெல்லாம் முதற்படைத் தருளு மாதிச்
சிற்பரா எங்கட் கொன்று செப்பிட வேண்டு மென்ருர். (5)

ஆங்கவன் ஏது சொன்மின் என்றனன் அலருள் வேதன்
ஓங்கிய தவத்தின் மிக்க உத்தம முனிவர் சொல்வார்
தாங்கிய வுலக மெல்லாம் தன்னுளே யிருத்திக் காத்துப்
பூங்கம லத்தி லுன்னைப் புறப்பட விட்ட மாயன். (6)

விண்மிசை யிருப்ப தன்றி வேதியர் துதிசெய் தேத்த
மண்மிசை விரும்பி நாளும் மன்னிய விடங்கள் தம்மில்
பண்ணமர் மறைகள் வல்லாய் பதுமையோ டுகந்தெப் போதும்
நண்ணுமோ ரிடமுண் டென்றே நான்மறை நவிலக் கேட்டோம்

அத்தல மேது காட்டி யருளுதி யென்று போற்ற
உத்தமப் பிரம னந்த முனிவரை யுவந்து நோக்கிச்
சித்தம தொருக்கிக் கேண்மின் திருமழி சைக்கு நேராய்
ஒத்தநற் றலமொன் றில்லை அதிலுவந் துறைவ னும்பன். (8)

என்றனன் பிரமன் கேட்ட முனிவர்க ளிசைப்ப ரெந்தாய்
நன்றதன் மேன்மை காட்டி யருளுதி நங்கட் கென்றூர்
ஒன்றிய மலருள் வைகு மும்பனும் புவிமே லின்றே
சென்றறிந் திடுவோ மென்னச் செறிதவ முனிவ ரோடும். (9)

விண்மிசை நின்று போந்து வினையெலாம் விளக்கும் வஞ்ச
மண்மிசை யிறங்கிச் சீராம் மழிசையம் பதியை மன்னிக்
கண்ணகன் உலகைத் தூக்குந் தராசொன்று கடுப்பிற் பண்ணி
எண்ணரு முனிவர் காண இசைத்தவத் தராசு தன்னில். (10)

கூறிய வுலகை யெல்லாங் குறித்தொரு தட்டில் வைத்து
மாறிய தட்டின் மற்றும் மழிசையை வைத்துத் தூக்க
ஏறிய மழிசைத் தட்டாங் கெட்டுணை யெழாத வாறும்
வேறுசெய் துலகம் வைத்த தட்டுவான் மேவு மாறும். (11)

கண்டனர் முனிவர் விண்ணோர் காசினி யோர்கள் செய்ய
புண்டரீ கத்துள் வைகும் புனிதனை யிறைஞ்சி வாழ்த்தி
உண்டதில் தெய்வ மென்ன ஒடுங்கிமா தவங்கள் பண்ணி
எண்டரு தினமும் வாழ்ந்தாங் கிருந்தன ரிருந்து ளாரின். (12)

பார்க்கவ முனிவன் செய்ய பவளவாய்க் கமலச் செங்கண்
கார்க்கடல் வண்ண னுரைக் கருதியோர் யாகம் பண்ண
வார்ப்பொலி கொங்கைச் செங்கண் மலர்மக ளோடும் வானோர்
ஆர்ப்பொடுந் தோன்றி யம்மால் அவனுட னருளிச் செய்வான்.

மாசறு தவத்தி னுனே மற்றுநீ யின்று செய்த
ஆசறு யாகந் தன்னல் அளவரு மின்ப முற்றேம்
பேசுநீ வேண்டு மின்பம் பெறுதிநாம் ஈவோ மென்றே
ஈசனு ரருளிச் செய்ய இருடிநின் றிறைஞ்சிக் கூறும். (14)

அருமறை முதல்வ நான்செய் மகத்தினு ளன்பு கூர்ந்துன்
திருவுள மகிழ்ந்த தென்றூய் சிறியனேற் கதன்மேல் வேறோர்
கருதிடும் பொருளு முண்டோ கண்ணனே நீயின் றென்பால்
தருவது மடியேன் கொள்ளும் பொருளுமற் றவையே சாற்றில்.

என்றனன் இருடி மாயன் யாகத்தில் உவப்பன் பார்ப்பான்
என்றுரைத் திட்ட சொல்லில் அளவரு மன்பு கூர்ந்திட்(டு)
இன்றுன தருள லாதே யாவையும் வேண்டே னென்றூய்
நன்றுநின் நினைவா னுலும் நானிவண் நின்று தோன்றி. (16)

எப்பொரு ளெனினு மொன்றை ஈந்துபின் ஏகே னுகில்
அப்பவென் னருள்மா சுண்ணும் ஆதலால் என்பா லொன்றைத்
தப்பற வுரைத்தி யீவேன் என்றிறை சாற்றப் பார்ப்பான்
ஒப்பிலா மணியே கேட்டி யெனத்தொழு துரைக்கலுற்றுன்(17)

விண்ணவர் பதங்கள் பொன்றும் விடையவன் பதங்கள் பொன்
மண்ணவர் பதமும் பொன்றும் மலரயன் பதமே மொன்றும் [றும்
கண்ணமற் றதனு லொன்றுங் கைக்கொளேன் காயா வன்ன
வண்ணவென் சிந்தை யுள்ளே மலர்மகள் பூமி நீளை. (18)

அடிதொழு திறைஞ்சி யேத்த அல்லுநன் பகலு மாற்றி
முடிவிடை யிவைக ளில்லா முழுமுதற் சோதி நீயே
குடிபுகுந் தென்றும் நீங்கா திருத்தல்நான் கொள்வ தென்னப்
படிமுத லுலக முண்ட பரம்பரன் பகர லுற்ருன், (19)

அப்படிச் சிந்தை யுள்ளே யிருப்பனுன் அன்ப நின்பால்
ஒப்பிலாப் புதல்வ னிவ்வா ஞெருவனே யுவப்பி னேடும்
இப்படி தன்னில் நல்கி யிடுகின்றே னிருத்தி யென்னச்
செப்பிடுந் திருவின் கோமான் சென்றுவை குண்டஞ் சேர்ந்தான்

வேறு

இறையிவண மகன்றதற்பின் இருநிலத்திற் பார்க்கவன்பால்
மறைபுகலுந் தைம்மகத்தில் வானவர்கள் துதிசெய்யப்
பிறையணியுஞ் சடையானும் பிரமனுங்கண் டுளமகிழத் [தார் ()
திறைகொணர்ந்து முனிவர் தொழத் திருமழிசைப் பிரான் பிறந்

வேறு

அந்தமில் குணத்தான் பிறந்ததற் பின்பு
பார்க்கவ னவன்முக நோக்கி
இந்தமா நிலத்திற் புத்திர ருடையார்க்
கிறையருள் தூரமென் றெண்ணிச்
சிந்தையில் வெறுத்தப் புதல்வனேக் கொடுபோய்த்
திருமகள் நாயகன் துணையாய்
விந்திய மணைந்தோர் பிரம்படிக் கீழே
விரித்தொரு சிறுதுணி மேலே (22)

இட்டுமீண் டேகித் தன்பதி யடைந்தாங்
கிருந்தன னெழில்மலர் மிசையாள்
உட்டெளி வுடையார்க் குணவளித் திடச்சென்
றுகந்துதன் திருமுலைப் பாலைக்
கட்டுற வூட்டுந் தேனிரு லாக்கி
பிரப்பிலைக் கவட்டில் வைத் தருந்தும்
மட்டுமட் டாக வாய்க்கொளும் படிச்செய்
தேகினுள் வானவர் துதிப்ப. (23)

வேறு

அங்கவ ரமரு நகரி லென் றுந். . . . . . . . . . . . . . . .
தங்கிய மேதை யாரில் சாற்றிய திருவ ளாகும்

பங்கய வல்லி யார்க்கும் படியிலோர் பால னின்றித்
தங்களி லழுது சோர்வார் தத்துவ னருளி னாலே. (24)

அருந்துநல் லுணவுக் காக அடுத்தன தொழில்கள் செய்வார்
வருந்திநற் பிரப்பங் கூடை மாசற முடைந்து விற்பார்
பொருந்தினர் பிரப்பங் காட்டில் பொருவிலா நிலையா ராங்கே
திருந்துமச் சேயைக் கண்டெஞ் செய்தவப் பயனே வென்றார்.()

துதிசெய்தெவ் வுலகும் போற்றுந் துகளறு நிலையி னாரைப்
பதியினிற் கொணர்ந்தா ரன்னை பங்கய வல்லி யாரும்
விதிமுறை சுரந்து நல்கும் மெய்ம்முலைப் பாலு மூட்டி
மதிசெய்ய விரவி யென்ன வளர்த்தனர் மாசிலா தார். (26)

வேறு

அந்த மிலாத பெருங்கருணை யமுத வாரி யண்டர்தொழ
வந்து புவியில் வசுதேவர் மகனாய்ப் பிறந்து மாயத்தால்
நந்த கோபன் திருமகனாய் ஞால மறிய வளர்ந்ததுபோல்
தந்தை தாய ரிவராகத் தன்னை யனையான் சகமனைத்தும் (27)

வணங்க மழிசை வளம்பதியில் வந்து தோன்றி மேதையரில்
நுணங்கு கேள்வி யுடையவர்முன் நோற்ற நோன்பின் பொருட்
[டிலவர்
கணங்கொ டிறைஞ்ச வளர்ந்தருளிக் கவிந்த வினைகள் ஓரிரண்டும்
குணங்கள் மூன்றுங் கரணங்கள் நான்கும் கோடும் புலனைந்தும்

ஒடுக்கிப் பிரம ரந்திரத்தில் உயிரை நிறுத்தி யோகத்தைக்
கொடுக்கு மொற்றை யெழுத்தாலே கூறும் வாசல் ஒன்பதையும்
மடுத்த கபாடந் தாட்பூட்டி மாணப் பிராணன் அசைவறுத்திட்
டொடுக்கு மிறைசீ ரருணோக்கி இருந்தா ராண்டோ ரெழுநூறும்

வேறு

அப்படி யிருந்து கண்ட அட்டாங்க யோகந் தன்னிற்
செப்பரு நவயோ கத்திற் சீருறு மிறைக்கும் வஞ்சந்
தப்பறு முயிர்க்கு முள்ள சம்பந்தஞ் சதிராக் காணுக்
கொப்பிலா முன்னான் காய சமயத்துக் குளரா யோங்கும் (30)

கடவுளர் மேன்மை கண்டக் கருத்தறிந் திடுவோ மென்னத்
திடமுட னவர வர்க்காச் செப்புபன் னூலு மோதி
உடலுயிர் பரத்தைச் சொல்லி உபாயஞ்சொல் லாமை கண்டு
படவர வணையார் தொண்டர் பார்மிசைப் பதைக்கு நாளில் ()

துவரிதழ்ப் பவளச் செவ்வாய்த் துடியிடைக் கமலை கேள்வன்
அவரவ ரிதயந் தோறு மந்தரி யாமி யாகக்
கவர்வற நின்று வீணே கழிப்பவர்க் கழுவ னென்றால்
இவர்க்கினி விரும்பிக் காணு விடுவனோ விடுப்ப தல்லால் (32)

இரும்புண்ட வுதக மென்ன வியம்பரு முத்தி யெய்த
விரும்பிய மழிசைக் கோமான் மிகப்பதைத் திரங்கல் கண்டு
சுரும்பமர் துளபத் தாரான் துகளறு மன்பர் தம்பால்
பெருந்திரு வோடு மெய்திப் பேரருட் கருணை செய்தான். (33)

வேறு

கானத் தெரிந்த நிலாவென்னக் காண்பா ரன்றிக் கழியாமல்
கூனற் சங்கைக் கைக்கொண்டார் கோதி லின்பங் கொளவேண்டி
ஞானக் கண்ணைக் கொடுத்தருளி நலனு ரந்தா மத்தனியைத் [கு
தானத் தோடும் வெளியிட்டுக் கொடுத்தார் மழிசைத் தலைவருக்

வேறு

ஆங்கதனுட் பரஞ்சோதி யச்சுதனுர் அருள்வடிவைப்
பாங்கிலனு பவித்துளத்தில் பதிந்தநித்தர் முத்தர்களை
ஓங்குமருட் கலியாண குணங்கடமை யொழிவின்றித்
தாங்கியவைம் படையெழிலைச் சாத்துமணி கலப்பொலிவை. ()

இருநிலத்தி னிற்கவிழ்த்த இன்னமுதென் றிசையான
பொருவிறந்த மெய்ந்நிலத்தைப் பூண்டுபுல்லி யனுபவிக்கும்
திருமகளே முதலாய பிராட்டிமார் பெருந்திரளை
அருமறையும் புகல்வரிய ஆநந்த லீலைகளை. (36)

எண்ணிறந்த பெருவளத்தை யிருவகையாம் விபூதியினைத்
தண்ணளியைத் திருவுந்திக் கமலத்திற் சதுமுகனில்
நண்ணியசீ ருருத்திரனை நான்மறையைப் பெரும்பாழை
விண்முதலாம் பூதத்தின் விரிவுகளை விளக்கத்தால் (37)

முத்தொழிலுந் தானுகி மூவுலகு முண்டுமிழ்ந்தும்
மத்தமுறு புத்தர்முதல் சமயத்தின் வகைவகுத்தும்
ஒத்தவர்மிக் கவரில்லா ஓதவண்ணர் விநோதமெனச்
சித்தமுறத் திருமழிசைப் பிரானுழ்வார் தெரிசித்தார். (38)

செப்பரிய பெரும்பசியால் மிகவாடித் திரிந்துலகில்
உப்பகன்ற நீர்க்கூழும் கிடையாதே யுழல்பவர்க்குத்
துப்புடைநற் பேரமுதம் தொல்லுலகிற் கிடைத்ததுபோல்
தப்பிலகத் திற்றங்கும் தலைவரைக்கண் டனுபவித்தார். (39)

வேறு

இறந்த காலந் தனில்முத்தி யெய்த விரும்பிச் சாக்கியமும்
மறந்த சமணர் தங்களையும் மங்கை பங்க ஞகமமும்
துறந்து கற்றேன் பனிநீரால் பரவை செய்யத் துணிந்தேன்பின்
சிறந்த செங்கட் கரியானைச் சேர்ந்தேன் வினைகள் தீர்ந்தேனே.

ஆத லாலே யினியவற்கொன் றரிய தில்லை யெனமகிழ்ந்தாங்
கோதி யோதி யநுசந்தித் துள்ளந் தன்னை யொருபோதும்

வேத நாத னகலாத விரகு செய்து விண்முதலாம்
பூத மைந்தும் தத்துவமும் உணர்ந்தா ரறிந்து புரைதீர (41)

வேறு

ஆறுறு மையைந்தும் ஏழைந்து மகமுலவ
வேருகி நின்ருெளிரும் மெய்ஞ்ஞான விளக்கில்மடை
மாருத பத்தியொடு மழிசையர்கோன் அனுபவித்துச்
சேருர்பூங் கமலவயல் திருவல்லிக் கேணிநண்ணி (42)

இனிதமருந் திருமாலே இறைஞ்சியெந்தாய் யாவருக்கும்
தனிமுதலே யெனவுருகிச் சங்கரனும் நான்முகனும்
நனியமரர் பெருமானும் நான்மறையுங் காண்பரிய
புனிதனுட னங்கிருந்தாண் டெழுநூறும் போக்கினர். (43)

எண்டருஞ்சீ ராண்டங்கே எழுநூறுஞ் சென்றதற்பின்
அண்டமுண்ட பெருமானும் ஆழ்வாரை நோக்குபுநாம்
கண்டுயிலும் வெஃகாவில் வருகவெனக் கட்டுரைப்பப்
புண்டரிகக் கண்ணெந்தாய் போற்றியெனப் புகழ்ந்திறையை (44)

அடிதொழுது திருவல்லிக் கேணிவிட்டங் கமரர்தொழப்
படிமீதி னடந்தழகார் பங்கயச்செந் தாள்சிவப்புக்
கடியார்பூம் பொழில்புடைசூழ் வெஃகாவிற் கண்டதனுட்
கொடியாடு மணிமாடக் கோபுரத்தைக் குறுகிநின்ருன். (45)

நிலஞ்செய்த விருந்தவத்தால் நேமிமிசை மேதையர்தம்
குலஞ்செய்த புண்ணியத்தால் கோதறமுன் கண்வளருஞ்
சலஞ்செய்யா வன்பர்தொழு தத்துவனே யுற்றிறைஞ்சி
வலஞ்செய்தாங் கதிலாண்டோர் எழுநூறும் மன்னினர். (46)

அந்நாளிற் றிருமழிசைப் பிராணுழ்வார் அடியிணையில்
பொன்னுர்சீர் கவிவல்லான் கணிகண்ண னெனும்புலவன்
பன்னுளும் திருமாலேப் பாடியவர் பணிநின்று
தன்னுவி யாக்கைபொரு ளென்வொன்றுந் தனக்கின்றி (47)

*பேறிழவில் இன்பமிடர் எனுமிரண்டும் பிணியாதே
நாறுபூந் துழாய்முடியான் திருத்தொண்டர் நற்புகழ்மேல்
ஏறுசீர்ப் பாமாலே யிசைத்தேத்தி யாழ்வார்பால்
ஊறுபெருங் காதலராய் ஒருபொழுதும் பிரியாதே (48)

அந்நகரி லமர்ந்துறைவர் ஆங்கவரை யந்நாட்டின்
மன்னவஞேர் கவியென்பாற் புகலுகென மற்றவர்க்கு
மின்னுமணி முடிகடக மாதியாய் மிகுதனங்கள்
முன்னுற வோர் குன்றென்னச் சொரிந்துகவி மொழிகென்ருன்.

---

*பேற்றில் இன்பமும் இழவில் இடரும் என எதிர் நிரனிறை யாகக் கொள்க.

கவியென்பால் மொழியென்னக் கழறுமுரை கணிகண்ணன்
செவியுறலும் நாராசம் சேர்ந்தென்னத் தீதுற்றுப்
புவிவேந்தன் முகநோக்கிப் பூபால உனைநோக்கும்
.................................. (50)

## வேறு

பாடும் புலவ னல்லேன்நான்
பணமும் பொன்னு மீங்கெனக்கேன்
ஓடும் கல்லும் போலாகும்
உலகை யாளும் மன்னவரும்
நாடு மெனக்குத் துரும்பாவர்
நாரா யணன்சீர்க் கமலபதம்
சூடும் புலவ னுனக்கிச்சை
சொல்லும் புலவ னல்லனே. (51)

என்று கூறி யெழுந்திருந்தாங்
கெதிரே மன்ன னெடுத்திட்ட
குன்று போன்ற விருநிதியை
நாக மென்னக் கொதித்தகன்று
நன்று சேர்தம் பதிநோக்க
ஞால மாளும் மன்னவனும்
ஒன்று கேளு மெனக்கூவிக்
கணிகண் ணருக்கன் றுரைக்கின்றான். (52)

ஈசன் செய்யும் முத்தொழிலும்
யானே வல்லே னெனையின்று
நீச னக்கி யெழுந்திருந்தீர்
நெடுமால் புலவ னயிடிலென்
தேசத் திருக்க வொட்டேன்நான்
என்றான் மன்னன் சிலுகற்றார்
ஆசு மிகுந்த வுன்னாட்டில்
இருப்பார் புலைய ரெனவகன்று: (53)

## வேறு

தம்மையாட் கொண்ட செய்ய தாடொழு தியம்பும் மன்னன்
எம்மைநீ பாடன் றாகில் ஏகுதி பதிவிட் டென்றான்
மும்மையும் பாவி போவேன் என்றவர் மொழிய வாழ்வார்
உம்மைவிட் டிருப்பே னல்லேன் ஏகுவன் உடனே யென்றார் (54)

எனச்சொல்லிக் கணிகண் ணன்பின் ஏகின்றா ராழ்வா ரேகி
வனப்புடைத் திருவெஃ காவில் வளரொளி யாலில் மன்னும்
புனத்துழா யானை யவ்வூர்ப் புறத்தினின் றிறைஞ்சி யாங்கே
கனத்தசீ ரன்பி னோடும் வலஞ்செய்து கழற லுற்றார். (55)

கணிகண்ணன் போகின் ருனிக் கடிநகர் தன்னை விட்டுத்
துணிவுடை நீச னேனும் அவனுடன் தொடரு கின்றேன்
மணிவண்ணு கிடக்க வேண்டா வருதியென் றறைந்தார் மாயன்
பணியணைப் படுக்கை யாய பாயலைச் சுருட்டிக் கொண்டார் (56)

பங்கயச் செல்வி பூமி யென்றருள் பதியு மெய்ம்மை
மங்கைய ரிருவ ரோடும் வளர்நகர் வீதி யூடே
சங்குசக் கரமுந் தண்டுஞ் சாபமுந் தயங்கு சோதிச்
செங்கைக டோறுந் தாங்கித் திருமறு மார்பர் சென்ருர். (57)

கடிகமழ் துளபத் தாரோய் கணிகண்ணன் போனுன் பின்னே
கொடியனேன் ருனும் போறேன் வருதிநீ யென்று கூறப்
படிமுத லுலக முண்ட பரஞ்சுடர் நடந்தா னென்ருல்
அடியவர் திறத்தை நம்மால் ஆயவும் படுமோ வம்மா. (58)

### வேறு

அந்தாம நீள்முடியும் ஆசில் மதிமுகமும்
செந்தா மரைக்கண்ணுஞ் செவ்வாய்ச் சிறுநகையும்
சந்தார் தடம்புயங்க ளோர்நான்குந் தண்ணளிசேர்
மந்தார நீல முகில்போல வருமெழிலும். (59)

செய்ய கமலத் திருவாழ் திருமார்பும்
வைய மனைத்தும் ஒடுக்கும் மணிவயிறும்
பொய்யில் சதுமுகனைப் பூத்தவுந்தி மாமடுவும்
வெய்ய வொளிவீசி விளங்குதர பந்தனமும். (60)

பீதாம் பரமும் கவினுர் பெருநடையும்
சீதார விந்தத் திருவடிக ளோரிரண்டும்
வேதா முதலாய விண்ணேர் தொழுதேத்த
நாதாந்த நாதன் நடந்தாழ்வார் பின்போனுன். (61)

முன்னே கணிகண்ணர் ஏகவந்த மூதறிவர்
பின்னே மழிசைப் பிரானுர் தொடர்ந் தேகத்
தன்னே ரிலாதான் அவர்பின்னே தான்போனுன்
என்னே புலவ ரிவைகேட்டுந் தேறிலரே. (62)

செஞ்சொற் கவிக்காய்த் திருமா லொருபுலவன்
பின்சென்ரு னென்றவுரை பேசுவதுங் கேட்டிருந்த
வஞ்சப் புலவர்கவி மானிடர்க்கே யாக்கியவர்
தஞ்ச மெனநின்றே முடித்தார் தமையந்தோ. (63)

இட்டார்கள் முற்பிறப்பி லிட்டபொசிப் பெல்லாம்பின்
கட்டார் பிறப்பினிடைக் காட்டுமென வெண்ணுதே
மட்டார் துழாயானை மானிடனுக் கொப்பாக்கிக்
கெட்டார்கள் கேட்டிலுமோர் கேடுமுள தோவம்மா, (64)

மாமாய வஞ்சக மயக்கிற் படாதிருந்து
காமாதி யெண்மரையுங் கால்குறைத்து நாரணற்குப்
பாமாலை சேர்க்கவல்லார் பாக்கியத்தார் தம்பெருமை
நாமீ ரறையவம்மா நான்முகற்குங் கூடுமதோ. (65)

**வேறு**

ஓங்கிய கவிஞ ரென்போர் உறுதியை யுணர்ந்தோ ரல்லோர்
மூங்கரிற் கனவு கண்ட முறையென மொழிந்த நீசர்
ஆங்கது கிடக்க முன்போம் அன்பரை யணித்துக் கூவி
ஏங்கிடைக் கமலை கேள்வன் ஏகிய தெதனு லென்ருன். (66)

கண்ணனே யிறைவர் மன்னன் கணிகண்ணன் தன்னைக்கூவிப்
மண்ணமர் கவிக ளென்பாற் பாடெனப் பலவு மீந்தான்
விண்ணவர் தாதை யாய விண்டுவைப் பாடு நாவால்
மண்மிசை மனுவைப் பாடே னென்றிவர் மறுத்துக் கூற. (67)

நன்றெனைப் பாடா னேலென் நாட்டினி லிருக்க வொட்டேன்
என்றனன் மன்னன் போறே னெனவிவ ரேகி யென்பால்
நின்றது மொழிந்து போந்தார் நின்னைவிட் டகன்ற வன்றே
பொன்றுவ னென்ருர் யானும் பொருக்கென விவர்பின் போந்
தேன். (68)

உன்னைவிட் டடிய னேனும் ஓரிமைப் பளவும் வாழேன்
என்னுமந் நிலையா னின்னை வருதியென் றிசைத்தே னென்ருங்
கன்னம தூர்தி தாதை யடிதொழு தாழ்வார் கூறப்
பொன்னவிர் நேமி யானும் அவருடன் புகல லுற்ருன். (69)

பூதல முடைய மன்னெம் புலவனைப் போகென் ருனேல்
ஆதெனை யிகழ்ந்த தன்றே அவனுடை நாட்டி லாழ்வீர்
ஓதுமோ ரிடத்தும் வாழே னென்றுரைத் துடனம் மன்னன்
கோதறு நாட்டி லுள்ள கோயில்க டோறு மன்னி. (70)

இருந்தவர் கிடந்தார் நின்ருர் யாவரு மறைந்தார் சென்ருர்
அருந்தவத் தவரும் போற்ற ஏகினு ரந்த நாட்டில்
பொருந்திய கோவில் தோறும் பூவைப்பூ வணரைக் காணர்
திருந்துமர்ச் சகர்கள் மன்னன் தன்னெடுஞ் செப்ப லுற்ருர்(71)

மன்னவ நின்னுட் டுள்ள திருப்பதி தோறு மின்று
மின்னவிர் நேமி மேய விண்டுவைக் காணே மந்தோ
என்னமா யங்கள் தாமோ என்றவர் பகர மன்னன்
தன்னறி வழிந்தான் கேட்டு மந்திரத் தலைவர் சார்ந்தார். (72)

வந்தவர் தம்மை நோக்கி மன்னவ னதனைக் கூற
எந்தைமுன் னுலக முண்டார்க் கென்பிழைத் தனைகொ லென்ருர்

சிந்தனை வருந்தி மன்னன் செப்புமத் தேவன் பால்நான்
அந்தமில் குணத்தீ ரொன்றும் பிழைத்தில னவனைப் பாடும். ()

கணிகண்ணன் றன்னை யென்மேற் கவிசொலச் சொன்னேன் அன்னான்
மணிவண்ணன் றன்னைப் பாடும் வாக்கினாற் பாடே னென்றென்
பணிமறுத் தேகி னானப் படிறனைக் கூவி யானென்
அணிநக ரிருந்தா லுன்னை ஆக்கினை யிடுவே னென்றேன். (74)

அவ்வுரைக் கஞ்சிப் போன கணிகண்ண னகன்றான் சொல்லச்
செவ்வியோ னகலக் கண்ட செங்கண்மால் பின்போ னான்கொல்
எவ்வினைப் பயனால் வந்த திதுவென வறியே னென்றான்
கவ்வையுற் றவர்கள் மன்னா கேளெனக் கழற லுற்றார். (75)

வேறு

உன்னை யிகழ்ந்தா னுரமுனக்கு மேலொருவன்
தன்னை யுறக்கண்ட பின்னன்றோ தார்வேந்தே
அன்னை பிதாவேறோ அடியார்க் கரியன்றி
மின்னைப் பிரிந்துமொளி மேனியினிற் றங்கிடுமோ. (76)

காவலவா திண்ணங் கணிகணற்கா வீங்குறையும்
தேவர்கடந் தேவன் திருமாலும் போய்மறைந்தான்
பாவலன் றாளிற் பணிந்தா லவன்மீள்வன்
கேவலமோ சொல்மாலை கேசவற்குச் சூட்டுதலே. (77)

வேறு

என்றன ரமைச்சர் கேட்டாங்
கிருநில முழுது மாளும்
வென்றிவேல் மன்ன னாழ்வார்
வீற்றிருந் தருளு மூரில்
சென்றன னவரும் போனார்
என்பதுந் தெளியக் கேட்டான்
நின்றில னவர்கள் போன
நெறியணைந் தவனும் போனான். (78)

போனமன் முன்னே போன
புலவர்க ளிருவர் தம்மைக்
கானமர் துழாயி னானைக்
கண்டிலன் வழியில் வானோர்
கோனயன் முனிவோர் சித்தர்
கொன்றையந் தாரா னாதி
ஏனையர் பலரும் போற்ற
இருக்கையம் பதியிற் கண்டான். (79)

கண்டமன் னுருகி நைந்து
கணிகண்ணர் கமலத் தாளில்
அண்டமுண் டுமிழ்ந்தா ராழ்வார்
அம்புவி யோர்கள் வானோர்
எண்டிசைக் கணங்கள் மிக்க
யாவரு மிரங்க வீழ்ந்து
தொண்டனேன் பிழைத்த தெல்லாம்
பொருத்தருள் துணைவா வென்றான். (80)

பொறிபுலன் வசத்தில் வீழ்ந்து
புண்ணிய பாவ மென்னும்
நெறியுறு வலையிற் பட்டு
நெடும்பக லாவி வாடும்
சிறியனேன் பிழைத்த தெல்லாம்
செங்கணு யகனைப் பாடும்
அறிவனே பொறுத்தி யென்றாங்
கரசனின் றழுங்கக் கண்டு. (81)

துணிவுடைப் புலவன் வேந்தன்
துன்புற விரங்கித் தான்போய்
அணிபொழில் மழிசைக் கோமா
னடிதொழ வவருஞ் சென்று
மணிவணர் தாளில் வீழ்ந்து
மன்னவன் பணிய வெந்தாய்
கணிகணன் மீண்டான் போய்நீ
கண்டுயில் கொள்வா யென்றான். (82)

என்றிவை யாழ்வார் கூற
ஏழுல குண்டா ராழ்வீர்
நன்றுநீர் முன்னே போனால்
நாமதன் பின்னே யென்றார்
ஒன்றிய கருணை யெந்தாய்
ஓங்குசீர்க் கணிகண் ணன்முன்
சென்றிடிற் பின்னு னென்றார்
திருமழி சைக்கு நாதர். (83)

ஆங்கது கேட்ட வேந்தன்
கணிகண ரருகு சார்ந்து
பூங்கழல் தொழுதின் றெந்தாய்
போதுநீ முன்னே யென்னத்

தாங்குநல் தவத்தி ஞனும்
தடையற முன்னே போஞன்
ஏங்கிய மன்னன் வாழ்ந்தேன்
இனியென விறைஞ்சி யேத்த. (84)

கணிகணர் பின்னே யாழ்வார்
காசினி யிறைஞ்சச் சென்ருர்
மணிவண ராழ்வார் பின்னே
வானவர் வணங்கப் போஞர்
அணிபொழிற் றிருவெஃகாவில்
அணைவரு மணைந்தார் மாயன்
பணியணைச் சுருளை நீக்கிப்
படுத்ததிற் படுத்துக் கொண்டான். (85)

கருமுகில் வண்ணன் மீண்டு
கண்டுயில் கொள்ள வன்ஞன்
திருவடி முடிமேற் சூடித்
திங்கள்சேர் சடையான் போஞன்
அருமறை யயனும் போஞன்
அமரர்கள் கோனும் போஞன்
பொருவருஞ் சித்தர் தேவர்
பொருந்துதம் மிருக்கை சேர்ந்தார். (86)

மன்னவன் கணிகண் ணன்சீர்
மலரடி யிறைஞ்சி யாழ்வார்
பொன்னடி வணங்கி மாயன்
பூங்கழல் தொழுது போஞன்
பின்னதில் மழிசைக் கோமான்
பேரருட் கடலில் மூழ்கிப்
பன்னெடும் பகலும் வைகி
யிருந்தபின் பழனஞ் சூழ்ந்த. (87)

குடந்தையம் பதியை மன்னிக்
கோவலர் குட்டன் மேலே
தொடர்ந்தெழு காத லோடுந்
துன்னியா டரவப் பள்ளிக்
கிடந்தவம் முகிலை வாழ்த்திக்
கிளரொளி யோடு மொன்ருய்
இடம்பெறு மாண்டு மாங்கோர்
ஈரேழு நூறும் வாழ்ந்தார். (88)

### வேறு

மாசில் மழிசையர்கோன் இவ்வண்ணம் வாழ்ந்திடுநாள்
பேச வரிய பெரும்புலி யூரடிகள்
ஆசில் மகமொன் ருற்றினர் ஆழ்வாரும்
ஈசன் கழல்தொழுதாங் கெய்தின ரப்பதியில். (89)

### வேறு

நலஞ்செயும் யாகங் காண நண்ணின ரவ்வூர் மாலை [னும்
வலஞ்செய்தார் வலஞ்செய் போதில் வளரொளி மாயன் மன்-
புலஞ்செய்யும் விமான நீண்ட கோபுரம் பொன்னின் கம்பம்
நிலஞ்செய்மா நகரஞ் சூழ்ந்த நெடுமதிள் பொழில்கள் மற்றும்.()

சீருறு மழிசைக் கோமான் செறிவன திசைக டோறும்
நேர்தர வலமதாகத் திரிவதை நின்று கண்ட
பாருளோ ரிவரா லிந்தப் படியென வுணரார் தம்மில்
ஆர்வம்வந் திரங்கி யீதோ ரதிசய மென்ன வெண்ணி. (91)

பொருந்தின ரந்த நாளிற் பெரும்புலி யூரிற் பார்ப்பான்
வருபுன லாடி மீளும் வழியிலோர் மடந்தை யெய்தி
இருந்துகால் நீட்டக் கண்டோர் யாகம்வல் லவர்காண் வாரார்
கருங்குழல் வல்லி காலை வாங்கெனக் கழறுங் காலை. (92)

நக்கிரு கரங்கள் தட்டி நன்னுதல் நவிலுங் கெட்டேன்
மக்களிற் றேவ னாய மழிசையாழ் வாரைப் போற்றி
அக்கர பூசை நல்கும் அறிவிலாய் ஏகாய் என்றாள்
வெட்கினன் யாகசாலை மேவினன் அந்த ணாளன். (93)

செய்யிழை யுரைத்த நீதித் திருமழி சைக்குள் வாழ்வாம்
அய்யனெத் தலத்தி னுள்ளா னெனப்பதைத் தந்த ணாளன்
நைவுறக் கனவி லவ்வூர் தன்னிலிந் நம்பி யென்னப்
பையர வணையா னுங்கோர் பனவனாய்ப் பகர்ந்து போனான்.(94)

ஆதவ னெழுந்த போதி லந்தண னவ்வூர் தன்னில்
ஓதுபல் குலத்தில் யாராய் எய்தினன் கொல்லோ ஒப்பில்
மாதவ னென்ன வெண்ணி மனிதரா னுரை யெல்லாம்
பேதம தறத்தா னேக்கித் திரிந்தனன் பிரம னொத்தான். (95)

அப்படித் திரியு நாளில் அருளுறு மழிசைக் கோமான்
செப்பிய பிரப்பங் கூடை சீர்பெற முடைந்து விற்றே
ஒப்பிலா விறையைப் போற்றி யொடுங்கியாங் கொருத்தனுகித்
தப்பறத் திரிதல் நோக்கி யிவர்கொலத் தலைவ ரென்ன. (96)

அருமக மியற்று நீதி யந்தணன் கண்டப் போதே
கருமுகிற் கினிய தொண்டர் இவரெனக் கருத்து ளெண்ணித்

திருமழி சைக்கு நாதர் சேவடி யிறைஞ்சி யாங்கே
இருவரு மாக யாக சாலையை யெய்தி னார்கள். (97)

எய்திய பொழுதே சம்பா வனையிவற் கீயக் கண்ட
வய்திக ரிகழ்ந்தார் தர்ம புத்திரர் மகத்தின் முன்னே
செய்கட னேற்ற மாலைச் சிசுபால னிகழ்ந்தாற் போலம்
மெய்யரு மினிநாம் நம்மை வெளியிட வேண்டு மென்ன. (98)

அலம்புபாற் கடலுள் மன்னும் அராவணை மேலா வாழி
வலந்திக ழாழி யானே வள்ளலே வாழி பார்ப்பார் [ளூர்
குலம்பொலே னென்ன வென்னை மகத்தினிற் கூட்டோ மென்-
இலங்கைசெற் றவனே நீயுன் னரவணை யோடு மெய்தி. (99)

எய்தியீண் டிருந்து தீமை யியம்பியுன் னருள்நோக் காத
வைதிக ரிகழு மென்னை வணங்கியம் மறையோ னன்பிற்
செய்மகங் கூட்டும் வண்ணம் திருவொடு வருதி யென்றே
கைதலைக் குவித்தா ராழ்வார் கார்முகில் வண்ணன் சென்றான்.()

பங்கயத் தவனுஞ் சென்றான் பாகசா தனனும் சென்றான்
கங்கைசேர் சடையான் சென்றான் கருதிடு முனிவோர் சென்றார்
பொங்குமே மூலகி லுள்ள புலவரும் பொருந்தி னார்கள்
சங்கையுற் றிருந்த பார்ப்பார் மழிசைமன் சரணந் தாழ்ந்தார்.

பெரும்புலி யூரின் மன்னும் பேரரு ளடிக ளன்றே
திரும்பலில் முத்தி நல்கச் செய்ம்மக முடித்த போதில்
வருங்கரு முகிலும் வானோர் வேந்தனும் மழுவ லானும்
அருந்தவத் தயனும் புக்கோ ரனைவரும் போயி னார்கள். (102)

கரமரு மலர்கள் சிந்திக் களிப்பொடந் தணர்கள் கண்ணன்
பரமென வடங்கி வாழும் பத்தரைப் பரிவி னோடும்
பிரமர தத்தி லேற்றிப் பிரானிவ னென்னத் தாங்கி
வரமருள் பதியை முக்கால் வலஞ்செய்து வாழ்த்தி னார்கள். ()

சிறுமைகண் டிகழ ளூனுஞ் சீரிய நெறியோர் தம்பால்
தெறுமுறு பெருமை கண்டாற் சென்றடி வணங்கு மாறும்
உறுநெறி யுலகி லென்றும் உள்ளதென் றுணர்ந்தோ மந்தோ
பெறும்பயன் மதியார் புல்லோர் பிழைபொறுத் தருளு மாறும்.

ஆயதோர் நிலையி லாழ்வார் அந்தணர் தம்மை யீன்ற
தாயினு மிகுந்தன் போடும் தத்துவ முபதே சித்துத்
தூயவர் துதிசெய் தேத்தச் சுருதிகள் தொடர்ந்து போற்ற
மாயமால் குடந்தை தன்னில் மன்னியா டரவில் மன்னும்.(105)

## வேறு

காரார் முகிலிற் கமல மலர்ந்ததொத்த
சீரார் திருவுருவிற் கண்கால் கரஞ்சிவந்த

ஆரா வமுதை அநுபவித்த மெய்ந்நலத்தைப்
பாரோ ரறியும் படிபாட வெண்ணினர். (106)

**வேறு**

தேன்முகத் தளிகள் பாடும்
திருத்துழாய்க் கண்ணி யார்க்கு
வான்முக மதிகண் டஞ்சும்
வளரொளி வதனத் தார்க்குக்
கூன்முகச் சங்க மாழி
ஏந்துகைக் கொண்ட லார்க்கு
நான்முகன் திருவந் தாதி
நலந்திகழ் நூறு மோதி. (107)

சிறப்பினிற் சிறப்பு மிக்க
திருச்சந்த விருத்த நூறோ(டு)
உறப்புகும் இருபத் தொன்றே
உரைதரு தொகையு மாங்கே
அறப்பொரு ளாய வாரா
வமுதடி யன்ப ரேத்திப்
பிறப்பறும் வண்ண மோதிப்
பேரருள் விரசை மூழ்கி. (108)

அன்னதின் தீரம் மன்னும்
அமானவ னுரை யேத்திச்
சென்றுவை குண்ட மெய்திச்
செங்கணு யகன்முன் னுகி
நின்றவண் சாம வேத
கீதங்கள் நிகழ்த்தி மாலோ(டு)
ஒன்றிய மழிசைக் கோமான்
ஒளிக்கொண்ட சோதி யானுன். (109)

திருமழிசைப்பிரான் பிரபந்தம் முற்றிற்று.

# தொண்டரடிப்பொடியாழ்வார் பிரபாவம்

**கலி விருத்தம்**

மண்டல மழிசைப் பதிமன் னியல்சீர்
கொண்ட பெரும்புகழ் கூறியிம் மண்ணோர்
அண்டரி றைஞ்ச வரங்கம மர்ந்த
தொண்டர டிப்பொடி யைத்துதி செய்வாம். (1)

**வேறு**

எண்ணுந் திங்க ளீராறில்
ஈச னுருவாம் மார்கழியில்
நண்ணுங் கேட்டை தனிற்சிறந்த
நாற்பாற் குலத்தின் மேற்பாலாய்
மண்ணும் விண்ணுந் தொழுதேத்த
மண்டங் குடியா மாநகரில்
அண்ணல் தொண்ட ரடிப்பொடியார்
பிறந்தா ரறந்தான் சிறந்தோங்க. (2)

தூய ஞானச் சுடரொளியாய்ச்
சுருதி முடிவில் வீற்றிருக்கும்
மாய னருளாற் பரஞ்சோதி
வடிவை மறைத்து மண்மிசையிற்
காயம் புனித லாலந்தோ
காமா தியர்சென் றுறத்தீண்டி
ஆயு மறிவை யிருட்டறையில்
அடைத்தா ரவரும் அடைப்பட்டார். (3)

மண்ணில் வஞ்ச வலைப்பட்டு
வருந்து முயிர்க ளிடர்நீங்க
விண்ணின் றிழிந்த முதல்வரையும்
விரைந்து மாயை தீண்டுதலால்
எண்ணுங் காலிப் புவிமீதில்
இயமன் கயிற்றும் அனைவயிற்றும்
நண்ணி யுழலு மானிடர்சொல்
ஞானந் தனக்கார் நடுவம்மா. (4)

**வேறு**

சீரிய ஞானச் சோதித் திருவுரு வுடைய ரேனும்
பார்மிசை யுற்றால் மாயைப் படுக்குமென் றஞ்சி யந்தோ
காரியார் மகனார் கண்கள் திறந்திலர் கமல மன்ன
ஏரியல் வாயா லொன்று மிசைத்திடா திருந்தா ரந்தோ. (5)

அறந்தலை நின்றநீதி யச்சுதன் அன்றி மண்ணில்
பிறந்தவ ரயர்ந்தார் தம்மை யெனமறை பேசுகின்ற
திறந்தனை மறந்துங் கெட்டேன் மாயையின் பிணக்கிற்பட்டுக்
கறங்கெனச் சுழல்வோர் ஞானம் காயமொட் டடங்கிற்றன்றே.

வேறு

முன்னை வினையின் தொடர்பாலே மொட்டுப் புலனு விருநீர்தோ
தன்னை யுதரக் குழிவீழ்ந்தங் கவலும் வருந்தப் புவியுற்ற [ய்ந்
பின்னை விருப்பு வெறுப்பன்றிப் பிறிதொன் றறியா தவர்ஞானம்
தன்னை யேய வெடுத்துரைக்கத் தகுமோ தாமோ தராதகுமோ.

வேறு

படுக்கையின் மலசலம் பாய வைகுவான்
கடுப்பினி லுலகெலாம் காண்ப னென்பபோல்
தடுப்பரு மாயையின் சவட்டி லாட்டுவான்
ஒடுக்கமில் ஞானம துரைத்து மாய்தலே. (8)

வேறு

பொறிவழி பொருந்தி யேயும் புலன்வழிப் போக்கு மாற்றார்
செறிபெரு மனுதி செய்யும் தீமைக் ளடக்கார் காதம்
வெறியுறு வெகுளி மாயை யாணவம் விலங்க வாழார்
அறிவெனக் குருவ மென்றே யழிபவர்க் கறைவ தென்னே. (9)

அத்திறங் கிடக்க மண்டங் குடியில்வந் தாசி லாத
மெய்த்தவ முடையார் தம்பால் விண்டுவின் பணியாற் போந்த
உத்தம குணத்தார் காம னுருவினிற் சிறப்போ டோங்குஞ்
சித்திர வடிவிற் றேன்றித் திருவவ தரித்த பின்னர். (10)

வேறு

அன்ன மென்னடை யந்தணர் மங்கையர்
பொன்னின் நன்மணிக் காப்புறப் பூட்டினர்
செந்நெ லின்னடி சில்லொடுந் தேன்கனி
மன்னு மின்னமு துமகிழ்ந் தூட்டினர். (11)

எண்த யங்குப தங்களி ரண்டினும்
தண்டை தண்டுச தங்கைய ணிந்தனர்
கெண்டை யங்கண்ம டந்தையர் கேடிலா
மண்ட யங்க வயங்கும ருங்கினில். (12)

இரைத்த கிண்கணி பன்மணி யேயுற
நிரைத்த ணிந்தனர் நீண்டக ரங்களில்
உரைத்த பொன்வளை யோங்கவ ணிந்தனர்
விரைத்த பூங்குழல் மெல்லிய லார்களே. (13)

செய்ய வாயமு தின்திரை தந்திடும்
அய்யர் மார்பினி லாரம ணிந்தனர்
துய்ய நற்களத் தைம்படை சூட்டினர்
மய்யி லங்கொளி வாள்விழி மாதரே. (14)

கோதி லாதகு ழைகளிற் றோடணிந் (து)
ஒது கண்களில் மையுமிட் டொப்பிலா
மாத ரார்களம் மைந்தன்றன் நெற்றியின்
மீது பட்டமுஞ் சுட்டியும் வீக்கினர். (15)

வேறு

இப்படிப் பலபல இலங்கு பொற்கலன்
தப்பற வணிந்துறத் தவழ்ந்து பின்னவண்
முற்பகற் செய்தவ முதல்வர் போற்றிட
ஒப்பிலார் தெருவிற்றேர் உருட்டி வாழுநாள். (16)

வேறு

விதிவழி சவுளஞ் செய்து வேதியர் குழாத்துள் மிக்க
முதியவர் சடங்கிற் றேன்றும் முப்புரி நூலுஞ் சாத்தித்
துதிசெயும் வேத நூலுந் துகளற வோதி யின்பக்
கதிவழிச்செல்வா ரங்கே களிப்புடன் வளரு நாளில். (17)

அந்தணர் பலருங் கூடி ஆசறு குணத்தி னர்க்கோர்
செந்துவர் வாயி னளைத் திருமணம் புணர வெண்ணி
வந்தமெய்ம் மரபி லாங்கோர் மறையவன் மகளைப் பேசப்
பந்தணை விரலார் மைந்தர் பலருமப் பதியைச் சார்ந்தார். (18)

காமனுக் கழகு நல்குங் கதிர்மணி வடிவி னற்காம்
தேமலர்க் குழலைப் பெற்ற தந்தைதாய் தமக்குச் செப்ப
மாமனை யழைத்தார் பிள்ளை மரபினை விளங்கக் கேட்டார்
ஆமதற் கிசைந்தோ மென்றுங் கடைந்தவர்க் கடைக்காயீந்தார்

ஆங்கவ ரிசைத்த மாற்ற மன்பரைப் பயந்து செல்வத்
தோங்கிய தந்தை தாயர்க் குரைப்பவப் பொழுதே யன்னர்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந் தனம்பல நல்க வந்தப்
பூங்குழல் தன்னை வேட்டார் பூவைப்பூ வண்ணர் தொண்டர்.

வேறு

சீருறு திருமணஞ் செய்த பின்பவர்
வாருறு தனத்தியர் வசத்த ராயவர்
காருறு குழல்களிற் கமலம் போன்றொளிர்
ஏருறு முகங்களி லிலங்கச் சேர்ந்ததோர். (21)

சிறுபிறை நுதலினிற் சிலையி ரண்டென
உறுபுரு வங்களில் ஒளிகொள் வேலெனக்
கெறுவுறு விழிகளிற் கிளர்ந்த பொற்பணி
மறுவுறு குழைகளில் மாசி லாததோர். (22)

திலமலர் குமிழெனச் செப்பு நாசியில்
இலவவாய் முறுவலில் இலங்கு பன்மணி
நலமுறு களத்தினில் நவையில் தோள்களில்
மலமறு வீணையில் மதுர வாக்கினில். (23)

செப்பெனக் கிரியெனத் திரண்டு விம்மிய
ஒப்பறு தனங்களில் உதர வாலினில்
துப்புறு தளிரெனத் துலங்கு மேனியில்
தப்பறு துடியினைத் தள்ளும் ஒள்ளிய. (24)

இடையினி லல்குலில் இலங்க ரம்பையந்
தொடைகளில் நூபுரந் துலங்கு தாள்களில்
விடைமுதிர் பெடைகளில் விளங்கு சூல்அன
நடைகளில் மனம்பதித் தாவி நைந்தனர். (25)

வேறு

அத்திறத் தமைந்தார் திரிவுறக் கண்டவ்
அரிவையர் அலமர அவர்கள்
சித்திர வுருக்கண் டிவருமப் படியே
சிலபகல் அநுபவித் தொழுகப்
பத்தர்கட் கினிய பரஞ்சுட ரரங்கன்
பார்மிசைப் பிறந்தது பொருட்டால்
இத்திற மெமதாம் இன்பவீட் டிருந்தார்
இடர்படத் தகாதென விரங்கி. (26)

வஞ்சமா மடவார் அவயவத் தமர்ந்த
மனத்தினைத் திரித்துத்தன் மாசில்
பொன்செய்நீள் முடியிற் கமலவா னனத்தில்
பொருவரு மிருகுழைப் பொலிவில்
கஞ்சமா மலர்க்கண் ணிணைகளிற் புருவக்
கால்வளை யிருகிளைக் கறுப்பில்
எஞ்சலில் ஒளிசேர் நாசியிற் பதுமம்
மலர்ந்தன விலங்குசெவ் வாயில். (27)

அண்டமுண் டுமிழ்ந்த அழகிய மிடற்றில்
அஞ்சன நிறத்தினி லழகார்
வண்டடங் கிரியொத் தோங்கிரு புயத்தில்
வளரொளி திகழ்திரு மார்பில்
விண்டலத் தியங்கு சுடரிரண் டென்ன
விளங்குகைச் சங்குசக் கரத்தில்
எண்டரு முலகம் யாவையு மடக்கி
எழில்திகழ் திருவுத ரத்தில். (28)

உந்திமா மடுவில் உதரபந் தனத்தில்
ஓங்கெழில் மருங்கினில் ஒளிகொள்
அந்திமா முகிலொத் திலங்கிய செம்பொன்
ஆடையில் அழகுறு குறங்கில்

( இடையிலுள்ள பாட்டுக்கள் கிடைக்கவில்லை )

---

## குலசேகராழ்வார் பிரபாவம்

### அறுசீர் விருத்தம்

ஆசிலாத் தொண்டர் தொண்ட ரடிப்பொடி யாங்கு மன்னும்
ஈசனைப் பாடி யாட்செய் திணையடி யடைந்த வாற்றைத்
தேசிக னருளால் நாயேன் சிறிதறிந் தளவுஞ் செப்பி
மாசிலாக் கொல்லிக் கோமான் செய்கையும் வழுத்த லுற்றேன்.

வேறு

பொருவரும் வஞ்சி வேந்தர் பூண்டமா தவத்தி னாலே
திருவளர் கூடல் தன்னில் சிறந்ததோர் மாசித் திங்கள்
தருபுனர்ப் பூச நாளில் சங்கரன் மகிழ்ந்து வாழ்த்த
அருமறை நாலும் வாழ்த்த அமரர்கள் குழாங்கள் வாழ்த்த.(2)

காருறு முருவச் செய்ய பவளவாய் கமலச் செங்கண்
ஏருறு திருமா லேவ இருந்தவை குண்ட நீங்கிப்
பாருறு தலங்க ளேத்தப் பங்கயச் செல்வி காக்கச்
சீருறு கொல்லிக் கோமான் திருவவ தாரஞ் செய்தார். (3)

வேறு

ஆர்த்தன சராசர மண்டர் பூமழை
தூர்த்தனர் முனிவர்கள் ஆசி சொல்லினர்
போர்த்தனர் சித்தர்கள் விசும்பிற் புன்மைகள்
ஓர்த்தன தருமமும் மெய்யும் ஓங்கின. (4)

ஆடின ரந்தணர் ஆயு நான்மறை
பாடின ரிருடிகள் படியில் வஞ்சகம்
வீடின துகப்பொடும் விரிஞ்சன் வாழ்த்தினன்
ஓடின ரொன்னலர் உலக மோங்கின. (5)

அப்படி நன்மைகள் அன்பு கூரவும்
பொய்ப்படு தீமைகள் புரண்டு சாயவும்
இப்படி யுற்றசேய் இலங்கு சீரருள்
ஒப்பரு மேனிகண் டுலகர் கூறுவார். (6)

அருமறைக் கொழுந்திது வென்பர் அந்தணர்
திருவருள் மெய்யிது வென்பர் சித்தர்கள்
பொருவரு ஞானியர் போத மென்பர்கள்
தருமமென் பார்படி தாங்கு மன்னவர். (7)

பொறையொரு பாலனுய்ப் புகுந்த தென்னவும்
அறைதருஞ் சாமந்தி யாக மென்னவும்
மறைகளோ டரனயன் வாழ்த்தி யேத்தரும்
இறையருள் மதலையாய் எய்திற் றென்னவும் (8)

தோன்றிய மதலையைச் சுருதி நீதியின்
ஈன்றவர் களிப்புற எடுத்திம் மண்முதல்
மூன்றுல குயத்தமிழ் முறையி னல்கென
ஊன்றிய திருமுலைப் பாலு மூட்டினர். (9)

வேறு

திருவவ தாரஞ் செய்த தினத்தினுக் கேழாம் நாளில்
பொருவரு மதலை கையில் பொருந்துபொற் காப்பும் பூட்டி
அருமறை விதியா லாறுந் திங்களி லமுது மூட்டி
வருகலன் பலவுஞ் சாத்தி மாசற வளர்க்கு நாளில். (10)

வேறு

அல்லிப் போதயன் தாதையை யன்பினுல்
புல்லிப் பூண்டு புணருமதலையைக்
கொல்லிக் கோன்குல சேகர னென்றுபேர்
சொல்லி வாழ்த்தித் துதித்தனர் அந்தணர். (11)

தென்னர் செம்பியர் ஆதியர் திக்குறை
மன்னர் அன்பி னருமணித் தொட்டிலில்
மின்னு சோதி மதலையை மேவுவித்
தன்ன மன்னவர் பாட்டொடு மாட்டினர். (12)

கிடந்தி ருந்து தவழ்ந்துபொற் கிண்கிணி
இடங்கொள் தண்டைத் தொனியுமி ரைத்தெழ
நடந்து பேதையர் சிற்றிலை நாடொறுந்
தொடர்ந்த ழித்துவ ளர்ந்தனன் தோமிலான். (13)

வேறு

மறுவரு முகுந்த மாலை வழங்கிடு மதுர வாய்நின்(று)
உறுபெரு மமுதந் தத்த உடன்வளர் பேதை யார்பால்
குறுநடைக் குறும்பு செய்து குவலயத் தரசர் போற்றச்
சிறுநெறி யுறுதே ரோட்டித் தீதற வளர்ந்த பின்னர். (14)

மறையவர் வகுத்த மெய்ம்மை வளர்தரு மனுநூல் நீதி
முறையினிற் சௌளஞ் செய்து முப்புரி நூலுஞ் சாத்தி
அறைதருங் கலைகள் எட்டெட் டாசற ஆய்ந்து மண்ணில்
திரைகொணர்ந் தரசர் போற்றத் திருமணம் புணர்ந்த பின்னர்.

ஒருவரு மிருவர் தாமும் உம்பரு மகிழ்ச்சி யெய்த
நிருபர்தா ரமைச்சர் கூடி நீணிலங் காத்தற் கிந்தப்
பொருவரு மைந்தர்க் கின்றே பொன்முடி புனைவோ மென்று
திருவபி டேகஞ் சூட்டச் சிறந்தர சாளு நாளில் (16)

வேறு

விரைசெய் தார்முடி வேந்த ளுகியே
தரைமிசை யுயிர்க்கெலாந் தாஞெ ராக்கையாய்ப்
புரையறு மதிக்குடை நிழற்றும் பூபதி
அரைசியல் பதனையும் அறைகு வாமரோ. (17)

வேறு

பொங்கோத வேலை புடைசூழ மன்னும்
புவிமன்னர் பன்னு புகழான்
வெங்கோப மிக்க அசுரேசர் சேனை
விறலோடு வென்ற விமலன்
எங்கோனி ராமன் உயிர்காவல் செய்த
படியென்ன லன்றி யிறைவன்
செங்கோல் செலுத்தி வருநீதி தன்னை
எவரே செகத்தி லறைவார். (18)

புலிபால் சுரப்ப இளமான் மறிக்கள்
புரைதீர வுண்டு பொருமும்
எலிபா லருந்து சிறுகுஞ்சு பூசை
முலையூடு மின்ப முறுமால்
வலிபால் மிகுத்த தொலிகாவ லற்கு
வருநீதி மானி னுயிர்கொள்
விலிபா லிருந்த தெனலாவ தன்றி
எவரால் நடக்கும் வினையே. (19)

மறைவாண ராலும் முனிவோர்க ளாலும்
வளர்வான வர்க்கின் னுணவாங்
குறையாத செல்வ முறுமாறு மன்னு
கொடையா னடத்தி யவரால்
பொறையார் புவிக்கண் உறுதிங்க டோறும்
உயர்மாரி மூன்று பொழிய
இறையாறி லொன்று படிமேல் மகிழ்ந்து
குடிநல்க வின்ப முறுவான். (20)

கூசாது வேத நெறியிற் றெடுத்த
குலநாலு நீதி குலையா
மாசால் மயக்கி வருமாய வஞ்ச
வலைவே ரறுத்து மதியை
ஊசாடு ஞான வுருவிற் பிறந்திங்
குலகேழில் மன்னி யொளிரும்
ஆசார முற்று மொருமேனி கொண்ட
திதுவென்ன மன்னு மறிவோன். (21)

படையால் விரிந்த புகழா லிலங்கு
படிவானம் வேலை முழுதும்
உடையா னரக்கர் குலம்வே ரறுத்த
உரவோனை யுற்ற நெறியான்
கொடையா லெடுத்த கரமீ விலங்கு
குணஞான தான முடையான்
அடையா ரிடத்து முறுநோய் பொறுமல்
அருள்மாரி பொங்கும் விழியான். (22)

பூதால மென்று புகல்தட்டி லுற்ற
பாரதார மாசில் புகழாள்
மாதா வெனக்கு மெனவே யொடுங்கு
மனமாதி மூன்று முடையான்

பாதார விந்த மலரால் இலங்கு
படிவா னளந்த பரனுர்
வேதா கமங்கள் மனு நூல் புராண
மிகுகேள்வி மன்னு செவியான். (23)

செய்யா ளிலங்கு புரிவான னுன
திருமால் சிறந்த வடிவாம்
மய்யாய சோதி யுருவைப் பிரிந்து
மதியார்க ளொன்றை யெனினும்
மெய்யாய காதல் மகவொன்று பேணி
யுடன்வாழ வீறு பெறுவோன்
பொய்யாத வாய்மை யுடையா னடைந்த
புலனைந்தும் வென்ற பொறியான். (24)

நெறியா லிறந்த புவியோர்க ளுக்கு
[1]நிரையாதி துன்ப வினைகள்
செறியாத விச்சை யவைசெய்து மன்னு
செவியாதி யாகி வளரும்
பொறிவாயி லுற்ற புலன்மேவு தீமை
பொடிசெய்யு நீதி யறிவை
அறியா தவர்க்கும் அறிவார் தமக்கும்
அகல்வா னளிக்கு முரவோன். (25)

குருநாடர் சோழர் மகதேசர் தென்னர்
குருநாட ராதி யரசர்
வருவார் நெருக்கி யிருபால் நிரைத்து
மலர்தூவி நின்று தொழுதெம்
திருவாள வஞ்சி நகராள வென்று
செறிமன்னர் பன்னி யடைவே
[2]தருபா குடங்கள் மலைபோ லுயர்ந்த
தலைவாசல் முன்றி லுடையான். (26)

வாயா லொருத்தர் கெடுமா றுரைத்தல்
மனத்தாலு மெண்ண லறியான்
காயா நிறத்தன் மகனுர் வகுத்த
ககனுதி பூத மிடையில்
ஓயாது மன்னு முயிரான வைக்கும்
உறுதந்தை யோடு தமராய்த்
தாயாகி யன்பு புரிவா னுயர்ந்த
தனையே தனக்கு நிகரான். (27)

1. நரக முதலிய துன்பம். 2. அரசிறைகள் கப்பங்கள்.

வேறு

இந்தவகை யாலவனி யின்பமுற வென்றே
வந்தகுல சேகரர் வழங்கிவரு நாளில்
முந்தமறை தந்தபிர மற்குமுனி வர்க்கும்
தந்தையவர் கண்டுயில் தவத்தினி லமர்ந்தார். (28)

செய்யமலர் மங்கைதிரு மார்பினிலி ருப்பக்
கையமரு மாழிவளை கார்முகில்ம ருங்கில்
வெய்யவொளி வீசுகதிர் இந்துவில் விளங்கப்
பையரவு தன்னுயர் பணங்கொடு கவிப்ப. (29)

கோடிகதிர் மின்மினியில் மங்கியொளி குன்ற
நீடுமவு லிக்கிரண நேமியில் விளங்க
ஏடவிழ் மலர்ப்பதும நான்முகனெ டீசன்
பாடமறை வானவர் பரிந்து நடமாட. (30)

கற்பக நிழற்கடவுள் காமனொ டமர்ந்தே
அற்புத மதிக்குடை யடுத்துற நிழற்ற
விற்புருவ மென்கொடிகள் வெண்கவரி வீசச்
சிற்பரம சோதிபெறு சித்தர்மலர் சிந்த. (31)

இருந்தன னனந்தன்மிசை யெந்தையரு ளாலே
திருந்தவுல காளுமுயர் சேரர்பெரு மானும்
பொருந்துமணி தங்கியொளிர் பூவணையி லின்பந்
திருந்துதுயில் வேதவொலி தானுற வெழுந்தார். (32)

வேறு

எழுந்தவர் பரமா நந்தன் இருக்கையைத் திருந்த நோக்கி
அழுந்துறப் புவியிற் றாழ்ந்தார் அச்சுத னுசி லாத
செழுந்தவ முடையார்தம்பால் திருவருட் கருணை செய்தோர்
உழுந்துருள் பொழுதி லேகி யொளிவளர் விசும்பி லானன்.(33)

மண்ணுறப் பணிந்த அன்பர் மாயனை யருகிற் காணார்
விண்மிசைக் கருடன் தோள்மேல் விளங்கிவீற் றிருப்பக் கண்-
எண்ணரும் பரம சோதி எழில்திகழ் சொரூப ரூபம் [டார்
நண்ணுமெய்க் குணவி பூதி ஞானவா னந்த லீலை. (34)

அனைத்தையுந் திருந்த நோக்கி யரசர்கள் பெருமா னென்னே
வினைக்கடல் நடுவண் வைக வெறுமையுற் றடியே னுன்னை
நினைத்திலென் விமலா வென்று நெடுங்கணீ ரருவி சோரத்
தனைக்கரைத் துருகி நின்றார் தலைவர்தம் இருக்கை சார்ந்தார்.

மன்றல்சேர் துளவத் தாரான் மறைதலு முனைநா ளீன்ற
கன்றுபோய் மறைய நெஞ்சங் கரைந்திடுந் துருகு மான்போல்
நின்றுநின் றிரங்கி வாழேன் நீணிலத் தினியென் றெண்ணி
வென்றிவேல் மன்னர் நின்றார் விடிந்தது பொழுது மாதோ.(36)

ஆதவ னெழுந்த போதில் அரசர்கள் அமைச்சர் நீதி
வேதியர் கவிஞர் பாணர் வீணையாழ் முழவம் வல்லோர்
மூதறி வுடையோர் காலம் மூன்றையு முணர்ந்து வைகும்
மாதவ ரானோர் மன்னன் வாயிலின் மன்னி னார்கள். (37)

இருட்பொழு தகன்ற வாறும் யாவருந் தன்பா லெய்தி
பொருட்பெற நின்ற வாறும் உணர்ந்திலன் பூவை வண்ணத்
தருட்கடல் தனக்கன் றீந்த அநுபவத் தொழுகி மன்னன்
மருட்கொளு முலக வாழ்வை மறந்திருந் துருகி நைந்தான்.(38)

உய்வுற வாயி லுற்றோர் உற்றமன் அணையக் காணார்
வைகறை யெழுந்து நாளும் வந்தருள் புரியு மன்னன்
வெய்யவ னுதித்தோர் சாமஞ்சென்றது விறல்கொள் வேலான்
செய்திற மறியோ மின்னும் செறிந்தில னென்று சிந்தை. (39)

வருந்தினார் வாயி லோனை வருகநீ யென்று கூவித்
திருந்திய மன்ன னின்னுஞ் செறிந்திலன் சீர்கொள் கோவில்[ளார்
பொருந்திய திறத்தை யோர்ந்து பொருக்கென வுரைப்பா யென்
தருந்தவ முடையான் சென்று தாதியர் தம்மோ டாய்ந்தான்.

தாதியர் மன்னர் மன்னன் தங்கிய மாடஞ் சார்ந்தாங்(கு)
ஓதியர் வணங்கி நின்சீ ரோங்குபொன் வாயில் தன்னில்
வேதிய ரமைச்சர் மன்னர் வேந்தநின் வரவு காணார்
மாதுய ருற்றா ரென்ன வாயிலோ னுற்றா னென்று. (41)

கூறினார் மடவார் கூறக் கொழுஞ்சுடர் மவுலி மீதில்
நாறுபூந் துழாய்சேர் மாமால் நல்குமா னந்த மன்னி
ஊறிய வறிவை மீட்டும் புலன்படு மொழுங்கிற் சேர்த்து [னன்
மாறிலாத் தன்பொற் கோயில் வாயில் சென்றடைய்தான் மன்-

மன்னவன் வாயில் நண்ணி மறையவ ரரசர் வேந்தன்
உன்னிய துணரு நீதி யமைச்சர்கள் உகந்து போற்ற
மின்னவிர் மணியிற் பொன்னில் விளங்குமா சனத்தி லேறி
என்னையாள் முகிலே யென்ன இருந்தனன் இருந்த காலை. (43)

மன்னவ ரமைச்சர் நீதி மறையவர் தம்மை நோக்கி
மின்னவிர் மவுலி வேந்தன் விளம்புவன் வேதாந் தத்தில்
உன்னரும் பொருள்கண் டுள்ளம் ஓங்கியோ ருடன்வா ழேனேல்
என்னைநான் வேண்டே னிந்த இருநிலத் தின்ப மென்னா, (44)

பின்னைமன் னவரை நோக்கான் பிரகிரு திக்கு மீடாம்
மின்னையே யனைய செல்வம் விரும்பினர் குழாத்து ளின்றென்
அன்னையே யத்தா வீதை யரியணை யாகு மென்றே
என்னையிக் கழுமேல் வைத்தார் யாவரென் றிரங்கி நைந்தான்.

அத்திறங் கண்ட மன்ன ரமைச்சர்கள் ஆவி வாடி
மெய்த்திறத் தின்ப நல்கும் விண்டுவுக் கடிமை யாய
சித்திர நிலையார் தம்மைச் சென்றழைத் திறைமுன் னுக்கி
இத்திறந் தேர்மி னென்ன யாவரு மிறைஞ்சி நின்றார். (46)

கமலநான் முகத்தோன் செல்வம் நரகெனக் கண்டு மெய்ம்மை
அமலவீ டறிந்து மன்னு மச்சுத னடியார் தம்மை
முமலமு மில்லா மன்னன் முன்னுறக் கண்ட போதில்
எமலமுங் கடிவீர் வம்மின் இருமினென் றிறைஞ்சித்தானும்.

இருந்தனன் நிலத்திற் கண்ட இருந்தவத் தோர்கள் மன்னு
திருந்துபார் முழுதுஞ் செங்கோல் செலுத்தியாள் கின்றசெல்வா
பொருந்துமா சனத்தின் முன்போற் போயிருந் தருள்வா யென்
கருந்தட முகில்பாற் சென்ற கருத்தினர் கழற மன்னன். [றே

மாசிலா நிலையீ ருங்கள் மலரடித் துகளே யின்றென்
பாசமார் பிறவி நோய்க்கு மருந்தெனப் பணிந்தேன் பின்னோர்
ஆசனத் திருத்தா தென்றன் அறிவென வழுதான் மன்னன்
தேசுடைத் திருமால் தொண்டர் சென்றவ னடியிற் றழ்ந்தார்.

திருமகள் கொழுநற் கன்பு தினையின தளவு மின்றி
இருநில மிறைஞ்ச யானை யெருத்தமுற் றிறுமாப் பெய்தி
அருவினை வசத்தி லாடும் அடியனை யிதுநீர் செய்தால்
பொருவிலா நிலையீ தந்தோ பொறுக்குமோ வென்று போற்றி.

பின்னுமாங் கவர்பொற் றளைப் பிடித்துயர்முடிமேல் வைத்தான்
நன்னெறி யன்ப ரோடு நான்மறை முடிவின் மன்னி
உன்னரும் பொருளை யுள்ளி யுவந்தரி யருளாற் றன்னின்
முன்னெடும் புவியிற் றேர்ந்த முத்தர்கள் மூவர் நால்வர். (51)

எனவிசைத் தருளும் பொய்கை பூதம்பே யிசைத்த பாட்டும்
அனவையற் புதுவைக் கோமான் அவதரித் தருளி முன்னே
வினவருஞ் சமயத் தாரை வென்றதும் வேதக் கோன்பின்
மனகிழ்ந் தருளிச் செய்த தமிழுமா மாய னூர்பால். (52)

மந்திரங் கேட்ட தீரன் தமிழுமா மழிசைக் கோமான்
அந்தரத் தமார் காணு அரியைவா வென்று கூறப்
பந்தணை விரலாள் பூமி பதுமையோ டெம்மா னேகி
இந்திரன் வணங்கச் சென்றங் கிருக்கையூர் புக்க வாறும். (53)

OFFICE OF THE ... ARCHAEOLOGY
19 FEB 1975

ஓங்குசீர் மழிசைக் கோமான் உரைத்தநற் றமிழு மன்போ (டு)
ஆங்கதற் பின்பு தொண்ட ரடிப்பொடி யாழ்வார் தோன்றிப்
பாங்குட னுரைத்த பாட்டும் பரமனை யடைந்த வாறும்
தேங்கமழ் மாலை மார்பன் திருந்துற விருந்து கேட்டு. (54)

செங்கணு யகனுர் நீதித் திருவரு ளிருந்த தன்றிப்
பங்கமில் முத்த ரிந்தப் படிமிசை வந்து தோன்றிப்
பொங்குமே முலகும் நீங்காப் பொறிபுல னேடு மாடும்
எங்களுக் கின்ப நல்கும் இருந்தமி ழிருந்த வாறே. (55)

என்றுரைத் துருகி நைந்தாங் கிருந்தமன் திருந்து நீதி
ஒன்றிய பகவற் பக்த ருடனிவை யுரைக்குந் தொண்டின்
இன்றுநீர் புகலு மிந்த எம்பெரு மக்கள் தம்பால் [றும்.
சென்றுநா னவர்க்காட் செய்யும் தினமெனக்குறு மோவென்-

ஆங்கவர் தமக்காட் செய்வா னவருட னமருநாளும்
ஓங்குசீ ரரங்க மாதி யுளதிருப் பதியின் மாயன்
பூங்கழல் வணங்கு நாளும் என்றுகொல் புகுமென் றெண்ணி
ஏங்கின னிருந்தான் மண்மீ தியாவரு மிறைஞ்சி யேத்த. (57)

**வேறு**

அப்படியே யகம்புறத்தும் அச்சுதன்சீ ரடியருடன்
இப்படியிற் சிலகாலம் கடத்துநாள் இயல்வேந்தன்
ஒப்பரிய கருகூலத் தாரத்தி லொன்றுகெட
எப்படியீ துரைப்பதெனக் காவலவர் இடருற்று. (58)

மந்திரிக ளுடனுரைப்ப மன்னவனே டம்மொழியைத்
தந்திரித்தார் மந்திரிகள் தார்வேந்த னது கேட்டு
வந்திருந்தா ரார்வேற்று மானிடராய் மனையிலென
நொந்திறைஞ்சிக் காவலவர் பாகவதர் எனநுவன்றார். (59)

**வேறு**

அவ்வுரை மன்னர் மன்னன் செவியுற அயர்ந்து வாடி
வெவ்விடங் குடித்தா னென்ன விம்மினன் மனத்தி னுள்ளே
எவ்வகை செய்தாற் றீரும் இப்பழி யென்ன வெண்ணிக்
கவ்வையில் குடப்பாம் பின்றே கதுமெனக் கொணர்வீ ரென்றான்

அடுத்துநின் றவர்க ளேகி யராக்குடங் கொணர்ந்து வைத்தார்
கடுப்பினில் மன்னன் பொற்பண் டாரியைக் கண்ணால் நோக்கி
எடுத்ததார் ஐயத்தாரை யியம்பிக்கை யிடவு மென்று
குடத்தரு கணைந்தான் கேட்டோர் கோவோடு முரைப்ப தானார்

மண்டல முழுது மாளும் மன்னவர் மன்ன கேட்டி
அண்டமுண் டுமிழ்ந்த சோதி யச்சுத னுசி லாத

தொண்டர்களன்றி யாருந் துன்னின ரில்லை யெந்தாய்
உண்டுமற் றியாங்க ளல்லால் உள்புகுந் தவர்க ளில்லை. (62)

எனவுரைத் தையந் தீர்வேம் யாமெனக் குடத்தின் நேரே
மனமகிழ்ந் தன்பாற் சென்றார் வையக மன்னன் நின்மின்
எனஅவர் முன்ன மெய்தி யேமுல குண்ட சோதிப்
புனமலர்த் துழாயான் தொண்டர் எடுத்திலர் பொற்பண்டாரம்

என்றுசென் றிருந்த பாம்பிற் குடத்தினில் யாருங் காண
வென்றிவேல் மன்னர் மன்னன் திருக்கையை விரைவிலிட்டாங்
அன்றுதன் பொற்பண் டாரம் போக்கினு ரிட்ட வாழி (கு)
ஒன்றெடுத் தரசன் நின்றான் உம்பர்பூ மாரி பெய்தார். (64)

மந்திரித் தலைவர் தாமும் மன்னவ னடியிற் றாழ்ந்தார்
இந்திரன் பிரம னக்கன் ஆதியாய் எவருந் தத்தம்
சிந்தையின் மகிழ்ந்தா ரன்பு (65)

10 பாட்டுக்கள் இல்லை.

### வேறு

வேண்டாயே யாயினும்யான்
உன்னை யல்லால்
புண்டரிகக் கண்ணெந்தாய் பற்றிலேன்
மற்றெனவும் புவனம் போற்ற. (75)

கட்டுரைத்துக் கொல்லி நகர்க் காவலவன்
செங்கமலக் கண்ணன் வைகும்
எட்டெழுத்தே துணையாக இருநிலமும்
வானகமும் இறைஞ்சு மவ்வூர்
விட்டெழுந்து வசுதேவர் திருமகனு
ராய்ப்பாடி சென்று மேவி
மட்டவிழுந் துழாய்முடியான் வரவுணரு
மாய்மகளிர் வசன மாக. (76)

ஊடலுடை யொருபத்தும் எடுத்துரைத்து
வான்முதலா முலகு போற்ற
மாடமிசை மதிதவழும் வடமதுரை
நகர்மன்னி யதில்வாழ் மாமால்
தாள்தொழுது தேவகியார் தம்சிறுவன்
மழலைச்சொல் தான்கே ளாதே
ஈடுபட்ட சொற்றொகை யோர்
பத்துரைத்துச் கண்ணபுரத் தெய்தினர்கள். (77)

அந்நகரத் தினிதமரும் அச்சுதனைத்
தயரதனுர் ஆவி யாய
இன்னமுத விராகவனைத் திருவுளத்தி
லெண்ணியவன் தன்னை யீன்ற
தன்னிகராள் கௌசலையாள் இராகவனைத்
தாலாட்டுந் தாலாட் டாக
இன்னிசையாற் பத்துரைத்துத் தயரதனுர்
இராகவனுர் கானி லேக. (78)

வருத்தமுற்றுப் புலம்பியசொற் றொகையாலே
ஒருபத்தும் வகுத்துக் கூறித்
திருத்திகழும் தில்லைநகர்ச் சித்திரகூ
டஞ்செறிந்து தேவர் வாழ
உருத்திரனும் வணங்கவுலக கனைத்தையு
முண்டுறங்கு மொருவன் றன்னைக்
கருத்திலுறப் பதிவித்தகக் கருணைமுகில்
அயோத்தியெய்திக் ககனம் வாழ. (79)

வேறு

வல்லரக்கர் குலமுழுது மறுத்த வாற்றை
வான்மீகி விரித்ததனைத் தொகுத்து ஞானச்
சொல்லமைந்த தமிழ்ப்பதத்தி லருளிச் செய்து
சுருதிதொடர்ந் தறிவரிய சோதி யாக
மல்லடர்த்த மாமால்வை குந்தம் புக்கு
மாமணிமண் டபஞ்செறிந்து கொல்லிக் கோமான்
எல்லையில்பே ரின்பவெள்ளச் சுழியின் மூழ்கி
இருந்தநித்தர் முத்தருடன் இருந்து வாழ்ந்தார். (80)

குலசேகராழ்வார் பிரபாவம் முற்றிற்று.

# திருப்பாணாழ்வார் பிரபாவம்

**கொச்சகக் கலிப்பா**

காராரும் பொழில்வஞ்சிக் காவலவன் கதிர்மவுலிக்
கூராரும் சுடர்வேற்கைக் குலசேக ரன்கனமும்
ஏராரும் பாகவதர் இன்னருளாற் சிறிதியம்பிச்
சீராரும் திருப்பாணாழ் வார்திறமும் செப்புவாம். (1)

மாணார்ந்த திருவரங்கர்க் கண்டகண்கள் மண்ணுலகிற்
காணாமற் றென்றினையும் எனக்கரைந்து கட்டுரைத்த
பாணாழ்வா ரநுபவத்தைப் பாடவெனப் பத்தர்கள்முன்
நாணாதே யொருப்பட்டேன் இதில்வேறு நகையுளதோ. (2)

மனுமகனுக் கயன்கொடுத்த மரகதமா மணிக்குன்றம்
எனுமரங்கத் தம்மானை யிதயமல ரணைக்கிடத்தி
அனுபவிக்குந் திறமுணரில் திருமகளுஞ் சும்மடியேன்
பனுவலுக்கே வெளியாவார் பாணாழ்வா ரல்லரோ. (3)

என்றூற்பொய் யடியேனுக் கெளிதோமற் றவன்சீர்த்தி
நின்றூங்கே யதுநிற்க நாயினேன் புன்சொலினும்
ஒன்றுமா றென்னென்னில் உரைதோறும் திருப்பாணன்
குன்றாத திருநாமம் வரலான்மெய் குறித்தேனே. (4)

ஆங்கவையே துணையாக அறைகுவன்மெய் விண்ணின்று
பூங்கமலக் கண்ணெம்மான் திருவருளாற் புவியின்மறை
ஓங்குதிரு உறையூரில் திருக்குலத்தா ருறுதவத்தின்
பாங்கதனாற் கார்த்திகைமா தத்தில்வளர் பக்கத்தில். (5)

செய்யநெறி யுரோகணியில் தேவர்களுந் திருமறையும்
வையகமும் முனிவர்களும் மாதவரு மகிழ்ந்தேத்தப்
பையரவத் தணைகிடந்தான் பத்தர்குழாம் பரிந்தோங்க
ஐயனெனை யாளவந்த திருப்பாணன் அவதரித்தான். (6)

ஈன்றூரு மறியாதே யிலைமறைகா யெனமண்ணில்
தோன்றாதே வளர்ந்தருளிச் சுருதிதொழ வுலகுய்ய
மூன்றாகு திருவயதில் கவுசிகநா ரதமுனிவர்
போன்றூரு மிவர்க்கொவ்வா ரெனுமிசையிற் பொதுவின்றி. (7)

சூழ்விசும்பும் அதிலமரர் தொல்லுலகு மம்புவியும்
ஆழ்கடலு மெண்கிரியு மயனரனு மசுரர்களும்
வாழுமுயிர் சராசரமும் நீரான மயமாக
ஏழிசையும் பாண்பெருமாள் நம்பெருமா ளிடத்திசைத்தார். (8)

தென்னாற்றங் கரைநின்று திருப்பாண ரிவைபயில
நன்னாட்டார் திருக்குலத்தி லவதரித்தார் இவர்யாரோ
பொன்னாட்டி லுள்ளவரோ எனப்புகலப் புண்ணியரும்
பன்னாளுந் திருவரங்கத் தம்மானைப் பணிந்தேத்தி. (9)

அப்படியே பலகாலம் அமர்ந்தரங்க சேவைபண்ணி
ஒப்பில்லாச் சங்கீதம் பயின்றிடுநாள் மாவானும்
இப்படியு மளந்தபிரான் திருமார்பி லினிதமரும்
செப்பென்னுங் கனதனத்தாள் திருமங்கை மனமகிழ்ந்தே. (10)

வேறு

திருவ ரங்கநக ரெம்பி ரானெடிவை
செப்பும் வானிலுறை தேவரும்
மருவ ரும்பொருவில் வீட தாதியுல
கேழி னும்மிசை வழுத்துவோர்
ஒருவ ரிங்கிவரை யொத்து ளார்கள்பிறர்
உண்டு கொல்லுரை செய்யுமிப்
பெருகு காதலர்பு றம்பு நிற்றல்பழு
தென்று செங்கமலை பேசலும். (11)

அண்ட ரண்டமுள் ளடங்க வுண்டுதுயில்
கொண்ட மாலணி யரங்கனார்
புண்ட ரீகமலர் மங்கை கட்டுரைசெய்
போதி லங்கவ ணினைந்துறத்
தொண்ட ரைக்கொணர்மின் என்று செம்பவள
வாய்திறந் திறைவர் சொல்லவக்
கொண்டல் கோயில்திரு வாயில் காவலவர்
ஏகினார் குழுவோ டேகியே. (12)

வீதி பற்பலந டந்து சென்றவர்கள்
திருமுகத் துறையை மேவிநின்
றாதி நாதனரு ளச்சு தன்னணி
யரங்கி னின்றுனை யழைத்தனன்
போதி யெங்களொடு மென்று செப்பியவர்
பொற்ப தங்களிலி றைஞ்சலும்
சாதி யிற்கடைய னென்று பாணரது
தக்க தன்றென வணங்கினார். (13)

வணங்கி நின்றவ ருரைப்ப மற்றவர்கள்
மாசி லாநெறி யரங்கர்முக்
குணங்க டந்தவர்மு னெய்தி யிம்மொழிகள்
கூறு வோமெனவு மேகினர்

பணங்க ளாயிர மிலங்க னந்தன்மிசை
மன்னு வோயினியப் பத்தனுர்
இணங்கு கின்றிலர் குணங்க ளெண்ணியிவண்
எய்து வானென விறைஞ்சினுர். (14)

வேறு

அந்தவுரை சிந்தைபுக ஆதியவ ரோடு
முந்தமறை நீதிகுல முற்றும்வரு வித்த
எந்தமுறு தொல்குல மியம்பிலென தன்பால்
வந்தகுல மேகுலம் வரச்சொலுமி னென்ருன். (15)

நன்றிவையு ரைத்திடுவம் நாதவென நால்வர்
சென்றுவிரை விற்றிரு முகத்துறைசெ றிந்தே
நின்றிசைவ குக்குநிம லற்கிவை நிகழ்த்த
ஒன்றுளது கொண்மினென மற்றவரு ரைப்பார். (16)

மின்னையொளிர் நேமியுடை விண்டுவுரை செய்யப்
பின்னைமண வாளனை யடைந்துபிறி தற்றுத்
தன்னையற விட்டதலை வற்கது தகுங்கொல்
என்னையவ ரோடுமிறை யெண்ணிடலு நன்றே. (17)

செப்பிலடி யேன்முடிவில் தீவினைசெய் நீசன்
ஒப்பரிய சோதிவளர் உத்தம தலத்தில்
எப்படி மிதிப்பதிரு கால்கொடெனை யாளும்
அப்பனொடு கட்டுரைமின் என்றனரவ் வாழ்வார். (18)

கூறவிறை யேவலொடு சென்றவர்கள் கூறும்
மாறிடிலு மைக்கொடுசெல் வோம்வலியி லென்றே
ஏறியெதிர் செல்லவவர் ஓடியவ ணெட்டா(து)
ஆறுவரு காவிரியி லக்கரையி லானுர். (19)

இத்திறம ரங்கரொடி யம்பிடுவ மென்றே
மெய்த்திற முணர்ந்தநெறி நால்வர்களு மீண்டங்(கு)
அத்திறமு மாயனொடை றைந்தனர்க ளம்மான்
எத்திறமி யற்றிலிவன் எய்துமென வெண்ணி. (20)

வேறு

அலகி லாத மாமாயன் அரங்கன் றனையர்ச் சனைசெய்யும்
உலக சார்ங்க முனியையுகந் துகந்து கூவி யுத்தமபோய்ப்
பலருங் காண நின்றேளில் பாணும் வானைப் பரிந்தேந்தி
நிலவும் பதியை வலஞ்செய்து கொணர்க வென்ருன் நிகரில்லான்

வேறு

மாசிலா முனிவன் மாயன் மலரடி வணங்கி யேக
ஆசிலா வனைத்துக் கொத்தும் அவனுடன் சென்மி னென்றே
ஈசனு மருளிச் செய்ய யாவரு மெழுந்து சென்றத்
தேசினுன் நின்று பாடும் திருமுகத் துறையை மன்னி. (22)

சுற்றுற வளைந்து கொண்டு தொழுதனர் திருப்பா ணாழ்வார்
உற்றவர் தாள்கள் தம்மில் உடன்பணிந் துருக வீசற்
கற்றனும் முனிவ னாழ்வீர் அருளிப் பாடுமக்கி தென்றான்
நற்றவ முடைய பத்தர் நானது செய்யே னென்றார். (23)

ஏடவிழ் துளவத் தாரான் எடுத்துமைக் கொணரச் சொன்னான்
ஓடவு மொட்டோ மாழ்வீர் என்றவ ரருகு சென்றார்
மாடுநின் றவரை நோக்கார் மற்றொரு திசையை நோக்கிக்
கூடுமோ நீசன் மாசில் குலத்தொடு மென்று சாற்றி (24)

கடுப்பினி லாழ்வா ரோடக் காத்துற வளைந்து நின்றார்
தடுத்தன ரோடல் தன்னைச் சரணென வணங்கி மண்ணில்
படுத்தனர் திருப்பா ணாழ்வார் பங்கயத் தயனும் போற்ற
எடுத்துற முனிவ னேந்தி யிருத்தினன் திருத்தோள் தன்னில்.()

நண்ணரு மிலங்கை வேந்தை நாளைவா வென்ற அந்நாள்
கண்ணனைத் தோள்மேற் கொண்டு களித்தமா ருதியை மானப்
பண்ணமர் கவிவ லானைத் தாங்கியப் பனவன் பெற்ற
உண்ணிறை மகிழ்ச்சி யேழேழ் உலகினி லொருவற் குண்டோ.

இடிநிகர் முரச மார்ப்ப இமையவர் முனிவர் சித்தர்
கடிமலர் சிந்தி யார்ப்பச் காசினி யோர்கள் போற்றிப்
படிமிசை யிறைஞ்சி வாழ்த்தப் பத்தர்கள் குழாங்க ளோடும்
அடிதொறும் சேறு பாயு மானந்த வருவி நீரால். (27)

அணியரங் கத்தை முக்கால் அவ்வணம் வலஞ்செய் தேகப்
பணியணைக் கிடந்த மாமால் பாணர்மெய் விழிகள் நோமுன்
கணிகணன் பின்னே போன கஞ்சமா மலர்த்தா ளாதி
மணிமுடி வரையுங் காட்டி மாசிலா மகிழ்ச்சி யீந்தார். (28)

மும்மலமு மற்ற நீதி முனிவரன் திருத்தோள் மன்னி
எமலமும் கடிவார் வீதி யூடவ ரேகுங் காலை
அமலனெம் ஆதி நீதி அணியரங் கத்து ளெம்மான்
கமலபா தங்கள் வந்தென் கண்ணுளொக் கின்ற வென்றும்.(29)

நின்றதாள் போய தாளால் நிலம்விசும் பளந்து நீண்ட
வென்றிவே லரக்கர் துஞ்ச வெங்கணை துரந்த வீரன்
மன்றல்சேர் துளபத் தாரான் வளர்திரு வரையிற் கண்டு
சென்றதாம் சிவந்த செம்பொன் ஆடையிற் சிந்தை யென்றும்.()

வேறு

முந்திபாய் வேங்கட மலையை மன்னியும்
இந்தியங் கடிந்தவர் இதயப் போதினும்
சிந்தியா தடிதொழுந் திருவ ரங்கனர்
உந்திமே லெனதுயிர் ஒடுங்கிற் றென்னவும். (31)

கலகமா ரிலங்கையர் வேந்தன் காட்டிய
அலகிலா வாற்றலை யறுத்த மாயனர்
உலகெலாம் உண்டொடுக் குதர பந்தனம்
நிலவுமென் னுளத்தென நெகிழ்ந்து கூறியும். (32)

வேறு

தந்தைதாய் சுற்றம்உற்ற தமியனேன் உயிருமாகி [தென்
முந்தைநாள் விரும்பிச் செய்து மொய்த்தவல் வினையுந் தீர்த்-
சிந்தையைக் கோயில் கொண்டு திருவ ரங்கத்துள் மன்னும்
எந்தையார் திருமார் பன்றோ என்னையாட் கொண்ட தென்றும்.

வண்டமர் இதழித் தாரோன் வல்வினை முழுதுந் தீர்த்து
கொண்டல்வந் தமருஞ் சோலைக் குளிர்புன லரங்கம் மன்னி
அண்டரண் டங்க ளாதி யனைத்துள பொருளுந் தண்டா
துண்டமா மிடறு கண்டூர் உயக்கொண்ட தென்னை யென்றும்.()

கையமர் ஆழி சங்காம் கதிர்மதி யிருபால் மன்னும்
மையமர் கிரிய தென்ன வளர்வதாங் கருணைக் குன்றம்
பையர வணையுள் மன்னும் அரங்கனர் பதுமம் போன்ற
செய்யவாய் ஐயோ இன்றென் சிந்தனை கவர்ந்த தென்றும்.(35)

பரியவா ளவுண னுகம் படிமிசை மடிமே லிட்டு
வரியவா ளுகிராற் கீண்ட வரியென தரங்கத் தம்மான்
உரியமா முகத்தின் நீண்டு செவ்வரி யோடி வாடாப்
பெரியவான் கண்க ளென்னைப் பேதமை செய்த வென்றும்.(36)

பாலனய் ஞால முண்டு பங்கயச் செல்வி தன்னே
டாலமா மரத்தி லோர்சிற் றிலையமர் அரங்கத் தம்மான்
கோலமா மணிக ளாரங் குறுநகை முடிவில் சோதி
நீலமா மேனி நெஞ்சை நிறைக்கின்ற தந்தோ வென்றும். (37)

கொண்டல்போ லுருவத் தானைக் கோவல னுகி நெய்பால்
உண்டசெவ் வாயி னனை உளம்புகுந் துருக்கின் றனை
அண்டர்கள் பெருமான் தன்னை அமுதனை யரங்கத்தானைக்
கண்டவென் கண்க ளாற்பின் காண்கிலே னென்றை யென்றும்.

வேறு

அப்படியே திருமொழியோர் பத்துரைத்தாங்
கணியரங்கன் திருமுற் றத்தில்
ஒப்பரிய முனிவரனே டெய்தியவன்
திருத்தோணின் றும்பர் வாழ்த்தச்
செப்பரிய பாண்பெருமாள் நம்பெருமாள்
சரணமெனச் சென்று தாழ்ந்தார்
இப்படியே யிறையருளின் செயலிருக்கு
மென்றெருருவர்க் கியம்ப லாமே. (39)

சரணமெனத் திருவடிக்கீழ்ச் சென்றிறைஞ்சும்
பாண்பெருமாள் தன்னை நோக்கிக்
கரணவொழுங் குறும்வஞ்சப் பொய்யன்புக்
கெட்டாத கமலச் செவ்வாய்ப்
புரணனெழுந் திணையடியை மெய்யன்பர்
சென்னிமிசைப் பொருந்த பூட்ட
அரணிதுவோ புகலிடமென் றக்கமலத்
திருவடியி லடங்கி ஞரால். (40)

இன்பவீ டடைவார் தூலமா முடல்விட்
டெழில்திகழ் சூக்குமங் கழற்றித்
துன்பவா தனையும் விரசையிற் போக்கிச்
செறிவறத் துணுக்கென்று பாணர்
என்புதோ லுரோமத் தூலமாங் கண்ணன்
இணையடி யெய்தின ரென்றல்
அன்பினு லன்றி யொன்றினு லுய்யும்
உபாயமெவ் வண்டத்து முளதோ. (41)

திருப்பாணுழ்வார் பிரபாவம் முற்றிற்று.

# நம்மாழ்வார் பிரபாவம்

## கொச்சகக் கலிப்பா

உருவெழுதி யயனறியா ஓதவண்ண ரடியடைந்த
மருவெழுதண் ணுறையூரன் வளர்புகழின் திறங்கூறிக்
குருவெழுதி யடியேனுக் கருளியசொற் கொழுந்தமிழால்
திருவழுதி வளநாடன் திறமறிந்த படிபுகல்வாம். (1)

படிமுதலேழ் உலகுண்ட பரம்பரனைப் பத்தியினால்
மடிபிடித்து நின்னில்யான் பெரியனென வழக்கமது
அடியடைந்த சடகோபன் அனுபவத்தை யெடுத்துரைப்பக்
கொடியனேன் ஒருப்பட்டேன் கொடும்பிழைவே றிதினுண்டோ.

சீர்கொண்ட திருவழுதி வளநாட்டிற் சென்மித்தோர்
பேர்கொண்டோ ராவணத்தென் பேரெழுதப் பெற்றுமிலேன்
ஏர்கொண்ட திருக்குருகூர் எல்லையிலோர் நாயாயவ்
வூர்கண்டு புறந்திரியா நானேவீ தொருப்படுவேன். (3)

## வேறு

குரவர்பால் வஞ்சஞ் செய்து குரைகடல் வண்ணச் சோதி
அரவணைக் கிடந்த மாயர் அடியவ ரபசா ரத்தில்
இரவுநண் பகலும் வைகு மிருவினை யேனே மாலைப்
பரவிவாழ் குருகைக் கோனைப் பாடவென் றொருப்பட்டேனே.

ஆசார வீன னாகி யரிவையர் கற்புக் கற்பம்
கூசாது சென்று தீண்டிக் கொடுவிடந் துய்ப்ப யாரும்
நீசாபோ வென்று நீக்கும் நீசனேன் றானே மாறன்
தேசாரும் புகழைக் கூறச் சிந்தனை செய்தே னந்தோ (5)

அருவினைத் தொழிலை யஞ்சா [1]தந்தனிங் கறையு மாபோல்
இருவினை வசத்தி லாடும் இடுகடை யேனும் பாடத்
திருவரு ளுடையார் போற்றும் செண்பக மாறன் தன்னைக்
கருதினேன் என்செய் கின்றேன் கற்றவர் கருத்தின்நேரே. (6)

## வேறு

மாசில் மதுரகவித்தம் பிரான் வாழ்மாறன்
ஆசில் தமிழ்மறையோ ராயிரத்தி லோர்பாட்டில்
ஈசன் திறமுணர்ந்தார் எங்ஙனே சொல்லிடினும்
தேசுறு பேரின்பம் பயக்குமென்றான் தீவினையேன். (7)

ஆங்கவையே சார்வாய் அவனை நினைந்தவன்றன்
பூங்கழலை யேத்தப் புலையன் ஒருப்பட்டேன்

---

1. அந்தன்—அறிவிலான்

ஓங்கு புகழ்க்கவிகள் ஓரார் இதன்பிழைமண்
தாங்கு மணற்சோறு தருங்கல்லா ராராய்வார். (8)

வேறு

ஆதி நாதன் திருவுந்திக் கமலத் தயனுக் காங்கொருநாள்
ஓதித் திரண்ட சதுரயுகம் இரண்டா யிரமா மோராண்டு
பேதித் திடநாள் முந்நூற்றே டறுபத் தைஞ்சு பெருவனவாம்
நீதிக் குறையுள் ளாமயற்கு நிறைந்த வயது மொருநூறும். (9)

வேறு

அந்தச் சதுரயுக மிரைஞ்ஞூ றயன்பகலில்
வந்தமனுப் பதினல்வர் மற்றதனைக் கூறிட்டுப்
பந்தமறு மோரொருவற் கெழுபத்தொன் றுய்ப்பரிப்பாம்
நந்தலிலா வோராறு பாரணமென் னவுநாட்டி. (10)

வேறு

அத்திற முடைய நீதி யயற்கொரு பகலிற் றோன்றி
மெய்த்திற மனுக்கள் எண்மர் அறுவரும் விரைவின் வீவர்
பொய்த்திற மனையர்க் கங்குற் பொழுதெலாம் சலத்தில் மூடும்
இத்திறம் பிரமர் தோன்றி யிறந்தவர்க் கிலக்கேதென்னில்.(11)

செப்புமேழ் கடலி னெக்கர்ச் செறியுணு மணலின் மிக்கார்
தப்பற வுதித்தார் முன்னஞ் சாற்றிய அவரிற் பின்னுய்
இப்பொழு தண்ட மெல்லாம் இயற்றிய பிரம னுருக்
கொப்பரும் வயது நூற்றில் ஓங்குமுன் னைம்ப தாங்கே. (12)

அற்றபின் ஐம்ப தென்றே அரைவதின் முதனு டன்னில்
உற்றதோர் பகலி லீரேழ் உரைப்படும் மனுவின் நால்வர்
கற்றசீ ரிருவர் காலங் கடந்தபின் ஏழா நாமம்
பொற்றவை வச்சு தற்குப் பிரமன்முன் விதிக்கப் பட்ட. (13)

வேறு

சாற்றரிய சதுரயுக மெழுபத் தொன்றில்
சதுரயுக மிருபத்தே ழவர்க்குச் சென்று
தோற்றியவை கழிந்ததற்பின் இருபத் தெட்டில்
துலங்கியதோர் துவாபரமா முகத்தந் தத்தில்
ஏற்றமுடை நாவலவன் தீவிற் றென்பால்
இலங்குதிருக் குருகூரில் ஈசன் கூறும்
ஆற்றல்மிகுங் கேத்திரமோ ரைந்தின் மாயன்
அருள் வளருந் தாந்தககேத் திரம தாய. (14)

வேறு

ஆசில் பொதிய மலைநல்கும் அலையார் பொருனை வளமுடைய
மாசில் வழுதி வளநாட்டின் மாடத்திருக்குரு கூரின் மறை

பேசும் வன்னம் நான்கிலறம் பெருக்கு நாலாம் வன்னத்தில்
தேசோ டோங்கும் திருவழுதி கிழவ னென்போன் திருமகவாய்.

வேறு

அறந்தாங்கி ஞருதித்தார் அவர்மகனுய் உலகுய்யச்
சிறந்தோங்கு மருட்சக்ர பாணியார் சென்மித்தார்
பிறந்தார்மற் றவர்மகனுய் அச்சதரென் போர்பெரிய
திறந்தாங்குஞ் சேந்தரவர் திருமகனுய்ச் செனித்தனரால். (16)

மற்றவர்க்குத் திருமகனுய் பந்தனர்செங் கண்ணரவர்
பெற்றமகன் போர்க்கழியார் பெருந்தவத்தா லுயர்ந்தோங்கி
உற்றவர்பால் காரியார் உதித்தனரே ருலகுய்யக்
கற்றவர்கண் மணியெனுமக் காரியார் கலையனைத்தும். (17)

ஓதிவளர் திருவயதாங் கொருபத்தா றுற்றதற்பின்
வேதியர்கள் விதிப்படியே விளங்கியதம் மரபிலுறும்
சாதியிலோர் மடக்கொடியைத் தான்நோக்கி மணஞ்செய்ய
ஆதியரு ளால்வந்த போர்க்கழியார் ஆய்ந்தனரால். (18)

உலகனைத்து முறநோக்கிக் காரியார்க் கொத்தவெழில்
இலவிதழ்வாய் மடக்கொடியைக் காணுதே யிறைபெருஞ்சீர்
நிலவு திருப் பரிசார நீள்நகரில் போர்க்கழிதன்
குலமிருந்த தெனக்கேட்டுச் சென்றூரக் குலமோங்க. (19)

வேறு

மருவார் பொழில்கள் புடைசூழும்
வண்பரி சாரத் துறைபவரில்
திருவாழ் மார்பர் திருத்தம்பி
தெர்ப்பா சனத்தர் திருமகளாய்
அருமா மறையின் திருவுருவாம்
உடையநங்கை யெனுமணங்கைப்
பொருமா கடலில் வரும்முதைப்
பேசிச் சென்றூர் போர்க்கழியார். (20)

வேறு

பெண்பேசி யிவரணையப் பெற்றவர்மா துலருற்றூர்
மண்பேசு மரபுடையார் குடிகுலத்தின் வழிகேட்டு
விண்பேசும் புகழ்க்காரி யார்க்கந்த மெல்லியலைப்
பண்பேசும் மறைவிதியிற் கொடுத்தாரிப் படிவாழ. (21)

வேறு

திருமணம் புணர்ந்த பின்பு சிலபக லுவந்தவ் வூரில்
பெருமணக் கோலவத் தோடும் பிதாவொடு மன்னை யோடும்
மருமணக் குழலி யோடும் போர்க்கழி வைய முய்யத்
தருமண வாள னின்பம் தாங்கிவாழ்ந் திருக்கு நாளில். (22)

வேறு

செங்கமலத் தடவயல்சூழ் திருப்பரிசா ரத்திருந்து
பொங்குபுகழ்க் காரியார் உடையநங்கை யொடும் போந்து
கொங்குகமழ் பொழில்புடைசூழ் குறுங்குடியைக் கும்பிட்டுத்
திங்கள்தவழ் மணிமாடத் திருக்குருகூர் நகர்செறிந்தார். (23)

வேறு

சீரார் மாடத் திருக்குருகூர் செறிந்தா ரின்பச் சிறப்பினெடும்
பாரோரறியாப் பெருஞ்செல்வம் படிமேலெய்தும் பதம்பெற்றுங்
காரா ருடைய நங்கையொடும் காரி யார்வாழ்ந் திருப்பவெழில்
வாரார்முலையார்திருவயிற்றேர் மைந்தன்தோன்ற வருத்தத்தால்

வேறு

காரியார் மிகவாடிக் கற்புடைமெய்க் குலக்கொழுந்தாம்
பாரியா ருடனெழுந்து தவஞ்செய்யும் பரிவினெடும்
சீரியார் பலர்வாழுந் திருக்குறுங்கை நம்பியுடை
வேரியார் மலர்ப்பாதம் தொண்டென்றே விடைகொண்டார்.()

சென்றுதிருக் குறுங்குடியைச் செறிந்துதிருப் பாற்கடலின்
மன்றல்கமழ் குழலியொடு நீராடி வலஞ்செய்தாங்(கு)
ஒன்றியசீர் மனத்தினராய் ஒருபுதல்வ னெனக்கருளென்(று)
என்றிறைவன் சந்நிதியில் அருந்தவஞ்செய் திருந்தனரால். (26)

அந்நினைவி லவரிருப்ப அந்தாமத் திறையுயிர்கள்
தந்நினைவின் படியினைபந் தலைச்செய்யா வகையுணர்ந்தாங்(கு)
என்னினைவின் படிகாண்பேன் இனமொருகாற் பிறந்தென்ன
முன்னினைந்தான் அருள்நாதன் அவையறிந்த படிமொழிவாம்.

பொய்கைமுதல் திருப்பாணர் வரையிலுள்ள புண்ணியரை
வையமிசைப் பிறப்பித்தோம் மற்றவராற் சிறுச்சிறிதே
உய்யுநெறி யுணர்ந்துயிர்கள் அடைந்ததன்றி யொருமுகமாய்
மய்யவறுத் தடைந்ததில்லை எனவருந்தி மண்மீதில். (28)

பிறப்பேன்நான் எனில்முன்னம் பெரியதிரு வடியனந்தன்
சிறப்போடும் போய்ப்புவியிற் செனியுமெனச் செப்பவவர்க்
கறப்பொருளே யெவ்வுலகில் யாவர்களாய் அடியோங்கள்
உறப்புகுவ தறைகவென ஓதவண்ணர் கட்டுரைப்பார். (29)

பாட்டினு லுலகுய்யும் படிசெய்வேன் திருவழுதி
நாட்டிலுயர் குருகூரில் கோளூரின் நலமிகுந்த
நீட்டுபுக முடையவரே திருப்புளியாய் மறையவனுய்
வாட்டமறப் பிரவுமென்றுன் இறைவனவர் மறுத்துரைப்பார்.

அப்படிச்செய் வேமடியேம் அச்சுதநின் னருளினெடும்
எப்பொழுது வருவதுநீ வந்தக்கால் யாங்களுனே
முப்பொழுதும் பிரியாமல் முறைமுறையே தொழுதேத்தித்
தப்பறநின் னடிபரவும் நெறியருளித் தாரணியில். (31)

எத்தலத்தில் யாராக எய்துவையத் திறங்கூறி
அத்தலத்தில் அடியோங்கட் கருளியநின் பணிகூறி
உத்தமநின் விடையருள்க அடியோங்கட் கெனவுரைத்தார்
பத்தருளம் பிரியாத பரம்புருடன் பகர்ந்தருள்வான். (32)

வேதங்க ளெனையுள்ள படிகூறி விரித்ததனை
ஓதுங்கை மறையவரும் அப்பொருளை யுணர்ந்தறியார்
பூதங்க ளைந்தாகிப் புலனாகிப் பொறியாகிப்
பேதஞ்செய் தென்னுடைய மாமாயை பணித்ததனுல். (33)

அம்மாயை தனைநீக்கி ஆன்மாக்க ளெனையறிந்திங்(கு)
எம்மாவீ குறும்படிநான் இயற்றியமெய்த் திறமுணரா(து)
நம்மாலுற் றுது நோக்கத் தான்காணேன் ஒருவரையும்
நம்மால்மற் றதுகூட வேண்டுமதற் காகநான். (34)

அருமறையைத் தமிழாக்கி அண்டமெலாந் தொண்டர்களாய்
வருநெறியின் குழாங்காண மண்ணிலினிச் சென்றிருந்தால்
பொருவரிய அனந்தநிழ லாயெனையே பேரற்றுவைமெய்
தருகவிக்குப் பட்டோலை கருடநீ தான்விடிப்பை. (35)

நானுதிக்குங் குலநான்காம் வன்னத்தில் நலமிக்கார்
வானுதிக்கும் மணிமாடத் திருக்குருகூர் வளநகரில்
ஊனழிக்கும் மைந்தருக்காய் உடையநங்கை யொடுகாரி
தேனுதிக்கும் பொழில் புடைசூழ் குறுங்குடியில்தவஞ்செய்வார்.

ஆங்கவர்க்குப் பிள்ளையாய் அவரிடரும் அம்புவியோர்
தாங்கிடருங் கெடவருவேன் தசரதனுர் தவந்தாங்கித்
தீங்குடைய அசுரரிறச் செனித்தோமுன் பதுபோலத்
தேங்கமழ் பூம்பொழில்சூழ் திருக்குருகூர் தனிற்காண்பீர். (37)

ஆதலால் முன்னேநீ ரேகுமென அருள்நாதன்
வேதநா வழுவாதார் இருவர்களும் விடை கொண்டார்
சீதவான் சிறைக்கருடன் சித்திரையிற் சித்திரையில்
ஓதுதிருக் கோளூரில் மதுரகவி யாயுதித்தான். (38)

வேறு

நன்றி யானி மூலத்தின் அனந்தன் ஞானப் பிராணுகி
நின்ற ஆதிப் பிரான்வளரும் நிகரில் கோயில் வடவருகில்

சென்று பொருனைத்தென்கரையில் சிறந்தஞானத் திருப்புளியாய்
என்றும் பொன்று வரத்தோடும் வளர்ந்தான்ஈரேழ் உலகேத்த.

மாசிலாத கோளூரின் மதுர கவியாய் வந்தவரும்
ஆசில் கங்கை யகலன்பின் அவைசேர்ந் தாடவெனக்கருதி
ஈச னருளால் வடதிசையில் எகிக்கங்கை யிரும்புனலுள்
தேச மறியச் சிலகாலம் தவஞ்செய் திருந்தார் தேவர்தொழ.

**வேறு**

உறுங்கரும முன்னிகழ்ந்த திவையவையு முரைத்தபடி
குறுங்குடியி லிருந்துதவம் இயற்றிவரும் ருண்மிக்கார்
நறுந்துளவன் திருவருளால் ஞானமா மதலையைப்பின்
பெறும்பரிசு மிறையருளால் அறிந்தபடி பேசுவாம். (41)

**வேறு**

ஒருதின மூழி யூழி யோங்குமா தவத்தின் நாளும்
அருமுனிக் கணங்கள் செய்யும் மாதவ மடங்கப் பண்ணி
வருபகல் வணங்கிக் கூறும் மாசிலெண் ணைந்து செல்லத்
திருமகள் கொழுகன் அன்னூர் கனவிடைச் செறிந்து செப்பும்.

மைந்தனே விரும்பி நீங்கள் மாசறு தவங்கள் தன்னை
இந்தமா நிலத்தோர் விண்ணோர் யாவரு மிரங்கச் செய்தீர்
அந்தமில் குணத்தீருங்கட் கயண்விதி யடங்க நோக்கில்
சிந்தைநோய் தீர்க்கு மைந்தர் இலையிந்தச் செனனந்தன்னில்.

ஆயினு நம்மை நோக்கி அரும்பெருந் தவங்கள் பண்ணி
ஓயுமெய் யுடைய ரானீர் ஆதலால் உங்கள் பால்நாம்
தூயமெய்ம் மதலை யாகித் தோன்று வோம் துளங்கவேண்டாம்
போயினி நீங்க ளுங்கள் பதியிடைப் புகுவீ ரென்றான். (44)

கனிபொழிற் குறுங்கை நம்பி கட்டுரை கேட்ட காரி
இனியெமக் கிதில்வே றுண்டோ எம்பிரான் புதல்வ னாகித்
தனியனேற் கெய்தப் பெற்றால் பேறெனச் சரணந் தாழ்ந்து
பனிமலர்க் குழலி யோடும் பதியணைந் திருந்து வாழ்ந்தான்.

அப்படி யிவர்கள் வாழு நாளினில் அமலன் வையம்
இப்படி யுற்ற லீலா விபூதியை யீவ னென்னச்
செப்பருந் தனக்குத் தானோர் தொண்டனாய்ச் சீராட் டிட்டே
ஒப்பருந் தனைத்தான் பாட வேண்டுமென் றுளத்தி லெண்ணி;

அண்டகோ ளத்தி னப்பால் அவனணு மயமா யாங்கே
உண்டில்லை யென்னுந் தன்சீர் மாயையா லுற்ற யாக்கை
கண்டிறைஞ் சத்தான் தன்பேரீக் கருணைவான் திருக்கோலத்தை
விண்டுவிள் ளாதஞான யோகொடும் விண்ணோர் வாழ்த்த. (47)

மண்மிசை யுடைய நங்கை வயிற்றினிற் காரி யாராம்
அண்ணலு மகிழ்ச்சி தாங்கத் துவர்பர யுகத்தந் தத்தில்
எண்ணுமா வணிமா தத்தில் தெய்தியோர் பத்தோ டேழில்
நண்ணினன் ஞான நாதன் நான்மறை யிறைஞ்சி வாழ்த்த. (48)

அப்படி யுடைய நங்கை திருவயிற் றமர்ந்த யோகி
செப்பருங் கலியு காதி சிறந்தவை காசி தன்னில்
தப்பறு பன்னி ரண்டாம் தெய்தியிற் சாற்றும் வாரத்
தொப்பிலா வெள்ளி தன்னில் ஓங்குபூ ரணையி லும்பர். (49)

ஏற்றநற் றிருவி சாகத் திலக்கின மெடுத்து வேதம்
போற்றுகற் கடகந் தன்னில் பூசார் மகிழ்ந்து நாளும்
சாற்றரு மெஃகின் யோகந் தனிலிந்தத் தாணி மீதில்
தோற்றினன் பிறவித் துன்பம் துடைத்தேனை யாண்ட சோதி. ()

வேறு

பெற்றவ ளிராமனைப் பெற்ற கோசலை
உற்றமெய்ம் மகிழ்ச்சியை யொப்ப வோங்கினள்
மற்றையக் காரியும் மைந்தன் தோன்றவக்
கொற்றவன் கொண்டதோர் மகிழ்ச்சி கொண்டனன். (51)

வேறு

அன்று மாடத் திருக்குருகூர் அயோத்தி நகரி லசுரரிற
வென்றி வேற்கை யிராகவனுர் பிறந்த நாளின் விழாப்போன்றும்
குன்ற மெடுத்தான் வசுதேவர் குமரனுகி யிடையரிடச்
சென்று தோன்ற வளமோங்குந் திருவாய்ப் பாடி நகர்போண்றும்

வேறு

எலையறு மகிழ்ச்சிதாங்கி யிமையவர் குழாங்க ளேத்தக்
கலையறி காரி யார்தாம் காசொடு தூசும் பொன்னும்
மலையெனக் குவித்தன் றெய்தும் வறியரின் மகிழ்வோ டீந்தே
அலைபுனற் பொருளை யாடி அந்தணர் விதித்த வண்ணம். (53)

சித்திர மனையை யெய்திச் சேடியர் கொணர்ந்து காட்டப்
புத்திரன் முகமுங் கண்டான் புவனமீ ரேழுங் கண்டான்
மெய்த்திற வீடு காண விதிவழி தவமுன் செய்தோம்
எத்திறம் இதன்மேல் வேண்டு மெனமகிழ்ந் திருந்தகாலை. (54)

கூறநான் மறைக்கு மெட்டாக் கொழுஞ்சுடர்க் கருணைக்குன்-
தேறநான் வணங்கத் தந்த திருமகள் கோனுக் கான [றைத்
வீறனர் தமக்குப் பொன்று மெய்யனர் தமக்குக் காரி
மாறனு ரென்று நாமம் வழங்கினர் வானேர் வாழ்த்த (55)

வேறு

அப்படி யவர்கள்தம் மைந்த ஞமென
இப்படி யவர்செயும் இயற்கை செய்தனர்
செப்பரு முலகிடைச் சிலுகுக் கஞ்சிய
ஒப்பிலா தவர்செயல் உணர்த்து வாமரோ. (56)

வேறு

திறவாவாய் விழியாகண் திவளார முலையாரா
உறவாவார் எவராவார் உலகோர்பா லெனவோயும்
பிறவாவா னுறுவானோர் பெருமானூர் திருநாமம்
மறவாநா னிலமாமால் வசமாமோ வெனவோயும். (57)

தமரானூர் உரைகேளார் தனிநாதர் திருமாலே
எமரானு ரிவரோநான் எவரோடே துரைசெய்கேன்
அமராரா ரமுதானாய் அறிவானாய் அடியேனிங்(கு)
உமரானு ரொடுகூடேன் உயிர்வாழ்வே யெனவோயும். (58)

ஓயாமா மயல்பூணாய் உறவாயா ருயிரானாய்
மாயாமா தவர்நீள வலையோடா டிடுவாயார்
காயாமா மலர்மேலார் கருவாள்மா முகில்போல்வார்
சாயாமா திறலாயார் சரணுவார் தரைமீதே. (59)

வினையாயா வுலகோடார் வினையாவா ரதில்வாழ்வார்
தனையாவாய் திறவாய்பால் தரமாதா வெனவீணே
எனையாயா பலர்வாழ்வே இவள்வாழா ளெனவோதும்
உனையாயா இவரோடார் உறவாவா ரெனவோயும். (60)

அறிவாரார் புவிமீதே கவிநாவா யமைவார்பேர்
அறிவாயா னெறியார்வாழ் பொருள் கொளவே....
குறியாமா மறைவானோர் குலமாமா.....
மெறியாமா சாடாமா மாலிவனு மாமெனுமால். (61)

வாடாநாள் மலராள்வான் வாளாவா னோர்பெருமான்
கோடார்மா மழுவாள்வான் குலமாமா முனிவோர்தாம்
வீடாயா ரடையாரே மூலகோடாய் விடமாமால்
தாடாழா ரெனில்யாரோ தலையாவார் தரைமேலே. (62)

வாரார்பூண் முலைவாடா மலராள்சேர் மணிமார்பா
சீராரா ரமுதேவாழ் திருமாலே சிறியேனிப்
பாராயா னெறியாரார் பரமாவோ பகர்வாய்மெய்க்
காராவா ரெனவாழ்வார் உலகோடா குலமாக. (63)

முலையாரா உடல்வாடா முகம்வாடா முனையாளும்
உலையாமா தவமாமா லுறவாய்மெய்க் காராவாய்

இலேயாமா மகனுமே யினிவாமோ மெனுமால
நிலேயாரார் அறிவாரார் எனமாதா நினேவாவாள். (64)

வேறு

இப்படி யாழ்வா ரன்னே யிராப்பக லிடைவிடாது
மெய்ப்படும் வகையி ரண்டு விதம்பெற விளம்பி னைந்தார்
அப்படி தனேயு நாயேன் அறிந்தவா றறைந்துபின்னவ்
ஒப்பிலா உடைய நங்கை செய்தது முரைக்க லுற்றேன், (65)

**வேறு**

இன்னமுதக் குடமிரண்டா மெனவோங்கி மிகவிம்மி
மன்னுதிரு முலேப்பால்கள் பீரோட மனமிரங்கத்
தன்னுடைய திருமகனே முன்னிலேயாய்த் தவமீந்த
அன்னநடை யுடையநங்கை யிவையிவைகள் அறைகின்ருள்(66)

**வேறு**

தப்பா நிலேயார் தவமே தமிழ்மாரு
அப்பா முலேயிரண்டும் விம்மநா ளுற்றுகிலேன்
ஒப்பா ரில்லாதாய் சுரந்துபீ ரோடுகின்ற
இப்பா லருந்தாய்நா னென்பிழைத்தேன் என்னமுதே. (67)

ஒக்கலேமேல் வைத்தோர் கரத்தா லுனேத்தாங்கித்
தக்க முலேயூட்டத் தவமுன்பு செய்யாதேன்
மக்கள்தமைப் பெற்ற மடவார் முகநோக்கி
வெட்கினேன் மைந்தா விதியிலியே ளுனேனே. (68)

சீரார் பொருனேத் திருநாடன் உன்தந்தை
நாராயணன் குறுங்கை நம்பிதிரு முன்றிலில்நின்(று)
ஏரார் தவமன் றியற்றியுனேப் பெற்றவனேப்
பாராயோ அப்பாநின் பங்கயக் கண்விழித்தே. (69)

மானேர் விழியார்கள் மக்களழத் தாலாட்டி
ஏனே னெனச்சென் றெடுத்துமுலேப் பாலளிப்ப
நானேது செய்தேன் நம்பீ யமுதமராத்
தேனே சுரந்த திருமுலேப்பா லுண்கிலேயே. (70)

விண்ணுர் மதிள்மேல் விதியிலியேன் மைந்தாநீ
உண்ணு முலேப்பால் பிதிர்போக்க ஓங்கல்தரும்
தண்ணு ரருவித் திரள்போன்ற தாரையையென்
கண்ணு ரமுதே விழித்தொருநாட் காண்கிலேயே. (71)

உன்னுடைய தாதை யுனேயீன்ற சோபனத்தைத்
தென்னவனுர் கேட்டோர் திருமா மணித்தொட்டில்
பொன்னுலகும் மண்ணுலகும் போற்ற வரவிடுத்தார்
என்னுடைய கண்ணே இவைகுறித்து நோக்கிலேயே. (72)

ஏரார் திருப்பரிசா ரத்தினின்று மென்தந்தை
சீரா ரொளிவீசுஞ் செம்பொன் மணித்தொட்டில்
ஓராய் விடுத்தான் உனக்கென்றே பாலகனே
பராயி ரங்கதிரு மொவ்வா திதனெளிக்கே. (73)

வேத விதியா லெனேவேட் டுனேவிரும்பி
ஓத வரிய தவஞ்செய் துனேயீன்ற
தாதை யுனக்களித்த தண்டரளப் பூந்தொட்டில்
ஈதுற நோக்கி யருளாயென் இன்னமுதே. (74)

இருக்காதி வேத மெடுத்தேத்திக் காணு
உருக்காணு மென்பார் சிலர் சிலரு

வேறு

**76 லிருந்து 185 வரையில் உள்ள பாட்டுக்கள் விடப்பட்டுள்ளன**

சொன்ன

குறைவது பொருளே நானுங் கூறினே னென்று கூறும். (186)

மற்றவ ருரைப்ப ராழ்வீர் மறைகளே யாதி யந்தம்
உற்றுற வோதி னேர்கள் உரைத்திடக் கேளேம் நீரும்
கற்றிலி ரதனேத் தெய்வக் கடாக்கத்தி லுணர்ந்தீ ராகில்
அற்றமற் றிதுவென் றேதும் ஆரணம் அறைகவென்றார். (187)

என்றவ ரறையக் கேட்டாங் கெம்பிரா னருளிச் செய்யும்
நன்றுநான் நாலாம் வன்னம் நான்மறை நவில லாகா(து)
இன்றுநீர் கேட்ட வேதம் இசைத்தவப் பொருளேயெல்லாம்
ஒன்றொழி யாது காட்டித் தருவனீர் உணர்மி னென்ன. (188)

முனிவர்கள் உரையின்வேத மெனவவர் முழுது மோத
இனியநற் பொருளே யெல்லாம் எம்பிரான் இயம்பக் கேட்டுத்
தனிமுத லிவனென் றெண்ணிச் சரண்புகுந் தவரும் வாழ்ந்தார்
கனிபொழிற் குருகைக் கோமான் கருணேயார் கழறற் பாலார்.

காசினி யோர்க்குக் கையிற் சக்கரந் தன்னிற் பின்னும்
ஆசற வுபதே சித்தான் அணிகுரு கூரில் நின்ற
ஈசனேப் பொய்யன் பாலே யான்றொழ மெய்யாக் கொண்டான்
கூசிடா தெடுப்பன் என்போற் கொள்கபொய் வேடமென்ன.

கூறிட வதனேக் காண்ப மென்றுபொய்க் கொடுந்தூ றுற்று
மாறிடு முலகத் துள்ளோர் வந்துபொய் வேடங் கொள்ள
நாறுபூந் துழாயான் மெய்யாய் நடத்தினு னதுகண் டாங்கே
தேறினர் மண்ணோ ரெல்லாம் செங்கண னடிய ரானுர். (191)

அன்பரிங் கொருவ ரின்றி அருந்துய ருற்று வாடித் [இங்
துன்புறும் மாறன் தொண்டர் தோற்றிய குழாத்தைக் கண்டு-
கின்பமுற் றிவைமேன் மேலும் பொலிகவென் றெடுத்தோர் பத்
வன்புல னவரைச் சாரா மங்களா சனத்தைச் செய்தான். [தும்

கட்டுரைத் தருளிப் பின்னைக் கண்ணனைக் கானத்தேக
விட்டிவரைப் பிரிந்து வைகும்
மட்டவிழ் துழாயி னுற்கு மடலூர்வான் மனத்தினெண்ணிச்
சிட்டர்வாழ் குருகைக் கோமான் மாசறுசோதி செய்தான்(193)

ஆங்(கது செப்)பு முன்பே அறைந்தசீர் மடலூர் வானும்
ஏங்கிய வருத்தந் தன்னல் யாக்கையால் இயலாத் துன்பும்
தாங்கிய ஆவி யிந்தச் சடத்தைவிட் டகலாத் துன்பும்
ஓங்கிடச் சிந்தை நொந்தாங் கூரெலாந் துஞ்சச் செய்தான்.

அருந்துய ரிவண மெய்த அழகிய நம்பி வந்து
திருந்துரு வெளியாத் தோன்றச் செண்பக மாறன் கண்டு
வருந்தல்தீர்த் தெங்ங னேயோ அன்னைமீ ரென்ன வாக்கால்
குருங்கைமா லருளைப் பெற்ற கொம்பெனக் கூறி வாழ்ந்தான்.

அப்படி யாசை யுற்றுங் கறைந்தவக் கொம்பு பின்பு
செப்பருங் கடல்ஞா லத்தில் சீதரன் செய்த தெல்லாம்
இப்பொழு தியானே செய்தே னெனமய லேறி நின்று
தப்பற வுரைப்பத் தாயும் அவைகண்டு தரணி யோர்பால்(196)

என்னென வறியே னந்தோ என்மகள் அறிவின் மேலே
முன்னுல களந்தான் ஏறி மொழிவதோ அவனுற் செய்யும் [னப்
முன்னருந் தொழில்கள் தான்செய் திட்டதென் றுரைக்குமென்
பன்னரு மொழியுந் தாயார் பகர்ந்ததாய்ப் பகர்ந்தார் பத்தர்.

ஆங்கதற் பின்பு நோற்ற நோன்பிலே னென்றெ டுத்துத்
தேங்கிய பத்தி யில்லேன் தவமெழில் ஞான மென்னைத்
தாங்கிநீ தான்வீட் டின்பம் தருதியென் றறைந்தான் தன்சீர்ப்
பூங்கழல் தொழுவார் தொண்டர் தொண்டுசெய் பொருளை-
[யீவான். (198)

வேறு

ஆரா வமுத மெனும்பத்தில் அரியைக் கூவ அவன் விரைவில்
வாரா தொழிய மிகவாடி மனத்தி லீடு பட்டுனடி [ருன்
தாராய் தருவாய் நீயல்லா திலையோர் சரணிங் கெனக்கென்-
ஈரா வினைகள் ஈர்த்தடியேன் அகத்தே வளர்செண் பகமாறன்.()

### வேறு

திருவல்லே வாழென்று செப்பும் பத்தினில்
மருவிய திருவடி வணங்கப் போயபெண்
அருவழி நடப்பதற் காவி யின்றியப்
பொருவரு நகர்ப்புறம் புகுந்தோர் சோலேயில். (200)

கிடந்துயிர்த் தோழிய ரோடு கேடிலீர்
நடந்துநான் திருவலே வாழு நாதனேத்
தடம்பெருங் கைகளால் வணங்கித் தாழ்வதிவ்
உடம்புட னென்றெனக் குறுங்கொ லென்னவும். (201)

கூறியும் பிறந்தவா றென்று கூறிய
மாறிலாப் பத்தினில் நந்த கோன்மகன்
ஊறுபால் வெண்ணெய்கட் டுண்ட தாதியாத்
தேறுமுற் குணங்களேச் சிந்தை செய்துநான். (202)

உன்னேவிட் டிறையுமிவ் வுலகில் வாழ்கிலேன்
என்னேநீ கூவுதி யிலங்கு வேல்விழிப்
பின்னேநா யகவெனப் பிதற்றி வாடினுன்
தன்னேநான் துதிசெயத் தந்த நம்பிரான். (203)

### வேறு

அடுத்த வைகல் பூங்கழியில் திருவண் வண்டூர் மாறன்பால்
தொடுத்த வாசை மிகத்தூதாய்த் தூநீ ரிரைதேர் பறவைகளே
விடுத்துத் தலேவன் வரவுணரும் கொம்பாய் வாடி மெலிந்தானீர்
உடுத்த பதினெண் பூமியையும் திருவாய் மொழியா லுய்வித்-
[தான். (204)

### வேறு

தன்னிடைத் துயர மெல்லாம் சாற்றிமுன் விடுத்த தூதால்
மன்னுசீர்த் திருவண் வண்டூர் மாயன் மெய் வந்துதீண்ட
உன்னேயிவ் வளவுங் கூற என்செய்தா யென்ன வூடி
மின்னிடை மடவா ராதி பத்தையும் விரித்தான் மாறன் (205)

செல்வநான் மறையோர் வாழும் திருமெய்விண்ணகருருள் மா
பல்பல பொருளு மாகிப் பரந்தமெய் யனேத்து நோக்கி [மால்
நல்குர வாதி பத்தும் ஞானமாய் நவின்ரு னென்னே
அல்லலிற் படாதாட் கொண்டேன் அருவினே யறுத்தவம்மான்.

விண்ணக ரண்ண லான பரிசெலாம் விரித்த தற்பின்
பண்ணமர் குரவை யாய்ச்சி யென்றுரைத் தருளும் பத்தில்
மண்மிசை நந்த கோபன் மகனுடை விளேயாட் டெல்லாம்
எண்ணிநான் பரவப் பெற்றேனெனக்கினிக் குறையே தென்றும்

எலேயறும் மகிழ்ச்சி தாங்கி யிருந்துபின் ஒருபெண் ணுகித்
தொலேவிலி மங்க லத்தைத் தொழுததிற் றுணிவி னேடும்
தலேவனேப் புணர்வா னேகத் தாயவை தடுப்பக் கண்ட
நிலேயுயிர்த் தோழி சென்றத் தாயரை நோக்கி நின்றே. (208)

### வேறு

காட்டிக் கொடுத்தீ ரறியாத
கன்னி தனக்குக் கருமுகிலே
நீட்டிக் குறைக்கில் நெடும்பகையென்
றுலகோர் சொல்லு நிலேயன்ருே
நாட்டிற் பழிக்கு நீரஞ்சித்
தடுத்தால் நங்கை நிலாளென்னக்
கூட்டிக் கொடுத்த வுயிர்த்தோழி
கொம்பின் செயலேக் குறித்திரங்கி. (209)

### வேறு

அன்னேயே தடுத்ததாக அருளினு ராங்கோர் பத்தும்
பின்னேயும் மாற்கு வைய மென்றதி லந்தப் பெண்தான்
முன்னேயா ரணங்கள் போற்றும் முதல்வன்மே லாசை பூண்டு
தன்னேயு மறந்து தாய்மார் தன்னிடை மகிழ்ந்து சாத்தும்.(210)

அணிகல னுடை முற்றும் அறவிகழ்ந் தெறியக் கண்டு
பணியிவை யென்கொ லென்னப் பேசிய தேசத் தார்க்குப்
பணியணே யுடையார் மாய மயக்கிடைப் பட்டா ளென்னத்
துணிவுடை யன்னே சொல்லும் துகளறு சொல்ல தாக, (211)

செப்பினுன் மாறன் பின்னச் சேயிழை தனக்கென் றன்னே
ஒப்பிலா பரணஞ் சாத்தி உடுதுகி லுடுத்தி யுண்ணென்(று)
அப்பொழு தன்னந் தண்ணீர் வெற்றிலே யடைக் காயீய
இப்பொழு தெனக்குக் கோளூர் பதியதா யினிது வைகும்.(212)

கண்ணனே யுண்ணுஞ் சோறுங் களிப்பொடு பருகு நீரும்
வெண்ணகைக் கழகு செய்யும் வெற்றிலே பிளவு மென்னத்
திண்ணமா யவ்வூ ரெய்தத் தேடித்தாய் வருந்த லாக
உண்ணுஞ்சோ ருதி பத்தும் உரைத்தனன் உவமை யில்லான்.()

ஆங்கதற் பின்பு தாஞேர் அரிவையாய் அமரர் வேந்தன்
தாங்கிய வுலகு மண்ணும் பறவைகள் தமக்கு நல்கி
ஓங்குவை குந்த மன்னும் உத்தமர்க் கென்றா தாகப்
பாங்குட னுரைத்தாள் வீரென் றன்பினுற் பகர்ந்த பண்சேர். ()

### வேறு

சீரார் பொன்னுல காதிபத்தும்
செப்பிப் பரம பதத்திருந்த
நாரா யணனே வருதியென
ஞால மிரங்க விண்ணிரங்க
நீராய் நிலனாய் எனும்பத்தில்
நெடுமா லிரங்க இருந்துரைத்தான்
காரார் பொழில்சூழ் திருக்குருகூர்க்
காரி மாறன் சடகோபன். (215)

### வேறு

பொருவிலா வுலகமுண்ட பெருவாயன்
என்றன்பாற் புகலும் பத்தில்
மருவரிய வேங்கடப்பொற் குன்றிலுறை
மாயவனை மார்பில் வைகும்
திருமகளை முன்னிட்டுச் சிந்தனையிற்
சென்றிறைஞ்சிச் சரணம் புக்கான்
அருமறையு மறிவரிய பொருளையிந்த
அம்புவியோர்க் கருளிச் செய்தான். (216)

### வேறு

அடுத்த வுண்ணி லாவிதனில்
சரணு கதியென் றடிபணிய
எடுத்து விரைவிற் பரமபதத்
திறைவ னேற்று வகைகண்டு
தொடுத்த வஞ்சப் புலன்கள்தமக்
கிரையா யென்னைத் துணிந்திட்டுக்
கெடுத்தா யின்னுங் கெடுப்பாய்கொல்
முறையோ வென்றான் கேடில்லான். (217)

அப்படி யுண்ணு மாவிதனில்
முறையிட் டலற நான்மறைக்கும்
செப்ப வரிய பரம்புருடன்
சேரா வகையால் மிகவாடா
ஒப்பில் கங்குல் தனிலாசை
உற்றோர் பெண்ணாய் நம்பெருமாள்
எப்போ வருவ னெனத்தன்னை
மறந்து கிடப்ப அவ்வியல்பை. (218)

கண்ட வன்னே நம்பெருமாள்
முன்னே யிந்தக் கன்னிதனைத்
கொண்டு சென்றுள் படிக்கிடத்திக்
கூச்ச மின்றி மருமகனைத்
தண்டி நின்றென் மகளுன்னைச்
சாற்றி மறந்தாள் இவள்திறத்தில்
பண்டு புவியுண் டவனே நீ
என்செய் திட்டாய் எனப்பல்கால் (219)

உரைத்த வாறே யுரைசெய்த
ஓங்கு வெள்ளைச் சுரிசங்கில்
விரைக்கொள் பொழில்சூழ் தென்னரங்கன்
பேரை யன்னை முனம்விரிப்பத்
தரைப்புக் கயர்ந்தா ளுடன்தேறி
வேட்டைக் கவன்போய்ச் சார்ந்திருந்த
விரைத்தண் பொருனைத் தென்திருப்பேர்
தன்னில் மனத்தை யிருந்தேவி. (220)

புலம்பி நின்ற வாறுகச்
செப்பி முன்னம் பூதலத்தில்
அலம்புந் திரைநீள் பாற்கடலில்
அரவத் தணையிற் கிடந்தபிரான்
குலங்கொள் தரும நெறிகாப்பான்
குறையா நிறைவா லுகந்தோறும்
நிலம்புக் கருளு மவதாரம்
பத்திற் செய்த செந்நெறிகள். (221)

இப்பேர் காட்ட வேண்டுமென
இரங்கி மால்சென் றெதிர்தோன்றித்
தப்போங் கேட்ட துடனீவோம்
என்று சார்ந்து தன்னுருவத்(து)
ஒப்போ டமர ரறியாத
உருவம் பத்தும் உளசெயமும்
அப்போ காட்டக் கண்டாங்கே
ஆழி யெழச்சங் கருள்செய்தான், (222)

கற்பா ரிராம பிரானுதி
கழறும் பத்தில் முன்கண்ட
நற்பா லுருவுக் கோரொன்றாய்
நாட்டார்க் கறிய நயந்துரைத்தான்

பொற்பார் பொழில்சூழ் திருக்குருகூர்ப்
புறத்தே செறிந்தவ் வூர்தொழுது
நிற்பார் தமக்கு வீடளிக்கும்
நெறிசேர் வகுளச் சடகோபன். (223)

சாற்றும் பாமரு மூவுலகில்
தான்முன் கண்ட தனிமுதல்வன்
தோற்ற மோரைந் தொருநான்கும்
தோன்றி மறையப் பிரிந்தடியேன்
ஆற்ற கில்லே னெனக்கூவி
அலறி யழுதான் அயன்விதியும்
கூற்றுங் கலங்க வெனதுள்ளே
குருகூ ருடனே குடிபுக்கான். (224)

எண்ணும் ஏழைய ராவியுணும்
கூற்றங் கொல்லோ வெனும்பத்தில்
கண்ண னுருவைக் கண்டிறைஞ்சிக்
காதல் முதிர வுருவெளியாய்
நண்ண வதனைக் கண்டிரங்கி
மனத்தில் வருந்தி நைந்துரைத்தான்
வண்ண மாயா வாமனனென்
பத்தும் வகுளச் சடகோபன். (225)

வேறு

என்றைக்கு முய்யக் கொண்டே யென்றெடுத் தருளும் பத்தில்
குன்றைக்கொண் டானைக் காத்த கோவிந்தா புலன்க ளோடும்
சென்றெய்க்கும்வண்ணம்மண்ணில் வைத்ததேன்செப்பாயென்ன
ஒன்றைக்கொன் றென்றைக் காத்த வுத்தம னருளிச்செய்வான்

மண்மிசை யுவப்போ டும்மை வைத்தமை கேளும் வாக்கால்
பண்ணமர் கவிகள் நம்மைப் பாடுமா றதனை வஞ்சக்
கண்ணமர் உயிர்கள் கற்றென் கழலடைந் துய்யு மாழ்வீர்
எண்ணமற் றிதில்வே றில்லை எனவிறை யியம்ப ஆழ்வார். (227)

வேறு

என்னை யிதற்கோர் கைம்மாறுங்
காணேன் என்னைத் தானாக்கித்
தன்னை ரில்லான் ஒன்றறியேன்
உளத்தே புகுந்து தான்தன்னை
நன்னே ருற்ற கவிபாடி
நாட்டா ரெல்லாஞ் சடகோபன்
சொன்னேர் பெற்ற கவியென்னச்
சொல்லும் படிக்குச் சொல்வித்தான். (228)

என்ன இறையைக் கொண்டாடி
இசைத்தா னுங்கே யொருபத்தும்
பின்னவ் வின்பம் பயக்குமெனப்
பேச வினிய அப்பத்தில்
இன்ன வாறு கைம்மா றென்
றின்றிக் கவிகொண் டிட்ட பிரான்
மன்னுந் திருவா றன்விளையை
என்றோ மன்னி வலஞ்செய்து. (229)

ஈசற் குவந்த கயிங்கரியம்
செய்வ தென்றோ வெனவிரங்கிப்
பேசித் தேவி மாராவார்
என்னும் பத்திற் பேருலகில்
ஆசை தவிர்ந்த அடியவர்கள்
அகமாம் மற்று மதுவன்றித்
தேசத் தெல்லாப் பொருளுமவன்
ஆன வாறுந் தெளிந்துரைத்தான். (230)

கூறு நங்கள் வரிவளையாய்
என்னும் பத்திற் குருவுரையைத்
தேறி யெல்லாப் பற்றினையும்
திருமா லறிய விடில்எளிதின்
ஏற லாகும் பரமபதத்
திருக்க லாகும் விடாதவர்க்கு
நாறு முடம்போ டெப்பொழுதும்
நண்ண லாகு மெனநவின்றான். (231)

வேறு

ஆங்கதற்குப் பின்பங்கு மிங்குமென்ன அருள்பத்தில்
ஓங்கியசீ ரந்தாமத் தனுபவிக்கும் நித்தர்முத்தர்
பாங்குடையர் பரிவுடையர் படிமீதி லிலரென்ன
ஏங்கினான் அருள்மாறன் சிலவரைக்கண் டின்புற்றான். (232)

வேறு

மறித்தும் வார்கடா அருவியானை யென்றுரைத்த நற்பத்தில்
வெறித்தண் பூந்துழாய் மாயவன்வலியையும்விளங்குறநோக்கிக்
குறித்த அன்பர்கள் குழாத்தையும் கண்டுள்ளங் குளிர்ந்துரை-
[செய்தான்
பறித்துக் காலன்கை நின்றெனைக் கொணர்ந்துதன் பத்தியிற்-
[பதித்தான். (233)

வேறு

மாயக் கூத்தா வென்றருளால் வகுத்த பத்தில் மாமாயன்
தூய வடியிற் சிந்தனைபோய்த் துன்புற் றிரங்கி மடை மாறு
நேயத் தாலே யிருந்தழுதான் நீச னேனிவ் வுடல்விட்டால்
தாயைத்தேடிச்செலல்தவிர்க்கும்சரணுகதியைத் தந்தாண்டான்

வாடிச் சோர மயலளிக்கும் மாயக் கூத்தன் தனைமனத்தால்
தேடி யெல்லி காலையின்றிச் சென்று தங்கி யுளமகிழ்ந்து
நாடி யிருத்தும் வியந்தன்னில் நண்ணி யன்பி லனுபவித்தான்
பாடிச் சாம வேதத்தைத் திருவாய் மொழியாய்ப் பரப்பினுன்.()

சீரார் கண்கள் சிவந்தவெனச் செப்பும் பத்தில் திருமால்வந்
தேரா ராவியு றக்கலக்க இதுநீ பிரியே லெனவிரப்ப
நாரா யணன்வா ழான்மாவின் ஏற்ற மெல்லாம் நவின்றருளக்
காரார் பொழில்சூழ் குருகைக்கோன் கண்டு களித்துக் கட்-
[டுரைத்தான். (286)

கருமா ணிக்க மலைதன்னில் கழறுங் குட்ட நாட்டிலுறை [கால்
திருமால் தனக்கு நாயகனுய்த் தானோர் பெண்ணுய்த் திருவாக்-
ஒருமானேடியவன்பெயரேயலதொன்றுரையாவகையுரைத்தான்
அருமா மறையி னெலிமுழங்கும் குருகூர் நகர்வா ழருள்மாறன்.

எண்ணு நெடுமாற் கடிமையென விசைத்த இன்ப முறுபத்தில்
கண்ணற் கடிமை யானவர்கள் ஏற்ற மெல்லாங் கண்டுவந்தே
உண்ணெக்குருகியவரடியார்அடியார்க்கடிய னெனவுரைத்தான்
விண்ணுக் கேற வழிகாட்டும் வேதாந் தத்தை வெளியிட்டான்.

கொண்ட பெண்டி ராதியராய்க் கூறும் பத்தில் உலகத்தீர்
அண்ட முண்ட திருமாலை யல்லா தாவிக் குறுந்துணைநான்
கண்டி லேன்மற் றொருவரையும் கைம்மா றின்றிக் காப்பவரை
உண்டென் றுங்கட் குறவாவார் திறத்தைக் கேண்மின் உரைக்-
[கின்றேன். (236)

வேறு

அருள்பெறு மடவா ளன்னை புத்திர னத்த னுற்றூர்
பொருள்பெறக் காணில் தத்தம் ஆவிபோற் பூண்ப ரன்றேல்
தெருளுறு நிலைய ரேனும் சீசியென் றிகழா நிற்பர்
மருளுறு முலகத் துள்ள வழக்கிந்தச் சழக்கை மாற்றி. (240)

வேறு

உற்றுரு மைந்தர் களும்உற வாய உயிர்த்துணையும்
பெற்றுரும் பெண்டிர் களும்பெரும் பொருளும் பேருறவும்
மற்று ருந்திரு மாலே யென்றுமனம் வைத்துமனப்
பற்று சுறுதிருந் தீரேல் பரம பதந்தருமே. (241)

### வேறு

என்ன வுலகத் தவர்களுக்கும் இதமாய் உபதே சம்பண்ணிப்
பின்னும் பண்டை நாளென்னப் பேச வரிய பத்திலருள்
மன்னும் பதியாம் புளிங்குடியில் மற்ற விரண்டில் மகிழ்வோடு
முன்னங் கிடந்தாங் கிருந்துநின்ற முதல்வன் தன்னை துதி-
[செய்தே. (242)

கொடியார் மாடப் புளிங்குடியில் கிடந்தான் தன்னைக் குறளாய
நெடியாய் கமலக் கண்விழித்து நீச னேனை யுறநோக்கி
மடியா துலக முண்டுமிழ்ந்த வாயி லுவந்த கயிங்கரியம்
அடியேன் செயுமா றெழுந்திருந்து பேசா யென்றான் அருள்-
[மாறன். (243)

ஓரா யிரமென் றருள்பத்தில் உறக்க நீங்கி யெழுந்திருந்து[லாம்
நாரா யணன்நம் மாழ்வாரை நாம்நீர் வேண்டும் பொருளெல்-
தாரா நின்றோ மருள்கவெனச் சாற்ற மாறன் தத்துவனார்
சீரா ரருளின் பரிசிருந்த படியே தென்னத் திருவுளத்தில்.(244)

உருகி மையார் கண்ணிணையில் ஒளிசே ராழி சங்கேந்தித்
திருவி னுடனே புகுந்தருள்வாய் சிறியேன் காண வெனத்தேடிப்
பெருகு காத லுடன்கூவப் பெருமா னந்த வணமாழ்வார்
அருகில் தோற்றக் கண்டிறைஞ்சி ஆவல் தீர அனுபவித்தார். ()

இன்னுயி ரென்னு மெழிற்பத்தில் தலைவன் நீங்க இருந்திரங்கும்
அன்ன நடையோர் பெண்கொடியாய் அவனைக் காண வருத்-
[தத்தால்
மன்னும் பறவைக் கூப்பீடும் பொறுதே வருந்தி நைந்துயரும்
தன்னி லெய்தும் மால்பிரியத் தளர்வுற் றழுநம் சடகோபன். ()

ஓது முருகும் மால்தன்னில் ஓத வண்ண ரினிவந்தால்
பாத முதற்கே சாந்தத்தில் பரிவாற் பண்ணி யிதம்வருத்தும்
வேதஞ் சொன்ன கயிங்கரியம் எல்லாம் செய்ய வேண்டுமெனப்
போதுங் கரத்திற்கொண்டிருந்தார்பிறங்கப்புவன முண்டபிரான்

கதுமென்றெய்தி யிவரவற்குச்செய்வானெண்ணுங்கருமமெலாம்
மதுவார் துழாயான் செய்தருள ஆழ்வார் பதறியோடி யந்தோ
இதுவே னிறைவா வெனவொடுங்கி இருப்ப வீச னிருவருக்கும்
பொதுவன் றோயே ரின்ப மெனத் திருமால் கடிய னெனப்பு-
கன்றான். (248)

பண்ணி லெங்கா னலங்காழில் பரிந்த மூழிக் களத்துறையும்
கண்ண னுருவைக் காதலித்துக் ககனத் தேகுபறவைகளை
எண்ணு நம்மை யிராப்பகலென் றீசன் போது மெனத்தூதாய்
மண்ணிற்றுனோர்பெண்கொடியாய்விடுத்தானிருந்துமகிழ்மாறன்

அறுக்கும் வினையென் றருள்பத்தில் தூது கூறியவன்வருமுன்
பொறுக்க மாட்டா வாய்பதறித் திருநா வாயுட் புகநினைய
மறுத்தங் கதுவும் கூடாமல் இருந்து வருந்தி மல்லிகையில்
கறுத்த தென்றல் யாழாதி நலிய மெலிந்து கலங்கினர். (250

வேறு

மாலைநண்ணி யெனும்பத்தில் திருக்கண்ண புரமருவி
ஆலினிலை யமர்ந்தபிரான் அடிதொழுது பூவிட்டால்
மேலுரைப்ப தென்னிந்த வுடல்தவிர்த்து வீடளிப்பக்
காலமுறச் சென்றணைவீ ரென்றுரைத்தான் கருணையினன்(251)

ஆங்கதற்குப் பின்தாள தாமரையில் அம்புவியீர்
பாங்குடனே மோகூர் வாழ் பரம்பரனைப் போய்ப்பணிந்தால்
ஓங்குமருட் பரமபதத் துமக்கவனே வழித்துணையாய்த்
தாங்கியுறக் கொடுபோவன் சார்மினென்றான் தமிழ்மாறன்.

உன்னுமுனங் கெடுமிடரென் றொருபத்து மனந்தபுரம்
என்னுநகர்ப் பரமபத முலகத்தீ ரிறைஞ்சுமதில்
மன்னுவார் நித்தர்முத்தர் எனத்திடமாய் வகுத்துரைத்தான்
தென்னுலகி லென்னைவிடாத் திருவழுதி வளநாடன். (253)

வேறு

சாற்றும் வேய்மரு தோளிணையில் தானே ராயர்தலைமகளாய்த்
தோற்றுங் கஞ்ச னுயிர்செருத்த சுடரா ழிக்கை யம்மானைப்
போற்றிக் கூடி யனுபவித்துப் புணர்ச்சி நீங்கி யிருந்தளவில்
தேற்றியிருத்திப்பசுமேய்க்கப்போறேனென்னத்திருமகள்கோன்

செப்பாத் தீடியுஞ் சீங்குழலும் எடுப்ப அந்தச் சேயிழைசென்
றிப்போ கூடி யான்வருவன் என்று தொடர அவன்தடுப்ப
அப்போ பரம பதத்தென்னைக் கொண்டு போவா னருளியதும்
தப்போவென்றான்எவ்வுயிர்க்கும்துணையாய்நின்றதனிமுதல்வன்

காட்டில் முன்னம் சானகியைக் கங்கைத் திருநாடு டையபிரான்
கூட்டிப் போய்முன் பட்டதெலாம் கூறக் கேட்ட தில்லைகொலோ
மாட்டின்பின்னேபோய்திரிந்துவருந்தவேண்டாம்வனம்கொடிது
வீட்டில் கூட்டிப் போதல்திடம் என்று விமலன் விரித்துரைப்ப.

மங்கை சிந்தை யுறத்தெளிந்து வாசுதேவா வனங்கொடிதேல்
அங்கம் வருந்தப் பசுமேய்க்க நீயும் போகே லெனவறையச்
சங்க மேந்துங் கைத்தலத்தான் தவிர்ந்த பரிசாய்ச் சாற்றினன்
பொங்கு நறவப் பொழில்புடைசூழ் குருகூர் மருவும் புகழ்மாறன்

எண்ணுஞ் சார்வே தவநெறியில் நிரைப்பின் ஏகல்தவிர்கென்ன
நண்ணி யுரைப்ப வுந்தவிர்ந்தாங் கிருந்த நம்பி நயநோக்கிக்
கண்ணன் மிகவு மடியவர்கட் கெளிய னென்னக் கட்டுரைத்தான்
திண்ணன் வீடு தந்தாண்ட தெர்ப்பா சனத்தின் வீற்றிருப்போன்

ஆத லாலே உலகத்தோர் தமக்கு மாயாத் தனிமுதலாய்ப்
பூத முதலாய் நின்றவனுற் புரையில் முத்தி பொருந்திடலாம்
காத லாலே பற்று மெனக் கண்ணன் கழலிற் கட்டுரைத்தான்
வேத சிரத்தில் வீற்றிருக்கும் மெய்யைத் தெளிந்து வெளி-
யிட்டான். (259)

**வேறு**

அருள்பெறுவா ரெனும்பத்தில் வாட்டாற்றி லச்சுதனர்
தெருளுறுசீ ருடம்போடும் தமையெடுத்துத் தேவர்தொழும்
பொருளுறு மேற்பரமபதம் புகநினைப்ப அதையறிந்து
மருளுறுமீ தென்றுசெஞ்சொல் கவிதன்னில் மாமாயன். (260)

**வேறு**

செய்ய கமலத் திருவடியைப் பிடித்தின் றெமையாள் திருமாலே
மைய லுடம்பும் வாதனையும் போக்கி யுயிரை வாங்குமென
வைய வுடலென் செய்தமையென் றிறைவன் கூற அச்சுதனே
பொய்யைம் பொறியும் புலனைந்தும் பொருந்தும் பொற்றைப்-
புழுக்கூடு. (261)

பஞ்ச பூதம் பிரகிருதி பற்றுங் கன்ம விந்திரிய
வஞ்ச வுடல மிதுநீக்கி வாங்கா யென்றுன் மாறனிறை
என்சொன் னீரிப் புவிதன்னில் இலங்குஞ் சாந்த மணிபவர்கள்
தஞ்ச மாக அவையிருந்த பரணி யுடைத்தோ சாத்துவர்கள். ()

கூறு மென்னத் தமிழ்மாறன் கூறுங் கோதி லாய்இந்த
நாறு முடம்பாற் பயனென்கொல் என்ன ஞால முண்டபிரான்
தேறு மும்மை வைத்திருந்த தேக மன்றோ வெனச்செப்ப
மாறு மொழிய வல்லேனே நின்னே டென்ன மகிழ்மாறன்.(263)

பெருக வருந்தித் துன்புற்ற பின்பு திருமால் நம்மாழ்வீர்[டலும்
உருக வேண்டா முடனும்மைக் கொடுபோ வேனென் றுரைத்தி-
அருவி நயன மோயாமல் ஆறு பாய அன்புருகித்
திருவுற்றயருங் குருகைக்கோன் சிந்தைகுளிர்ந்துதெளிவோடும்.

மன்றல் கமழ்மா லிருஞ்சோலைப் பத்தில் மாயன் மடிபிடித்தெற்
றின்று வலிய மேல்விழுந்தீங் கெடுத்தா யிற்றை வரையுமெனக்
குன்றமெடுத்தாயென்பொருட்டாற்கெடுத்தாயதனை கூறென்ன
ஒன்று மதற்கு மறுமாற்றம் காணு னுலக முண்டபிரான்.(265)

இந்த நினைவுக் கியாமேதை யியம்பி மடியை விடுவிப்போம்
சிந்தை தூய மகிழ்மாறற் கென்னத் திருமால் சிறுகுதலை[போல்
மைந்தன் நினைவை வேறென்றல் மறப்பித்துவக்கும் மாதாப்-
அந்த மில்லாக் குணத்தினருக் கரச்ச ராதி மாரணத்தை. (266)

எண்ண வரிய சூழ்விசும்பில் இறைவன் காட்ட இவர்கண்டு
கண்ணன் மடியைப் பிடித்தவிரு கரந்தா னெகிழக் கண்களிப்ப
நண்ணி மனத்தா லந்நெறியே ஞானு நந்தப் பெருவீடாம்
விண்ணே மேவி யனுபவித்து மீண்டு முனியே யெனும்பத்தில்.

**வேறு**

ஊனமி லின்ப முத்தி யுற்றனு பவித்தா ராழ்வார்
மானத மாத லாலே மற்றுநங் கண்ணுற் கண்டங்
கானபே ரின்ப வீட்டில் அச்சுதன் கமல பாதத்
தேனுகர்ந் தடிய ரோடுஞ் சென்றனு பவிப்ப எண்ணி. (268)

**வேறு**

மாசிலாப் பரமபதத் தலையெடுத்து மகிழ்மாறன்
தேசுபொலி கமலமலர்த் திருவாணை நின்றுனை
ஈசவெனை வாங்குதிநின் னிணையடிக்கீ ழெனக்கூவி
ஆசைமிகுந்திருந் திரங்கப் பரமபதத் தம்புயைகோன். (269)

பெரியதிரு வடிபெரிய பிராட்டியார் தமைத்தன்னை
உரியநெறி யன்பினொடு முவந்தேத்த உலகேழும்
அரிகரியென் றடிபணிய அந்தாமத் தடியரொடுங்
கரியவொளி மணிவண்ணன் காரியார் திருமனைமுன். (270)

கள்ளமறத் தோன்றியவா வறச்சூழ்ந்து கைப்பற்றப்
பள்ளமடை யுடைபுனல்போல் பரம்பரன்பாற் பத்திவெள்ளத்
துள்ளமடுத் துறப்பாய்ந்த படிதன்னை யுவந்துரைத்தான்
வள்ளலெனக் கருள்புரிந்த திருவழுதி வளநாடன். (271)

**வேறு**

ஆகத் திருவாய் மொழியித்தை அருளிச் செய்து மதுரகவி
ஏகச்சிந்தைப்பெருஞ்செய்யில் இறங்கிவிதைத்துமெய்ஞ்ஞானப்
போகம் விளைய அருள்மாரி பொழிந்து விளைவித் துலகேழின்
தாகந் தீர்க்கும் கவியமுதந் தந்தான் நந்தாத்தழ்மாறன். (272)

மாறன் கைம்மா றென்றின்றி மதுர கவிகட் கிவைசெய்ய
வேறென் றறியேன் சடகோபன் விரைத்தா ளன்றி யென்றுமனம்
தேறிக் குருகூர் நம்பியல்லால் தெய்வ மறியேன் யானென்னக்
கூறி மாறன் சீரனைத்தும் தொகுத்தோர் பத்தின் கோர்வையாய்

**வேறு**

பெண்ணினுண் ணிடைப்பின்னை மணவாளன் திருப்பெயரை
எண்ணிநுண் பொருள்தந்த சடகோப னெனிலென்பால்
அண்ணிநின் றென்னுவுக் கமுதூறு மெனவவன்பால்
கண்ணிநுண் சிறுத்தாம்பை மதுரகவி கட்டுரைத்தான். (274)

வேறு

முன்பே தோன்று மதற்பினருள் உருவாய் மூவா முதலாய
இன்பமயமாய்ச்சின்மயமாய் இருக்கு முதலோர் நான்மறைக்கும்
பின்பு முன்பு மேல்கீழ்கள் பேச வரிதாய்ப் பேணுமவர்
அன்பி னல்லால் அயனரற்கும் அரிய வரிதா மந்தாமம். (275)

வேறு

நம்முடைய வீடென்று நம்மைநீர் கேட்பதென்மற்
றும்முடைய வீடின் றுமக்களித்தோ மும்பர்தொழ
எம்முடனே போது மின்னேயென் றிலக்குமிகோன்
தம்முடைய வீட்டைத் தமக்களித்துத் தாமகிழ்ந்தார். (276)

அப்படியே எம்பெருமான் ஆழ்வார்க்கு வீடருள
இப்படிவிட் டேகு மினியென் றறிந்ததற்பின்
ஒப்பரிய ஞான முடைய மதுரகவி
எப்படி விட்டுன்னை இருப்பே னெனவிறைஞ்சி (277)

சீரார் வகுளத் திருத்தாரான் சேவடியை
ஏராரு மன்பாற் பிடித்தன் றிரங்கியழக்
கூராழி சங்கேந்தும் கொண்டலெனக் கண்டுநின்ற
நாரா யணன்வருநாள் நானிலமு மீடேற. (278)

கட்டுரைக்கு மாழ்வார் கருணைத் திருவுருவை
மட்டவிழும் பூம்பொழில்சூழ் கோளூர் மதுரகவி
உட்டெளிவாற் கேட்டி யுனக்கு முலகோர்க்கும்
எட்டெழுத்தின் சாரம் இது வென்றே இன்பமுற: (279)

தேசுடைய ஞானத் திருப்புளிக்கீழ்ப் பண்ணுவித்தங்
காசித் தமிழ்வேத மாகவிவர் கட்டுரைத்த
பேச வரிய பிரபந்தம் நாலினையும்
கூசாதிம் மண்ணோர்க்குக் கூறி யதன்பயனை. (280)

காட்டிச் சிலநாளிக் காசினியில் நீரிருந்தால்
வீட்டிற் பினையும்மை யிவ்வண்ண மேவுவிப்பன்
பாட்டை யுலகிற் பரப்புமென்றான் பல்லுயிரை
ஊட்டி யுறக்கி யொழியாது காத்தளிப்பான். (281)

என்று மதுர கவிக ளிதயத்தின்
மன்றல் கமழும் வகுளத் திருத்தாரான்
ஒன்று மனுபவத்தில் ஓர்ந்துரைத்த நூலனைத்தும்
அன்றுறவே தாபித்தாங் கச்சுதனு மாழ்வாரை. (282)

வாருமினி யென்றழைத்து மாறன் தண்குருகை
யூரு முலகு முருகக் கருடனுமெய்த்
தேரு மிருப்பத் திருமடிமேல் வைத்தணைத்துப்
பாருந் துதிப்பப் படர்விசும்பின் மீதானன். (283)

வேறு

தொடர்ந்துசூழ் விசும்பி லணிமுகிற் குழாங்கள்
தூரிய முழக்கிடக் கடல்கள்
தடந்திரைக் கரங்கள் எடுத்துவந் தடுத்தாங்
காடிடத் தரைமுத லாகி
இடந்திகழ் உலக மேழுமே வலங்கொண்
டேத்திட இமையவர் சித்தர்
நடந்துவந் ததிர்கொண் டடிதொழ முனிவோர்
நான்மறை பாடிநின் றார்ப்ப. (284)

மேருவே முதலாம் வரைப்பெருங் குலத்தால்
விளங்குசீர்த் தோரண நிரைத்தார்
ஏர்கொளா காய கங்கையா லங்கங்
கேந்தினர் பூரண கும்பம்
சாரண ரியக்கர் கின்னரர் வசுக்கள்
தாம்வரன் முறைமுறை துதிப்பச்
சீர்பெறு மிரவி யெல்லியைப் பிளந்து
தேவர்க ளுலகினூ டேகி. (285)

இந்திர னெதிர்கொண் டிறைஞ்சிட அவன்வாழ்
உலகினூ டேகிமுக் கண்ணன்
மந்திர வுலகும் மலரய னுலகும்
கடந்துமால் காரிய மயமாய்த்
தந்தவை குண்டத் தெல்லையுங் கடந்து
தனியண்டப் பித்தியுங் கடந்திட்(டு)
அந்தமில் சத்தா வரணமுங் கடந்தாங்
கரும்பெரும் பாழையுங் கடந்தே. (286)

வேறு

முன்னஞ் சொன்ன பிரகிருதி மூலப் பெரும்பா ழவைநீங்கத்
தன்னைப் பில்லாப் பிரகிருதி தாமாம் பரமா காயத்தை
மன்னிப் பேரா னந்தத்தால் வகுத்த புரிசை வைகுண்டம்
என்னப் பட்ட திருநகரின் புறத்தாய் எலையில் வளத்தோடும்.()

வேறு

விரைசைமா நதியில் சூக்கமா முடலை
    விடுத்துவா தனையுமே விடுத்தக்
கரைசெறிந் தமரு மானவ ஞர்தங்
    கரங்களாற் சிரம்பத மாதி
புரையறத் தீண்டிப் பரிசனஞ் செயவப்
    போதிலே யிறைவனுஞ் செந்தா
மரையுறை திருவு முடன்வரச் சித்தர்
    முத்தரும் வந்தடி வணங்க. (288)

சீருறு ஞான அப்பிரா கிருதித்
    தெய்வவிக் கிரகம தென்னும்
ஏர்பெறு மொளிகொண் டிலங்குசோ தியுமாம்
    ஈரிரு கரவுரு வெடுத்து
வாருறு ஞான வனமுலை மடவார்
    மாலைசாந் தாடையா பரணம்
காரொளி வண்ணன் விடுத்தவை யனைத்தும்
    கவின்பெற அணிந்துகைக் கொண்டே. (289)

வேறு

கோலத் திருமா மகளோ டுன்னைக் கூடாதே
சாலப் பலநா ளடியே னேதளர் வேனென்ன
ஞாலப் பற்றுக் கஞ்சி யதன்றன் நவையற்றான்
மூலச் சுருதிச் சாரத் திருவாய் மொழிசெய்தான். (290)

வேறு

மதிமுக மடவார் பலவிதத் தேந்து
    வளங்கொடு புடைவர முத்தர்
துதிசெய்தாங் கிறைஞ்சிக் கைவிளக் கெடுப்பத்
    தோமறு முத்தர்கள் புகழ
விதியினிற் காளம் பேரிகை யாதி
    விளங்குசீர் வாச்சிய முழங்கக்
குதிகொளுங் கருணைக் கருடனுண் டேந்தும்
    கொழுஞ்சுடர் விமானம தணைந்தே. (291)

வேறு

மாகவை குந்தங் காண்பதற் கென்மனம்
ஏக மெண்ணு மிராப்பக லின்றியென்(று)
ஆகங் காந்து மனல்மெழு காயுகும்
சோக மன்று தவிர்ந்தனன் தோமிலான். (292)

வேறு

கொடியணி மதிள்சூழ் கோபுரங் குருகக்
கோதறு வேதமோர் நான்கின்
முடிவிடை யாதி யந்தமு மறியா
முத்தியை யடைந்ததி லுறையும்
வடிவுடைச் சேனை முதல்வனே முதலோர்
மடந்தைய ரோடும்வந் திறைஞ்சி
அடிகளெம் மிடம்புக் கிடுகெனக் கொடுபோய்
அணிதிக ழாசனத் திருத்தி. (293)

வேறு

சிறந்தமெய்ஞ் ஞான நீரால் திருவடி விளக்கிப் பூசித்
தறந்தலை நின்ற நீதி யச்சுத னென்ன அன்பின்
திறந்திறம் பாமற் பேணிச் செலவிடுப் பவரோ டேகிப்
பிறந்திற வாத முத்திப் பேரின்ப வீட்டை முக்கால். (294)

வேறு

வலம்வந்து திருமா ம ணிமண்ட பத்தின்
நலமந்த மில்லா ஞானத்தில் ஞானப்
பலமுந்து சீரிற் படிந்தான் அடர்த்தென்
புலனைந்தும் மாயப் புகுந்தா னுவந்தான். (295)

வேறு

களிப்புங் கவர்வும் பிறப்பிறப்பும் கடிந்து கண்ணன் அடியருடன்
ஒளிக்கொண் டிலங்கு சோதியுமாய் என்றோ உடன்கூடுவதென்று
துளிக்குங் கண்ணீர் மிகவழுத தன்று கூடித் துயர்தீர்ந்தான்
அளித்தென் னுயிரின் அமர்ந்தீர்த்துத் தனக்காட் கொண்ட-
அருள்மாறன். (296)

வேறு

முடிவற்ற சுகோததியின் முழுகியெழுந் திறையோடும்
படிபெற்ற நித்தரொடும் பற்பலகா லளவளவிக்
கடிபெற்ற துழாயலங்கல் கண்ணனையுங் கமலையையும்
அடிபற்றித் தொழுதிறைஞ்சி யாங்கவரை வலஞ்செய்தபின். ()

வேறு

எடுத்திறை யேந்தி மடிமிசை யிருத்தி
என்னுயி ரிதுவென விரங்கி
அடுத்தடுத் தணைத்து மார்பினோ டழுத்தி
அலர்கம லத்தவ ளிடத்தில்

விடுத்தவ ளவணம் அணைத்தபின் சாம
வேதகீ தங்களைப் பாடிப்
படுத்தபாம் பணையான் பங்கயத் தாளில்
அடைந்தனன் பத்தற்கட் கினியரன். (298)

வேறு

கண்டாற்றே னுலகியற்கை கடல்வண்ணு அடியேனைப்
பண்டேபோற் கருதாதுன் னடிக்கேயப் பணிகொள்ளென
மண்டாவி யிருந்துரைத்த வருத்தமன்று தீர்ந்தொழிந்தான்
உண்டாட்டும் புலனைந்தின் வசங்கெடுத்தென் னுயிர்காத்தான்.

வேறு

தீரக் காய்ந்த இரும்பதனுள் தெறித்தாற் சிறிதும் பிரிக்கரிய
நீர தென்ன வந்தாமத் திருந்த நெடுமால் நிகரற்ற
வேரிற் பொலிந்த் திருவடியில் அடைந்தா னென்னைத் திருநகரி
யூரைத் தொழுதே யுய்யென்ன உபாயங்காட்டி யுரைசெய்தான்

வேறு

பின்னிடைப் பிரிந்துகூடும் மின்னொளி யென்னச் சென்று
தன்னுடைச் சோதி தன்னைச் சடகோபன் சார்ந்து வாழ்ந்தான்
என்னிடை யறிவிற் கண்ட திவையவன் புகழே முற்றும்
முன்னுல கனைத்துந் தந்த முதல்வற்கு மொழிய லாமே. (301)

வேறு

ஆத்தான் கருணைத் திருவுருவும்
அழகப் பன்சீ ரருளுருவும்
பார்த்தா லொன்றாய்த் திரண்டெழுந்த
பாலே தமிழா யருளுமெனைக்
காத்தாட் கொண்ட திருமல்லி
நாடி தாதா கருணைகொடு
கோத்தா லொன்று மென்றிதனைக்
கொடியேன் துணிந்து குறித்துரைத்தேன். (302)

வேறு

காவியம் வல்லார் தொல்லைக் கலைவலார் கவிகள் வல்லார்
பாவியேன் பகர்ந்த தென்றிந் நூலினைப் பழிக்க வேண்டாம்
தேவிவாழ் மார்பன் தந்த செண்பக மாறற் கன்றி
ஓவிய மாவி தாங்க உலகிடைக் கண்ட துண்டோ. (303)

வேறு

தெய்வ மறிய அடியேனுற்
செய்யப் பட்ட பொருளன்று
பொய்யின் றுளறிப் புகன்றென்னேர்
பொடியாய் முடிந்து போகின்றேன்
வைய மறிய வேங்கடத்தான்
மணவை நகரில் வந்தடியேன்
உய்யும் படிமுன் பற்பலவும்
உரைத்தா னிவையும் உரைத்தேனே. (304)

வேறு

சூத்திரம் பூட்டி யாட்டி தொழிலென்ப ரறிந்தோ ரன்றிப்
பார்த்திருந் தவரம் மெய்யைப் பாவையிற் படுத்து மாபோல்
காத்திர வசத்தா ரீதைக் கடையினிற் காண்பர் ஞான
நேத்திர முடையா ரெல்லாம் நேமியான் செயலி தென்பார்.

அஞ்சன வண்ண ணுற்கும் ஆவிக்கும் உள்ள நீர்மை
வஞ்சனேற் குணரக் காட்டி மாறனைக்குருகூ ரோடென்
நெஞ்சினி லிருத்தி நீங்கா நிலையளித் தண்டாட் கொண்டான்
கஞ்சமா மலர்த்தா ளுன்னுக் கள்வனே கழறற் பாலேன். (306)

உருத்திரன் சமயத் துள்ள பத்தர்கள் ஒத்துங் கேட்டோம்
திருத்திகழ் மார்பன் தொண்டர் செய்கையிற் சிறிதுங்கேட்
கருத்துறு சமயத் தோர்கள் கற்பனை பலவுங் கேட்டோம் [டோம்
ஒருத்தரென் மாறன் போன்றூர்க் கண்டில முலகு தன்னில்.

வேறு

முன்னே பிறந்து வீடடைந்த முதல்வர் அனந்தம் மூவுலகில்
பின்னே பிறந்தாங் கவையடைவார் அனந்த மனந்தம் பேசுங்-
என்னே மாறன் நிகரொருவர் எக்கா லத்து மில்லையிலை [கால்
தன்னேர் தனக்குத் தானுனல் என்நான் சாற்றத் தகுமந்தோ.()

நம்மாழ்வார் பிரபாவம் முற்றிற்று.

# மதுரகவி யாழ்வார் பிரபாவம்

## கொச்சகக் கலிப்பா

செப்பரிய பெருங்கீர்த்தித் திருவழுதி வளநாடன்
இப்பரிசே சென்றிறைவன் இணையடிக்கீழ் வாழ்ந்திருந்தான்
அப்பெரிய கதையிறைவன் அருளியதிற் சிலகூறி
ஒப்பரிய மதுரகவி செய்திறமு மோதுவாம். (1)

வேறு

சீரார் திருவாய் மொழிப் பெருமான்
செங்கட் கரிய திருமேனி
நாரா யணனை யடைந்ததற்பின்
ஞால மிரங்க மதுரகவி
நீரா யுருகி மோகித்துத்
தேறி மாறன் நிகரில்லா
ஏரார் கோலத் திருவுருவை
இலங்கு ஞானத் திருப்புளிக்கீழ். (2)

என்று முண்டாம் படிகுறித்தங்
கேறி யருளப் பண்ணுவித்துக்
குன்றம் போன்றங் கருள்விளங்கும்
கோயில் செய்தக் கோமானுக்(கு)
அன்றி யொன்றுந் தனக்கின்றி
அல்லும் பகலு மவன்பணியில்
நின்றங் கீரெட் டுபசார
நேமி விளங்கும் படிபண்ணி (3)

திருவா சிரியந் திருவிருத்தம்
திருவந் தாதி திருமால்சீர்
உருவாந் திருவாய் மொழியென்றே
உரைத்த பிரபந் தங்களையும்
இருமா வினையிற் படுபவரை
இருந்து திருத்தி ஓதுவித்திட்(டு)
ஒருமா நொடியுஞ் சந்நிதியை
அகலா தாங்கே யுடனுறைந்தே. (4)

ஓது மாண்டன் றிருநூற்று
நாற்ப திருந்திவ் வுலகனைத்தும்
பூத நாத னடியவராய்ப்
பொருந்தும் வண்ணம் திருத்துவித்து
வேதம் நாலும் தமிழ்செய்த
விமல னருளா லுடலோடே
சீத விரசைப் புனலாடித்
திருமா மணிமண் டபஞ்செறிந்தான். (5)

மதுரகவியாழ்வார் பிரபாவம் முற்றிற்று.

# சூடிக்கொடுத்தருளிய நாச்சியார் பிரபாவம்

## கொச்சகக் கலிப்பா

மாதக்கோ ருளம்பிரியா மதுரகவி திறங்கூறிச்
சீதக்கோ மளத்துளபம் திருத்தாயாய் வில்லிபுத்தூர்
வேதக்கோன் தந்தையாய் வந்துதித்த மெய்ஞ்ஞானப்
போதக்கோ மளக்கோதை திறமறிந்த படிபுகல்வாம். (1)

## வேறு

வையமீ ரேழும் வயிற்றிடை யடக்கும்
மாயனை ஆயர்கண் மணியைச்
செய்வாய்க் கமலம் கண்கைகா லுந்தி
திகழ்தரு திருமகள் கோனைப்
பொய்யிலா மெய்யர் மெய்யுளே தோன்றிப்
போக்கொடு வரவிலாப் பொருளைத்
துய்யகார் முகிலைப் பழித்தலர் நீலச்
சோதியைச் சுருதிநா யகனை. (2)

பூதநா யகனைப் புவனகா ரணனைப்
பொருவிலாப் பொருள்களை விளக்கும்
வேதநா யகனை விதிசிவன் சனகன்
விரும்பிநின் றேத்துநா யகனைப்
போதநா யகனை யமரர்நா யகனைப்
புலையனே னுவிநா யகனைத்
தூதநா யகனை ஐவகைக் கலையாய்த்
தொடுகடற் கிடந்தநா யகனை. (3)

மண்ணவர் துணையை மறையவர் துணையை
மாசறு மன்பினுல் வணங்கும்
விண்ணவர் துணையை விடைவலான் துணையை
விரிஞ்சனே முதல்முனி வோரென்(று)
எண்ணவர் துணையை ஏழையேன் துணையை
இராப்பக லிடைவிடா தேத்தும்
பண்ணவர் துணையைப் பத்தர்கள் துணையைப்
பங்கயச் செல்விநற் றுணையை. (4)

ஆழியுஞ் சங்குந் தரித்தமா முகிலை
அண்டமுண் டுமிழ்ந்தவா ரமுதைப்
பாழிசா லநந்தன் மீமிசைத் துலங்கு
பாற்கடல் கிடந்துபற் பலவாம்
ஊழியா யிரங்கள் ஒருகண மாக
யோகநித் திரைபுரி வானை
வாழியென் றேத்தி யொருபக லிலங்கும்
மண்மகள் மலர்மகள் முதலாம். (5)

மங்கையர் சேனை முதல்வன்வா ழநந்தன்
வளரொளி திகழ்சிறைக் கருடன்
பொங்குழு வுலகில் முனிவர்க ளமரர்
பொன்னுல காள்பவன் விரிஞ்சன்
சங்குசக் கரம்வாள் தண்டுவில் லாதி
தனித்தனி யடிதொழு திறைஞ்சி
அங்கவன் துயிலு மழகினுக் கிரங்கி
இருந்தனர் அலைகடல் துயின்றான். (6)

கண்டுயில் நீங்கி யிணையடி விளக்கிக்
கருணைமாத் திருமுகம் விளக்கித்
தண்டர ளப்பூந் தவிசின்மே லேறித்
தாமரைச் செல்விபூ மடந்தை
ஒண்டொடி நீளை யடிதொழ மற்றை
அனைவரும் உளங்குளிர்ந் திறைஞ்சப்
புண்டரீ கக்கண் கருமுகி லிருந்தான்
இருந்துழிப் புவிமகள் தொழுதாள். (7)

அப்பொழு திறைவ னவள்முக நோக்கி
நினைந்ததென் ஆரமு தனையாய்
செப்புதி யென்ன நித்தரே யாதி
செகத்துள பல்லுயிர்த் தொகையில்
ஒப்பிலா யார்க்கு நல்லைநீ யென்ன
ஓங்குபா மாலைபூ மாலை
தப்பற வெமக்கு நல்குவோ ரிடத்தில்
தங்குவோம் சந்ததந் தையால். (8)

என்றுரைத் தருள மண்மகள் வணங்கி
ஏழையேன் தானுமப் பணியில்
ஒன்றினின் றுன்னை யுகப்பிப்ப தன்றே
உடம்பெடுத் துளபய னதனுல்
இன்றடி யேன்போய் மண்மிசை யதற்காய்
எடுக்கின்றேன் யாக்கையென் றிசைத்து
மன்றல்சேர் குழலாள் துதித்துநின் றிறைஞ்ச
மாயவன் மற்றவட் குரைப்பான். (9)

ஆயினம் பத்தன் வில்லிபுத் தூரில்
ஆர்ந்திடும் விட்டுணு சித்தன்
தூயவப் பணிசெய் தினிதமர் கின்றான்
ஆங்கவன் புதல்வியாய்த் தோன்றி

ஏயுநின் மனத்தில் நினைத்ததை முடித்தி
யானுமத் தலத்துளே னென்றான்
நாயக னதுகேட் டன்னமென் நடையாள்
நன்றென மகிழ்ந்திவை நவிலும். (10)

என்னையாள் முகிலே வில்லிபுத் தூர்முன்
யாவரால் தோன்றிய ததையும்
முன்னைநான் மறைக்கு மரியநீ யதனுட்
புகுந்தமை தன்னையு மொழிந்து
பின்னையத் தலத்தில் விட்டுணு சித்தன்
என்னுமப் பெரியவன் பணிகள்
தன்னையு முள்ள வாறுநீ கூறி
யருளுதி தலைவவென் றிசைத்தாள். (11)

நன்றது கேட்டி மண்மிசை யணங்கே
நாவல மெனும்பெருந் தீவில்
தென்திசை யரசன் பாண்டிய னென்போன்
சிறந்தசெங் கோல்புரி நாட்டில்
வென்றிசேர் சேதுக் குமரிமா மலையை
மேடத்தி னடுத்தவெற் பகத்தில்
நின்றன அரியந் தத்தினிற் கீழ்பால்
நெறியினோர் காதத்தி னளவே. (12)

மாதல மொன்றுண் டத்தல மதனில்
வராகமா யுருவெடுத் துன்னை
வேதனை செய்த இரணியாக் கனைமுன்
வென்றுபின் தருமமு முனக்கே
ஓதிடக் கேட்டன் றென்னைநீ நோக்கி
ஓங்குபல் லுயிர்களுக் குதவிக்
காதலோ டிருத்தி யீங்கென் வுரைத்தாய்
கண்ணினு மெனக்கினி யவளே. (13)

மன்னுசீர் வராக க்ஷேத்திர மென்றே
மறைபுகன் றிடும்படி பண்ணி
உன்னுடன் வாழ்ந்தேன் அனந்தகற் பங்கள்
அதன்பிற கோருக முடிவில்
அன்னமென் நடையாய் அடவியாய்ப் பல்லாண்
டமரரு முனிவரு மிரங்கத்
துன்னுபல் விலங்கின் கணங்கள்சஞ் சரித்துத்
தொழுதெழக் கிடந்தது முளதால். (14)

வேறு

அத்தலத்திற் பிருகுமார்க் கண்டன்முதல்
அருந்தவத்தி லன்பு பூண்ட
உத்தமமா முனிக்கணங்கள் நெடுங்கால
மிருந்துலேயாத் தவங்கள் செய்யச்
சித்த மொருப் படுத்தியென்பால் அன்பிருத்தி
யுறவாழ்ந்து செல்லு நாளில்
எத்தலமும் புடைத்தழிக்கும் கொடுங்கால
நேமி யென்ருேர் இரக்க மில்லான். (15)

கடுவனேய நிசாசரனல் ஈடுபட்டுக்
கலங்கிமுனிக் கணங்க ளிந்தத்
தொடுகடலிற் கிடந்தவெமைத் துயிலெழுப்பி
அவன்செய்த துயரங் கூற
விடுவிடெனப் புள்ளேறி யக்கணத்தில்
அத்தலத்தில் விரைந்து சென்று
முடுகிடலு மடலவுணன் அமர்குறித்துச்
சேனேயொடென் ஞேடே மூண்டான். (16)

பூமியே சேனேயொடும் புவனம்வெரு
வுறப்பூண்டு போந்த கால
நேமியையென் நேமியினல் நேமியிடை
யறுத்திடவந் நீசன் சோரி
நாமினிதின் வலத்தேந்தும் சக்கரத்தில்
தோய்ந்திடவந் நவைகள் தீர்ப்பான்
காமியமா ரணமாயை கைவிட்டு
வருணனுமக் களத்தி லெய்த. (17)

ஆங்கவனேச் சக்கரத்தை நீராட்டி
விடுதியென அவனு நேர்ந்து
தாங்குகின்ற கங்கையினே யமுனேயினேச்
சாசொதியைத் தரணி மாதே
பாங்குடனே கொணர்ந்தாழி நீராட்ட
அம்மூன்றும் படியிலாக
ஓங்குதிரு முக்குளமென் றக்களத்துக்
கும்பர்திரு நாம மிட்டார். (18)

அத்தலத்தி னின்றவட லரக்கனல்
அலமந்தங் காவி சோர்ந்த
உத்தமர்கள் பட்டதுயர்க் கிரங்கிநான்
ஓவியமே யுருக நஞ்சீர்ப்

பத்தர்களும் முனிவர்களும் வானவரும்
வந்துதிருப் பல்லாண் டோதிச்
சித்தமுறப் பணிந்தேத்தி நின்றென்பால்
ஒருவார்த்தை செப்பி நின்ருர். (19)

ஆங்கதுதா னேதென்னில் அன்னநடை
மின்னிடையாய் ஆதிநாதா
ஓங்குதிரு நேமியைநீ எங்களுக்காய்
உயிர்மாய்த்த துலகில் தோன்றப்
பாங்குடனே பாற்கடலில் கண்வளர்ந்த
படிபோலிப் படிமேற் சேடன்
தாங்கிட இன் றித்தலத்தில் கண்வளர
வேண்டுமென்றென் சரணந் தாழ்ந்தார். (20)

திரண்டவர்க ளவைமொழிய நன்றென்று
நானிந்தத் தேக நீளம்
இரண்டுநூ ருயிரத்தோ டைம்பதினு
யிரமென்றே இசைக்கப் பட்ட
அரண்டருஞ்சீ ரோசனைகட் களவிலடி
முடியிணையோ ரற்ப மாக்கி
முரண்டவிர்ந்த அனந்தனையு மதுக்களவாய்ச்
செய்தந்த முனிவோர் காண. (21)

அத்தலத்தி லொருகோயி லமைத்தனுட்
படுத்தனனுங் கவைகண் டோங்கும்
உத்தமர்கள் பாற்கடலிற் கிடந்ததிரு
வுருப்பரப்பை யொடுக்கி மாயன்
எத்திறத்தாற் கிடந்தனனென் றெணிவியந்திட்
டுளமுருகி யிரங்கி யிந்தச்
சித்திரந்தா னுனக்கல்லால் எவர்க்கியலும்
என்றேத்தித் தெளிந்து நின்றே. (22)

அன்டமெலாந் திருவுதரத் தொடுக்கியொரு
பாலகனு மாக்கை தன்னைக்
கொண்டுவட தடத்திலைமேற் கிடந்ததெனக்
கிடந்தனனக் குறியா லிந்தப்
புண்டரிகக் கண்ணனுக்கிங் குயர்வடவேச்
சுரனென்றே பொருந்து நாமம்
தொண்டர்மகிழ்ந் தேத்தவென முனிக்கணங்கள்
கட்டுரைத்தார் தொல்லை நாளில். (23)

அந்நகருக் குறுபெயரும் திருவடவேச்
சுரபுரமென் றருளிப் பல்கால்
என்னைவலம் வந்தேத்தி இமையவரும்
முனிவர்களு மிறைஞ்சிப் போனுர்
மின்னனைய நுண்ணிடையாய் எட்டெட்டுச்
சதுரயுகம் வேத மேத்த
நின்னையுமக் கமலையையும் அடிமுடியி
லுறவிருத்தி நெடுநாள் வாழ்ந்தேன். (24)

தேன்மருவு பூங்குழலாய் எட்டெட்டுச்
சதுரயுகம் சென்ற தற்பின்
வானவர்கள் மகிழ்ந்துரைத்த மாவடவேச்
சுரபுரம்போய் மடங்கல் வாழும்
கானகமாய்க் கரடிபுலி மதயானை
பகையின்றிக் களித்து வாழப்
போனயுக மனந்தங்கள் ஆங்கதற்பின்
அதன்மருங்கோர் புத்தூர் தோன்றி. (25)

கந்தநறும் பூங்குழலாய் வேதமுதற்
பலகலையுங் கருத்தி லோரும்
அந்தணர்கள் பலர்வாழ்வார் அதன்மருங்கே
வேடர்குடி யதிக மேற
நந்தலிலா அத்தலத்தில் வேடர்களே
வேந்தர்களாய் நண்ணி வாழ்ந்தார்
பந்தமிலா தவர்குலத்தில் வில்லிகண்டன்
மல்லியென்னும் பாவை தன்பால். (26)

ஆங்கிருவ ருடன்பிறந்து பாலர்களாம்
பருவம்போய் அரசாள் நாளில்
ஓங்கிடநாம் கண்டுயிலும் கானகத்து
வேட்டைக்கென் றொருநாள் போந்தார்
தேங்கமழ்பூங் குழலணங்கே யிருவர்களிற்
பின்பிறந்த கண்டன் சென்று
தாங்கியகை வேலினெடும் அவ்வனத்தில்
வாழுமொரு சாத்தூ லத்தை. (27)

தொடர்ந்தோட அதுசெடிவாய்த் தோன்றுமை
கண்டுசுவ டெடுத்து வாழும்
இடந்தேடி யிவன்திரிய அயற்பயம்பில்
இருந்திவனுக் கெதிரே பாய்ந்து

நடந்தேறி மார்பிடந்து செங்குருதி
யுண்டுசெடி நண்ணுங் காலை
உடன்தேடித் தம்பியெங்கே யென்றுவில்லி
தடமெடுத்தங் கோடி வந்தான். (28)

### வேறு

வந்தவன் தம்பி யிறந்தமை கண்டு மயங்கிமண்ணில்
எந்துணை போயினை யோவென வேங்கி யிரங்கிவீழ்ந்து
நந்தின னுமென மோக மடைந்தனன் நானதற்பின்
செந்துவர் வாய்மட மாமயி லேதுயில் செய்யும்வண்ணம். (29)

எண்ணி யவன்துயில் போதினில் யானு மெழுந்துசென்று
புண்ணிய சிந்தை கொடுத்து அவனேடு புகலலுற்றேன்
நண்ணினை யென்பதி யின்று புதுக்கிடின் நாணுளும்
பண்ணிய தீவினை முற்றும் அறுமிது பண்பென்ன. (30)

### வேறு

அப்பொழுது சொப்பனத்தி லாங்கவனு
மென்னேடே யறைவா னுகி
இப்பொழுதென் பின்பிறந்தான் வேட்டைக்கு
வந்தவனிங் கிறந்து விட்டான்
கைப்பொருளு மிகவேண்டும் இத்தலத்தை
நவமாகக் காண வேண்டின்
எப்படி நீகற்பித்தாய் அப்படியே
செய்கின்றேன் இறைவா வென்ருன். (31)

மாசிலா னிதுமொழிய மானனையாய்
அவனேடு மறுத்துஞ் சொன்னேன்
ஆசிலா வும்பியையும் எழுப்புவேன்
அவன்குருதி தன்னை வாயால்
கூசிடா துண்டிடுஞ்சாத் தூலத்தை
இக்கணத்திற் கொல்வேன் மற்றப்
பேசரிய தனம்வேண்டின் தன்குகையிற்
காட்டுகின்றேன் பெறுதி யென்ன. (32)

செப்பினே னவன்கனலிற் றுணுக்கென்ன
எழுந்திருந்தான் தேனே வில்லி
இப்பொழுது கண்டகனு ஈதென்கொ
லதிசயமென் றிருந்தான் அக்கால்
ஒப்பரிய கண்டனுயிர் உடல்மேவி
ஒடியெழுந் திருப்பக் கண்டு
தப்பிலது கண்டகனு வுய்ந்தனனுன்
எனவவனைத் தழுவிக் கொண்டான். (33)

என்னுடைய கண்மணியே எனத்தழுவி
யணைத்தருகி லிருத்திக் கொண்டு
தன்னுடைய சொப்பனத்தில் அரிதனக்குப்
பகர்ந்ததெல்லாம் தம்பிக் கோதி
மின்னிடையாய் இருவர்களும் எழுந்திருந்தாங்
கிருகவடு மேவ வில்லி
பின்னவனைக் கொன்றபுலி யம்போடுங்
கிடப்பதனைப் புரிந்து பார்த்தான். (34)

கண்டனையோ கண்டாவிப் புலியிறந்து
கிடந்ததுமென் கனவு தன்னில்
கொண்டல்வண்ணன் கட்டுரைத்த பரிசினையு
மெனத்தம்பிக் குவந்து கூறிப்
புண்டரிகம் இடந்தபெரும் பிலம்பிடையிற்
கிடந்தொளிரும் பொருளைக் கண்டான்
உண்டிவிடந் தனிலெனக்குக் கனுக்காட்டி
யுயக்கொண்ட வொருவ னென்ன. (35)

வேறு

அத்தலத்தி லெனைத்தேடித் திரிந்தனனுங் கவ்வனத்தில்
சித்தமுறக் கேட்டிமுன்நாள் சிறப்போடு மெமக்கினிய
பத்தர்கணஞ் சமைத்தளித்த கோயிலறப் பழகவதில்
உத்தமமாம் அவ்விடம்முன் உயர்ந்தோங்கி நமைத்தாங்கும்.()

சேடன்முதல் நித்தர்களைத் திருமகளை நினையென்னை
ஏடவிழ்தன் சினையாலும் எழுந்தோங்கும் உயர்வாலும்
ஈடுபெறப் பெரதிந்துநிற்கும் பெரும்பூட்டி னதிசயத்தை
வேடனுங்கண் டெனதருளால் விரைந்தாங்கே அருகணைந்தான்.

வந்தவில்லி சிறந்தோங்கும் வடவத்தின் திறநோக்கி
இந்தவிதி யுளன்கனவில் எமக்கருளு மிறைவனெனச்
சிந்தையுறப் பணிந்ததனை வலமாயொர் சினையூடே
முந்துறநம் மனந்தாழ்வான் பனுமகுட மூன்றிரண்டும். (38)

கண்டனன்மற் றதற்பின்னே கரியவிழிச் செங்கனிவாய்
ஒண்டொடியே யெனைக்கமல தனையுன்னை யுற்றுறைந்த
தொண்டர்களைத் தனித்தனியே யால்வீட்டித் துணைவனொடும்
அண்டமுண்ட செவ்வாயா சரணமென்றென் னடிவீழ்ந்தான்.

உடனெழுந்தென் னவயவங்கள் உறநோக்கி அன்பிணைந்து
படவரவத் தணையானே யெனப்பலகால் பணிந்தேத்த
மடமயிலே நான்கனவில் வகுத்தபணி செயநம்மை
விடவடிக்க மாட்டாமல் விம்மிவிம்மி யிருந்திறைஞ்சி. (40)

அத்தலத்திற் சிலகடிகைப் போதிருந்த வடவில்லி
இத்தலத்தில் இவற்கிசையும் திருக்கோயி லெடுத்திவற்காம்
பத்தர்களும் பரிசனமும் பரிந்தினிதி னுறையவிதை
உத்தமமாம் திருநகர மொன்றென்ன வும்பர்தினம். (41)

கட்டுரைக்கக் குடியேற்றி யிடுவேனு னெனக்கருதி
வட்டமதி முகத்தணங்கே மாசிலா னத்தலத்தை
விட்டெழுந்து புத்தூரில் வேதியரை யழைத்தவரோ(டு)
உட்டெளிவால் இவையனைத்தும் உரைத்ததனிற் குடியேற.(42)

வேண்டுமென்றான் விறல்வில்லி வேதியர்க ளப்பதிக்கும்
ஆண்டகையெம் மூர்ப்பெயரே யாக்குதியே லதுசெய்வான்
கூண்டுடனே வருகின்றேம் எனவுரைத்தார் குலமறையோர்
நீண்டபுக ழுறுவில்லி யதற்கிசைந்து நின்றவரை. (43)

உடன்கொடுபோய்க் குடியேற்றி உத்தமமா மப்பதிக்குத்
தடம்புடைசூழ் புத்தூர்ப்பேர் தன்பேரென் றிரண்டொன்றாய்த்
திடம்படவுள் ளுணர்ந்திதன்பேர் திருவில்லி புத்தூரென்(று)
அடங்கிடவோ ரூர்க்கிருபே ராக்கினன் ஆரமுதே. (44)

அல்லிநாள் மலர்வதனத் தணங்கேயந் நாட்டின்பேர்
மல்லிநா டெனத்தன்னைப் பெற்றாள்பேர் மகிழ்ந்திட்டான்
வில்லிநான் மறைவாணர் வேதத்தின் விரித்தநெறி
சொல்லினற் றனையிறையும் பிரியாத துணைவனேடும். (45)

ஆங்கதற்பின் அனந்தாழ்வான் தனையென்னை யழகோடும்
ஓங்கியசீர்த் திருமகளை நினைமற்றுங் குள்ளவரைப்
பாங்குடனே திறல்வில்லி பரிவோடுங் கோயில்முதல்
பூங்குழலாய் முன்கண்ட தனமெடுத்துப் புதுக்குவித்தான். (46)

பதுமமுகத் தணங்கரசே பழகினதைப் புதுக்குதலால்
புதுவையென்று மப்பதிக் கோர்பெயரிட்டான் புகழ்வில்லி
மதுமலர்ப்பூங் காக்கள்பல வைத்தனந்த மோடைகண்டான்
அதுகிடப்பத் திருவிழா வாதியாய் மறையறைந்த. (47)

### வேறு

வாராரா முலையாய்கேள் கீதங்கள் வாச்சியங்கள்
ஆரா தனைகட் களவிறந்த பலவளங்கள்
ஓராறு நாடகங்கள் ஏழுலகுங் கண்டுவப்பச்
சீரார் திறல்வில்லி மற்றெமக்குச் செய்வித்தான். (48)

அன்பினு லிவ்வாறு செய்துபல காலமவன்
தன்பினன் கண்டனேடும் அத்தலத்தில் தான்வாழ்ந்து
புன்புநா மேவப் பிரமனரன் காணுவென்
இன்பநா டெய்தினன் ஈரே முலகேத்த. (49)

முன்னுள் நிகழ்ந்த கதையுமந்த மூதூர்க்குப்
பின்னு வந்தங்குப் பெரும்பிரம னரனேத்த
அந்நாள்நா மத்தலத்தில் மேவியது மாரணங்கே
இந்நா ளுரைத்தோம் இதுவன்றிப் பட்டர்பிரான். (50)

செப்ப முடைய திருநகரிற் சென்றுதித்தாங்(கு)
ஒப்பிலான் பூமாலே பாமாலே யுள்மகிழ்வால்
எப்பொழுதுஞ் செய்துவரு மென்றன்முன் அத்திறமும்
தப்பறநீ கேளாய் உரைக்கின்றேன் தாழ்குழலே. (51)

வையத் துயிர்களளே மனத்துணர மாட்டாமல்
பொய்யில் உதித்தவமே போவதுகண் டவ்வுயிர்கள்
உய்யும்வகை யெண்ணியென தூர்தியினே யோவியமே
மெய்யைவிளக் கென்றுரைத்து மேதினியில் மேவுவித்தேன்(52)

மற்றவனும் ஆனிதனிற் சோதிதனில் மண்ணில்முனம்
சொற்றவில்லி புத்தூரில் தொல்புகழ்சேர் வேதியரில்
உற்ற முகுந்தருக்கும் பதுமைக்கு மோர்மகவாய்ச்
சிற்றிடையாய் தோன்றினன் தேசஞ் சிறந்தோங்க. (53)

அஞ்சு வயதில் அளவிறந்த பூம்பொழில்கள்
கஞ்சங் கழுநீர் கலித்திலங்கு மோடைபல
நெஞ்சு நெகிழ்ந்த நினேவோடுங் கண்டெமையே
தஞ்ச மெனநின்று பூமாலே சமைத்தளித்தான். (54)

அந்நாளிற் கூடல் நகராளும் மீனவர்கோன்
மின்னுர் முடிவேந்தன் வேதாந்தத் துட்பொருளேத்
தன்னு லறியச் சமயிகளேத் தான்கூட்டிப்
பொன்னுர் கிழியொன்று தூக்கினன் பொற்கொடியே. (55)

வேண்டிய வாறுசில வேந்தர்தம் பேர்கூறிக்
கூண்டணேந்து சென்று கிழிகொள்வான் சமயிகடாம்
தீண்டி யறுக்குநெறி செல்லா தலமருநாள்
பாண்டியன் முன்னெய்திக் கிழியறுத்தான் பட்டர்பிரான்; (56)

தண்டி யவித்த சமயத்தார் பார்வேந்தன்
கண்டிருக்கச் சென்றேறும் பத்தன் கழல்வீழ்ந்தார்
திண்டிறல்சேர் மன்னவனும் தேவர்குழாம் போற்றிடவப்
பண்டிதனே யானேக் கழுத்திற் பரிந்தேற்றி. (57)

கூடற் பதியை வலமாகக் கொண்டுவர
ஆடற் பறவைமே லேறியவன் கண்டிடநான்
ஏடுற்ற தாராய் எதிர்செல்லப் பல்லாண்டைப்
பாடிப் பரிந்தெனக்குக் காப்பிட்டான் பட்டர்பிரான். (58)

ஆங்கதற்பின் வில்லிபுத்தூ ரெய்திநா மாயரிடைப்
பாங்குடனே தோன்றி வளர்ந்திடுநாள் பாலகனுய்
ஓங்கும் பருவத் தசோதை யுரையாகப்
பூங்குழலாய் பாமாலை பாடியென்னைப் பூசித்தான். (59)

என்று மரங்கம் எழில்மா லிருஞ்சோலைக்
குன்ற மிலங்கு குளிர்வேங் கடப்பொருப்பு
நன்றி தரும்வில்லி புத்தூரின் நான்கினிலும்
ஒன்றிய சிந்தையனுய் ஓவியமே வாழ்கின்றேன். (60)

மடமயிலே வைகுந்த மாநகரி லிந்தப்
படவரவ மேந்தவளர் பாற்கடலிற் பண்டை
வடவிலையில் பட்டன் மனமே எனக்காம்
இடவகையாய்க் கொண்டாங் கெப்பொழுதும் வாழ்வேன். (61)

என்றிறைவன் முன்னிகழ்ந்த கதையெலா மெடுத்தியம்ப
மன்றல்கமழ் பூங்குழலாள் மண்மடந்தை யுணர்ந்துமனத்
தொன்றியசீ ரன்பினளாய் உலகளந்த ஒருமுதலைச்
சென்றுபணிந் துவந்தேத்திச் சீவிலிபுத் தூர்நகரில். (62)

இப்பொழுதே ஏகுகின்றேன் விடையருள்க இறைவவென
ஒப்பரிய திருமாலும் உவந்துவிடை கொடுத்தருளச்
செப்பமுடை யுலகேழும் சீர்பெறவத் தேவன்மனம்
அப்பொழுதே பின்தொடர அமரர்குழா மடிபணிய. (63)

வேதங்கள் தொழுதேத்த விரிஞ்சனரன் அகமகிழப்
பூதங்கள் தொழுதேத்தப் பூசுரர்கள் அம்மடந்தை
பாதங்கள் தொழுதேத்தப் பட்டர்பிரான் குலம்வாழப்
போதங்கொள் நெறிவில்லி புத்தூரின் புகழோங்க. (64)

அருந்தவத்தோ ரின்பமுற அச்சுதற்கா ளாயுளகம்
திருந்தவரும் முனிக்கணங்கள் தேசுபெறுஞ் சித்தர்குழாம்
பொருந்துமது மலர்தூவிப் போகாத பிறவியறும்
மருந்திதெனப் பணிந்தேத்த வசுக்கள்திரு வடிபரவ. (65)

ஏராரு நாரதனும் தும்புருவு மிசைபாட
வாராரும் பூண்முலையாள் வளர்திருப்பாற் கடல்நீங்கிக்
கூராழி சங்கேந்துங் கொண்டலமர் புத்தூரில்
சீராருந் திருவாடிப் பூரத்திற் சிறப்பினெடும். (66)

பட்டர்பிரான் பயிர்செய்து பலநாளும் பூவெடுக்கும்
மட்டவிழ்பூம் பொழில்நந்தா வனத்திடையில் மதுப்பொங்க
விட்டிலங்கும் பசுந்துளப மென்பூட்டில் மேலான
சிட்டர்தொழப் புவிமடந்தை திருவவதா ரஞ்செய்தாள், (67)

வேறு

மண்ணோங்கின மானிட மோங்கின சீர்
விண்ணோங்கின வேதிய ரோங்கின ரேழ்
பண்ணோங்கின பாடல்க ளோங்கின வோர்
கண்ணோங்கின கற்றவ ரோங்கின ரால். (68)

வேறு

மடிந்தது தீமை யாவி மயக்கிய மாயா கங்குல்
விடிந்தது ஞால மெங்கும் விளங்கின களங்கம் நீங்கி
ஒடிந்தது வஞ்சர் வஞ்சம் ஒய்ந்தது கொடுமை யன்றே
படிந்தது வாது பேசும் பாதகச் சமய மெல்லாம். (69)

வேறு

பொய்யி றந்தன போதம் பிறந்தன
மெய்சி றந்தன மோகம் மெலிந்தன
வைய மெய்தும் வருத்த மயக்கமும்
கைய கன்றன காம மிறந்தன. (70)

வேறு

அடைபட்டது தீவழி யல்லலொடும்
தடைபட்டது சத்த முதற்புலனே
உடைபட்டது நீதியி லோடுமுளம்
கிடைபட்டது கீழ்மைய வாயவெலாம். (71)

வண்ணந்திகழ் மண்மக ளும்வளர்வான்
நண்ணுந்திரு நந்தவனப் பொழிலும்
விண்ணின்தலை மேகமு மின்னுமென
எண்ணுந்திற மாகி யிலங்கினவே. (72)

வேறு

வாவியி னலர்ந்த செந்தா மரைதிரு விளக்கே யாகக்
காவிகள் விழித்து நோக்கக் களிவண்டு கானம் பாட
மேவிய மயில்க ளாட விண்முகில் முழவி னார்ப்பத்
தேவியுந் தன்னை யீன்ற திருத்துழாய் மடியில் வாழ்ந்தாள். (73)

வேறு

இச்சென்ற காலத் தெனையொப்பார் ஆர்புவிமான்
அச்சொன் றெடுத்துவரப் பெற்றேனென் றன்புருகி
வெச்சென்ற வெந்நீரும் வேண்டாமல் துழாயன்னை
பச்சென்ற கொங்கைப் பசுநறவப் பாலளித்தாள். (74)

அன்னைத் துளபம் அருட்பால் சுரந்தளிப்பப்
பின்னின்ற பூமரங்கள் எல்லாம் பிராட்டிதனக்
கென்னபணி செய்வ தினியாமென் றெழில்பூக்கள்
தன்னை யுறத்தூவ வரிக்குயில்கள் தாலாட்ட. (75)

செய்ய பசுங்கிளிகள் சென்றுங் குரைபயிற்ற
மய்ய லறுமன்னம் வளர்சிறகால் வந்தணைப்பப்
பைய விளந்தென்றல் பசுமேனி மேற்றடவ
உய்ய வருட்பூவை யுறங்கக் குறங்குதட்ட. (76)

**வேறு**

பூவெலாம் மதுக்கள் சிந்தப் பொழிலெலாம் கனிகள் சிந்தக்
காவெலாம் பரந்த மந்தி கடுவனோ டெழுந்து செந்தேன்
ஆவலா லருந்தி யாடி அன்னையின் றெமக்கு முன்போல்
ஏவலான் வைக லுண்டேற் பணியென விறைஞ்சி யேத்த. (77)

சாதிகள் நெறியில் வைகச் சதுமறை யவர்கள் தங்கும்
வீதிகள் தோறும் ஞான விழாவொலி மேவி யார்ப்ப
ஓதிய கலைக்கு முன்னே உணர்வுசென் றருளின் வைக
நீதிகள் யாவர் மாட்டும் நிலைதிறம் பாது நிற்க. (78)

**வேறு**

கானில் வைகும் விலங்கினமும் கரிசு நீங்கி யருளெய்த
வானில் வைகும் தேவர்களும் வந்து மலர்மா மழைபொழியத்
தேனுண் டுளிசேர் பூமரத்திற் செறியும் வெறியும் பறவைகளும்
ஊனு முயிரு முடன்கரைய உணராத் திருவெட் டெழுத்தோத.

**வேறு**

மன்னுசரா சரமோங்க வானோங்க மறையோங்க
அன்னநடை மின்னிடையாள் இவ்வண்ண மாங்கமர
முன்னையுடைத் தொடர்பாலே முகுந்தனுர் திருமகனுர்
என்னுமெழிற் பட்டர்பிரான் எப்போதும் போலிறைக்கு. (80)

**வேறு**

கடிமலர் கொய்து நாளுங் கணிப்பரு மாலை கட்டி
அடிகளுக் களிப்பா ரென்று மாடிப்பூ ரத்தி னன்றும்
படிமுழு துலக முண்ட பரஞ்சுட ரருளி னுலே
விடிவதன் முன்னஞ் சென்று மென்மலர்க் காவைச் சார்ந்தார்.

ஆதவ னெழுந்த போதில் அகலிடத் திருள்க ளெல்லாம்
ஓதுமக் காவில் வைகி யுறையுமற் றதுதா னந்நாட்
போதுமாக் கதிர்கொள் பூமி நங்கையும் பொருந்தலாலே
சோதிமேற் சோதி யாகித் துலங்குதல் தொண்டர் கண்டார்.

அதுகண்டு மகிழ்ச்சி தாங்கி அந்தணர் கோனுந் தூய
மதுமலர்க் காவு ளெய்தி வளரொளி மூலம் நாடிப்
புதுமதுப் பொங்கும் பச்சைப் பசுந்துழாய்ப் பூட்டினூடே
கதுமெனவிழியால் நோக்கிக் கருணையின் கொழுந்தைக்கண்டார்

கண்டவப் பொழுதே கண்ணு முள்ளமும் களிப்பச் சென்று
தொண்டரப் பெண்ணை நோக்கித் தோமறு மன்பு கூர்ந்திவ்
ஒண்டொடி யார்கொ லென்ன உரைத்தன ரதையென் மாசு
கொண்டபுன் சொல்லால் நாயேன் அறிந்தவா கூறலுற்றேன்.

வேறு

பூதாதி யெல்லாப் பொருட்கும் அனைத்துயிர்க்கும்
மாதாவோ விண்ணவர்கள் வைப்போ மறுவருசீர்
வேதாந்தந் தானோ விரிஞ்சனரன் செய்தவமோ
ஓதாச் சுகோததியின் வித்தோ ஒளிமணியோ. (85)

செந்தா மரைமலரிற் றோன்றிச் செகமெல்லாம்
தந்தாள வந்த திருமகளோ தாரணிசேர்
நந்தா விளக்கோ ஞானத்தின் நற்கொழுந்தோ
சிந்தா மணியோ திருப்பாற் கடலமுதோ. (86)

கற்றவர்கள் கண்ணின் மணியோ கலைமகளோ
உற்றுணரு மன்பர் உயிரோ உயிர்த்துணையோ
முற்றப் புவன முழுதும் முறையாலே
பெற்று வளர்க்கும் பெரும்பார் மடமகளோ. (87)

புண்ணியமோ வேதப் பொருளோவிப் பூதலத்தோர்
நண்ணி முனஞ்செய்த தவமோவென் நாகணையான்
கண்ணின் மணிதானோ கலைப்பொருளோ காரணத்தால்
எண்ணரிய நீதிக் கொழுந்தோ இளந்தளிரோ. (88)

பாலோ செழுங்கனியோ தேனோநற் பாகவதாள்
நூலோ அதன்பயனோ நொய்தினெனை யாண்டதிரு
மாலோ மடப்பிணையோ மாசறுசீர் வேதமொரு
நாலோ அதன்முதலோ நம்மால் அறிவரிதால். (89)

எல்லா மறிவித்தென் இன்னுயிர்க்கு வரமருளும்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணன் முன்பிலிந்த
வில்லார் நுதலாளைக் கொண்டுசென்று மேவினால்
சொல்லா திரானெமக்கித் தோகைவர லாறென்ன. (90)

எண்ணிப் பெரியாழ்வார் இன்னமுத மீதென்ன
மண்ணிற் கிடந்த மடமயிலைச் சென்றெடுத்துப்
பண்ணிற் சிறந்த மறைபாடப் பசுந்துளவக்
கண்ணிக் கருமுகிற்கோர் காணிக்கை யீதென்ன. (91)

கொண்டுசென் றன்பர்வட பெருங்கோயி லான்திருமுன்
தொண்டர் குழாஞ்சூழக் கிடத்தித் தொழுதேத்திப்
பண்டுலக முண்ட பரனேயிப் பாவைதனைக்
கண்டனன்நின் நந்தா வனத்தடியேன் கண்களிப்ப. (92)

மஞ்சுவளர் சோலை வளர்பூந் துடவனத்தில்
பஞ்சவர்கள் தூதாஇப் பச்சைப் பசுங்குழவி
தஞ்சமெவ ராகவந்து தங்கிற்றூர் ஈன்றவர்கள்
முன்செய் வினையொன்று மறியேன் மொழிகவென. (93)

வேதியர்கோன் கூறவில்லி புத்தூரிற் கண்துயிலும்
ஆதி மதிவண்ணர் ஆழ்வார் முகம்நோக்கி
ஓதி யிவளிந்நாள் உதித்த கருமத்தின்
நீதியையும் பின்னே உரைக்கின்றேன் நீயிவளை. (94)

இப்போ தகத்திற் கொடுபோயிவ் வேந்திழையை
முப்போதும் போற்றி மகளாம் முறைபொருந்த
எப்போதும் பேணி வளர்ப்பாய் இவள்பெயரும்
செப்போங்குங் கோதையெனச் செப்பென்றான் தேவர்பிரான்.

இன்று நாமேறுஞ் சிவிகையினில் ஏற்றியிந்த
மன்றல் கமழும் மடமயிலோ டாழ்வார்பின்
சென்றனைத்துக் கொத்துந் திரும்புகவென் றான்திருமால்
அன்றவர்க ளெல்லாம் அதற்கொருப்பட் டாங்கணைந்தார். (96)

மாணிக்கம் முத்து வயிர முதல்மணிகள்
பேணிப் பதித்தடங்காப் பேரொளியி னால்விளங்கும்
ஆணிப்பொற் பல்லக்கில் ஆழ்வார் திருமகளை
வாணித் திலநகையார் வாழ்த்தி மகிழ்ந்தேத்த. (97)

பேரிகை எக்காளம் கொம்பொடு பேரிசைச்
சீரிய நற்றாளம் சின்னம் முழவதிர
ஏரியல் பல்வளனும் எங்கணு மாசியெழக்
கூரிய மெஞ்ஞானக் கொம்பினை அந்தணர்கோன். (98)

தன்திரு மாளிகையில் தாரணி யோர்கள்தொழ
ஒன்றிய அன்பினொடும் உத்தம னுட்புகலும்
அன்றயல் மாளிகைவாழ் ஆயிழை யார்மறையோர்
சென்றனர் யாவர்களும் நின்றிவை செப்பினரால். (99)

வேறு

தெள்ளமு தத்தைத் திரட்டித் திருமேனி யைச்செய்த தென்பார்
வெள்ள மிடத்துச் செனித்த மலர்மங்கை யின்மிக்க தென்பார்
உள்ள முடைத்துக் களித்துச் சிலரேநா வியற்பாவை யென்பார்
மெள்ள வெடுத்துப் படுத்துச் சிலர்மென் முலையூட்டு மென்பார்

### வேறு

மாசறு சோதி நீதி வளரொளிக் கருணை யென்பார்
ஆசறு குணங்கள் மூன்றும் கடந்தவராவி யென்பார்
வாசவன் ககன மிக்க வானவர் செல்வ மென்பார்
ஈசனுக் கினிய நீரா யெடுத்ததோர் வடிவ மென்பார். (101)

அண்டங்க ளனைத்தி னுள்ள அழகெலாம் எடுத்துச் சேர்த்துப்
புண்டரீ கத்துள் வேதன் புவிமிசை விடுத்த தென்பார்
கண்டிடில் அயனுற் செய்யும் கன்னியோ இவள்தா னென்பார்
உண்டுகொ ளுலகி லிந்த வுருவினுக் குவமை யென்பார். (102)

உலகிரு ளகற்ற வந்த வொண்சுடர் விளக்கி தென்பார்
பலகலை பகரும் வாக்கின் நங்கையிப் பாவை யென்பார்
அலகிலா ஞான வாரி ஆரமு தாகு மென்பார்
நிலமக ளிவளே யென்பார் நேமியா னுயிரி தென்பார். (103)

சனகனி லுதித்த சீதை பின்னுமித் தரணி மீதிப்
பனவனில் வந்து தோன்றும் படியிது வாகு மென்பார்
மனமகிழ்ந் தவளே யாகில் மற்றுநாம் வாழ்ந்தோ மென்பார்
அனகனு மாழ்வார்க் கீதை யறிவித்தா னலனே வென்பார்.()

அன்னையு முளளோ விந்த அமுதினுக் கறைமி னென்பார்
முன்னைநான் மறையி னந்த முதற்பொருள் பெண்ணேவென்பார்
தன்னையே நிகரா மாழ்வார் தவந்திரண் டதுகொ லென்பார்
மின்னையே யனையாள் தோன்றி மேதினி விளங்கிற் றென்பார்.

ஆசறு பெரியாழ் வாரும் அகத்துக்குத் திரியும் நெய்யும்
தேசுறத் தேட வேண்டாம் திருவிளக் கிவளே போதும்
மாசறு புதுவை யுள்ள மானிடத் தவர்தம் வாழ்வைப்
பேசில் ஆர்பெறுவா ரிந்தப் பெருநிலத் திடையி லென்பார்.

கற்றவர் உவமை சொல்ல வல்லரோ கமல நேரோ
சிற்றடி யிரண்டுக் கென்பார் சிறுவிரல் காண்மி னென்பார்
உற்றநற் புரந்தாள் கட்கிங் குவமையு முளதோ வென்பார்
பொற்றொடி கணைக்கால் கட்குப் பொருவிலை யுலகி லென்பார்.

இருகுறங் கெழிலை வேதம் இசைக்கவும் வலதோ வென்பார்
பொருவரு மருங்குக் கொப்புப் பூதலத் துளதோ வென்பார்
ஒருபொரு ளுளதோ பேதை யுதரத்துக் குவமை யென்பார்
வருதனம் இரண்டுந் தோன்றும் மார்பினுக் கிணையே தென்பார்

வேயையோ தோளுக் கொப்பு விளம்புவ திவளுக் கென்பார்
ஆயசீர்க் கழுத்துக் கொப்பிங் கறைவதி யாதோ வென்பார்
தேயுமா மதியோ விந்தத் திருமுகந் தனக்கொப் பென்பார்
வாய்தனக் கிணையுங் கூற வல்லரோ மனித ரென்பார். (109)

சீரிய பேதை மூக்குக் கிணையெது செப்பு மென்பார்
கூரிய விழிகட் கொப்புக் குவலயத் துளதோ வென்பார்
ஏரியல் வள்ளை யொப்போ இருகுழை யிணைகட் கென்பார்
நேரிய பிறையோ மாதின் நெற்றியை நிகர்ப்ப தென்பார்.()

கருங்குழல் தனக்கா மொப்புக் காட்டவு முளதோ வென்பார்
பெருந்திரு மங்கை யிந்தப் பெண்ணினுக் கிணையோ வென்பார்
திருந்துமாற் கன்றி யார்க்கித் திருமண மேற்கு மென்பார்
அருந்தவ முனமிப் புத்தூர் செய்ததற் களவே தென்பார் (111)

இப்படிச் சென்று கண்டார் இவையிவை யெண்ணி வாழ்த்த
ஒப்பரு கோதை பேதைப் பருவமா யொழுகி வாழ்ந்து
தப்பற வதனுக் கேற்ற அணிகலன் பலவுஞ் சாத்திச் [தாள்.
செப்பமாய் வளர்ந்து பின்னர்ப் பெதும்மையாம் பருவம் சேர்ந்

**வேறு**

சீரார் கமலத் திருவடிக்குச் செம்பஞ்சும்
ஏரார் புறந்தாளில் இட்டிலங்கும் பொற்சிலம்பும்
நேராக அங்குலிகள் தோறும் நிரைநிரையே
பேரா தமைத்துப் பிறங்கும் பணிபலவும். (113)

எண்ணிய நூபுரங்கள் மீதே யிசைந்திலங்கப்
பண்ணிய பாடகமும் பைம்பொ னொளிவீச
நண்ணி யதின்மேலே தண்டை நலந்திகழப்
புண்ணிய மாதினல்லார் பூட்டி யுவந்தனரால். (114)

உற்றூர் நோக்கில் உளதாய ஒளிர்மருங்கில்
சிற்றூடை சாத்தித் திருமடிதா னுங்கமைத்துப்
பற்று விடையிற் பசும்பொனரை ஞாணணிந்தார்
முற்றுக் கருணைக் கொழுந்தாம் முகிழ்நகைக்கே. (115)

தூய மலர்க்காந்தள் துணைக்கரத்தி லங்குலிகட்
காய திருவாழி யிலச்சினைகள் அன்னமென
ஏயத் திருமுன்கைக் கெழிற்சரிகள் பாகுடங்கள்
வேயனைய தோள்கட்குத் தோள்வளைகள் விஞ்சொளிசேர் (116)

சீரமருங் கச்ச மணிந்து திருக்களத்துக்
கேரமரும் பொற்பட்டக் காறை யிலங்கொளிசேர்
ஆரம் பவளநிரை யாணிப் பசும்பொன்மணி
வாரமரும் பூண்முலையார் மண்மகட்குச் சூட்டினர். (117)

செய்ய கனிவாயும் திருப்புன் குறுநகையும்
துய்ய குமிழிற் றுலங்கும் திருமூக்கும்
மையமரும் வேல்விழியும் வார்காதும் பொற்றோடும்
வெய்ய வொளிவீசி விளங்கு திருக்கொப்பும். (118)

வட்ட மதிமுகத்தில் வார்புருவப் பொற்சிலையூ(டு)
இட்ட திருமண் காப்பினொடு பிறைநுதல்மேல்
மட்டு மலிகுழல்மேல் சூழியமும் வார்திருவும்
பட்டந் திருப்பூரப் பாளை பலவணிந்தார். (119)

ஆழிநீர் வண்ண னருளாற் பெரியாழ்வார்
வாழியருட் கோதையெனு மங்களா சாசனத்தால்
ஏழுலகு மீன்றாள் எழுந்து நடைபயின்று
தோழியர்க ளோடு விளையாடத் தொடங்கினாள். (120)

அந்நாளிற் பரமபத்தி தலையெடுத்தாங் கலைகிடந்த
பொன்னாழிக் கையார்க்குப் புகழ்ந்துபணி செய்துவரும்
தன்னாவித் தாதையைப்போல் தக்கபணி தான்செய்வான்
பன்னாளு மலர்க்காவிற் பட்டர்பிரான் பின்நடந்தே. (121)

சென்றுசிறு பொற்கும்பஞ் சிற்றிடைச்சீ ரொக்கலைமேல்
மன்றல்கமழ் மலர்க்கோதை வாசநறும் புனல்கோதிக்
குன்றெடுத்தா னிரைகாத்தான் மனமகிழக் கொண்டணைந்தங்
கன்றுமுதல் பயிர்க்குதகம் பரிமாறி யன்பினொடும். (122)

வேறு

சிலபகல் செல்லு நாளில் சீரிய பெரியாழ் வாரும்
பலநறு மலருங் கொய்து பரிந்துபூ மாலை கோத்து
மலமறு மன்பி னோடும் வைத்துபா தானம் பண்ண
நலமுற வேகுங் காலை நாரண னருளிற் போந்தாள். (123)

வேறு

பெண்ணிற் பொலிந்த வருட்கோதை
பெருமாற் கமைந்த வித்தாமம்
விண்ணிற் றாமந் தனக்கிணையாய்
வருமோ காண வேண்டுமென
நண்ணித் திருப்பூக் கூடையில்முன்
ஞான மிக்கார் வைத்தநறும்
கண்ணித் தொடரி லொன்றெடுத்து
மூக்கில் வைத்துக் கந்தித்தாள் (124)

துய்ய வாச முறல்நோக்கித்
தோகை நினையும் துகளறுநம்
ஐயர் திருக்கை வாசியினால்
ஆன மணமீ தாதலினால்
வையத் துள்ள மலரெல்லாம்
என்னும் வானில் மலர்க்கிதுநம்
செய்ய கமலக் கண்ணற்குச்
சேரா தென்னச் சிந்தித்தே. (125)

### வேறு

என்னுடைய கோதை மணமூட்டி யிலங்கைநகர்
முன்னடையச் செற்ற முதல்வர்தமக் கித்தாரைப்
பின்னளிப் பேனீதே பெறும்பெரிய கயிங்கரியம்
மன்னு மிறைக்கென்று திருமாலை யனைத்திணையும். (126)

சீரார் திருக்குழல்மேல் வேய்ந்துதிருக் கண்ணாடி
நேராக நின்று நிழலில் எழில் நோக்கிப்
பாராநின் றுள்மீண்டு பட்டர்பிரான் எய்திடுமுன்
தாராரக் கோதைமண மூட்டியவை தான்கழித்தே. (127)

முன்ன மிருந்த தலத்தில் முறையாலே
மன்னுதிருப் பூக்கூடை யுள்ளமைத்து மிகச்சிறந்த
என்னமுதுக் கெப்போதும் இப்பணிக ளன்போடு
நன்னெறியிற் செய்திடநாம் வேண்டுமென நன்குணர்ந்தே. 128

அய்யர் வருமுன்னம் அகன்றவிக் கயிங்கரியம்
செய்ய உலகிற் செனித்தபலம் பெற்றதென
மையமருங் கண்ணாள் மனமகிழ்ந்து மண்ணவர்கள்
உய்யச் சிலநாட்கள் உற்றிதுவே நற்றொழிலாய். (129)

பண்ணிவரத் தாதை பரிவால் இவள்முடித்த
கண்ணி மணமெங்குங் கமழக் கொடுபோயிம்
மண்ணின் துயர்தீர வடபெருங் கோயிலர்முன்
நண்ணி யவர்க்களிப்ப நாரணனு மாங்கதனால். (130)

### வேறு

ஆசி லாத வடபெருங் கோயி லுடைய வச்சுதனும்
பேச வரிய சீபூமிப் பிராட்டி யாழ்வார் பெண்மகளாய்
நேசத் தாலே யவதரித்து நின்று தமக்கிப் பணிசெய்தல்
தேசத் தவர்கட் கறிவிக்க வேண்டு மென்னச் சிந்தித்தான். 131

அந்த நாளி லருட்கோதை யணிந்து கழித்த திருத்தாரில்
கந்த நாறு மயிரொன்று கூட ஆழ்வார் கண்தப்பிச்
சந்த மாருந் திருமார்பர் சாத்தும் படியர்ச் சகர்கையில்
முந்தை நாட்கள் போலளிப்ப முதிய மறையோன் கைவாங்கி.

கொண்டார்திருப்பூக்கூடையொடும்கோதையமைத்தகுளிர்வாசத்
தண்டார் தன்னையுறநோக்கிச் சாத்தக் கொடுபோம்வேலைதனில்
கண்டான் தாமத் துறுமயிரைக் கலங்கி மறையோன் ஆழ்வீரின்
உண்டா கியதோர் பிழையென்ன ஓதித் தாமத் துறுமயிரை. [று]

காட்டித் தாம மனைத்தினையும் கடிசேர் கோதை மணமிகவும்
ஊட்டி யிறைக்கு வரவிடுத்த உபாய மறியா தர்ச்சகனும்
வாட்டிப் போட்டீர் மயிர்வைத்தீர் மாலை யாகா திறைக்கிதுவும்
வீட்டிற் கொடுபோய்த் திருமாலை வேறே கொணர்க விரைந்
தென்ன. (134)

வேறு

வாங்கிய மாலை யெல்லாம் வாசலிற் கூடை யோடும்
பாங்கற வெறியக் கண்ட பட்டனும் பதைத்து விம்மி
ஏங்கியப் பொழுதே நந்த வனத்திலெய் திப்பூக் கொய்தே
ஓங்குசீர் மாலை கட்டி யுடன்கொணர்ந் தளித்து நின்றே. (135)

அர்ச்சகன் றனைப்பார்த் தின்றென் அரும்பிழை பொறுத்தியென்
குச்சையுற் ருழ்வார் கூறக் கோதறு மறையோன் கூறும் [னக்
நச்சர வணையா ஞனை நாள்பல பலவுங் கண்டேன்
நிச்சலும் வாடி வாடி நிறங்குலைந் திருக்குந் தாமம். (136)

மாசிலா நிலையார் கட்டும் மாலைக்கோர் மறுவுண் டாக்கிப்
பேசினு லபசா ரத்தைப் பெறுதுமென் றென்னைப் பேணிக்
கூசினென் மயிருங் கண்டேன் கூறினேன் கோதி லாதீர்
ஈசனுர் சூடு தார்க்கின் றிதுவர லெதனு லென்ன. (137)

அந்தணன் கூற ஆழ்வார் அறைவர்நா னென்றும் போல
வந்தநாண் மலர்க ளெல்லாம் வகைதெரிந் தெடுத்துக் கட்டித்
தந்துதான் போவ தல்லால் தமியனேன் இதற்கு மிச்சிங்
கெந்தவா றடைந்த தென்ன அறிந்திலே னிறைவ ஞணை. (138)

எனத்தொழு தாழ்வார் நிற்ப எலையறு கலைகள் வல்லான்
மனத்தினில் வருந்த வேண்டாம் ஏகிநன் மாலை பேணித்
தினந்தினங் கொணர்க வென்னச் செப்பிடக் கொணர்ந்தவாசப்
புனத்துழாய்த் திருத்தா ரெல்லாம் புவனமுண் டவர்க்குச்சாத்தி

அச்சுதன் நினைவு காணு தர்ச்சகர் மனையிற் போனுர்
பச்சைமா முகில்தன் செய்ய பதம்பணிந் தாழ்வார் பாடி
இச்செய லெதனுல் வந்த தெனத்திரு வுளத்தி லெண்ணி
மச்சணி மாட மோங்கும் மாளிகை யதனுள் மன்னி. (140)

வண்டமர் தாமஞ் சேர்த்து வைத்துநா மகன்ற காலை
உண்டெனில் ஆயங் காண்போம் நாளையென் றுளத்தி லெண்ணி
அண்டமுண் டுமிழ்ந்தார் தொண்டர் அன்றையிற் பொழுதைப்
போக்கிப்
பண்டுபோ லெழுந்து சென்று பனிமலர்க் காவி னுள்ளே. (141)

### வேறு

வண்டூது முனமெய்தி மதுநிறைந்து கிண்கிணி வாய்க்
கொண்டோங்கு மலரெடுத்துக் கூடைநிறை வுறப்பெய்து
தண்டோடு மிருகூடை யொருதோளில் தான்காவிப்
பண்டோங்குந் திருமாலைப் பணியாற்று மிடத்தெய்தி. (142)

நாராய்ந்து கொண்டெழுந்து நறுமலரின் வகைதெரிந்து
சீராய்ந்த நறுங்கண்ணி சிறப்போடு முறச்சேர்த்தங்
கேராருங் கூடையினி லெடுத்தமைத்தெப் போதும்போல்
நேராக வொருதலத்துள் வைத்தொளிந்து நின்றனரால் (143)

அப்பொழுதி லருட்கோதை யறியாள்போல் ஐயரிலை
இப்போது மெனச்சென்றங் கிருந்ததிருத் தாரனைத்தும்
முப்பொழுது மருட்கிடமாம் முகுந்தனூர் முதல்காண
எப்பொழுதும் போற்றுமம் இருங்குழல்மேற் சூடினாள். (144)

கண்டுநின்ற பெரியாழ்வார் கடிதெய்திக் கோபித்துக்
கொண்டுசெல்ல அருட்கோதை குழற்சேர்த்த திருத்தாரைப்
பண்டிருந்த கூடையினில் பயத்தோடும் பனிமலர்க்கண்
விண்டருவி மிகப்பாய வைத்திரங்கி விம்மினாள். (145)

### வேறு

சென்று கோபந் திருமுடிமேல்
செறியச் செறிந்த ஆழ்வாரும்
அன்று பதறி யழுதிரங்கும்
மகளார் தம்மை அணைத்தம்மே
ஒன்று மறியாய் போலும்நீ
உலகத் தெவர்கள் இதுசெய்வார்
இன்று நீசெய் திட்டதெனத்
திருமா லேற்ற மெலாமெடுத்து. (146)

கூறித் தங்கள் எளிதரவும்
குலவு மறையி லெடுத்திசைத்தாங்
காறி யிருத்தி யினியிவணம்
செய்யே லஞ்ச லெனத்தேற்றி
வேறே தாமம் பலசமைத்து
விரைந்து கொடுபோ யிறைக்களித்திட்(டு)
ஊறுங் கருணை மனத்தினராய்
உலக முண்டார் திருத்தொண்டர். (147)

மீண்டார் வேதக் கோன்சென்று
விளங்கு மகம்புக் கின்றென்னை
ஆண்டாள் தன்னை யருகிருத்தி
அறத்தின் திறங்கள் பலகூற
மாண்டா னிரவி குடதிசையில்
மாணி யாகி மண்ணிரந்து
நீண்டான் கங்கு லிடைச்சென்று
நிகரி லாத பெரியாழ்வார். (148)

**வேறு**

தம்மிடத்திற் சொப்பனத்திற் றங்கியிறை சாற்றியிடும்
எம்மிடத்திற் பாங்கா யினிதமரும் பூமடந்தை
உம்மிடத்திற் புத்திரியாய் உற்பவித்தா ளன்போடு
நம்மிடத்துப் பூமாலை நன்னெறியாற் றன்குழல்மேல். (149)

சூடித் தரவழகார் சொற்றெரிந்துள் ளன்புருகிப்
பாடித் தரப்பிறந்தாள் பட்டர்பிரான் நென்னலைநீ
வாடிற்று முன்னே மயிர்கிடந்த தின்றென்று
நாடிக் களைந்ததார் எங்கேயத் தார்நாளை. (150)

நன்னலத்தாற் கொண்டுவந்து தந்தா லணிவோம்நாம்
நென்னலை நீதந்த நெடுந்தாமம் கோதைமணம்
மன்னப் பெருதமையால் மற்ற தணிந்திலம்நாம்
என்ன வுரைத்தேகிப் புதுவையுள்ளோ ரெல்லோர்க்கும். (151)

இப்படியே அர்ச்சகர்க்கும் ஈசன் அருள்புரிந்து
செப்பரிய கோயில் செறிந்தாங்கே கண்வளர
அப்புதுவை யுள்ளவரும் ஆழ்வாரு மர்ச்சகரும்
ஒப்பரியான் சந்நிதியில் உற்ருர் உதிப்பதன்முன். (152)

**வேறு**

அத்திறத் தமைந்து சென்ருர் அர்ச்சக ஞகி மாயன்
த்த்தமக் கருளிற் சென்று சாற்றிய பரிசே யெல்லாம்
உத்தம குணத்தால் மிக்காங் கோங்குசீர்ப் பெரியாழ்வாராம்
பத்தரைக் குறித்துக் கோதை மகளென்று பகரே லென்ன (153)

( 154 முதல் 165 வரையில் உள்ள பாடல்கள்
இங்கு விடுப்பட்டுள்ளன. )

**வேறு**

ஆதரவாற் போற்றி அரங்க நகர்க்கிடந்த
மாதவனுர் தேவியென்ன மாமனத்து ளூற்றெண்ணி
வேதக்கோ னன்போடும் வாழ்ந்தானம் மெல்லியலும்
மாதக்கோர் போற்ற வளர்ந்தருளு மந்நாளில். (166)

வேறு

சீரமர் பெரியாழ் வார்தம் திருமக ளாத லாலும்
பார்மக ளாத லாலும் பவளவாய்க் கருங்கண் தோகைப் [கே
பேரியற் கோதை யாக்கை யிறைப்போதைக் கிறைப்போ தாங்
கூரியற் பரம பத்திக் கொழுந்தொடு மெழுந்து தோன்ற.(167)

**வேறு**

நாரா யணனை யநுபவிக்கும் பருவம் வந்து நண்ணிடவக்
காரார் முகிலின் திருமேனி கண்கால் செவ்வாய் கரங்களிவை
ஏரார் கமலம் போல வெழீஇ ஈசனிடத்தி லெழுங்காதல்
வாரா நிற்ப மானிடவர்க் கெனிற்றுன் வாழா மதிதோன்ற'()

சேலைத் தேடிக் காணுதே
குழையைச் சீறும் சினவிழியாள்
பாலைத் தேடிக் காணுதே
பாகைக் காதும் பணிமொழியாள்
கோலைத் தேடிக் காணுதே
குழைந்து வளைந்த கொழுந்தென்ன
மாலைத் தேடிக் காணுதே
வாடிக் கோடும் மனத்தினளாய். (169)

மண்ணிற் புத்தூர் நகருறையும்
மாலைக்கூடி வளர்துமென
எண்ணி லர்ச்சா வவதார
மதனு லிசையா னிவனென்னப்
பண்ணிற் சிறந்த வருட்கோதை
பெருக வருந்தித் துன்புற்றங்(கு)
உண்ணைக் குருகி யவ்வூரில்
உறையும் நெறிசே ருத்தமருள். (170)

அந்த ணுளர் மங்கையரில்
அறிவிற் சிறந்தோர் தமைக்கூவி
முந்தை நாட்கள் தனிலிந்த
முளரிக் கண்ணு னெடுங்கூடி
இந்த வுலகில் மடவார்கள்
இருந்த துண்டே யியம்புமெனச்
சிந்தை யார நினைந்தவர்கள்
திருமா லவதா ரந்தன்னில் (171)

சீரார் நந்த கோன்மகனும்
திருவாய்ப்பாடி மடந்தையரும்
நேராம் பருவத் தொன்ருகி
நின்று கூடி யளவளவி

ஓரா யமுனைப் பேராற்றில்
இறங்கிக் குளித்து விளையாட
வாரார் முலையார் துகிலெல்லாம்
மாயன் வாரிக் குருந்தேறி (172)

அன்பிற் கலந்து விளையாடி
ஆசில் காதல் மிகப்பெருகித்
துன்பிற் கிடமா மெனவெண்ணிச்
சுருதி நாத னகன்றிடவோர்
பொன்பெற் றிலங்கு தடம்பொழிலில்
புகுந்து மறையப் புலம்பிமிகப்
பின்பங் கவனைக் காணுதே
கலங்கி மிகவும் பேதித்தார். (173)

வேறு

எல்லையில் காத லோடங் கிருந்தநன் மடவா ரெல்லாம்
புல்லிய கண்ண னெங்கே போயின னென்று நாடி
எல்லியும் பகலாத் தேடி இளைத்தனர் மீண்டு முன்னம்
சொல்லிய பொழிலிற் கூடி யவன்முனந் துணிந்து செய்த(174)

படியைநாம் செய்யிற் றுன்பம் பாதியும் அகலு மென்ன
வடிவுடை யொருத்தி தன்னைக் காளியாய் வகுத்து மற்றோர்
துடியிடை தன்னைக் கண்ண னாக்கியத் தொழில்கள் முற்றும்
விடிவத னளவுஞ் செய்து விடிந்தபின் அவனைக் கண்டார்.(175)

ஆங்கவர் தம்மிற் கூடி யானிரை மேய்த்துக் குன்றந்
தாங்கிய தாதி யாகக் கண்ணனத் தைய லார்பால்
பாங்குடன் களித்து வாழ்ந்த பரிசெலாம் பகர்ந்தார் கோதை
ஏங்கின ளன்று கூடப் பெற்றிலேன் யானு மென்ன. (175)

தேனமர் குழற்பூங் கோதை தேவகி தனய னோடே
நானுமோ ராய்ப்பெண் ணகி நலமனு பவிக்கு நோன்பை
யானவக் காலத் தன்பால் நோற்றிலே னதனு லன்றே
போனதக் கண்ணன் நல்க மடந்தையர் பொருந்து மின்பம். ()

நமையொரு பொருட்டா யின்னும் நானிலத் துறுவா னேகொல்
உமையொரு பாகன் காணு வோதநீர் வண்ணன் நம்பால்
அமைவுற விருந்தங் கண்ணுந் தாகாச மிற்றென் பார்போல்
சமைவுறக் கழிந்த காலம் தன்னையிச் சித்தல் தன்னில். (178)

நந்த கோன் புதல்வன் முன்னம் நற்றிரட் பசுவின் பின்னே
வந்தகாற் சுவடுங் கல்லின் மாரிக்கன் றெடுத்த குன்றும்
அந்தமில் குணத்தின் மிக்க ஆய்ச்சிய ரோடுங் கூடிச்
சிந்தனை களிப்ப ஆடும் சீரிய யமுனை நீரும். (179)

உண்டெனி லின்றே யேகி ஓரிடத் தினிதே சென்று
கண்டுநங் கண்ணால் நோக்கிக் காதல்நோய் தீர்வ மென்ன
வண்டமர் குழற்பூங் கோதை மனத்தினில் நினைத்தாள் மால்மேல்
கொண்டபே ராசை வெள்ளக் கொழுஞ்சுழி யதனுட் பட்டே.()

**வேறு**

கையுங் காலும் வழங்காதே கன்னி மோதல் தவிர்ந்தந்தோ [தி
செய்யும் வகையென்சீதைக்குத் தேற்றாறங்கொடுத்தல் சிலையிறு-
னையும் பின்னைப் பிராட்டிக்கு மாவதி யேறு தழுவுதல் நான்
உய்யும்வகைக்கோரிலக்குளதோஊழிசென்றுமெனவோய்ந்தாள்

**வேறு**

அத்திறங் கண்டு முன்னே ஆங்கவள் தனக்குக் கண்ணன்
மெய்த்திறங் கூறி வைகும் வேதியர் குலத்து மாதர்
இத்திறம் வருந்தி யென்னே எம்பிரா னணைய முன்னால்
சித்திர வுருவி லாயர் மகளிர்செய் ததுவுங் கேளாய். (182)

என்றன ரெழுந்து கோதை யியம்பிடு மென்ன நின்றாள்
மன்றல்சேர் குழலாய் கேட்டி மாசிலாய்ப் பாடி தன்னில்
ஒன்றிய பஞ்ச லக்கம் குடியதி லுவந்து வாழும்
அன்றதிற் கண்ணற் கொத்த பருவமாய் அளவிலாத (183)

மங்கையர் மாய னேடே மாசறக் கலந்து வாழ
அங்கது கண்ட வண்டர் அமலநம் மரபுக் கெல்லாம்
பங்கமே வருத்து மென்னப் பைந்தொடி யார்கள் தம்மை
தங்களிற் கூடி யெண்ணித் தத்துவன் காணு வண்ணம். (184)

மலமறு குணத்தி னுளே மங்கையர் வருத்த மெய்த
நிலவறை பலவுஞ் செய்தாங் கிருத்தினர் நேமிக் கஞ்சிச்
சிலபகல் கடக்க வந்தச் சேயிழை யார்க ளெல்லாம்
உலகமுண் டவனைக் கூடும் உபாயமே தென்ன வெண்ணி. (185)

ஒன்றிலு மவனைக் கூடி யுறுநெறிக் குபாயங் காணார்
மன்றலங் குழலார் தம்மில் ஒருத்திமா மாயன் நம்பால்
நின்றுயர் கருணை நல்கில் நீணிலத் துய்வ மென்றாள்
அன்றதை யுரைத்தி யென்ன அனைவரு மொழியச் சொல்வாள்.

செய்யமா மலர்க்கண் மாயன் திருவருட் டிறத்தி னாலே
வையகத் துயிர்க ளெல்லாம் மழையற வாடு மாகில்
ஐயன்மார் நம்மைக் கூவி வருணனோன் பனுட்டிப் பீரேல்
பெய்யுமா மழைகள் நீங்கள் பிடிமி னோன் பென்பாராகில்.

கண்ணனே யந்த நோன்பின் கதையுணர்த் தென்பா ராகில்
உண்ணினை விருப்ப நம்மால் அரிதென வுரைக்கு மாகில்

திண்ணமாய் அவர்கள் மாயன் திருக்கையைப் பிடிப்பாராகில்
எண்ணமற் றவனு மங்கே யிசைந்தது செய்யு மாகில். (188)

வாசமார் குழலி ஞரே வாழுது மிவைய லாதே
பேசுமோ ருபாய மில்லை பெண்களா யிருந்தோ மெல்லாம்
ஈசனை வேண்டிக் கொள்வேம் இவணமாம் வண்ண மென்றுள்
மாசறு மனத்தி ஞர்கள் மற்றதற் கொருப்பட் டாங்கே. (189)

வேறு

தங்கள் தங்கள் மனத்தினிற் கண்ணனைத்
தாழ்வு தீர நினைந்திவை வேண்டினர்
அங்க நொந்து வருந்தி மடந்தையர்
ஆவி நோவ வறிந்தருள் மாயனும்
மங்கை மார்மிக நல்லதை யெண்ணினர்
என்ன வெண்ணி மகிழ்ந்து மனத்துளே
எங்கு மாமழை யின்றி வருத்தினன்
ஈசன் ஆயர்கள் இன்ன லடைந்தனர். (190)

மண்ணில் மாமழை பெய்யுமு பாயமென்
மறைவ லார்கள் வாருமீ தோதுமின்
எண்ணி யென்றனர் ஆயர்கள் அந்தணர்
இல்லை மாமழை யேயுறு கோளினல்
பெண்ணில் மாசறு கன்னியர் தங்களைப்
பெய்யு மாமழை நோன்பினைப் பீடுறப்
பண்ண வேசொலின் மாரியுண் டென்றனர்
பார்ப்பில வாழ்க்கைய ராயவப் பாவைமார். (191)

தம்மை மண்ணறை விட்டத்த லத்தினில்
தக்க நீதியிற் கூவினன் மங்கைமீர்
உம்மை வேண்டினம் மாரியை நோக்கிநீர்
ஓங்கு நோன்பொன் றுறுதியிற் பண்ணியின்
றெம்மை யுய்யும் படிசெய்யும் நோன்பினுக்
கியற்ற வேண்டுவ தீந்து கதைசொலும்
செம்மை வல்லவன் நந்தகோன் புத்திரன்
என்று செப்பி யவனையுந் தேடியே. (192)

மாட்டின் பின்திரி கின்றமா மாயனை
வருக வென்றோர் மனையினில் அன்பொடும்
கூட்டிக் கொண்டுபோய் வைத்தபின் கொண்டலால்
கோதில் பூமி குறையுற்று வாடின
நாட்டில் மற்றது பெய்யவொர் நோன்பதை
நாடி மங்கையர் பண்ணுவர் நீகதை
காட்டி வேண்டுவ தீகுதி யென்றனர்
காலி யாயர்கள் கண்ணனு ரைத்திடும். (193)

கொண்டல் நோன்புக் குறுங்கதை வல்லவர்
குவல யத்தில் மிகவுளர் கூறுவார்
பண்டு மங்கைய ரோடெனைத் தூறுகள்
பாறும் வீறும் பறையும் படியுளார்
கண்டி ருப்பவிக் காரிகை யார்க்குநான்
கதையு ணர்த்திற் கழறுதல் திண்ணமாம்
அண்டர் பேசிய காரிய மிங்கெனக்
கல்லல் நல்கு மடாதென் றெழுந்தனன். (194)

சென்று மாயவன் கையைப் பிடித்துநீ
செய்ய வேண்டு மிவையென் றிரந்தனர்
அன்ற தற்பினக் கண்ணனு மொப்பினன்
ஆயர் மற்ற அரிவையர் தங்களை
இன்று நீரிவன் றன்னொடு மேகிநோன்
பியற்றும் வேண்டுவ தீவனிக் கண்ணனோ
டொன்றி நோன்புக் கொருப்படு மென்றுபின்
ஓங்கு மப்பதி யுற்றன ராயர்கள். (195)

வேறு

முனைக்கொடுங் காலி யாயர் அகன்றபின் முதலொன் ருகி
அனைத்தினு நின்ற மாய னடிபணிந் தாயர் மாதர்
நினைத்தவை முடித்த கண்ண நீயினி யெம்மை விட்டோர்
தினைத்தனைப் பொழுது நீங்கேல் என்றிவை செப்புங் காலை. ()

நந்தகோன் குமர னந்த நாரியர் தம்மை நோக்கி
முந்தைநாள் நும்மைச் சீறி முடித்திட நினைத்த வாயர்
தந்தனர் வலிய மாரித் தபுத்தொழில் தன்னைப் போல
இந்தமா நிலத்தில் யார்கொல் இவ்வண முதவற் பாலார். (197)

என்றுரைத் தவர்க ளோடு மியமுனைக் கரையி லெய்தி
மன்றலம் பொழிலிற் றென்றல் வரும்பெரும் பளிக்குப் பாறை
ஒன்றிய புளினக் குன்றில் ஒவிய மனையா ரோடும்
சென்றன னென்னை யாண்ட தேவகி பெற்ற சிங்கம். (198)

அருக்கனுங் குடபால் வெற்பில் அமர்ந்துதன் கிரணமெல்லாம்
சுருக்கினன் செக்கர் வானம் தோன்றின விசும்பில் மாரன்
செருக்கிளர் சிலையு மேந்தித் தென்றலந் தேரிற் றேன்ற
முருக்கிதழ்க் கனிவா யார்கள் முகுந்தனை வளைந்து கொண்டார்

ஆங்கவர் மதன னுலே யழுங்கிய பரிசைக் கண்டு
ஓங்குசீர் நந்த கோமான் திருமக னொருத்திக் கோரோர்
பாங்குறு முருவாய்த் தானே பலபல வாய்த்தா னிற்பப்
பூங்குழ லாருந் தானும் புணர்ச்சியி லொருமை யாக. (200)

எல்லையில் பேரா னந்தக் கடல்குடைந் தினிதி னூடிப்
புல்லிய மாத ராரைப் புணர்ச்சிபோ யுனர்ந்த தற்பின்
அல்லியங் கண்ணுல் நோக்கி அரிவைமீர் நமக்கு மீதோர்
எல்லியி னறிந்த வாறே எனவவர்க் கிதங்கள் கூறி. (201)

கங்குலில் இவரிங் கூட்டி யிருந்தமை யொருவர் காணில்
எங்குமிப் பேச்சுக் கேட்போர் யாவரு மிகழ்வர் நீர்போய்
உங்கள்நல் லகத்துள் மன்னி யுதிப்பதன் முன்னம் நாளை
எங்கள்மா ளிகையில் வம்மின் எனவுரைத் திறைவன் போனுன்.

மாயவன் போன தற்பின் மற்றவன் தன்னை நீங்கிப்
போயமா வருத்தக் கூர்வாள் புகுந்துளத் துயிரை யீர
ஆயர்கள் மடவார் தத்தம் அகங்களில் முகங்கள் வாடிச்
சேயிதழ்க் கமல மன்ன திருவடி வருந்தச் சென்றே. (203)

மெல்லணைப் படுக்கை மேவி வெதும்பினர் சிலவ ரீதோர்
அல்லலிற் பட்டேற் கென்ன அணையெனச் சிலவர் மண்ணில்
எல்லியிற் படுத்துந் துஞ்சார் சிலரிருந் திரங்கி வாடிப்
புல்லிய கங்கு லன்று புலருமுன் னெழுந்து மாதர். (204)

வேறு

முற்பட்டா ரெழுந்திருந்து வைகறையின் முறைகூறிப்
பிற்பட்டார் தமையெழுப்பிப் பெருந்திரளோ டேகியவர்
கற்பட்ட திரள்தோளான் நந்தகோன் கடைக்காவல்
சொற்பட்டான் தனையெழுப்பிச் சுருதிமுதல் வனையெழுப்ப. ()

தேன்புக்க துழாயலங்கல் திருமாலே மார்கழியின்
நோன்புக்கு வேண்டுவன தந்துநோற் பித்திடுவான்
வான்புக்க புகழினுய் வருதியென அறையவிறை
தான்புக்காங் கவையீந்து தன்குறையு முடித்துவந்தான். (206)

வேறு

என்றனர் நன்ருய்ந் தென்ன இலங்குசீ ரலங்கற் கோதை
அன்றவர் செயல்போல் நம்மா லானவா செய்து நாளும்
நின்றவெந் துயர மாற்றி நிமலனை யடைவோ மென்ன
ஒன்றிய மகிழ்ச்சி யோடு மோங்குசீர் ஞானத்தாலே. (207)

வேறு

சீரார் புத்தூர் தனைச்சிறந்த
திருவாய்ப் பாடி யாக்கியதில்
ஏரார் கின்ற வடபெருங்
கோயில் தன்னை யெம்பெருமான்

கூரார் வேற்கை நந்தகோன்
திருமா ளிகையாய்க் கொண்டதனுள்
நாரா யணனை நப்பின்னை
கேள்வ னுக்கி நாணும். (208)

வேறு

அத்திரு நகரில் வைகும் அரிவையர் தம்மை யாயர்
சித்திர மகளி ராக்கித் தனையுமங் கவரிற் சேர்ந்த [டாள்
மெய்த்திறத் தாய்ப்பெண் ணாக விளங்குசீர் மனத்துக் கொண்
உத்தம குணத்தாள் கொண்ட தியானமென் னுரைக்கே னந்தோ

வேறு

அப்படியே கோதைமன மாய்ப்பாடி தனைமருவிச்
செப்பரிய நறுங்கந்தத் திருமேனிக் கிடை முடையும்
ஒப்பரிய மின்னிடையில் இடையுடையும் ஒருநாளும்
தப்பரிய இடைமொழியும் இடைமுடியுந் தானுமே. (210)

வேறு

ஆய்மக ளாய பின்பென் அச்சுதன் அணையும் வண்ணம்
எயுநன் மடலொன் றேந்தி யிருப்பதோ கரும மன்றேல்
தூயநற் றவநான் செய்யத் துணிவதோ எனச்சிந் தித்து
மாயவன் [1]சுணையி லாதான் மடலினுற் பலியா னென்ன. (211)

அவத்தொழி லகற்றித் தன்னை யடைந்தவா ருயிர்க ளெல்லாம்
பவக்கடல் கடக்கும் வண்ணம் பார்மிசைப் பிறந்து தோன்றும்
துவர்த்தசெவ் வாயின் மிக்க தோகையிற் சிறந்த கோதை
தவத்தினி லொருப்பட் டாளன் றதனையுஞ் சாற்ற லுற்றும், ()

மார்கழி நீரு மாயர் மடந்தையர் நோற்ற நோன்பும்
சீர்பெறு மேது வாகக் கண்ணனை யெழுப்பிச் சென்றிங்
கோபெறு முனக்குச் சேட மாயவென் னுவி நீசர்
பார்மிசை யொருவற் காகிப் பழுதிலே கழியா வண்ணம். (213)

அண்டனே சொரூப மாய அனுகூலம் பிறந்தென் ஆன்மா
தொண்டினிற் பதிய நான்செய் துகளறு தொழில்கள் செப்பி
விண்டலத் திலங்கு நீதி மேலைவீட்டளவும் மேலோய்
தண்டமற் றடிமை நாளும் தலைச்செப்பும் படிகள் செய்து.(214)

காக்குதி யென்னை யென்னுங் கருத்தினுல் தனையோ ராய்ப்பெண்
ஆக்கியத் தோழி மார்க ளுடன்கலந் ததன்மேற் பூண்டாள்
வாக்கொடு மனமு மொன்ருய் மாயனை வணங்கி வாழும்
பாக்கியப் பட்டன் பெற்ற பனிமலர்ப் பைம்பொன் கோதை.

---

1. நாணம்.

மார்கழித் திங்க ளென்ன வகுத்தருள் புரிந்த பாட்டில்
சீருறு நோன்பிற் கான திங்களுந் தினமுந்தந்து
நேர்பெறுங் காலந் தன்னைக் கொண்டாடி நேயத் தாலே
ஏர்பெற வருளிச் செய்தாள் இடைக்கொடி யிடைச்சி யானுள்.

வையத்துள் வாழ்வீ ரென்ற மாசறு பனுவல் தன்னை
ஐயுற வற்ருர் செய்யும் கிருத்தியா கிருத்தி யங்கள்
உய்வுற விவேகம் பண்ணி யுவந்தருள் புரிந்து செய்தாள்
மையமர் கருங்கட் செவ்வாய் மதிமுக மல்லி நாடி. (217)

வேறு

ஓங்கி யுலக மெனக்கோலி யுரைத்த பாட்டில் நோன்புக்குப்
பாங்கி னுடனே யனுமதிகள்பண்ணினர்கள் பெறும்பலனை [ளாய்
ஆங்கே தோன்ற அருள்செய்தாள் ஆழ்வார் ஆய்மகஆய்மக
ஏங்கு மிடைச்சி மடவன்ன நடைச்சி யென்னும் எழிற்கோதை.

ஆசி லாழி மழைக்கண்ணில் அவருள் எய்தி யடற்றிகிரி
ஈசற் குவந்த கயிங்கரியம் எனையு நியமித் திடுமினென
நேசத் துடனே யிவ்வாறே பெய்க வென்ன நியமித்தாள்
வாசக் கமலத் தடம்புடைசூழ் மல்லி நாட்டில் வளர்கோதை.

ஆற்றல் மிக்க மாயனென அறைந்த பாட்டில் ஒருதோழி
தூற்று முலகி லெல்லாரும் அறியப் பெருக்கித் தொடங்கினுல்
சாற்றும் நோன்பு தலைக்கட்டித் தருதற் கன்று திடமுண்டோ
ஏற்று முனஞ்செய் வினைதடுத்தால் என்னுந் துணிந்த விவை
யென்ன. (220)

வேறு

அறையவே தாந்தம் போன ஆயிழை பொருத்தி மின்னே
குறைவற ஆன்பால் நாளுங் குடிப்பவ ரிடத்திற் பித்தம்
உறையுமோ அதுபோல் நாமும் அடுத்தன தொழிலை யும்பர்
இறைவனிற் செய்ய முன்னை வினையெலா மிரியு மென்ருள்.(221)

ஆதலா லிதற்கு நாமு மன்னிய மென்ன வுன்னிக்
காதலால் நோற்கு நோன்பைக் கைவிடக் கடவே மென்றென்(று)
ஓதிக்கீ ழஞ்சு பாட்டால் பிராப்பியத் தோடு மோங்கும்
பூதநா யகனைப் புல்லி அனுபவித் தவனிற் பூணும். (222)

உரைக்குமே காந்த மான உபகர ணங்கள் கொண்டு
நிரைத்தமேற் பத்துப் பாட்டால் நிரைத்திரள் மேய்த்த கோவை
இறைப்பற அனுப விக்கும் அவர்களை யெழுப்பிப் பின்னும்
விரைக்கொள்பூந் துழாயான்போகம் மிகப்பெரி தாத லாலும்.

எலையறப் பெருகு மாற்றி லிழிபவர் துணைகள் தேடி
நிலைபெறத் திரிதல் போலும் ஒருவரை யொருவர் நின்றே

அலைவற வெழுப்பு கின்றூர் அன்றியு முலக முண்ட
தலைவனை வணங்க லம்மால் தமர்களை முன்னிட் டன்றி. (224)

தொண்டர்கள் வணங்கார் மண்ணில் அன்றியுந் துகளில் வீட்டில்
பண்டுள நித்தர் முத்தர் பரம்பர னனுப வத்தைக்
கண்டனு பவித்து வாழ்ந்தக் கடலிடை நீந்ந லாலும்
உண்டிதற் களவென் றுன்னி யுணர்ந்திடப் படாமை யாலும்.

மண்மிசை வைகு மாயர் மகளிர்க ளாத லாலும்
எண்ணிமுன் போக வாற்றில் இறங்குத லின்மை யாலும்
நண்ணிநாம் பலருங் கூடி ஞானநா யகனைச் சேரும்
உண்ணினை வோடுங் கூடி ஒருவரை யொருவார் கூவி. (226)

நின்றுற வெழுப்பு கின்ற நெறியினு லுரைத்தாள் கோதை
அன்றியும் மண்ணி லீசன் அனுபவ வுரிமை காணு
மன்றல்சேர் குழலாள் நோன்பை மறந்துற வுறங்கு வாளைச்
சென்றுற வெழுப்பு கின்றுள் சேடியர் தங்க ளோடு. (227)

கீசென வுரைத்த பாட்டிற் கேசவ னனுப வத்தை
ஆசற வறிந்து தன்னை யயர்ந்துட னுறங்கு வாளைப்
பேசுபல் குறிப்புஞ் சொல்லி எழுப்பினுள் பிறைசேர் மாடத்
தேசமா மதிள்சூழ்ந் தோங்கும் சீவில்லி புத்தூ ரன்னம். (228)

எண்ணிய கீழ்வா னத்தில் ஏந்திழை யார்க ளெல்லாம்
நண்ணிவை கறையி லென்னை நாளைவந் தெழப்ப வேண்டும்
புண்ணியக் கொழுந்தேயென்னப் புனிதனை வேண்டித்துஞ்சும்
உண்ணினை வுடையாள் தன்னை எழுப்பினுள் உலகை யீன்றுள்.

மன்னுதூ மணியில் மாயன் வந்தபோ வருகின் றுனென்
றுன்னுத லுடையாள் கண்ணன் உளமகிழ் கலவி மிக்காள்
தன்னுடை நலத்தி னுலே அநாதரித் தமளி சார்ந்த
மின்னிடை யொருத்தி தன்னை யெழுப்பினுள் விரக மிக்காள்.

வேறு

தொடுத்த நோற்றுச் சுவர்க்கத்தில் சுருதி முதல்வ னனுபவத்
மடுத்த வுள்ளம் பரிதவித்து வருந்தி யிரங்கி வாசமலர் [தின்
படுத்த வணையிற் றுயிலாத பாவை மார்கள் படும்பாட்டில்
எடுத்தன் றுலகை யுண்டுமிழ்ந்த இறைவன் வருந்தும் படிசெய்து

கலவி நலத்தில் மாலுக்கு மாலை கொடுத்துக் கண்துயிலும்
சிலவ வாயா ளொருகொடியை எழுப்புகிகின்று ளெண்டிசையும்
பலவுந்தெங்கும்வாழைகளும்கமுகுநெருங்கும்பைம்பொழில்கள்
குலவும் புத்தூ ருறைவார்க்குப் கோதை சூடிக் கொடுத்தமயில்

வேறு

உற்றசீர் மருவுங் கற்றில் ஒளிவளை யார்க ளோடும்
குற்றமொன் றில்லா வாயர் குலக்கொழுந் தென்னு மாங்கோர்
பொற்றொடி முற்ற மெய்தி எழுப்பினுள் புத்தூர் மன்னிக்
கற்றவ ரிதயப் போதில் கலந்துவீற் றிருக்கும் கன்னி. (233)

கனைத்தினி லிராமன் தன்னை அகத்திலும் புறத்துங் கண்டு
தினைத்துணை யளவு நீங்காச் சுமித்திரைச் சிங்க மென்ன
அனைத்தையு முடைய கண்ணன் ஆருயிர்த் தோழ னாகும்
மனைப்பெரு வளத்தின் மிக்கான் தங்கையை மங்கை தன்னை. ()

சென்றுற நின்று கூடும் சேயிழை யார்க ளோடும்
அன்றவள் வாசல் மன்னி அளவறு பனிநீர் துள்ளி
மன்றல்சேர் குழலிற் றோய வருத்தமுற் றழைத்தாள் செய்த
நன்றிகொன்றுழலும்பெண்ணைநரகினுட்புகாதாட்கொண்டாள்.

வேறு

புள்ளின்மானமவள்கண்ணில்உண்டேற் றனியேபொருந்துமென
உள்ளி மிகவு மநாதரித்துங் குறங்குவாளை யுறக்கூவிப் [னர்நீ
பள்ளி கொள்ளேல் பிள்ளைகள்போய்ப் பாவைக் களத்திற் புரிந்த
கள்ளந் தவிர்ந்து கலத்தியென உரைத்தாள் விரைத்தார்க் கனங்
குழலாள். (236)

உங்கள்தன்னில்நோன்புக்கங் கொடுப்பாடுற்ற வொளிவளைக்கை
மங்கை நல்லார் தமைநென்னல் தானே யெழுப்ப வாய்பேசி
அங்கச் செய்கை மறந்துறங்கும் ஆய்ச்சிகேட்க வதைச்சொல்லிச்
சங்கத் துடனே புகுந்தெழுப்பி நின்றாள் தாமக் கனங்குழையாள்

சீரா ரெல்லே யிளங்கிளியில் தோழி மார்தம் திரள்கண்டு
பேரா நந்தம் பெறவெண்ணி நினைந்து கிடந்த பிரை நுதலை
வாரார் முலையா ரெல்லாரும் வந்தார் வந்து காணென்றாள்
நாரா யணனைத் தான்சூடும் தாரா லுருக்கி நைவித்தாள்.(238)

வேறு

எண்ணரிய நாயகனில் எல்லாரு முடன்கூடி
நண்ணரிய நந்தகோன் திருவாசல் தனைநண்ணி
விண்ணியல்பி லவ்வாசல் காப்பவனைப் பெருஞானக்
கண்ணிபுனை செழுங்கோதை எழுப்பவவை காப்பவனும். (239)

சென்றவர்கள் திறனோக்கித் திருக்கதவைத் திறந்திலங்கும்
மன்றல்கமழ் குழல்மடவீர் வம்மினென வுட்புகுந்தங்
கன்றதனிற் கண்டுயிலும் நந்தகோ னுதியரை
நின்றுறவன் றெழுப்பினுள் அம்புரத்தி னென்றிநின்றாள். (240)

அப்படிநின் ருயிழையார் ஆங்கவரைத் துயிலெழுப்ப
ஒப்பறியார் பேருறக்கம் ஒழியாத படிநோக்கிச்
செப்பரிய நப்பின்னைத் திருமகளை யெழுப்பிநமக்(கு)
இப்பொழுதிங் கிவள்முன்னு யீடேற வேண்டுமென. (241)

வேறு

உரைக்கு முந்து மதகளிற்றின்
அவனை யெழுப்பி யொளிகிளர
நிரைத்த குத்து விளக்கென்னும்
நிகரில் பாட்டி லவள்விழித்து
விரைக்கொள் குழலார் தமையுள்ளே
விடுப்ப நினைத்தாங் கெழுந்திருப்ப
இரைக்கும் கடலை யடைத்துய்ந்தான்
இவள்சென் றவருக் கிதஞ் செயுமேல். (242)

வேறு

முன்னிலை யிவளா மந்த முகிணகை யாருக் கெல்லாம்
என்னவே விகாரத் தாளில் இலங்குமோர் விகாரம் பண்ணி
அன்னவள் எழாத வண்ணம் அணைத்திரு கரத்தால் வாசப் [ன்.
பொன்னணிமார்பினுென்ருய்ப் பொருந்திடத்தழுவிக்கொண்டா

ஆங்கவ ளெழாமை கண்ட அரிவையர் அதன்பின் முன்னம்
ஓங்கியிவ்வுலக முண்ட வொருவனை யெழுப்பிப் பின்னும்
பாங்கொடு மவனுந் தோன்ருப் படியுணர்ந் தென்செய் கோநாம்
ஈங்கினி யெனவங் கீண்டும் இறைவனை யெழுப்பும் வண்ணம். ()

பின்னையை யெழுப்பி யந்தப் பெண்ணமு தத்தை நோக்கி
முன்னையா ரணங்கள் போற்றும்
யேயனை யனையாய் கூறும் இளக்கெனவேதம் நாலும்
அன்னையே யனையா யென்ன ஆங்கவ ளாதியாய. (245)

நந்தகோன் புதல்வன் தேவி மார்களாய் நலத்தின் மிக்க
பந்தணை விரலார் தம்மைப் புரிந்துமுப் பத்து மூவர்
சந்தமார் பனுவல் தன்னில் எழுப்பினுள் தனக்காட் செய்வோர்
சிந்தனை கோயிலாகத் திருந்தவீற் றிருக்கும் கோதை. (246)

வெறு

ஏற்ற கலங்கள் தனிற்பின்னை
எழுந்து கதவு திறந்தவரில்
தோற்ற மிகுந்த நயிச்சியத்தாள்
சொல்லுந் தோகை மீரெனக்கிங்(கு)

ஊற்ற மேதின் றுங்களிலே
ஒருத்தி யன்றோ யாமுமவன்
ஆற்றல் மிக்க குணம்பரவி
எழுப்ப வம்மின் எனவழைத்தே. (247)

வேறு

ஆங்கவர்க ளுடன்கூடி அச்சுதனை யன்பினொடும்
பாங்குடனே நின்றெழுப்பும் படிபகர்ந்தோள் பகர்ந்த தற்பின்
ஓங்கியசீ ரங்கண்மா ஞாலத்தில் ஒளிவளையார்
தாங்கியுல குண்டுமிழ்ந்த தத்துவனை யுற்றிறைஞ்சி. (248)

வேறு

ஆசை யறியும் நயிச்சியத்தை
முன்னிட் டுக்கொண் டனைத்துயிர்க்கும்
ஈச எம்மைக் கைப்பற்றி
இனிநீ கொள்ள வேண்டுமெனத்
தேசு பொலியக் கட்டுரைத்தாள்
சீரார் வில்லி புத்தூரில்
நேச மிகுந்த பெரியாழ்வார்
மகளாய்த் தோன்றும் நேரிழையாள். (249)

மன்னு மாரி மழைமுழைஞ்சில்
மாயன் அணைமேற் கிடந்தவரை
என்ன கருமம் வந்தமையென்
றியம்பக் கேட்ட விடைமகளிர்
உன்னுஞ் சிறுமைப் புராமுகமாய்க்
கேட்கு மதிலே துளதின்பம்
மின்னு நேமி நெடுமாலே
எங்கட் கமையா விரிவோங்கும். (250)

சீரார் சிங்கா தனந்தன்னில்
திருவோ லக்க மாயிருந்து
வாரார் முலையார் பலர்கூடி
வந்த கரும் மென்னென்ன
ஆராய்ந் தருள வேண்டுமென
அறைந்தாள் புத்தூர் அவதரித்திங்(கு)
ஏரா ராடிப் பூரத்திற்
கேற்றங் கொடுத்த எழிற்கோதை. (251)

வேறு

அப்படியே விரும்பியவர் ஆங்குரைத்த படிசெய்வான்
செப்பரிய திருப்பள்ளி யறைநின்றுந் திருமகள்கோன்

ஒப்பரிய மண்டபத்தில் ஓங்குமரி யணைமேவ
இப்படிமேல் நடந்தநடை எழில்நோக்கி யிலங்கிழையார். (252)

வேறு

அன்றிவ் வுலக மெனும்பாட்டில்
ஆதி நாதன் நடந்திடப்பின்
சென்று திருமால் நடந்தநடை
எழிலைக் கண்டு திருப்பல்லாண்(டு)
என்று கூறிக் காப்பிட்ட
பரிசை யன்பா லெடுத்திசைத்தாள்
ஒன்றி யுலகம் பதினலும்
விளங்கப் புத்தூர் உரைகின்ருள். (253)

ஒருத்தி மகனி லம்மாயன்
ஓங்கு மரியா சனந்தன்னில்
அருத்தி செய்தாங் கிருந்தருளி
ஆயர் மகளீ ரின்றுங்கள்
கருத்தில் வேண்டும் பொருளேது
கழறு மென்னக் கண்ணனேடு
வருத்த மின்றி நின்றந்த
மடவார் நீல மணிவண்ண. (254)

பண்டே நாங்கள் செய்தமைத்த
பாவத் தொடர்கள் பற்பலவும்
உண்டே யெனினும் நீயோக்கி
யருளி யெங்கள் உயிருய்ய
வண்டேர் துழாயாய் கைப்பற்ற
வேண்டு மென்ன வகுத்துரைத்தாள்
தொண்டே துணையாய்ப் பிறந்திந்த
அண்ட மனைத்துந் தொழிநின்ருள் (255)

வேறு

அத்திறத் தாய மகளிர்கள் மொழிய
அச்சுத னதுசெய்தாங் கதற்பின்
மெய்த்திற மாலே மணிவண்ணன் தன்னில்
மெல்லிய லார்குளோ டுரைக்கும்
இத்திறம் புகுந்து நீங்கள்நோற் கின்ற
நோன்புக்கின் றென்னடை வேண்டும்
சித்திர நெறியி லுபகர ணங்கள்
தம்மையுஞ் செப்புமி னென்ருன். (256)

ஆயர்கள் மகளி ராயினுர் மாலே
ஆங்கதற் காயின சங்கம்
ஏங்குநற் பறையும் இலங்குபல் லாண்டை
இசையுட னறையியி லவரும்
தூயமா விளக்குஞ் சுடர்நெடுங் கொடியும்
துகளில்மேற் கட்டியும் தந்து
நேயமோ டெங்கள் நோன்பினுக் கிரங்கி
அருளுதி நீயென நிகழ்த்தி. (257)

இன்னவா றுரைத்த மடந்தையர் தங்கட்
கெம்பிரா னியம்புவா னெப்பில்
அன்னமென் நடையீர் சங்குக்கெம் பாஞ்ச
சன்யமு மாசறு பறைக்கு
முன்னநாம் பயிலக் கட்டிய பறையும்
முழங்குபல் லாண்டுக்கு முகுந்தன்
தன்னுடை மகனும் விளக்குக்கெம் பிள்ளைப்
பிராட்டியுந் தயங்குசீர்க் கொடிக்கு. (258)

தேசுடைக் கருடன் தனையுமேற் கட்டி
தனக்கெம தரையினிற் சிறந்த
ஆசறு பீதாம் பரத்தையுங் கொண்மின்
என்றனன் மாயவ னவர்கள்
ஈசமற் றிவைகள் பலபல வேண்டும்
என்றனர் இறைவனெம் போன்றூர்
பேசுமே முலகிற் பற்பல ருண்டேல்
பெறுதிர்நீ ரிப்படிப் பலவும். (259)

என்றிறை பகர மடந்தையும் மொழிவாள்
யாவையுந் திருவயிற் றமைத்தே
அன்றோரா லிலையில் அடங்கிடு நினக்கின்
றருளுதல் அருமையன் றதனல்
குன்றெடுத் துயர்ந்தாய் தருதியென் றிரந்தாள்
கொடிநெடு மாடமா ளிகையில்
தென்றல்வந் துலவுஞ் சீவில்லி புத்தூர்
நகருறை கின்றதே மொழியாள். (260)

அப்படி யிறைவன் அருளிட நோற்றூர்
பெற்றபே றுயின வெல்லாம்
செப்பருங் கூடா ரென்பரீதார் பாட்டில்
தெரிதர மொழிந்ததற் பின்னை

ஒப்பிலாக் கறவை தன்னிலே யிறைவன்
ஒளிதிகழ் மாமுக நோக்கி
இப்படி யுள்ளார் அறியநோன் பென்றோர்
ஏதுவிட் டெய்தினே மெல்லாம். (261)

நினைவினை யின்று நின்னுடை யருளால்
நேமிவா னளந்தநின் செய்ய
கனைகழற் குவந்த கயிங்கரி யங்கள்
செய்யுமா கருதிவந் தணைந்தோம்
முனைவனே யென்று நயிச்சிய விருப்பம்
முன்னிலை யாகவன் றுரைத்தாள்
வினையெலாந் திரண்டோர் வடிவெனத் திரியும்
வேட்கையே னுக்கையு ளமர்ந்தாள். (262)

வேறு

ஆங்கதற்பின் சிற்றஞ் சிறுகாலி லச்சுதனை
ஓங்கியசீர்க் கயிங்கரியந் திருவுளத்துக் குவந்தபடி
பாங்குடனே யுரைத்தெம்மைப் பணிகொள்வா யெனப்பகர்ந்து
பூங்கோதை தொழுதெடுத்த விரதத்தின் குறைமுடித்தாள். ()
சீராரும் வங்கக் கடலிற் றிருப்பாவை
ஏரா ரிசைத்தமிழை யின்பமுறக் கற்றுரைப்பார்
ஆராயி னும்வாழ்ந் தலர்கமலச் செல்வியொடும்
நாரா யணன்தாள் அடைவரென்றாள் நன்னுதலாள். (264)
இப்படியே பாவகத்தால் இடைமகளாய்த் திருப்பாவை
முப்பதையும் முரைத்ததினும் முகில்வணனெய் தாமையினல்
செப்புரியாள் மிகக்கலங்கித் திருமொழிகள் பலபகர்ந்தாள்
அப்பரிசு தனையடியேன் அறிந்தபடி அறைகின்றேன். (265)
கனங்குழையார் திருமொழியின் முதற்பாட்டில் காலபரம்
முனம்பிரித்துக் கூட்டிடினும் முன்னிலையே வேண்டுகையால்
மனந்தனிலே யுறநினைத்த மாசிலா மயிலனையாள்
அனங்கனையும் சோமனையும் அடிதொழுதீ தறைகின்றாள். (266)

வேறு

உன்னை யும்பி தனைநோக்கி
உலகத் தவர்நோற் றுய்யுநெறி
மன்னு நோன்பை நோற்கின்றேன்
வடவேங் கடத்தி லுறைபவனுக்
கென்னை விதித்துச் சேர்த்துமலை
இறைவ ரரங்கத் தினிதமர்வார்
தன்னை யிலக்கா யெனேக்கணையால்
எய்தி யென்றாள் தவமிக்காள். (267)

## வேறு

இன்ன வாறு மன்ப தற்கி லக்க றைந்தி ரங்கிடும்
கந்த மேவு கோதை யுள்ளம் கலங்கக் கண்ட கண்ணனும்
முந்தை நாளில் மூல மென்ற யானை மோக முற்றபோ
வந்த வாறு போல வந்து மங்கை முன்றில் மன்னினன். (268)

அற்ற முற்று ணர்ந்து மாட ணைந்து நின்ற மாயனை
இற்றை நாளி ரங்க வந்தி டாமை யுன்னி யூடினள்
உற்ற தோழி மார்க ளோடு கூடி யுள்ம சிழ்ச்சியால்
சிற்றி லுமிழைத் திருந்து தேவி நைதல் மாறினள். (269)

அண்ட முண்டு மிழ்ந்த மாய னுகில் கோதை யூடலைக்
கண்டு வண்டல் நுண்ம ணற்க லந்தி ழைத்த சிற்றிலைத்
தண்டி வந்து தாள்க ளால ழிப்ப மிக்க தையலும்
தெண்டி ரைக்க டற்கி டந்த தேவ வெங்கள் சிற்றிலை. (270)

ஏது வின்றி யின்ற ழிப்ப தேதி னலி ருந்துளே
மோது கைகள் மெய்க ணேவ வுற்றி ழைத்த சிற்றிலைப்
பூத நாத மேலழித்தி டாதி ருத்தி யென்று பூ
மாது கூற மாய னந்த வாசகம் புணர்ச்சியாய் (271)

ஏகினனி ருங்கடற்கி டந்தமாய னெய்திய
மேகவண்ண னேடுகூடி மேவிடாத காதல்நோய்
ஆகமெங்கு மூறிக்காம அங்கிபொங்க மங்கையும்
மோகமுற்று மற்றைநாளோர் பொய்கைமேவி முன்புபோல். ()

சேடிமார்க ளோடுசென்று சீதவாரிப் புனல்படிந்
தாடியந்த அங்கிவெப்ப கற்றும்வண்ண மெண்ணியே
மாடுநீள் குருந்துசூத மன்னுவாவி மன்னினள்
தோடுகூறை யிட்டணைந்த தோழிமார்க ளோடுமே. (273)

பெரும்புனற் படிந்துகோதை பெண்களோடு மாடிடக்
கருங்கடற் கிடந்தமால் கடுப்பினெய்தி யாங்கவர்
மருங்கிலுற்ற கூறைமுற்றும் வவ்விவாரும் நீரெனக்
குருந்த ணைந்தி லங்கு தோள்கு லுங்க நக்கி ருந்தனன். (274)

நக்கி ருந்த கண்ணன்மா முகத்தை நாடி நங்கையும்
பக்க நின்ற பெண்கள் காணி லேது ரைப்பர் பண்ணவா
தக்க தன்று கூறையின்று தந்து போதி நீயென
வெட்க முற்றி ருந்து மாலி ரங்குமாவி ளம்பினன். (275)

கோதைகூறை யீதியென்று கோமளம்பொ ருந்தவே
ஓதுபாடல் பத்துமன்பொ டோதவோத வண்ணனும்
போது மீதில் மிக்க தோர்புணர்ச்சி யென்று பூந்துகில்
ஈதுகொண்மி னென்ற ளித்தி றங்கி யங்க ணேகினன். (276)

மாயமாய்ம யக்கனேக மாதரோடு கோதையும்
தூய வாடை சென்றெடுத்து டுத்து வந்து சுந்தரன்
போயதிக்கை நாடி நின்று பூவைவண்ண னின்னம்வந்
தோயு மென்ன தாவியுய்ய எய்துமேகொ லென்னவும். (277)

வேறு

மாசறுநுண் மணல்பரப்பி யதைவட்டப் படவளைத்துத்
தேசுறுமென் காந்தளங்கைத் திருவிரலால் வலஞ்சுழித்துப்
பேசியவக் கூடலுறும் பெருஞ்சுழியாங் கொன்றமைத்திங்(கு)
ஈசனும் வரும்வாரா னெனுமிரண்டி லொன்றுதனே. (278)

வேறு

அறிய வேண்டு மெனக்கருதி
அன்பாற் கோதை யன்றந்தக்
குறியை நோக்கி யிவையிவைகள்
கூறு கின்றாள் கோலநறும்
வெறிகொள் துளவத் திருத்தாரான்
விளைத்த விரக முதிர்ச்சிமிகச்
செறியு மறிவும் வாசகமும்
செயலு மழிந்த திருவனையாள். (279)

வேறு

மாடு மேய்த்து வரிவளை யாய்ச்சிய
ரோடு கூடியு லகமி றைஞ்சிட
நீடு மாலிருஞ் சோலையுள் நின்றவன்
கூடு மாகில்நீ கூடிடு கூடலே. (280)

வேறு

பண்டு வானம் படியளந் தோங்கிய
தண்டு ழாய்முடித் தத்துவ னுத்தமன்
அண்டர் நாத னணியரங் கத்துறை
கொண்டல் கூடிடிற் கூடிடு கூடலே. (281)

கன்று மேய்த்துக் கடுந்திறற் கஞ்சனை
அன்று மாய்த்தட லவர்கள் தூதெனச்
சென்று சேனையைச் செற்றவன் வேங்கடக்
குன்று ளான்வரிற் கூடிடு கூடலே, (282)

இப்படி யீரைந்து பாட்டுமெழிற் கூடலுடன்
செப்பி யுளநைந்து திருமேனி யுள்மெலிந்து
வெப்பமுற்றுக் கூடல் விளையாமை யால்வெதும்பி
ஒப்பரிய கோதை குயிலோ டுறவாடி (283)

வேறு

அனங்கற் கிணங்கும் விருதாய் அனைத்தும் பிரிந்தவர் தம்மை
மனங்கரைத் தாவி யுருக்கி மாள மிழற்றுங் குயிலே
எனங்கம் பசலை பொருத்தி யிருகையிற் சங்கமுங் கொண்டு
புனந்திகழ் காலிப்பின் போன பூவைவண் ணன்வரக் கூவாய். ()

காரிருள் மையுங் கலங்கக் கன்னங் கறுத்த குயிலே
யாரினி யுன்னை யலாதென் ஆருயிர் காப்பவ ரந்தோ
பாரினிற் சிற்றில ழித்துப் பணிப்பட் டெடுத்தறிந் தேகிச்
சீரிய வேங்கட மன்னும் தேவர் பிரான்வரக் கூவாய். (285)

நல்லியல் கீதக் குயிலே நாடொறு நாரியர் முன்னே
அல்லியந் தாமரைக் கண்ணால் அருவினை யேனுயிர் கொண்ட
மல்லுயர் தோள்முகில் வண்ணன் மாலிருஞ் சோலையுள் மன்னும்
வில்லிபுத் தூருள் ளுறையும் வித்தகன் தான்வரக் கூவாய். ()

கீத மினிய குயிலே கிளிமொழி யாரயற் சேரி
மாதர்க ளெல்லா நகைப்ப வல்வினை யேன்மனங் கொண்டு
சீதக் கமல மனைய திருக்கண் வளர்பவன்போல
ஓது மரங்கத்தில் மன்னும் உலகளந் தான்வரக் கூவாய். (287)

என்றெடுத் திப்படிப் பத்து மியம்பி யிரவும் பகலும்
குன்றெடுத் தானிரை காத்த கோவல னென்றென்று கூறி
மன்றல் கமழுந் திருத்தார் மாலுக்குச் சூட்டிக் கொடுத்தாள்
ஒன்றிய காதல்வெந் தீயில் உருகு மெழுகினை யொத்தாள். ()

வேறு

இப்படிக் கோதை வருந்துதல் கண்டுளி ரங்கிய ரங்கநகர்க்
கெப்பொழுதும்மருள்மாரிபெய் மாமுகிலெய்தியிலங்கிழையாள்
தப்பறு மாமண மேவு முன் வாடுவள் தானென வப்பொழுதே
சொப்பன மன்னி மணத்தொழில் முற்றும ளித்தனர் தோமறவே

ஒண்டொடி கண்டமை முற்றும னத்து ளுவந்து களிப்பினொடே
வண்டமர் கோதைய ராயின தோழியர் வம்மினெ னக்கனவில்
கொண்டல்நிறத்தவர் வந்தருள் செய்தமை கூறினள்சேறுபடாப்
புண்டரி கத்திரு மாதெனை யாள்புது வைப்புரி மாமயிலே.(290)

வாரண மாயிரம் வந்துநி ரைந்திட மாமுனி வோர்கள் தொழ
நாரண னம்பிநமக்கருள் செய்ய நடந்தமை கண்டுல கோர்
பூரணப் பொற்குட மாரண மந்திர மோடுபு ரிந்தழகார்
தோரண மாநகர் வீதிக டோறுநி ரைத்தனர் தோகையரே.

சீரிய மாமண நாளையெ னுமறை தேர்மறை யோர்புகல
ஏரியல் முத்தநி ரைத்தணி பந்தரி லென்கையின் முன்கையிலே
நேரிய நூல்கொடு காப்பணி வித்துநி ரைப்பிற கேதிரியும்
காரிருள் வண்ணனெ னச்சுரர் கூறிய காளை புகுந்தெனையே.292

அன்றுவி டிந்தபி னவ்வது வைத்தொழில் ஆயினவாயவெலாம்
ஒன்ருெழி யாமல்மு டித்தென தங்கையை யுத்தம நாரணனர்
என்றுரை கேசவர் பற்றியெ னேடுமெ ழுந்தொரு நற்பரிமேல்
சென்றுவ லங்கொடு நன்னக ரிற்பொலி சிட்டர்கள் பட்டனுடன்

மன்னிய வீதிக டோறும கிழ்ச்சிவ ழங்கி நடம்பயிலப்
பொன்னணி மாளிகை மேவியி லங்கிய பூவணை யிற்றிருமால்
என்னிரு கொங்கைபு ணர்ந்திட விற்றையி ராத்துயி லுங்கனவில்
நன்னுத லீரிவை கண்டன னென்றனள் நற்புது வைக்கினியாள்.

வேறு

பொங்கோத வண்ணர் பொருந்தி யனுபவித்தல்
அங்கோர் கனவி லதனு லருட்கோதை
செங்கோலக் கண்ணர் திருவாய்ச்சுவை வாசம்
சங்கோடே தான்வினவிச் சாற்றினு ளோர்பத்தும். (295)

இப்படியேக் கங்கொண் டிருந்து வினவிடுநாள்
ஒப்பரிய வான்முகில்க ளோங்கியொழி யாதேகச்
செப்பரியான் நம்பால் செறிகால மீதென்ன
அப்பொழுதிற் கோதை யணிமுகிலோ டோதுவாள். (296)

விண்ணுரைக் கூண்டேகு மேகங்காள் நீர்போந்தீர்
தண்ணு ரருவித் தடவேங் கடமுடையென்
கண்ணுளன் வந்திலனே கட்டுரைமி னென்றுரைத்தாள்
திண்ணுர் மதிள்புடைசூழ் சீவிலிபுத் தூருறைவாள். (297)

குன்ற மெடுத்தானைக் கொண்டலுடன் கேட்பவவை
ஒன்று மியம்பாமை கண்ட வொளிவளையாள்
நின்று கலங்கியந்த நீல முகிற்கணத்தைச்
சென்றுதிரு வேங்கடவற் கென்றுயரஞ் செப்புமென. (298)

தூதுவிட மேகங்கள் சுந்தரத் தோளருக்கம்
மாதின் துயர முரையாமை மாமழையாய்
ஓதுமுலகி லுறப்பெய் தெழிற் கொள்ளக்
கோதை வருந்திக் கொடுந்துயரத் துள்ளழுந்தி. (299)

முன்பு தூதோதி முகில்பொழிந்த மாரியினல்
இன்ப வுலகிலி யாவுமுளைத் துற்பவிப்ப
அன்பகனற் சோலை மலையழகர் மேனியையும்
பொன்பொருந்து வெண்ணகையும் செவ்வாயும் போன்றதென

பாராரும் பூவை மலரினையும் பாரமரும்
சீராரு முல்லை முகையினையும் செப்பமுடன்
ஏரார் நிலத்தூரு மிந்திரகோ பத்தினையும்
நேராக வெண்ணி நினைந்துநைந்து வாடினள். (301)

இந்த வகையெண்ணி யெழிற்கோதை மாமாயன்
வந்து கலவா வருத்தத்தால் வாய்வெருவிச்
சிந்தை கலங்கித் திகைத்தாள் மனங்குளிரச்
சந்தத் தடம்பொழிலிற் றங்கி யினிதமர்ந்து. (302)

காலை யெழுந்து கரியகுரு விக்கணங்கள்
மாலின் வரவை யுரைக்க மலர்க்கோதை
சோலை மலையமருஞ் சுந்தரத் தோளரெனும்
வேலைவண்ணர் நம்பால் வரும்வந்தால் வேண்டுவன. (303)

தித்திப்பு மிக்க திருவடிசி லக்காரம்
மெத்தித் தடா நூற்றில் வெண்ணெயு மங்கவணம்
பத்திப் பரிசாற் பரமனுக்கு வாய்நேர்ந்து
புத்திக்குத் தக்கவுனக் காட்செய்வேன் போதியென. (304)

செப்பினுள் செப்பியதிற் சீதரன்செல் லாமையினால்
அப்பொழுதே வாடி யுருகி யலமந்திங்(கு)
ஒப்பில்சிலம் பாறுடைய உத்தமன்கை வில்லொலியும்
முப்பொழுது மேத்தி முழங்குதிருச் சங்கொலியும். (305)

என்றுகேட் டுய்குவேனி யானென் றருகிருந்த
மன்றல் கமழும் மலர்க்கோதை தோழியுடன்
அன்றுரைத்துப் பின்னீ துரைக்கின்று ளாரணங்கே
சென்றிலங்கை செற்ற திருமால் திருவாக்கால். (306)

என்னை யடைந்தார்கள் எப்பிழைகள் செய்திடினும்
பின்னை யவர்செய்த பிழைநோக்கே னங்கவரென்
மன்னுமுயி ரென்றுரைத்தார் மன்னவனார் மாமகனார்
அன்னவுரை பொய்த்தாலும் ஆழ்வார் மகளாதல். (307)

பொய்யாதே தோழி யெனப்புலம்பி நீண்டகன்ற
மையார் தடங்கண் மலர்க்கோதை கட்டுரைத்துச்
செய்யாள் பொருந்துந் திருமார்பர் தம்மைநாம்
நையாமல் வல்லபடி செய்து நமக்களிப்பார். (308)

அய்ய ரெனக்கோதை அனைத்தி னுற்றுநிற்பார்
உய்யுந் திறத்தார் உறுஞ்சீ ருபாயத்தார்
செய்யுந் திறத்தை மறந்துசில நாளிருப்பக்
கய்யமரு மாழியினான் ஆங்கவைகள் கண்டிருந்தும். (309)

வந்து கலவாமல் மடக்கொடியை வாட்டினால்
எந்த வகைசெய்தால் இனியுய்வே னென்றிரங்கிக்
கந்த மலர்க்கோதை கலங்கிக் கருமுகிலாம்
எந்தை யரங்கர் எடுத்திட்ட விடர்க்கடலில். (310)

தங்கினாள் தாமுகக்குஞ் சங்குதனில் தாயருக்குக்
கொங்கமருங் கோதைக் குவிமுலையாள் தானுரைப்பாள்

செங்கயல்கள் பாயும் திருக்கா விரிமடிமேல்
அங்கண் வளர்கின்ற அரங்கர்செய் மாமறமும். (311)

ஈங்கென் துணிவினையும் எல்லீருங் காண்மினெனப்
பூங்குழலாள் விம்மி யரங்கன் பெருந்துமுனம்
ஆங்கிருந்தா ரோடுலக மாக்கியவை காத்ததனை
ஓங்கியளந் தான்தேசத்தி லுய்த்தென்னைப் படுத்திடுமின். (312)

என்று பகர விருந்தார் அடாதவைகள்
இன்றே மறப்பாய் எனவுரைப்ப ஆங்கவர்க்கு
மன்றல் கமழும் மலர்க்கோதை மானனையீர்
ஒன்றுளது கேண்மினென வோது மிவையிவையே. (313)

ஆசையுற்ற வென்னினைவுங் காணு தயலிருந்து
பேசுகின்ற தெல்லாம் பிறவியுறு முங்களுக்கு
மாசுமன்னும் வஞ்சச் செவிட னுரைமானும்
கூசிப் பயனேது கொண்டுபோ யென்னையவன். (314)

மன்னுந் துவாரகையில் மாமதுரை மாநகரில்
சின்னமுழங் காய்ப்பாடி தன்னிலெனைச் சேர்மினென
அன்னவர்கள் மானே யவன்குடிக்கு முன்குடிக்கும்
மின்னனையாய் மாருப் பழியா மெனவிலக்க. (315)

ஆகிலவன் சாத்தும்பீ தாம்பரமும் மான்பொடியும்
மேகவண்ண மிட்டவன மாலை வெண்ணகைசேர்
பாகி லினிய பவளவா யூறமுதும்
தோகைமீர் சீர்பாதத் தூளிமுத லாமிவைகள். (316)

எல்லா மளித்தவனை யென்பால் வரவழைத்து
மல்லாண்ட தோளானை வல்வினையேன் மன்னும்வகை
வில்லார் நுதல்மடவீர் எண்ணுமின்கள் வேறென்றும்
சொல்லா தகன்மினெனத் தோகைதுய ருற்றிரங்கி. (317)

இல்லாப் பொருளை யெமக்கீக வென்றுலகைக்
கொல்லாமற் கொல்லுங் கொடுங்கோ லரசனைப்போல்
செல்லார் குழலாளைச் செப்பார் தனமிரண்டும்
வில்லா லிலங்கைநகர்ச் செற்றவிறற் சேவகனை. (318)

காட்டித்தா வென்னக் கனத்தெழுந்து நீர்பொருந்தப்
பூட்டிவாய் ஈரப் புடைபரந்து மேனிதனை
வாட்டி வருத்த மணவாளன் வாராத
ஈட்டத்தாற் கோதையினி யென்செய்கே னென்றவனை. (319)

உன்னித் திருமாலே யோடிவந்தென் னுருயிரை
மன்னிநா னெய்தும் வருத்தத்தை நீக்கிலனேல்
என்னுயி ரின்றேக விடைதந் திடுகவெனப்
பன்னி மலர்க்கோதை பதைப்பொருங்கிப் பூவணையில். (320)

தங்கிஞ ளக்கணத்தில் தாழா துலகளந்த
செங்கட் கரிய திருவரங்கர் வந்தவுடன்
கொங்கை குழைய வரிக்கோலக் கண்சிவப்ப
அங்கங் குளிர அணைத்திடரை யாற்றினுள். (321)

ஆங்கவ னெய்துமுனம் பட்டவ ருந்துயரும்
ஓங்கிய மாமாயன் உற்றபி னுள்ளமிகத்
தாங்கிய நல்வளமும் தானல்க வப்பரிசைப்
பாங்குட னுற்றுணர்வோர் பார்மிசை யின்மையினுல். (322)

ஒண்டொடி தன்னுணர்வில் ஓரிரு வோர்களுமாய்ப்
பண்டு நிரைப்பிறகே போன பரஞ்சுடரைக்
கண்டிலி ரோவெனவும் கண்டன ளாமெனவும்
எண்டிசை யும்புகழும் இன்னிசை பாடினளால் (323)

### வேறு

இந்தவகை யனுபவித்தன் றியம்பியிடும் திருமொழிகள்
சந்தமிகு மொருநூற்று நாற்பத்து மூன்றினையும்
கந்தமிகு மலர்க்கோதை கட்டுரைத்தாள் அவைகற்ரோர்
பந்தமறப் பரமபத மடைந்துய்யும் படிபாரில். (324)

தேடிமறை காணுத செல்விதிருப் பாற்கடல்விட்
டாடிப்பூ ரத்தி லவதரித்துப் பூமாலை
சூடிக் கொடுத்துத் துணிந்தபடி பாமாலை
பாடிக் கொடுத்துப் பரன்கடனை நீக்கினுள். (325)

இப்படியே கோதைதிரு மொழிகளா கியமாலை
ஒப்பில்திரு மாலோ டுறச்சேர்த் தனுபவித்துச்
செப்பமுடன் வாழ்ந்து திருவரங்கத் தம்மானைத்
தம்பறநான் சென்றிறைஞ்ச வேண்டுமெனத் தானினைந்து. ()

ஆசில்பெரி யாழ்வாரை நோக்கியைய ரேயடியேன்
தேசுபொலி தென்னரங்கத் துள்ளே திருக்கண்வளர்
ஈசன் கழல்வணங்க வேகநினைத் தேனெனைநீர்
கூசாம லின்றே கொடுபோய் விடுமென்ருள். (327)

என்ற வுரைகேட்ட எனையாண்ட பட்டர்பிரான்
நன்றென் றுலகில் நவைதீரக் கண்வளரும்
மன்றல் கமழ்சென்னி வடபெருங் கோயிலர்முன்
அன்று சென்றி தறைவா னரவணையாய். (328)

என்னுடைய கோதை யெழில்மடவார் நால்வருடன்
மன்னுந் திருவரங்க மாநகரிற் பாம்பணைமேல்
உன்னுருவங் காண வுவந்தாளென் செய்வதெனப்
பன்னரிய வேதக்கோன் பட்டர்பிரான் கட்டுரைத்தான். (329)

வண்டமருஞ் சோலை வடபெருங் கோயிலரும்
தண்டமிழ்நூல் வல்லீர் தாழ்குழலைப் பல்லக்கில்
கொண்டுபோய்த் தென்னரங்க மேவிக் குவலயங்கள்
உண்டுறங்கு நங்கோல முள்ளபடி கண்டிறைஞ்சி. (330)

கோதையொடு நீயும் வருதியெனக் கோதில்லா
வேத முதல்வன் விடைகொடுப்ப வேதக்கோன்
ஓதவண்ணன் தன்னை யுளக்கமலத் துள்ளிருத்திக்
காதல் மகள்தங்கும் கனகமணி மாளிகையில். (331)

வந்தவளைப் பல்லக்கில் வைத்தடியார் தோழியர்கள்
முந்த மறைவாணர் முனிவர் புடைசூழ
அந்தரத்தோர் மலர்மாரி பெய்ய அருள்தழைப்ப
நந்தா விளக்கனைய ஞானச்செழுங் கனிசேர். (332)

மாணிக்கப் பல்லக்கை மூடிமுன்ன மாகவிட்டுப்
பேணியபின் தானுமோர் பெருஞ்சிவிகை மீதேறி
வாணித் திலநகைசேர் மாமகளார் முன்னேகப்
பூணித்த காவலர்கள் சூழ்ந்துபொதிந் தேகியிட. (333)

வில்லார் புருவத்தார் வேதக்கோன் பட்டனுடன்
மல்லாண்ட திண்டோள் மணிவணனைக் கும்பிட்டுச்
செல்லார் பொழில்சூழ் திருமா லிருஞ்சோலை
நில்லா நின்றானை நினைவாற் பணிந்தேகி. (334)

அண்டர் புகழும் அரங்க நகர்நோக்கிப்
புண்டரிகத் தாரோனும் பூங்குழலும் செல்லளவில்
ஒண்டொடியாள் கோதையிசைக் கோங்குதிருப் பல்லாண்டைப்
பண்டுரைத்த வேதக்கோன் பட்டர்பிரான் தன்னோடும். (335)

செப்புவா ளோர்வார்த்தை ஐயரே தென்னரங்கர்
ஒப்பில் சிகரம் ஒளிதிகழும் கோபுரங்கள்
எப்பொழுது தோற்றும் எனக்கதனை நீர்நோக்கி
அப்பொழுதே கூறுமடி யேனிப் பல்லக்கில். (336)

நின்றிறங்கி வானளவு நீண்டதிருக் கோபுரத்தைப்
பொன்திகழ வோங்கும் பொருவில்விமா னந்தன்னை
இன்று பணிந்தென் னிருகால் நடையாகச்
சென்றரங்கந் தன்னைத் தெரிசிக்க வேண்டுமென. (337)

ஓதினாள் கோதையவள் பின்சென் றுரைகேட்ட
வேதக்கோன் பட்டர்பிரான் மெல்லியலா ளோடேகி
மாதக்கோ ரேத்த வரியரவிற் கண்துயிலும்
பூதக்கோன் மன்னிவளர் பொன்னரங்கப் பொற்சிகரம். (338)

இன்னே தெரிகின்ற தேந்திழையே யென்றாழ்வார்
தென்னாரும் பொன்னிநதித் தென்கரையிற் சென்றதற்பின்

சொன்ன ரதுமுன்னம் தோற்றியப்போ சொல்லாமை
மின்ன ரிடையாள் நடையால் மெலியுமென. (339)

இந்தா தெரிகின்ற தெனப்புகன்ற வப்போதே
நந்தா விளக்கனையாள் ஞானிகட்குங் காண்பரிதாய்
அந்தாமப் பல்லக்கி னின்றிறங்கி யப்பொழுதே
செந்தா மரைக்கண் திருவரங்கர் சேவடியை. (340)

சென்று பணிந்து திருமார்பின் மீதேறி
மன்றல் கமழும் மலர்க்கோதை வீற்றிருந்தாள்
அன்றிவளைப் பல்லக்கின் சீபாதந் தாங்குமவர்
நின்றனர்க ளவ்வழியில் நின்றார் நிலைநோக்கி. (341)

என்னென்று பட்டர்பிரான் கூற இலங்கிழைபோய்
முன்னென்றச் சீபாதந் தாங்கு மவர்மொழிவார்
மின்னென்று நுண்ணிடையார் மேவுமிந்தப் பல்லக்குத்
தன்னென்றும் பாரம் தவிர்ந்ததவள் தங்கிடுதல். (342)

இன்மைபோ லெங்கட் கிருந்த தெனவியம்ப
நன்மைமிகு மாழ்வார் நற்றூசை நீக்கியந்தத்
* * *     * * *     * * *     * * *

[1]தின்மையடைந் தெங்கேயென் சேயிழையென் றுங்கழுது.(343)

சீரார் திருவரங்கர் செய்தகள வீதென்னப்
பாரோ ரிறைஞ்சப் படிமீதிற் றுமோடி
ஏரார் பொழில்சூழ் எழிலரங்கத் துட்கிடந்த
பேரா யிரமுடைய பெம்மானைச் சென்றிறைஞ்சி. (344)

நின்றழுது விம்மி நெடுமாலே நீகவர்ந்திங்(கு)
இன்றடியேன் பெற்ற இலங்கிழையை யெங்கொளித்தீர்
நன்றடியே னும்மையென்றும் நம்பெருமா ளென்றிருந்தால்
ஒன்றும் பலமும் இதுவோ உலகில்முனம். (345)

கல்லைப் பெண்ணுக்கிக் கவுதமருக் களித்தோரே
நல்லமறை யான்மக்கள் நால்வரையு மளித்தோரே
ஒல்லையினிற் கலையனைத்தும் ஓதுவித்த தக்கிணையாய்ச்
செல்வமிகுஞ் சாந்தீபன் தருமகனை யளித்தோரே. (346)

ஒருமகளை யடியேனுக் குலகறிய வளர்த்தவளைத்
திருமகள்சேர் மணிமார்பா சேவிப்பக் கொடுபோந்தேன்
வரும்வழியில் நீபுகுந்து களவாண்டுன் மாயத்தால்
குருமணியே யொளித்தக்கால் குவலயத்திற் பல்லுயிர்க்கும். ()

தென்னார்ந்த பொழில்சூழ்ந்த திருவரங்கக் காவலனே
முன்ன ரணங்கள் மொழிய வடைந்தவர்கள்

1. தின்மை - தீமை, துன்பம்.

நின்ஞு லிடரெய்தில் நேமியாய் நின்கீர்த்தி
என்னும் அடாதவையென் கோதையெங்கே யென்றிரங்க. ()

மஞ்சேர் பொழில்சூழ் மதிளரங்க ராழ்வாரை
அஞ்சே லெனத்தம் திருமார் பமர்ந்தருளும்
பஞ்சே ரடியாளைப் பாரென் றுடனளிப்ப
உஞ்சேனென் றுள்ளம் களிகூர்ந் துவப்பிஞெடும். (349)

சீர்மருவும் பெரியாழ்வார் திருமகளார் தமைநோக்கி
ஆர்வமருங் களிகூர வருகணைந்து முடிதடவி
ஏர்மருவு மரங்கத்தீர் எல்லாரு மறியவிந்த
வார்மருமப் பூண்முலையை மறைமுழங்கும் புத்தூரில். (350)

வந்துமணம் புணர்ந்திந்த மாதிஞெடு மத்தலத்தில்
சந்தமரும் தடம்புயத்தீர் தங்கியினி தமர்ந்தருளப்
பந்தமறும் பல்லுயிரும் பணிந்தருளும் படிகண்டு
சிந்தைகளிப் புறவடியேன் வணங்கநினைந் தனன்தேவ. (351)

இப்படிநீ செய்தருள வேண்டுமென இறைதாளில்
ஒப்பரியான் பணிந்தேத்தப் பங்குனி யுத்தரத்தில்
அப்படியே சீவில்லி புத்தூரி லண்டர்தொழத்
தப்பறநாம் வந்துமணம் புணர்வாமித் தார்குழலே. (352)

இன்னேநீ யிந்த இலங்கிழையைக் கொண்டேகித்
தன்னே ரனைய புதுவைநகர் தான்மருவி
மின்னே ரிடையாள் மணத்துக்கு வேண்டுவன
முன்னே யியற்றிடுக பட்ட வெனமொழிந்து. (353)

வேறு

இத்தலத் தனைத்துக் கொத்தும் எழுந்துசென் றுகப்பி ஞேடும்
அத்தலத் திவனை விட்டு வருகவென் றருளிச் செய்து
பத்தர்கட் கினியா னேறும் பல்லக்குங் கோதைக் கீந்தே
உத்தமப் பெரியாழ் வார்க்கும் ஒளிவளர் சிவிகை நல்கி. (354)

வேறு

ஏகுமின்க ளினியென்ன வெழிலரங்கர் உரைசெய்ய
மேகவண்ண சரணமென இருவர்களும் விழுந்திறைஞ்சி
ஆகமுறத் திருவரங்கத் தமுதத்தை நிறைத்தருள்சேர்
பாகவதர் பலர்சூழப் பைந்தொடியார் புடைநெருங்க. (355)

திருவரங்கந் திருப்பதியில் சீர்மருவி வாழ்பவரும்
பெருவரங்கொண் டவதரித்த பெரியாழ்வார் திருமகட்குப்
பொருவொரங்க மெடுத்துளராம் பூவையரு முளரோவென்(று)
இருவரங்கம் பிரியாதே யிருப்பதுநம் விருப்பமென. (356)

பின்செல்ல அமரர்குழாம் பிரசமலர் மழைபொழியப்
பொன்செல்லும் புகழரங்கப் பூசுரர்கள் மறைபுகல
மின்செல்லுந் துடியிடையார் திருவெண்சா மரைவீச
முன்செல்லும் முழவோசை முகிலொலியின் மிகமுழங்க. (357)

வேறு

பேரிகை காளங் கொம்பு பெருந்தலை மகுடம் தாராம்
சீரிய நவுரி யாதி சிறந்தவாச் சியங்க ளார்ப்ப
நாரியர் வீணை வல்லோர் நாதகீ தங்கள் பாடக்
கூரிய கவிஞர் பாணர் குழாங்கள்பல் லாண்டு கூற, (358)

வேறு

அம்பரத்தில் முனிவர்குழாம் அணியணியே தொழுதேத்தத்
தும்புருவும் நாரதனும் சுருதிநெறி யிசைபாட
வம்பவிழுங் குழற்கோதை மணவாள ருகந்தளித்த
செம்பொன்மணிப் பல்லக்கில் எழுந்தனள்தென் திசைநோக்கி.

வேறு

முத்திற் கோமே தகந்தன்னில் முழுநீ லத்தில் வயிரத்தில்
துத்தி யரவி னொளிமணியில் துலங்கும் பற்ப ராகத்தில் [வார்
தத்தித் தத்தி நிரைத்தெங்கும் தயங்கும் மணிகள் பெரியாழ்-
பத்திக் குடையு மிடையிடையே பவளக் கொடியு முடனிழற்ற.

வேறு

மன்னியசீர் மதிளரங்கர் மாநகரங் கடந்திரைக்கும்
பொன்னிவள நதிகடந்து புகழ்ச்சோழ னெல்லைவிட்டு
மின்னியெழும் வச்சிரக்கை விண்ணவர்கோன் விறல்மவுலிச்
சென்னிமிசை வளையெறிந்த தென்னவன்சீர் நாடணைந்தார். ()

மருவரிய திருவரங்க வளநகர்விட் டெழுந்தருளிப்
பொருவரிய சீவில்லி புத்தூரிற் புகுமளவும்
இருமருங்குந் திருச்சின்னம் எடுத்திசைத்தா ராங்கவற்றில்
அருவினையேன் சிறிதென்னால் அறிந்தபடி யறைகின்றேன். ()

வேறு

இருமா நிலத்தி னிடர்கெடும் வண்ணம்
மருவார் திருத்துழாய் மாதராய் மாசில்
அருமா மறைதேரு மாழ்வார் மகளாய்த்
திருவாடிப் பூரத்தில் சென்மித்தாள் வந்தாள். (363)

தேடி மலர்கள் தெரிந்துதன் தேவர்க்கு
நாடித் தொடுத்த நறுந்தாரைக் கோதையில்
சூடிக் கொடுத்தபின் சொற்றமிழ் தன்னையும்
பாடிக் கொடுத்தருள் பைந்தொடி வந்தாள். (364)

## வேறு

மட்டவிழும் பொழில்புடைசூழ் மதுரை தன்னில்
வாதியரை யீடழித்து மறையின் அந்தம்
எட்டெழுத்தே யெனக்கூறி வேத நான்கும்
இருந்தபடி யெடுத்தோ மன்னர் மன்னன்
கட்டியபொற் கிழியறுத்துத் திருப்பல் லாண்டைக்
கட்டுரைத்துக் கண்ணனுக்குக் காப்பிட் டேத்தும்
பட்டர்பிரான் திருமகளார் வந்தார் வந்தார்
பாடவல்ல நாச்சியார் வந்தார் வந்தார். (365)

காமனையுஞ் சோமனையுங் கருத்தா லுன்னிக்
கருதியசீ ரற்றைத்திங்கள் கனித்த நோன்பில்
மாமருவும் வேங்கடவ னிலக்கா வென்னை
மலர்க்கணையாய் வைத்தெய்யு மதனனென்னப்
பாமருவுந் தமிழ்பத்து மிசையி னோடைப்
பட்டர்பிரான் கொண்டாட வருளிச் செய்த
தேமருவு மலர்க்கோதை வந்தாள் வந்தாள்
திருப்பாவை பாடினாள் வந்தாள் வந்தாள். (366)

மற்றுநங்கா மங்கள்மாற் றென்றூர் வந்தார்
மாமாலே மாமிதன் மகனா யுன்னைப்
பெற்றிலே னென்றருளிச் செய்தார் வந்தார்
பெரியாழ்வார் திருமகளார் வந்தார் வந்தார்
நற்றமிழ்சேர் நாமமா யிரத்தோர் பத்தில்
நாரணனே நரனேநீ நாங்கள் செய்த
சிற்றில்சிதை யேலென்றூர் வந்தார் வந்தார்
திருமாலை வழங்கினார் வந்தார் வந்தார், (367)

சீரிணங்கும் பொய்கைநறும் புனல்புக் காடச்
செங்கண்மால் துகிலெடுத்துக் குருந்த மேற
நாரணனே கூறையைநல் கிடுவா யாகில்
நாங்களினிப் பொய்கைக்கு வாரோ மென்று
பூரணனை யிரந்திறைஞ்சிப் பூம்பட் டேற்றுப்
பொருவரிய தமிழ்பத்து மருளிச் செய்த
ஆரணங்கள் தொழுதேத்து மாண்டாள் வந்தாள்
அணியரங்கர் திருமார்பிலமர்ந்தாள் வந்தாள். (368)

ஏடவிழ்பூ மாலிருஞ் சோலை நின்ற
எழிலழகர் வேங்கடவர் இலங்கு நீதி
மாடமிசை மதிதவழும் அரங்கம் மன்னும்
மணவாளன் நம்பாலே வருமோ வென்னக்

கூடல்வளைத் திருந்துகுறி பார்த்தோர் பத்தும்
கொழுந்தமிழா லருள்செய்து குலவு மல்லி
நாடமரும் ஆரணங்கு வந்தாள் வந்தாள்
ஞானமாச் செழுங்கோதை வந்தாள் வந்தாள். (369)

மன்னுபெரும் புகழாதி மன்னும் புத்தூர்
மலர்க்காவி லினிதமருங் குயிலை நோக்கி
இன்னிசைகள் மிகவல்லாய் கூட லொன்றும்
இயம்பாமை கண்டாயோ வென்று கூறிப்
பின்னதனை மாலிருஞ் சோலை நின்ற
பிரானைவரக் கூவுதியென் றருளிச் செய்த
அன்னநடை யார்வந்தார் வந்தார் வந்தார்
ஆழ்வார்கள் திருமகளார் வந்தார் வந்தார். (370)

நாரணனைக் காணாது வருத்த மெய்த
நம்பெருமாள் சொப்பனத்தில் நாட்டார் காண
வாரணமா யிரஞ்சூழ வந்து தன்னை
மணஞ்செய்த படியெல்லாம் வகுத்தோர் பத்தில்
சீரிணங்க வருள்செய்த செல்வி வந்தாள்
செங்கமலத் தடவயல்சூழ் மல்லி நாட்டில்
ஆரணங்கு வந்தாள்பூங் கோதை வந்தாள்
அனைத்துயிர்க்கு மன்பருளி யாண்டாள் வந்தாள். ()

செங்கோலக் கண்ணன்வாய்ச் சுவையின் வாசம்
செப்புதியெப் போதுமவன் கையில் மன்னி
அங்கேந்தும் வாயமுதம் உண்டு வைகும்
அடலாழி வெண்சங்கே யென்றோர் பத்தும்
சங்கோடு கேட்டுவந்தாள் வந்தாள் வந்தாள்
சதுமறையோர் குலவிளக்காம் தையல் வந்தாள்
பொங்கோத வண்ணனிட மருங்கில் வைகும்
புவிமடந்தை வந்தாள்பூங் கோதை வந்தாள். (372)

மஞ்சினங்காள் வேங்கடவற் கென்தூ தாக
வான்மீதி லேகியவன் மயலிற் பட்டு
நஞ்சருந்துங் கெண்டையென அறிவு சோர்ந்து
நான்படுமித் துயரெல்லாம் நயந்து கூறிப்
பஞ்சவர்கள் தூதனுரை கொண்டு மீளில்
பாவியே னுயிர்பெறுவே னென்றோர் பத்தும்
செஞ்சொல்பெற வெடுத்துரைத்தார் வந்தார் வந்தார்.
செவ்விமலர் சூடினூர் வந்தார் வந்தார். (373)

சிந்தூரச் செம்பொடியி லழகர் கோலத்
திருவுருவை நினைந்துபத்து மருளிச் செய்த
கந்தநறு மலர்க்கோதை வந்தாள் வந்தாள்
காற்கோடைப் பூவாகிக் கருதும் பத்தில்
நொந்தாவி யறச்சோர்ந்தாள் வந்தாள் வந்தாள்
நோன்புக்கென் றெருப்பட்டு நோற்றாள் வந்தாள்
செந்துவர்வாய்ச் செங்கமல முகத்தாள் வந்தாள்
திருமாலைப் பிரியாதாள் வந்தாள் வந்தாள். (374)

எஃணியசீர்த் தாமுகக்கும் சங்க மாதி
எழில்திகழு மொருபத்து மருளிச் செய்து
மண்ணினிடர் கெடப்பிறந்தாள் வந்தாள் வந்தாள்
மற்றிருந்தீர் கட்கென்ன வகுத்த பத்தில்
நண்ணியமால் தேசத்திற் கொடுபோ மென்ன
நாரியர்க ளுடனுரைத்த நங்கை வந்தாள்
கண்ணனெனுங் கருந்தெய்வம் தன்னிற் கூடிக்
கலவிநலத் துறவாழ்ந்து கலந்தாள் வந்தாள், (375)

வேறு

ஆதி மூர்த்தி யுறக்கலந்த பின்பு மகிழ்ச்சி யடங்காமல்
வீதி யார வருவானை விருந்தா வனத்தே கண்டேனென்
றோதிக் களிக்கும் பெண்வந்தாள் உலக மேழுந் தொழுதேத்தச்
சோதி திகழு மதிமுகத்தாள் வந்தாள் தோகை மயில்வந்தாள் ()

வேறு

பங்கய முகமதி யெனமுதியோர்
பரவிடு நலமுடை யவள்வந்தாள்
கொங்கலர் குழல்பொங் கியவாசக்
கோசலை திருமரு மகள்வந்தாள்
மங்கையர் குலமா மயில்வந்தாள்
வாளென விளமா னெனமிளிரும்
செங்கயல் விழியனை யவள்வந்தாள்
தேவகி திருமரு மகள்வந்தாள். (377)

வேறு

மதும லர்க்குழல் மாமயில் வந்தாள்
வாரி சூழ்புவி மாமயில் வந்தாள்
பதும நற்றிரு மங்கையில் மிக்க
பார தந்திரி யத்தினள் வந்தாள்
முதுமொ ழித்திரு மாமொழி தந்தே
முத்தி நல்கிய வுத்தமி வந்தாள்
பதுமப் புதுமலர் பொழிகவின் மன்னும்
புதுவை யுற்றுறை பொற்றொடி வந்தாள். (378)

### வேறு

பரிபுரப் பதத்தாள் வந்தாள் பழமறைக் கிழத்தி வந்தாள்
சரிவளைக் கரத்தி வந்தாள் தடமுலைக் குடத்தி வந்தாள்
அரியவாக் கருத்தி வந்தாள் அனநடை திருத்தி வந்தாள்
சுரிவளைக் கழுத்தி வந்தாள் துணைவிழிப் பிணைச்சி வந்தாள். ()

### வேறு

வேத நாயகி வந்தாள் வேள்வி நாயகி வந்தாள்
கோதை நாயகி வந்தாள் கோலநாயகி வந்தாள்
போத நாயகி வந்தாள் பூமிநாயகி வந்தாள்
நாத நாயகி வந்தாள் ஞான நாயகி வந்தாள். (380)

### வேறு

என்றிசைக்கும் சின்னங்கள் எண்டிசையுங் கீழ்மேலும்
ஒன்றிவரு மன்பினர்க ளுளங்குளிர வெடுத்தூதி
மன்றல்கமழ் வேங்கடத்தோன் சேனையொடு மற்றவர்தாள்
சென்றவழி நடந்தவெழில் திருவரங்க ரருள்சூழ. (381)

சீரார்மா லிருஞ்சோலை நின்றருளுந் தேவனார்
ஏராருஞ் சேனையொடு மெதிர்ப்பரிந்திட் டெதிர்சென்று
வாரார்பூண் முலைக்கோதை மாணிக்கப் பல்லக்கில்
நேராய விடம்வலத்து முன்னுமணி நெருங்காமல். (382)

### வேறு

பிரம்படிக் கார ரூகப் பெண்ணணங் கருகே யேகச்
சிரம்படிந் தமரர் தாழச் சித்தர்கள் கற்ப கத்தின்
மரம்படி மலர்கள் சிந்த மறையவர் மறைகள் பாட
நரம்பொடு வீணை வல்லார் நவிலுமே ழிசைகள் பாட. (383)

பல்லாண்டு பட்டன் பாடப் பறவைமே லிருந்து கேட்ட
மல்லாண்ட திண்டோ ளாதி மணிவண்ணன் சேனை யோடும்
வில்லாரும் நுதலாள் பாங்கில் வெளிப்பட நடந்து சென்று
கல்லாரம் பிடித்த கையாள் கண்கள்நே ராக வேக. (384)

மாசறும் வில்லி புத்தூர் வடபெருங் கோயி லாதி
ஈசனார் அமரூர் தன்னை யெழில்பெற வலங்க ரித்துக்
காசறு தோர ணங்கள் அணியணி பொருந்தக் கட்டி
தேசுற வுடன்செல் வார்க்குத் திருவிருந் தமைத்தவ் வூரில். ()

உறைபவ ரனைவ ரோடும் உவந்தெழுந் தெதிரே செல்ல
நறைகமழ் கோதை யாரும் ஞானநா யகியார் வந்து
பிறைதவழ் மாட நீடு பேரருட் புதுவை புக்கார்
முறைமுறை பணிந்து நித்தர் முத்தரும் முடிகள் தாழ. (386)

வேங்கடத் துறைவா ரன்றே மீண்டுதம் பதியிற் புக்கார்
பாங்குடன் கோதை யேகும் பல்லக்கின் முன்ன ராகி
வாங்குவித் துடனேமன்னும் மாலிருஞ் சோலை யாரும்
பூங்குழ லருளி னுலே பொருந்துதம் பதியிற் புக்கார். (387)

மணிவணர் சேனை யோடுந் துவரைமா நகரீற் புக்கார்
அணியணி நிரைத்து வந்த அரங்கனு ரனைத்துக் கொத்தும்
பணியணைப் படுத்தார் நல்கும் பயன்படு விருந்து முண்டு
பிணிபசி பிறவி யற்றுர் பிரான்வள ரரங்கம் புக்கார். (388)

ஆசிலா மலர்ப்பூங் கோதை அரங்கர்நா மணைவோ மென்ற
மாசறு மணத்துக் கெண்ணி வகுத்தநாள் வரவு நோக்கத்
தேசுற விருந்தா ராழ்வார் சிலபகல் செல்ல மாயன்
பேசிய மணநாள் நாளை யெனமறை யவர்கள் பேச. (389)

திருநக ரலங்க ரிக்கத் திருமணங் காண வென்றே
வருபவ ரறிய யானைக் கழுத்தில்வள் ளுவனன் றேற்றிப்
பெருமுர சறைக வென்னப் பெண்ணமு தத்தைப் பெற்ற
அருமறை யந்த ணுளர் அருளவங் கறைந்தா னன்றே. (390)

திருக்கலி யாணம் நாளை யெனச்செழு முரசு தட்டிப்
பெருக்கொலி யந்த ணுளர் பெருநலக் களிப்போ டோதும்
இருக்கொலி வீதி யெங்கும் எழுந்தசீ ரோசை கேட்டோர்
நெருக்கொலி கடலு மஞ்ச நிறைந்தன வான மெல்லாம். (391)

நிலந்தரு வளங்க ளாலும் நீணகர்ப் புதுவைக்கண்ணைக்
குலந்தரு வளங்க ளாலும் கொழுமறை வளங்க ளாலும்
புலந்தரு வளங்க ளாலும் பொதுவுறு வளங்க ளாலும்
அலங்கரிக் கின்ற வாற்றை யறிந்தவா றறைய லுற்றேன். (392)

படவரவத் தணைகிடந்து பங்கயக்கண் வளர்ந்தருளும்
வடபெருங்கோ யிலர்கோயில் மணிமாடக் கோபுரங்கள்
இடவகைகள் மண்டபங்கள் எழில்திகழ வலங்கரித்துத்
தடவயல்சூழ் புத்தூரில் சதிர்விளங்கு வீதிதொறும். (393)

**வேறு**

ஆணிக் கனகப் பசும்பொன்னுல்அமரர்க்கிறங்க வமைத்துளவாம்
ஏணித்திரள்கொ லெனக்கண்டோ ரியம்ப விலங்கு நித்திலத்தின்
மாணிக் கத்தின் பவளத்தின் மாலை தூக்கி மறுவற்ற [கும்.
சேணிற் பொலியுந் தோரணங்கள் நாட்டி யிடையே சிறந்தோங்

**வேறு**

இந்திர விமான மேகொல் அன்றெனி லிரவி தேர்கொல்
சந்திர விமான மேகொல் தரைமிசை மலைக ளேகொல்
மந்திர கிரிக ளேகொல் என்றுமண் ணவர்கள் கூற
அந்தர மளப்ப வோங்கும் அணிநிலைத் தேர்கள் செய்தார்(395)

### வேறு

மின்னுமா மணிகள்சேர் மாடமா ளிகையில்
விசும்புறத் தூக்கிய கொடிகள்
பொன்னிநாட் டவரைத் திருமணங் காணப்
போதுமி னென்றழைப் பதுபோல்

மன்னிநின் றுடத் தமனியக் கும்ப
மலைமிசை மதியொளிர் கின்ற
தென்னலாம் படியே முனம்பகர் மாடத்
தெழில்பெற வமைத்தன ரலங்கல். (396)

### வேறு

காவண நகர மெங்கு மிட்டதிற் கவின்கொண் டோங்கும்
மாவண விதானந் தூக்கி வளநகர்க் கழகு செய்தங்
காவண வீதி தோறும் அணியணி வாழை பூகம்
பூவணக் கமுகு நாட்டிப் பூரணப் பொற்கும் பங்கள். (397)

அணியணி யமைத்துப் பூம்பட் டாடைக ளதன்மேற் சுற்றி
மணியினுந் தென்னங் காய்கள் வயங்குமாந் துளிருஞ் சேர்த்துக்
குணிகொள்நூல் மறையோர் மன்னர் குலத்துயர் நலத்தோ-
டோங்கும்
வணிகர்வே ளாளர் தத்தம் வாயில்கள் தோறும் வைத்தார். ()

### வேறு

ஆணிக் கனக நெடுந்தூணில்
ஆடை பொதிவார் அலங்கரிப்பார்
மாணிக் குறளாய் நிலங்கொண்டான்
மணநா ளென்று வருமென்று
பேணிப் பகர்வீர் மறையவர்காள்
என்பார் பெண்ணை வளர்த்தவர்கள்
நாணி யிறைக்குச் சுருள்வைக்க
நலனுர் பலன்க ளுடிடுவார். (399)

### வேறு

மஞ்சன மாடு வாரும் வரிவிழி யிணைகள் தம்மில்
அஞ்சன மெழுது வாரும் அம்மனை யாடு வாரும்
பஞ்சுக ளணிகின் றாரும் பரிபுரப் பதத்தின் நேர்ந்த
வஞ்சிபோ லிடையில் வண்ண மேகலை யுடுக்கின்றாரும். (400)

மருவிருங் குழல்கள் தம்மின் மாலைக ளணிகின் றாரும்
அருமறைப் பயன்கள் தம்மை ஆசற விரிக்கின் றாரும் [ரும்
வருவிருந் தெதிர்கொள் வாரும் மனைதொறுங் கொடுசெல்வா-
இருமிரு மென்னப் பேணி ஆசன மிடுகின் றாரும். (401)

அறுசுவை யடிசில் பேணி அணைந்தவர்க் களிக்கின் றாரும்
நறுமலர் புனைகின்றாரும் நாசியா பரணம் வெள்ளைக்
குறுநகை வளைக்கின் றாரும் கூன்பிறை நுதலில் வட்ட
மறுவறு திலத மிட்ட மயிலென வருகின் றாரும். (402)

ஏழிசை பாடு வாரும் எழில்மலர்க் கோதை யென்றும்
வாழியென் றேத்து வாரும் மறையவர் மனையிற் சென்றிங்
காழிமா லெய்து நாளை யறையுமென் றிரக்கின்றாரும்
தோழிய ரோடுங் கூடிச் சூதுகள் பயில்கின் றாரும். (403)

ஓவிய மெழுது வாரும் உயிர்ப்புள திதற்கென் பாரும்
ஆவிபெற் றுடையீர் வாதிட் டாடுமெம் மோடென் பாரும்
காவிபோற் சிவந்து நீண்ட கயல்விழிக் கடைக்கூர் வாளால்
மேவிய விளைஞ ராவி மெலிவுற நலிகின் றாரும். (404)

தண்ணறும் புழுகு வாசச் சந்தனக் குழம்பு கூட்டித்
திண்ணைகள் மெழுகின் றாரும் தெருக்களில் தெளிக்கின் றாரும்
பண்ணமர் சிந்திற் கோத்த பாடல்கள் பயில்கின் றாரும்
வண்ணமா மணிப்பட் டாடை வறியவர்க் களிக்கின்றாரும். ()

தேசுறு பொன்னில் விட்டந் திரண்டகால் பட்டுத் தாம்பிட்(டு)
ஆசறு வயிரத் தாலே யழகுறு பலகை சேர்த்தே
ஊசல்கூ ளாடு மாதர் உம்பர்நா டிவ்வூர்க் கொவ்வா
சீசியென் றிகழக் கேட்டுச் சிந்தனை களிக்கின் றாரும். (406)

பாலிகை பொன்னிற் செய்து பலமுளைப் படுத்து வாரும்
மாலிருஞ் சோலை யானே மணஞ்செய வருமென் பாரும்
ஆலிலைப் பள்ளி கொண்ட அரங்கனார் காணென் பாரும்
தாலிவேங் கடவர் முன்னே சமைத்தன ரிவட்கென் பாரும்(407)

வடபெருங் கோயி லுள்ளான் வளர்ப்பமற் றவர்கள் கொள்ளக்
கடவதோ வெனநின் றாருங் கைப்பிடி வலியி லெண்ணில்
இடவகை மிடுக்கு முண்டோ இவர்க்கென விசைக்கின் றாரும்
குடிதிசை முடியை வைத்தார் கோமக னுமென் பாரும். (408)

சீருறு பெரியாழ் வாருந் திரிந்துநின் றுதகந் தன்னை
யார்திருக் கையில் விட்டார் அவர்க்கிவ ளாமென் பாரும்
நேர்பெற நால்வர் ஒக்க நிரைத்தகை பதினா றுக்கும்
பார்மிசை நின்ற தொண்டர் என்செய்வார் பகரென் பாரும்.()

வேறு

குரவைகள் முழக்குவார் கொடிமனை புதுக்குவார்
பரவையி னிரைக்குமா பழமறை பயிற்றுவார்
நிரவிய வெளிக்கணே நிலவிசை பரப்பிமால்
வரவையு முணர்த்துவார் மணவினை பயிற்றுவார் (410)

வீதியி னடிப்பொரு வெயில்மணி பொதுக்குவார்
ஓதிம நடக்குமா றுறுநடை பயிற்றுவார்
வேதிகை புதுக்குவார் விரைமலர் பரப்புவார்
சாதியி னெழுக்கமே தருகலை வழுத்துவார். (411)

சிறுபறை முழக்குவார் சிலர்பணி விளக்குவார்
குறுநகை பெருக்குவார் குடிமுடி கனக்கவே
அறுபதம் விலக்குவார் அமரர்கள் விடுத்தசீர்
நறுமல ரொதுக்குவார் நவமணி திருத்துவார். (412)

பங்கய முகத்தினர் பஞ்சணை பதத்தினர்
குங்கும மிகுத்தமா கொங்கைகள் பெருத்துளார்
செங்கையி லெடுத்தயாழ் திண்டிம மொலிக்கவே
மங்கல நகர்க்கெலாம் வந்தொலி பரப்புவார். (413)

பேரிகை முழக்கினர் பேரருள் விளக்கினர்
தூரிய முழக்கினர் சூழ்வினை துளக்கினர்
சீரிய முகத்தினர் தேவமர் தரத்தினர்
கோரிய கருத்தினர் கோமள வளத்தினர். (414)

மாசறு குணத்தினர் மான்மத மணத்தினர்
ஆய்வருந் தனத்தினர் ஆடவர் மனத்தினர்
வேல்விழி யினத்தினர் வீதியில் நெருக்கினர்
வீணைகள் பயிற்றுவார் மேவிசை மிழற்றுவார். (415)

வேதியர் நெருக்குவார் வேள்விகள் பெருக்குவார்
ஓதிய மறைக்குழாத் தோசைகள் நிரப்புவார்
சாதியி னெழுக்கமே சார்வுற நிறுத்துவார்
வீதியி லெடுத்தயாழ் வீணைகள் பயிற்றுவார். (416)

கச்சணி தனத்தினர் கட்கடு விடத்தினர்
அச்சிலை பிடித்தகா மற்கரு ளளித்துளார்
வச்சிர மனத்தினர் வற்கலை நிறுத்தினர்
நிச்சலு நெருக்கவே நித்திரை யருக்கினர். (417)

**வேறு**

இந்தவகை யனைவர்களு மெழில்விளங்க வலங்கரிப்ப
முந்தைமறை தொழுமாதி மொழிந்ததிரு மணநாளாம்
பந்தமறும் பங்குனி யுத்திரத்தின் முனைநாளில்
அந்தரத்தி லரம்பையரும் அமரர்களு மணிமணியாய். (418)

இரைத்தேத்து மிந்திரனும் இயக்கர்களும் எழுந்திறைஞ்சி
நிரைத்தேத்திச் சித்தர்குழாம் நிலவுமலர் மழைபொழியத்
திரைத்தேற்று கடலரசன் சேவிப்பச் செழுமறைகள்
உரைத்தேத்திச் சீவில்லி புத்தூரி னுட்புகுந்தார். (419)

வாசநறு மலரயனும் வாக்கியுமற் றுள்ளவரும்
தேசுபொலி விமானமிசை செழுமறைகள் தொழுதேத்த
மாசகன்ற வில்லிபுத்தூர் வளநகரி னுட்புகுந்தார்
வீசுபிறைச் சடையானும் மெல்லியலா ளுடன்செறிந்தான். (420)

வேறு

வித்தியாதரரும் வீணைவல் லவரும்
மேவுதம் மனைவிய ரோடும்
சித்தியா தவைகள் சித்தியா மென்று
செங்கண்மால் திருமணங் காணும்
பத்தியால் வந்து மலருடன் தோன்றிப்
பாம்பணைப் பரன்பணி செய்யும்
நித்தியா நந்தர் உறைந்திடும் புதுவை
நிகரில்நீள் நகரம தடைந்தார். (420)

வேறு

வேதவி யாதன் மற்றோர் மேதினி படைக்கப் புக்கான்
ஓதுமா சுகத்தின் முன்ன மொலிகடல் குடித்தோனுள்ள
போதெலா மரியைப் போற்றும் புண்ணிய விசிட்டன் மிக்க
காதலா லுலக மேத்துங் கவுதமன் கருணை மிக்க. (422)

காசிபன் வதிட்டன் ஞானப் புலத்தியன் கலைக்கோட்டும்பன்
ஆசறு சனகன் மிக்க அத்திரி பரத்து வாசன்
பேசிய சனக்கு மாரன் பிருகு மார்க் கண்ட னாதி
தேசுறு முனிவ ரெல்லாம் திருமணங் காணச் சென்றார். (423)

முனிவர்க ளுலகின் மிக்க மூதறி வுடையோர் மாயன்
பனிமலர்க் குழலி னாளைப் பங்குனி யுத்தி ரத்தில்
இனியன மணஞ்செய் கோல மிறைஞ்சிட வேண்டு மென்னக்
கனிபொழிற் புதுவை தன்னில் கணத்தினி லெழுந்து சென்றார்.

அண்டத்துக் குட்பட் டார்கள் அனைவரும் புதுவை புக்குப்
பண்டைத்தெண்டிரைநீர்ப் பொன்னிமடிமிசைப் பள்ளிகொண்டு
தொண்டர்க்கின்னருட்கண்நல்கும்சுடரொளிகருணைக்குன்றம்
வண்டுற்ற துளபத் தாரான் வரும்வழி நோக்கி நின்றார். (425)

வேறு

அற்றைநா ளிராப்பக லவணம் வைகினார்
மற்றைநாள் வைகறை யெழுந்த வாச்சியம்
இற்றைநாள் திருமண மென்ற பேரொலி
உற்றநாள் மறையொலி யுலகி னேங்கவே. (426)

### வேறு

காரார் குழலாளைக் கலியாண குணங்களைக் கைவி டாத
ஏரா ரிடையாளை யிறவாவர நல்கிய இன்சொ லாளை
வாரார் முலையாளை இன்னு ரமுதென்ன வளர்த்த தாதை
சீரார் திருமாளிகை முன்றிலணித் தேவர்கள் சூழ்ந்து போற்ற.

### வேறு

மாணிக் கத்தின் கால்நாட்டி
வயிரத் திலங்கும் வளைபோட்டுப்
பேணிப் பவளக் கொம்பாலே
பெருக்கி நிரப்பிப் பரப்பலகை
ஆணிக் கனகப் பொற்றகட்டால்
மேய்ந்தங் கழகார் காவணத்தில்
வாணித் திலத்தின் செழுங்கோவை
மணிக்கோ வைகளொ டுறத்தூக்கி. (428)

சுற்று மிலங்கும் பொற்றகட்டால்
சுவர்கள் பொதிந்தோ வியமெழுதிப்
பற்றும் பளிங்கால் தளவிசைகள்
படுத்துத் தொடுத்தட ரத்தூக்கி
மற்று முள்ள பல்வளனும்
மணக்கா வ்ணத்தின் மன்னுவித்தார்
உற்ற வாங்கண் குறித்திளமின்
என்றென் றேங்கு மொளியனைய. (429)

### வேறு

மடந்தையர் கூடி வாச மஞ்சன மாட்டி யீரம்
தொடர்ந்தெழத் திருவொற் றுடை சுரிகுழல் துவட்டி முற்றும்
இடந்துடிக் கின்ற கோதைக் கிமைப்பினிற் சாற்றி மாற்றி
நுடங்கிடைக் கிணங்கும் பூவின் நொய்யபட் டாடைசாத்தி. ()

தேனமர் மொழிகள் நல்கும் செந்துவர் வாயி னுட்கு
மான்மதச் சந்தங் கந்தம் குங்கும மற்றுமுள்ள
ஆனநற் கலவை சாத்தி யலர்கம லங்க ளென்ன
வானவர் வணங்கி யேத்தும் மலரடி யிணைக டம்மில். (431)

பேசுமங் குலியிற் றேன்றும் பெருவிரல் முடிச்சு மிக்க
ஆசறு பீலி கால்மோ திரமயி லடிக ளன்றித்
தேசுற நின்ற கோலச் சிறுவிரல் முடிச்சுஞ் சாத்தி
மாசிலா மயிலின் சாயல் வல்லிதன் புறந்தாள் மீதில். (432)

சிலம்புபா டகநற் றண்டை திகழ்மணிச் சதங்கை சாத்தி
நலந்திக ழரைஞாண் சாத்தி நான்மறை வணங்கி யேத்தும்
வலந்திக ழாழி மாமால் மலரடி வருடி நாளும்
அலர்ந்தெழு கமல மன்ன செங்கையங் குலிகட் கான. (433)

சிறந்தமோ திரங்கள் சாத்தித் தேமொழி திருமுன் கைக்கு
நிறங்கிளர் பவள மிக்க நீடொளிக் கடகஞ் சாத்திப்
புறம்புடைக்கையின் மிக்க பொலிநளிச் சரிகள் பூட்டித்
திறந்திகழ் கெச்ச மாதி தோள்வளை சிறப்பச் சாத்தி. (434)

செப்பெனப் புடைத்து விம்மும் திருமுலைக் கச்சின் மீதே
ஒப்பறு முத்துத் தாமம் ஒளிதிகழ் பதக்கஞ் சாத்தி
அப்பரு வத்துக் கான ஆபர ணங்க ளெல்லாம்
தப்பறு களத்திற் சாத்தித் தயங்கிரு குழைகள் தம்மில். (435)

இருகதிர் வட்ட மென்ன இலங்குபொற் றோடுஞ் சாத்தி
மருவுசீர்ச் செவிப்பூச் சாத்தி மாசறு கொப்புச் சாத்திப்
பொருகயல் கழுநீ ரன்ன போர்விழி யிணைகள் தம்மில்
கருமுகிற் கழகு நல்கிக் கறுத்தமைக் காப்புஞ் சாத்தி. (436)

ஆசிலா முத்திற் பொன்னில் அழகுறச் சமைத்த கோல
நாசியா பரணஞ் சாத்தி நளிமதி நுதலிற் றேன்றத்
தேசுறு திருமண் காப்பும் சிறப்புடன் சாத்தி யூடே
வாசமார் மஞ்சட் காப்பும் வயங்குறச் சாத்தினார்கள். (437)

பட்டமும் திருவும் பூகப் பாளையும் பரிவாற் சாத்தி
மட்டவிழ் குழலில் வாச மலர்த்துழாய் மாலை சூட்டி
உட்டெளி வுடைய கோதைக் கோங்குசீ ரரங்க னாரும்
சிட்டரு மகிழும் வண்ணம் திருமுடிப் பூட்டு மிட்டார். (438)

வேறு

அப்பரிசே மணக்கோலஞ் செய்தாண்டா ளங்கிருப்ப
ஒப்பரிய அயனாழ்வார் முகநோக்கி யுத்திரத்தில்
இப்பொழுதே யிலக்கினமே திருமணத்திற் குற்றதினி
எப்பொழுது வருமிறைவன் என்றனனென்றலுமாழ்வார். (439)

வேறு

அன்றென் னேடே யுத்திரத்தில்
ஆசில் லாத அழகுடைய
மன்றல் கமழுங் குழலாளை
வதுவை செய்ய வருகின்றேன்
என்று ரரங்க ரனையறிவேன்
ஏழை யேனம் மாமாயன்
குன்று மயக்கை யென்னறிந்து
கூறக் கடவே னெனக்கூற. (440)

இருந்த வயனு முருத்திரனும்
இமையோர் கோனு மிமையவரும்
அருந்த வஞ்சேர் முனிவர்களும்
அவ்வூ ருறைவோ ரனைவர்களும்
வருந்தி யிரங்கி யினியரங்கன்
வாரான் கொல்லோ வெனமறுகத்
திருந்து மாழ்வார் திருமகளார்
அருகே சென்றென் செயலென்றார். (441)

என்னென் றுண்டாள் வினவியிட
எழிலா ரரங்கத் தினிதமர்வார்
* * * * * * * * *
* * * * * * * * *
(442)

வேறு

மையமர் கருங்கட் கோதை மற்றவை கேட்ட போதே
ஐயரின் றஞ்ச வேண்டா மரங்கனை நாமெல் லாரும்
உய்யவிக் கணத்தி லிங்கே ஆக்குவ னும்ப ரெல்லாம்
நைவுறு வண்ணந் தேற்றி யிடுகநன் னலத்தா லென்றாள். (443)

வேறு

சீரார் கருடன் தனைக்கூவிச்
சென்றிக் கணத்தில் திருவரங்கத்(து)
ஆரா வமுதைக் கொணருதி யேல்
அவனோ டென்னோ டருகமரும்
ஓரா சனநான் தருகின்றேன்
என்றாள் கோதை உடனவனும்
பாரா யென்னப் பகர்ந்தேகி
அரங்கன் பாதாம் புயம்பணிந்தே. (444)

வேறு

மல்லாருந் திண்புயத்தோய் வளர்புதுவை மாநகரில்
பல்லாண்டு முன்புரைத்த பட்டர்பிரா னுதியர்கள்
எல்லாரு நீயிந்த இலக்கினத்துக் கெய்தாயேல்
செல்லாருங் குழலியொடும் துயருறுவார் சீக்கிரத்தில். (445)

என்னுடைய தோள்மீதி லேறியரு ளென்றுரைப்ப
முன்னுலக முண்ட முழுமுதல்வ னப்படியே
பொன்னடியைக் கட்டுரைத்த புள்ளரசின் மேல்வைத்து
மின்னமரு மேனியான் நீள்விசும்பின் மீதானான். (446)

வேறு

கண்டனர் புதுவை யுள்ளோர் ககனமீ துறைவோர்மிக்க
எண்டிசைத் தலத்தி லுள்ளோர் இருடிக ளாழ்வா ராதி
கொண்டலிற் பொலிந்த மேனிக்குளிர்மதி வதனங் கைகால்
புண்டரீ கத்தை யொத்த தேவனைப் புள்ளின் மீதே. (447)

ஆடினா ரன்பு கூர்ந்தார் அலர்மலர் சிந்தி வானோர்
பாடினார் சித்த ரார்த்தார் பங்கயத் தயனும் வானில்
ஓடுநீர்ச் சடையி னானும் உம்பர்கோன் தானுஞ் சென்று
சூடினார் கருடன் செய்ய தோள்மிசை யமர்ந்த தாளை. (448)

வேறு

சீரார் கருடன் திருத்தோள்விட்
டிறங்கித் தேவர் புடைசூழ
ஏரார் மதிள்சூழ் வடபெருங்கோ
யிலினி லெய்தி யினிதமர்ந்து
காரார் வண்ண னிந்திரனைக்
கண்ணிட் டாழ்வார் திருமகளாம்
வாரார் முலையாள் தனைநீபோய்
மகட்பே சிடுக வெனவிடுப்ப. (449)

வேறு

ஆங்கவன்போய் மகட்பேச ஆழ்வாரு மதற்கிணங்கிப்
பாங்குடனே யிருந்ததற்பின் பரம்பரனும் படர்வானில்
ஓங்கியசீர்ப் பந்தர்க்கீழ் உம்பர்தொழப் போய்ப்புகுந்தான்
பூங்குழலாள் மனமகிழப் பூதலத்தோர் புகழ்ந்தேத்த. (450)

வேறு

பங்கயப் போதி னுள்ளான் பரிந்துநற் சடங்கு காட்டக்
கொங்கலர் குழலி னார்கள் குரவைகள் முழக்க வேதம்
எங்கணு மிசைப்பச் சங்க மேழ்கட லொலியி னார்ப்ப
மங்கல முழவ மார்ப்ப மங்கலக் கோடி சாத்தி. (451)

செந்துவர் வாயி னாட்குத் திருமண மாலை சாத்திப்
பந்தணை கரத்திற் காப்பும் பழமறை விதியிற் கட்டிச்
சுந்தரத் தோள ணீண்ட சோதிவேங் கடவன் மாதை
முந்துற வளர்த்த வாழ்வார் முன்னின்று முகத்தை நோக்கி. ()

ஆங்கவர் தமைநோக் காதே அழகிய மணவா ளர்க்குப்
பூங்குழற் கோதை தன்னைத் தந்தனன் புனித வென்னப்
பாங்குட னுதகம் பண்ணிப் படிமிசைப் பணிந்து நின்றான்
தேங்கமழ் பொழில்சூழ் செல்வச் சீவில்லி புத்தூர்ப் பட்டன். ()

இருக்காதி மறைபுகழ யாவர்களு மாநந்தப்
பெருக்காற்றி னிடைத்திளைப்பப் பெரியாழ்வார் திருமகளார்க்கு
ஒருக்காலுஞ் சிதையாத ஓங்குதிரு மங்கிலியம்
திருக்காறைப் பட்டத்தின் உள்ளாகச் செறிவித்தார். (454)

வேறு

சீரார் பிரமன் செறிந்தா குதிசெய்ய
ஏரார் பெரியாழ்வார் பல்லாண் டெடுத்தேத்த
ஆராத காத லடியார் குழாம்புகழக்
காரார் குழலணங்கைக் கண்ணபிரான் கைப்பிடித்தான். ()

வேறு

மாயவன் கோதை செய்ய மலர்க்கரம் பிடித்த தன்றிச்
சேயிழை திருத்தாள் தன்னைத் திருந்துறப் பிடித்து முக்கால்
ஆயசீ ரம்மி மீதில் மிதிப்பத்தங் கயனுர் போற்றும்
தீயினை வலஞ்செய் தாங்கே திருக்கையிற் பொரியு மேற்றே. ()

அருந்ததி நோக்கி மிக்க ஆகுதிக் குறைக டிந்து
திருந்திய வெள்ளை யானை மீதிலத் தேவி யோடும்
வரும்பெருந் திசையி னுள்ளோர் வானுளோர் முனிவர் காண
நெருங்கினி தாசி கூற நீணகர் வலம தாக. (457)

பாற்கடல் மீதி லேறிப் பருதியா யிரங்கள் கூடின்
சீர்ப்பொலி மின்னென் றேதும் செய்தா மரைகள் பூத்தோர்
கார்க்கடல் வருவ தென்னக் கண்ணனுங் கருணைக்கோல
வார்ப்பொலி கொங்கை யாளும் வந்தனர் வானோர் சூழ. (458)

வேறு

வாரணத் தெருத்தம் விட்டிழிந் தருளி
மாணிக்கத் திருவடி நிலைதொட்(டு)
ஆரண மொலிப்ப வாச்சிய மொலிப்ப
அடியவ ரணியணி துதிப்பப்
பூரண கும்பம் திருவிளக் கெடுத்துப்
பூசுர ராசிகள் பகரக்
காரணப் புவிமா மடந்தையுந் தாமும்
கடிமணக் கனகமா ளிகையில். (459)

மணவறை புகுந்தார் மன்னனுர் மாலை
வழங்கிய மடமயி லோடும்
பணவறை திறந்து பட்டர்கோன் பாரில்
வறியவர் பசிகெடச் சமைத்த

உணவளித் தாடை யாபர ணத்தோ
டோங்குசீர் நிதியமும் வழங்கி
வணமலர்ப் பிரம ஞதிவா னவர்க்கும்
மாசறு பேரமு தளித்தான். (460)

அன்னமென் னடையாள் கருடற்கு முன்னம்
அறைந்தவே காசன மளித்து
மன்னனு ரிடத்து மருங்கினி லவனும்
வலத்திரு மருங்கினிற்ருனும்
மின்னுமா முகிலு மேருமால் வரையும்
வெறிதரற் குவமையொன் றில்லை
என்னலாம் படிநின் றருளினு ளாண்டாள்
இமையவர் முறைமுறை தொழுதார். (461)

வேறு

திருமணங் காண வந்த சிவனயன் முனிவர் சித்தர்
தருமணக் கடவுள் வானே ராதியர் சார்ந்தோ ரெல்லாம்
மருமணக் குழலி யோடும் மன்னரை வணங்கிப் போனர்
பெருமணம் வில்லி புத்தூர் நகர்ப்பெரு மான்முன் வேண்டும்.()

வேறு

பட்டர்பிரா னுளமகிழ்ந்து பங்கயக்கண் தனிமுதல்வன்
மட்டவிழ்பூம் பொழிலரங்க மாநகரா னென்மகளை
இட்டதிரு முகுர்த்ததில் எழுந்துமணஞ் செயப்பெற்றேன்
உட்டெளிவா லுறநோக்கில் ஒருகுறைவே றினியுளதோ. (463)

என்றுமகிழ்ந் தரங்கனையும் ஏழுலகும் தொழுதேத்தும்
மன்றல்கமழ் குழலியையும் மணக்கோலச் சேர்த்தியினில்
சென்றுதொழு வேனென்னச் செறிந்திறைஞ்சி யிக்கோலம்
ஒன்றியசீ ரன்பதனுள் ளுறவிருத்திப் பல்லாண்டும். (464)

இப்படிநீ கோதையொடும் யாவர்களும் தொழுதேத்த
ஒப்பரியாய் இத்தலத்தில் உறைகுதியென் றுற்றிறைஞ்சச்
செப்புமறை யடிபரவும் திருவரங்கத் தினிதமர்வார்
அப்படியே செய்கின்ருேம் என்றருளிப் பின்னுழ்வார். (465)

முகநோக்கி யறைகின்ருர் முகுந்தனுர் திருமகனே
மகநோக்கு மேலோர்கள் வணங்கருமிம் மூவுருவும்
அகநோக்கு மர்ச்சாவ தாரமா யருள்விளங்கப்
புகநோக்கு கின்றேனுன் புத்தூரி லெப்போதும். (466)

ஆதலா லதுசெய்தி யென்றருள ஆழ்வாரும்
தீதெலாங் கெடவென்றும் சென்றிறைஞ்சி யுலகுய்யக்

காதலால் மூவரையும் கணத்தேற்றி யருள் வித்து
வாதெல்லாங் கெடவென்ருர் நின்ருர்பின் மதிளரங்கர். (467)

வேறு

சீரார் வில்லி புத்தூர்க்குச்
சீவை குண்டத் தினிதமரும்
ஓரார் செல்வ மெப்பொழுதும்
உண்டா யிடுக வெனவிசைத்தங்(கு)
ஆரா வன்போ டாழ்வாரை
அரங்க நகரில் வருகவெனக்
காரார் குழலாள் தன்னேடும்
கண்ணன் கருடன் மேல்கொண்டு. (468)

வேறு

திருவரங்க நகரடைந்து சீபூமி விண்டுவெனும்
இருவரங்க மொன்ருகி இனிதமர்ந்தான் இறையாழ்வார்
ஒருவரங்க மொன்றெனலும் புத்தூரி லுறைபவர்கள்
மருவரங்கம் பலவாகி வாழ்ந்தனர்மற் றவர்வருந்த. (469)

ஆதிவட பெருங்கோயில் அச்சுதனைப் பணிந்தேத்தி
வேதியர்கள் புடைசூழ விடைகொண்டு கூடலிடைச்
சோதிவளர் மணிவணரைத் தொழுதகன்றங் கழகரையும்
நீதியினு லுறவணங்கி நிலவுமணி மதிளரங்கம். (470)

சென்றணைந்தார் தேவர்தொழத் திருமாலைத் தாம்வணங்கி
நின்றனரங் காழ்வாரும் நெடுமாலும் நிகரில்லாக்
குன்றனைய மெய்ஞ்ஞானக் குணத்தினனே செய்திறமிங்
கொன்றுளது கேளென்ன ஆங்கவரோ டுரைக்கின்ருர். (471)

இத்தலத்தி லொருகோயி லுனக்கென்றே யெடுத்தென்னை
அத்தலத்திற் கோதையையிக் கருடனையே காசனத்தில்
பத்தர்தொழும் படிபண்ணிப் படிவான முள்ளளவும்
உத்தமமாம் குணத்தினனே நீயுமுட னுறைதியென. (472)

கட்டுரைத்தான் திருவரங்கத் தினிதுறையுங் கார்வண்ணன்
பட்டர்பிரா னப்படியே பண்ணுவித்துப் பழமறைதேர்
மட்டவிழ்பூங் குழற்கோதை முன்னிலையாய் மதிளரங்கர்
எட்டெழுத்தையெடுத்தோதிஇணையடிக்கீழ்ப்போய்ப்புகுந்தார்

அன்பதனுல் கன்மத்தால் ஞானத்தா லாசற்ற
இன்பமிகு பத்தி யிலங்குவை ராக்கியத்தால்
துன்பகன்ற வின்பம் துலங்குபிர பத்தியினுல்
முன்புதித்தார் பட்டபிராற் கொத்தாரார் மூவுலகில். (474)

ஆங்கவர்தம் பிள்ளையா மாண்டாள் நயிச்சியத்துக்
கோங்கு முலகில் உயர்வீட்டி லுள்ளவரில்
பாங்குடனே யாராய்ந்து பார்த்தாலு முண்டாங்கொல்
பூங்குழலாட் கொத்தார்கள் மிக்கார் புகன்றிடிலே. (475)

ஆக்கை யாவி யபிமானம் பண்ணு மவர்க்கு மான்மாவை
நோக்கிக் கோரும் பிறப்பிகழ்ந்து நோன்பில்வைகுமிருடிகட்கும்
பார்க்கி லணுவை மேருவினை யொத்த வாசி யெனப்பகர்வார்
வாக்கு மனமுஞ் செய்தொழிலும் ஒன்ருய் நின்ற மதிமிக்கார்.

அந்த வாரு மிருடிகட்டு மாழ்வார் களுக்கு முளவேற்றம்
பந்த மில்லாப் பத்தர்கட்கும் பட்டன் தனக்கு முளவேற்றம்
முந்த மொழிந்த வணுமேரு மானும் முகுந்தன் மகனுர்க்கும்
கந்த மலர்ப்பூங் கோதைக்கும் அவண மேற்றங் கண்டுரைத்தார்

**வேறு**

முனிவர்களி லாழ்வார்கட் கேற்றங் கண்டு
மொழிந்தபடி யென்னென்னில் முனிவர் ஞானக்
களியிருப்பக் காய்கவர்ந்த வாறு போலும்
கண்டிருப்பக் கரும்புகடித் தெய்த்தல் போலும்
பனிமலர்ச்செந் திருமகள்கோ னுய சோதிப்
பரம்புருட னிருப்பவன் படைப்பில் தேவைத்
தனிமுதலா மிதுவென்றே நாட்டி நூலும்
சமயங்கள் தொறுமதற் கிணங்கச் சாற்றி. (478)

மாய்ந்தனர்க ளிருடிகள்; அந் நூலைச் சற்றும்
மதியாமல் ஆழ்வார்கள் மறையி னந்தம்
ஆய்ந்துதிரு வாய்மொழிக ளருளிச் செய்தே
அச்சுதனே பரமெனவந் தனனென் ருரைக்
காய்ந்துபிர பஞ்சச்சொற் கலைகள் தம்மைக்
காட்டிவிடு மிலவம்பஞ் சென்னக் காட்டிக்
சாய்ந்துசரண் புகுந்தேத்தும் சமயத் தார்க்குத்
தத்துவத்தைக் கட்டுரைத்த தலைமையாலே. (479)

ஆழ்வார்கள் மேருமா மலையை யொத்தார்
அருந்தவஞ்சேர் முனிவர்களு மணுவை யொத்தார்
ஏழ்பாரி லுள்ளவர்வள் வேதாந் தத்தை
இகழ்ந்துதிரு மால்திறத்தை இகழ்ந்த பின்பு
வாழ்வாரோ வாழ்வாரோ மீட்சி யில்லா
மாநரகப் பெருங்குழியில் வாடி யோடி
வீழ்வாரே வானகத்தில் இரவி தோன்றி
மிக்கிருப்ப மின்மினியை விரும்பு வாரோ. (480)

ஆசிலா ஆழ்வார்கள் பதின்மர் தம்முன்
ஆண்டாளுக் கேற்றமென்கோ லென்ப ராகில்
ஈசனவர் கழுத்தியிற்சென் றெழுப்பித் தன்சீர்
இருந்தபடி காட்டக்கண் டின்புற்றூர்கள்
தேசுபொலி யாண்டாளத் திருமால் தன்னைச்
சென்றெழுப்பித் தன்குறைகள் செப்பி வாழ்ந்தாள்
பேசருஞ்சீ ராழ்வார்கள் மகளா யாண்டாள்
தாயானுள் அந்நிலையின் பெருமை யாலே. (481)

தூயநெறி யாழ்வார்கள் தம்பி லானிச்
சோதிதரும் பட்டர்பிரான் ஏற்றஞ் சொல்லின்
மாயவன்மற் றவர்ஞானம் மங்கா வண்ணம்
மயர்வறுமா மதிநலத்தை வழங்கிக் காத்தான்
ஆயரெனு மத்திருமால் தனக்குக் கண்ணே
றுகாதே காப்பிட்டுத் திருப்பல் லாண்டை
ஏயவருட் பட்டர்பிரான் அருளிச் செய்தான்
அதனாலே அவரிலிவன் ஏற்ற மாமே. (482)

இத்திறநேர் பட்டனிலும் கோதைக் கேற்றம்
எவணமெனிற் பட்டர்பிரான் புருடன்; பொன்று
முத்திதரும் திருமாலும் புருடன்; என்னும்
முறைமையினாற் புருடனுக்குப் புருடன் ஆசை
சித்திரஞ்சேர் பெண்புருடன் மேலே வைத்த
சீராசை போலாமோ தேருங் காலை
அத்திறத்தாற் பெரியாழ்வார் தம்மி லேற்றம்
ஆண்டாளுக்கு கென்றனர்மெய் யறிவி னோரே. (483)

வேறு

ஆதலா லாண்டாளும் ஆழ்வார்கள் தமில்மிக்க
காதலால் மாலைக் கலந்தா ளதனாலும்
கோதிலாழ் வார்களிலிக் கோதைக்கே யேற்றமென
ஓதலா மென்றூர் உணர்வா லுயர்ந்தோர்கள். (484)

ஆண்டாள் பிரபாவம் முற்றிற்று.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

குருபரம்பரை முற்றும்.